92
2002

வெளியீடு 20-11-2000 Issued 20-11-2000

824

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 3, 2000 – தொகுதி 87 – எண் 2

**Friday the 3rd March, 2000 – Volume 87 – No. 2**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

92/2002

**03-03-2000**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| (1) வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 5-40 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை) | 41-313 |
| (2) சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| மருத்துவப் பயிற்சி மாணவர்கள் உண்ணாவிரதம் | |
| திரு. சி. ஞானசேகரன். | 314-318 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 319-320 |
| திரு. பி. ஆர். சுந்தரம் | 320-322 |
| திரு. ஐ. கணேசன் | 322-323 |
| * திரு. ஜி. நிஜாமுதீன் | 323-324 |
| திரு. லா. சந்தானம் | 324-325 |
| திரு. டி. மணி | 325-326 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 326-327 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 327-335 |

(3) அறிவிப்பு—

| | பக்கங்கள் |
|---|---|
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 336 |

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—

| | |
|---|---|
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 337-347 |
| திரு. ச. அழகிரி | 347-362 |
| திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 362-369 |
| * திரு. கே. சுப்பராயன் | 369-382 |
| திரு. இ. புகழேந்தி | 382-390 |
| திரு. ஜி.கே. மணி | 390-396 |
| திரு. இரா. விசுவநாதன் | 396-401 |
| திரு. மு. அப்பாவு | 401-406 |

(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 407-418

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 20, பிரமாதி — திருவள்ளுவர் ஆண்டு 2031**
**2000 மார்ச் 3, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

«விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.»

பழமையான நண்பர்கள் தவறு செய்தபோதிலும், அவர்களிடம் தமக்குள்ள அன்பை நீக்கிக்கொள்ளாதவர்களைப் பகைவரும் விரும்பிப் பாராட்டுவார்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

**காவல் துறையினருக்குப் பயிற்சி**

***19671—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு காவல் துறைக்கு மனித உள்ளத்தோடு கூடிய அணுகுமுறைகளைப் பற்றிய பயிற்சியினைக் கற்றுத்தர அரசு முன்வருமா?

[2000 மார்ச் 3

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவலர் பயிற்சிப் பள்ளிகளில் மனித உரிமைச் சட்டம் மற்றும் மனித நேயம் ஆகியன பாடமாகப் போதிக்கப்படுகின்றன. மேலும் ஓய்வுபெற்ற இந்திய காவல் துறை அதிகாரி பத்மஸ்ரீ டாக்டர் சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு மனித உரிமைகள் மற்றும் மனிதநேயம் குறித்து ஜூலை மாதம் 1999 ஆம் ஆண்டு காவல் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. மேலும், இப்பொருள் தொடர்பாகப் பயிலரங்கம் நடைபெற்றுள்ளது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் மனித உள்ளத்தோடு தமிழகத்திலே சமத்துவபுரத்தைக் கண்டு வருகிறார்கள். ஆனால், நம்முடைய உயிரையும், உடைமையையும், சட்டத்தையும் காக்க வேண்டிய காவலர்களில் ஒருசிலர் காவல்நிலையத்திலேயே கற்பழிப்பு, கொலை, திருட்டு மற்றும் சாராய மாமூல் போன்றவற்றிற்கு உடந்தையாக இருக்கிறார்கள். இவ்வளவு பயிற்சி அளித்தும், போதுமானதாக இல்லையென்று பொதுமக்கள் எண்ணுகின்றார்கள். அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பயிற்சி அளிக்க அரசு முன்வருமா? அல்லது ஒரு கையேடாவது அவர்களுக்கு அரசு அளிக்குமா? மற்றும் இதுபோன்ற குற்றங்களைச் செய்யக்கூடிய காவலர்கள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காவலர்கள் செய்கின்ற பல குற்றங்களைச் சொல்லிவிட்டு, அவர்களுக்கு மேலும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை பயிற்சி அளிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அத்தகைய பயிற்சிகளை நிச்சயமாகக் காவலர்களுக்கு அளிக்க இந்த அரசு உட்படாது என்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு) தவறு செய்கின்ற காவலர்கள் மீது—நல்ல மரத்தில் புல்லுருவி போலச் சிலர் இருக்கின்றார்கள் என்பதை நான் மறுக்கவில்லை, அவர்கள் மீது—உரிய நடவடிக்கையை அவ்வப்போது இந்த அரசு எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் முன்பு அந்தப் பதவிக்குரிய உளப்பாங்கு அவர்களுக்கு இருக்கிறதா என்பதை ஆராய்ந்து



2000 மார்ச் 3]

தேர்ந்தெடுப்பது மிகச் சிறந்த பணியினை அவர்களிடமிருந்து பெறுவதாக இருக்கும். அப்படி இருக்கின்றபோது, காவல் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்களுக்கு Aptitude Test அதாவது மக்களுக்குச் சேவை செய்கின்ற மனப்பான்மை இருக்கின்றதா என்ற வகையிலே ஒரு சோதனை நடத்தித் தேர்வு செய்யப்படுவார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகின்ற தேர்விலேயே அத்தகைய சோதனைகள் எல்லாம் நடத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒன்றையும் நடைமுறை என்ற உரைகல்லில் உரைத்துப் பார்த்துத்தான் அதன் அனுபவ விஷயத்தைப் புரிந்துகொள்ள முடியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவலர்களுக்கு மனிதநேயத்தோடு பிரச்சனையை அணுகவும், மனித உரிமை மீறல் இல்லாதவாறு செயல்படவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டதற்குப் பின்னர், தமிழ்நாட்டில் மனித உரிமை மீறல் குறைந்து இருக்கிறதா, மனித நேயத்தோடு பிரச்சினையை அணுகுகின்ற நடைமுறை கூடியிருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு எத்தகைய பதிலைச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு, மனிதநேயம் உயர்ந்திருக்கிறதென்றால், 'அது எந்த அளவு' என்று கேட்பார்கள். ஓரளவு குறைந்து இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், பெருமளவுக்கு இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. மனிதநேய உணர்வும், மனித உரிமையும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் செய்கின்ற பிரச்சாரத்தால் நல்ல முறையிலே இருந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

முற்பகல் 9-35

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எத்தனை பேர் காவல் பயிற்சிப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும்

பயிற்சி பெறுகின்றனர்? எப்படிப்பட்ட பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவலர்களுக்கு உள் வகுப்புப் பயிற்சி மற்றும் கவாத்து பயிற்சி, drill அளிக்கப்படுகிறது. உள் வகுப்புப் பயிற்சி, முக்கியமாக 4 தலைப்புகளில் பிரிக்கப்பட்டுத் தரப்படுகின்றன. நவீன இந்திய காவலர் பங்கு மற்றும் மனிதனுடைய குண நலன்கள், காவல் துறை அமைப்பு, காவல் துறை நிர்வாகம், காவலருடைய கடமைகள், பிரதானச் சட்டங்கள் - இதில் இந்திய தண்டனைச் சட்டம், குற்ற விசாரணை முறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவை அடங்கும். தல மற்றும் உள்ளூர்ச் சட்டங்கள் Minor and Local Laws, கவாத்து பயிற்சி - drill பயிற்சியில், உடற்பயிற்சி, கவாத்து, துப்பாக்கி சுடுதல், நீச்சல், யோகாசனம், வாகன ஓட்டப் பயிற்சி ஆகியவை அடங்கும். இவை எல்லாம் காவலர்களுக்கு S.I., D.S.P. என்கிற அளவிலே உள்ள பயிற்சிகள். இந்திய தண்டனைச் சட்டம் பற்றிய அறிவு, குற்ற விசாரணை முறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம், இந்திய அரசியல் சாசனம், தல மற்றும் உள்ளூர்ச் சட்டம், குற்ற இயல் மற்றும் உள இயல், தடய அறிவியல், சட்ட மருத்துவம், காவல் துறை நிர்வாகம், காவலர் கடமை ஆகிய இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தரங்குகளில் மனித உரிமை பற்றியும் கற்பிக்கப்படுகிறது. மனப்பாங்கு மாற்றம், சமநிலைச் சிந்தனை ஆகியவை வகுப்புகளிலே ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன. வழக்குகள் பற்றி ஆராய்ந்து அறிந்த காலங்களில் நடைமுறைப்படுத்தும் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்தக் கேள்வியிலே இன்னொரு கேள்வியும் இடம் பெற்று இருக்கிறது. அதற்கான பதில், தமிழகத்தில் சென்னை, வேலூர், வீராபுரம் ஆகிய 3 இடங்களில் காவலர் பயிற்சிக் கல்லூரியும், 13 இடங்களில்—அதாவது புனித தோமையர் மலை, சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சேலம், கோவை, விழுப்புரம், கடலூர், திருச்சி, மதுரை, மணிமுத்தாறு, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் —13 பள்ளிகள் காவலர்களுக்காகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இப்பொழுது 148 பெண் உதவி ஆய்வாளர்களும், காவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 138 உதவி ஆய்வாளர்களும் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காவல் நிலையங்கள் சிலவற்றில் மனிதநேயம்



இல்லாமல் விசாரணை கைதிகள் சாவதும், அதாவது லாக்-அப் கைதிகள் சாவதும் நடந்துகொண்டே இருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசிடம் ஏதாவது ஒரு master plan இருக்கிறதா? நமது முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள காவலர்களுக்கு 75% ஈரல் வெந்து போய்விட்டது என்று ரொம்ப அழகாகச் சொன்னார்கள். இப்போது எந்த நிலையிலே இருக்கிறது? அதுமட்டுமல்லாமல், சில காவல் நிலையங்களிலே ரவுடிகள், கட்ட பஞ்சாயத்துக்காரர்கள் வந்து நிர்வாகம் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து மீட்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் சாவு வரவரக் குறைந்து இருக்கிறது. நான் சாவே இல்லை என்று சொல்லமாட்டேன். அதனுடைய எண்ணிக்கை குறைந்து இருக்கிறது. இது, அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, காவல் துறையினுடைய மேலதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இந்த அளவுக்குக் குறைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் அதற்கான பொறுப்புகளை மேலதிகாரிகள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கடுமையாக அவர்களுக்கு எச்சரிக்கப்படுகிற காரணத்தால், மேலதிகாரிகளே தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். காவல் நிலையச் சாவுகளில் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து, அந்த அதிகாரிகளை மாற்றி அல்லது அவர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கை எடுத்துத் தண்டித்து வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார் என்று கருதுகின்றேன். ஈரல் என்ன ஆயிற்று என்று கேட்டார். ஈரல் நன்றாக இருக்கிறது. காவல் துறை வாழ்ந்து கொண்டு இருப்பதில் இருந்தே, முழு ஈரலும் கெட்டுவிடவில்லை கெடாமல் பாதுகாத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் போலீஸ் மட்டுமல்ல; வேறு சிலரும் பல்வேறு குழந்தைகளைக்கூட மானபங்கப்படுத்தி, அவர்கள் உயிரையே பறித்துவிடுகிறார்கள்; அந்தக் குழந்தைகள் உயிரைப் பறித்து, அந்த குழந்தைகளைத் தூக்கி எங்கேயாவது போட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் போலீசாக இருந்தாலும், மற்ற ஆட்களாக இருந்தாலும், அவர்களில் ஒன்றிரண்டு

பேருக்காவது தூக்குத் தண்டனை கொடுப்பதற்கான ஒரு வழி வகையைச் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவை ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது தர்பார் மண்டபம் அல்ல, இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2—

**தனியார் கல்லூரி தொடங்குதல்**

***31770—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் மஞ்சக்குடியில் கல்லூரி ஏற்படுத்த, தனியார் அறக்கட்டளையிடமிருந்து அரசுக்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மஞ்சக்குடியில் கல்லூரி ஏற்படுத்த தனியார் அறக்கட்டளையிலிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) விண்ணப்பம் ஏதும் வரப்பெறாத நிலையில் நடவடிக்கை ஏதும் இப்போது எடுப்பதற்கில்லை..

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசலை ஒட்டியிருக்கிற மஞ்சக்குடி, சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களுடைய சொந்த ஊர். ஒரு மேல்நிலைப் பள்ளியைச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அவர்கள் விண்ணப்பம் அனுப்பியிருப்பதாகத் தகவல் சொன்ன காரணத்தினால்தான் ஒரு கல்லூரி அமைய வேண்டுமென்ற ஆர்வத்தில் முன்கூட்டியே இந்த வினாவை எழுப்பியிருக்கிறேன். உரிய விண்ணப்பம் வருகிற நேரத்தில் கல்லூரி தேவைப்படுவதால், சுற்றுப்புறத்தில் 30 கி.மீ. க்கு கல்லூரிகளே இல்லாத அந்தப் பகுதிக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விண்ணப்பத்தை ஏற்று ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பங்கள் பெறப்படுமானால், அவை உரிய முறையில் தகுந்த அடிப்படையில் இருக்கின்றனவா என்பது கருதப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

3

**நீர் மின் திட்டம்**

***24729—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் - ராசிமணல் நீர் மின் திட்டம் தொடங்கும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒகேனக்கல் மற்றும் ராசிமணல் புனல்மின் திட்டங்கள், தொடங்கப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) தேசிய நீர் மின் குழுமத்தால் தேவையான நடைமுறைகளைக் கைக்கொண்ட பின்னர், தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டு அந்த மின் நிலையங்கள் தொடங்கப்பட மைய அரசின் எரிசக்தி அமைச்சகம் முயற்சி எடுத்து வருகிறது.

[2000 மார்ச் 3

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறைகள் வளர்ந்து வரும் தமிழ்நாட்டில் அதற்கான கட்டமைப்பு வசதிகள் மிகவும் இன்றியமையாததாகின்றன. மிகவும் நீண்டகாலமாகவே பல பிரச்சினைகள் இருந்து, இந்தத் திட்டம் தொடங்கப்படாமல் இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் மத்திய மாநில அரசுகள் ஒருசேர இருப்பதனால் இந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவாக இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் காவிரி நீர்ப் பிரச்சினையில் இருந்து வருகிற சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, நம்முடைய மத்திய எரிசக்தித் துறை, அவர்களாகவே National Hydro Power Corporation மூலமாக, இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவாக மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்றும், மேகதாது மின் திட்டம் 400 மெகாவாட், ராசிமணல் மின் திட்டம் 360 மெகாவாட், ஒகேனக்கல் மின் திட்டம் 120 மெகாவாட் ஆகிய மின் திட்டங்களை உள்ளடக்கிய தேசிய நீர் மின் குழுமத்தின் செயற்குறிப்பு அதிக மின் உற்பத்தி தரும் என்று தமிழக மின் வாரியம் கருதுகிற காரணத்தால் அதை அமல்படுத்துவதற்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய அரசு இதுகுறித்துப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் தமிழக அரசும், கர்நாடக மாநிலமும், மத்திய அரசும் ஒன்று சேர்ந்து விவாதித்து இதில் நல்ல முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

4—

### தீயணைப்பு நிலையத்திற்கு நிலம்

***32399—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தேவையான நிலம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், செங்கோட்டை கிராம தாலுகா அலுவலகப் புறம்போக்கு புதிய உட்பிரிவு எண் ஜே2.12/4 இல் 360 சதுர மீட்டர் (9 செண்ட்) நிலம் செங்கோட்டை தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கென தீயணைப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால் 14-12-1999 அன்று தீயணைப்புத் துறைக்கு நிலமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட 9 செண்ட் நிலம் ஒதுக்கீடு செய்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். தீயணைப்பு நிலையத்திற்கு அருகிலேயே அங்கே பணியாற்றுகிற அலுவலர்களுக்குக் குடியிருப்பு அமைந்தால்தான் அவசர காலங்களில் மிகவும் பயனுள்ளதாக அமையும். ஆகவே, குடியிருப்புக் கட்டுவதற்கும் அதன் அருகிலேயே தேவையான இடத்தை ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி அருணன் இன்னும் கூடுதலாக நிலம் தேவைப்படுவதாகக் கூறுகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையைப் பெற்று அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

5—

### பாலம் கட்டுதல்

***7357—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தொகுதி. உமரிக்கோட்டை கிராமப்புற நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள காட்டு ஓடையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி. உமரிக்கோட்டை கிராப்புற நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள காட்டு ஓடையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

முற்பகல் 9-45

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவைகுண்டம் தொகுதிக்கு உட்பட்ட உமரிக்கோட்டை ஒன்றியச் சாலையின் குறுக்கே காலங்கரை காட்டு ஓடை உள்ளது. அந்தப் பகுதியில் எங்காவது ஓர் இடத்தில் மழை பெய்தாலும் இந்த ஓடையிலே ஒரு மாத காலத்திற்குத் தண்ணீர் நிரம்ப ஓடும். இப்படிப்பட்ட காலங்களில், உமரிக்கோட்டை, வரதராஜபுரம் போன்ற கிராமங்கள் தீவுகளாக மாறிவிடுகின்றன. கிராமங்களில் உள்ள மக்கள் வெளி உலகத்தோடு தொடர்புகொள்ள முடியாமல், மழைக் காலங்களில் நோயாளிகளும், கர்ப்பிணிப் பெண்களும் காட்டு ஓடையைக் கடக்க முடியாமல், ஒவ்வொரு ஆண்டும் பலர் இறந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவை எழுதிப் படிக்கக்கூடாது.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** அந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து உமரிக்கோட்டை கிராமப்புற நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள காட்டு ஓடையில் பாலம் அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்வி, உமரிக்கோட்டை கிராமப்புற நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள காட்டு ஓடையில் பாலம் அமைக்கப்படுமா என்பதாகும். ஆனால் அவர் இப்போது



ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக ஊரக வளர்ச்சித் துறையிலே கட்ட முடியுமா என்று துணைக் கேள்வி கேட்கிறார். தனிக் கேள்வி போட்டால் இது சம்பந்தமாகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவையில் வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

6—

## மணிக்கூண்டு அமைத்தல்

**•24241—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உழைப்பாளர் சிலை அருகில் மணிக்கூண்டு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இங்கே கொடுக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) உழைப்பாளர் சிலை அருகில், பாதசாரிகளுக்காகச் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு, 5-2-2000 முதல் மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனருகே மணிக்கூண்டு அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பாளர் சிலை அருகே ஒரு மணிக்கூண்டு அமைக்க வேண்டியது முக்கியம் என்று எதற்காக நான் கேள்வி எழுப்பினேன் என்றால், தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வந்து போகின்ற இடமாகவும், மாலை நேரங்களில் நீண்ட நேரம் அங்கே Beach ஓரத்தில் அமர்ந்து கொண்டு நேரம் தெரியாமல், அநேக மக்கள் பேருந்துக்குக் காத்துக் கொண்டிருப்பதாலும், அந்த இடத்திலே ஒரு மணிக்கூண்டு நல்ல முறையிலே அமைத்துக் கொடுத்தால் நேரம் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாநகராட்சி மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்குத் தகவலாகத் தெரிவித்து அதன் மீது நடவடிக்கை கோரினால், அதற்குப் பிறகு அரசுக்கு வந்தால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

7—

### குளிர்பதன மையம்

***18301—திரு. இரா. மகேந்திரன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், கந்திலியில் காய்கறிகள் மற்றும் மாம்பழங்கள் பதப்படுத்தும் குளிர்பதன மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கந்திலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில், அவரைக்காய், கத்திரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், புதினா, கொத்தமல்லி, போன்ற காய்கறி, கீரை வகைகளும், மாம்பழம், கொய்யாப்பழம், சீத்தாப்பழம், வாழைப்பழம் போன்ற பழ வகைகளும் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. அந்தக் காய்கறி, பழ வகைகளை அருகில் இருக்கின்ற பெங்களூர், சேலம், விழுப்புரம், சென்னை ஆகிய மாநகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். காய்கறிகளும், பழ வகைகளும் ஒரே மாதத்தில், ஒரே நேரத்தில் விளைந்து விடுகின்றன. விற்பனை மிகவும் குறைவாக நடந்து விவசாயப் பெருமக்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இரண்டு அல்லது மூன்று மாதங்கள் குளிர்பதனக் கிடங்கில் அந்தக் காய்கறி, பழ வகைகளை வைத்து



பின்னர் விற்பனை செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதெல்லாம் உண்மைதான். அதற்காக, அரசின் தரப்பில் கிருஷ்ணகிரியில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணகிரியில் அந்தக் குளிர்பதனக் கிடங்கு கட்டினால், உறுப்பினருடைய தொகுதியிலிருந்தும் அந்தக் குளிர்பதனக் கிடங்கைப் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்புண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

8—

### அணைக்கட்டை நவீனப்படுத்துதல்

***15749—திரு. பி. வெங்கடசாமி:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில், சீபம் சமனப்பள்ளி ஊராட்சியில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பூதிநத்தம் அணைக்கட்டை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

9—

## குடிநீர்த் திட்டம்

***31044—திரு. வி.கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கேரள அரசு ஒத்துக்கொண்டதன் அடிப்படையில் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைக் குடிநீர்த் திட்டமாக அமல்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-50

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம் கோவைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆனால், காவிரி நதி நீர் தாவா தீர்ந்த பின்புதான் அது கவனிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. வித்யாசரன் சுக்லா அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்திலே பதிலளித்துள்ளார்கள். அதன் நகலை நான் தங்களுக்கு அளித்திருக்கிறேன். அதேசமயத்தில், கேரள அரசோடு தொடர்பு கொண்டு, இது பற்றி நானே தனிப்பட்ட முறையிலே அன்றைக்கு இருந்த முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்களிடத்திலே பேசியபோது, குடிநீருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரைக் கொடுக்க முடியும் என்று எனக்கு அவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதன் நகலையும் நான் தங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். இப்போது Central Water Commission கோவை மாவட்டத்திலே, ஆனைமலை வட்டாரத்தைத் தவிர, பாக்கி எல்லா வட்டாரங்களையும் Black Spot என்று அதாவது கருப்பு வட்டாரங்களாக அறிவித்திருக்கிறது. ஆகவே, குடிநீருக்குக்கூட எதிர்காலத்திலே, எங்களுடைய மாவட்டத்திலே பெரிய பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை — ஒருவேளை காவிரி நதி நீர் தாவா தீர்கின்ற வரை பொறுத்திருந்து, அதை நீர்ப்பாசனத் திட்டமாக மாற்றிக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் — குடிநீர்த் திட்டமாகவாவது





மாற்றிக் கொடுக்க, கேரள அரசோடு நமது அரசின் சார்பில் பேச முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு ஒத்துக்கொண்டது என்ற அடிப்படையில் இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைக் குடிநீர்த் திட்டமாக அமல்படுத்த முடியுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினரிடத்தில் அவர்கள் என்ன ஒத்துக் கொண்டார்களோ தெரியாது. ஆனால், அரசுக்கு — எங்களுக்கு அப்படி எந்தச் செய்தியும் வரவில்லை. குடிநீருக்கு என்றாலும், பாசனத்திற்கு என்றாலும், அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு நாம் செலவிடுவது ஒரே தொகைதான். நீங்கள் குடகைக்குக் கொண்டுவந்து மறுபடியும் அதை சிறுக்கூருக்குக் கொண்டுவந்து மோயாற்றின் வழியாகக் கொண்டுவர வேண்டும். அதே வழியில்தான் பாசனத்திற்கும் கொண்டு வர வேண்டும். முதலில் கேரள அரசு இந்தத் திட்டத்திற்கு ஒத்துக்கொள்கிறதா என்பது தான் மிகப் பெரிய பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடுத்த மாதம் 5 ஆம் தேதி கேரள முதலமைச்சரைச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள். அப்போது பெரியாறு அணையோடு இதையும் அவர்கள் பேசலாம். ஆகவே, இதுகுறித்துப் பேசுவதை, இந்தக் கேள்வியை, இத்தோடு விடுவது, இப்போது நலம் என்று நான் கருதுகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நீர்ப்பாசனத் திட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், அது காவிரி நதி நீர் தாவா தீர்ந்த பின்னால்தான் கவனிக்கப்படும் என்று சொல்லுகின்ற காரணத்தினால்தான், இதைக் குடிநீர்த் திட்டமாக அறிவிக்க கேரள அரசோடு நீங்கள் பேச்சுவார்த்தை நடத்திட முன்வருவீர்களா என்று மீண்டும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது, சென்னைக்கு கிருஷ்ணா குடிநீர் வரவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இப்போது மழைபெய்த காரணத்தினாலே செப்டம்பர் வரையிலும் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், நிரந்தரமாக கிருஷ்ணா நதிநீர் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டா; அது பற்றி, இந்த அரசிடத்திலே என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா திட்டம் கிடைப்பதிலே எந்தவிதமான தடையும் இல்லை. கிருஷ்ணா தண்ணீர் வந்து கொண்டுதான் இருக்கிறது. இப்போது கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் வருகிற பாதை கொஞ்சம் பழுதுபட்டிருக்கிற காரணத்தால், அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய தலைமைப் பொறியாளர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிடுவதற்கு, அதே நேரத்திலே ஸ்ரீசைலம் வரையிலே நடைபெறுகிற பணிகளைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு நான் வருவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னால்கூட கடப்பாவில் இருந்து தலைமைப் பொறியாளர் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு பேசினார்கள். எனவே, கிருஷ்ணா தண்ணீர் வரவில்லை என்பதல்ல; வந்து கொண்டிருக்கிறது. இடையில் ஏற்பட்ட ரிப்பேர் சரிசெய்யப்பட்டவுடன் மீண்டும் தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**10—**

**போக்குவரத்துக் கழகப் பணிமனை**

***23732—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடியிலிருந்து தஞ்சாவூர் 40 கிலோமீட்டரும், புதுக்கோட்டை 40 கிலோமீட்டரும், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை இப்படி சுற்று வட்டார



2000 மார்ச் 3]

பகுதிகள் 40 கிலோமீட்டர் இருப்பதால், இடையில் பணிமனை இல்லாத காரணத்தாலும், கறம்பக்குடி போக்குவரத்துக்கு மிகச் சிரமப்படுகிற பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினாலும், கறம்பக்குடியில் அரசு பணிமனை கேட்டிருக்கிறேன். நிதி நெருக்கடி என்ற காரணத்தைச் சொல்லித் தட்டாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு பணிமனையைத் தொடங்கி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு நிரந்தரமாக, பொதுமக்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புவதோடு, இப்போது முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு தமிழகத்தில் இதுபோல பணிமனைகள் எங்கெங்கே தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடியிலிருந்து பட்டுக்கோட்டை 28 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது; 40 கிலோ மீட்டர் இல்லை. ஆக 28 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற பட்டுக்கோட்டையிலே இந்தப் பணிமனை இயங்குகிற காரணத்தினால், கறம்பக்குடியிலே தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. பொதுவாக 40 கிலோமீட்டர் இடைவெளி இருக்கிற இடங்களிலேதான் பணிமனைகள் தொடங்கப்படுகின்றன. அது மட்டுமின்றி கறம்பக்குடியில் 3 நகரப் பேருந்துகளும், 7 புறநகர்ப் பேருந்துகளும்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைந்த பேருந்துகளே இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால் பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**11—**

**புதிய சாலை**

***28825—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி - விஸ்வநாதப்பேரி - இராயகிரி - இராமநாதபுரம் சாலை மிக மோசமாக உள்ளதால் உடனடியாகப் புதிய சாலை போட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சாலை போடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலைகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். இதுவரையிலும் அந்தமாதிரியான வேலைகள் நடைபெறவில்லை. இரண்டு முறை உண்ணாவிரதமும், ஒரு முறை சர்வ கட்சியின் சார்பில் பஸ் மறியலும் நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த வேலைகளை விரைவாகச் செய்வதாகச் சொல்லி, இதுவரை நடைபெறாத நிலைமை இருக்கிறது. தாங்கள் தொகுதிக்கு வந்தபோது ஒரு விழாவில்கூட நான் தங்களிடம் மனு கொடுத்திருக்கிறேன். அந்த வேலை பற்றிய விவரங்களையும் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்த வேலைகள் இதுவரையிலும் துரிதமாக நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்து, அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகளைப் புதுப்பித்து அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றுதான் சொன்னேன். சாப்பாடு வேகுவதற்குள்ளாக இலையிலே சாப்பாடு இல்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் வருத்தப்படுகிறார். இந்தச் சாலை, 5 சாலைகளை உள்ளடக்கி இருக்கிறது. சிவகிரி - விஸ்வநாதப்பேரி சாலை, இராயகிரி - விஸ்வநாதப்பேரி சாலை, தளவாய்புரம் சாலை, இராமநாதபுரம் - இராயகிரி சாலை, தென்காசி - மதுரை சாலையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலை ஆக 5 சாலைகளை இது உள்ளடக்கி இருக்கிறது. இதிலே சிவகிரி - விஸ்வநாதப்பேரி சாலையைச் சீர் செய்வதற்காக 23.40 இலட்சங்களுக்கு நபார்டு - 5 திட்டத்தின் மூலம் சீர்செய்யும் பணி டெண்டர் அளவில் இருக்கிறது. இராயகிரி - விஸ்வநாதப்பேரி சாலை, இந்தச் சாலை 1 கிலோ மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர் வரை இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டப் பகுதியில் ரூ.4.30 இலட்சங்களுக்குச் சேர்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன. தளவாய்புரம் சாலை, 1.6 கிலோமீட்டர். இந்தச் சாலை பழுதுபட்ட இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டம் பகுதி 2-ல் சேர்க்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் - இராயகிரி சாலை -- மேலே குறிப்பிடப்பட்ட சாலை -- பழுதுபட்ட இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டம் 2-ல் ரூ.1.45 இலட்சத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தென்காசி - மதுரை சாலையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலை 2.6 கிலோ மீட்டரிலிருந்து 3.6 கிலோமீட்டர். இச்சாலை ரூ. 4.50 இலட்சத்திற்கு பழுதுபட்ட இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டம் பகுதி 1-ல் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.



**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினாவிற்கு அமைச்சர் அளித்த பதில் தவறானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறு என்றால் உரிமைப் பிரச்சினை கொண்டுவாருங்கள், உட்காருங்கள்.

வினா எண் 12, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

12—

## புறவழிச் சாலை அமைத்தல்

***29506—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலை, கடலூரிலிருந்து தூத்துக்குடிக்குப் போடுகின்ற பணியில் கடலூர் புறவழிச் சாலை போடும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், மாவட்டத் தலைநகரமாக நீண்டகாலமாக இருக்கின்ற காரணத்தினால் மக்கள் குடியேறுகின்ற நகரமாகவும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக சிங்கப்பூர் உதவியுடன் கடலூர் துறைமுகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டக்கூறுகள் சாத்தியமாக இருக்கின்ற சூழ்நிலையிலும், 60-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் சிப்காட் வளாகத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலும், மக்கள்

நெருக்கடியும், வாகனப் போக்குவரத்து நெருக்கடியும் மிகுதியாக இருப்பதாலும், விபத்துகள் அடிக்கடி நிகழக்கூடிய சூழ்நிலைகள் உள்ளன. ஆகவே, கடலூருக்குப் புறவழிச் சாலை என்பது அவசியமாகவும் அத்தியாவசியமாகவும் இருக்கிற காரணத்தினால், கடலூர் புறவழிச் சாலைத் திட்டத்தை அரசு உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையுள்ள அந்தச் சாலையை கிழக்குக் கடற்கரைச் சாலை என்ற திட்டத்தில், உலக வங்கி நிதியாதாரத்துடன் மேற்கொள்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கடலூருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் எந்தத் திட்டமும் இதிலே இணைக்கப்படவில்லை. ஆனால், மேற்கண்ட கிழக்குக் கடற்கரைச் சாலையில், சிதம்பரம், சீர்காழி, நாகப்பட்டினம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய நகரங்களுக்கு, ஐந்து புறவழிச் சாலைகள் அமைக்கின்ற புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கான விரிவான பொறியியல் அறிக்கை தயார் செய்ய, ஆலோசகர்களின் கருத்து ஆய்வில் உள்ளது. ஆனால், கடலூருக்கு இந்தத் திட்டம் இப்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலை வேலைகள் கடலூர் வரை முடிந்திருக்கின்றன. அதைத் தொடர்ந்து மேலும் வேலைகள் நடைபெறவில்லை. எனவே, அதைத் தொடர்ந்து அந்த வேலைகள் எப்போது நடைபெறும் என்பதைக் கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையைத் தொடர்ந்து வரும்போது, பி. முட்லூரையும், சி.முட்லூரையும் இணைக்கின்ற பாலம் அதிலே வருகிறது; அந்தப் பாலத்தையாவது முதலிலே கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உலக வங்கி நிதியாதாரத்துடன் மேற்கொள்ளப்படவிருக்கிறது. உலக வங்கி கொடுத்திருக்கிற பல்வேறு பிரச்சினைகள் குறித்து, விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு,



மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு - குறிப்பாக சுற்றுப்புறச் சூழல் குறித்து மைய அரசிலே இருந்து நமக்கு clearance வர வேண்டும் - அதற்கான முயற்சியிலே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை இப்போது ஈடுபட்டிருக்கிறது. அது வந்த பிறகுதான், முழுமையாக அந்தத் திட்டம் ஒரே நேரத்திலே எடுத்துக்கொள்ளப்படும். பாலம் கட்டுவதும் அதோடு சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலை, கடலூர் வரை நீடிக்கப்பட்டு, அதற்குமேல் திருத்துறைப்பூண்டியிலிருந்து முத்துப்பேட்டை வரை சர்வே செய்யப்பட்டு, சர்வேயிலே எல்லையும் காட்டப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினாலோ, தற்போது வேலைகள் நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக அந்தக் கடற்கரைச் சாலை வேலைகளை மேற்கொண்டு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை வரையில் மட்டுமல்ல; தூத்துக்குடி வரையிலே சர்வே செய்யப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இன்னும் சொல்லப்போனால், அதற்கான டெண்டர்கள்கூடக் கேட்கப்பட்டு, Pre-qualification என்று சொல்லப்படுகிற அதுவும் முடிவுற்றிருக்கிறது. உலக வங்கியிலிருந்து நிதி வந்தவுடன் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையின் தொடர்ச்சியாக தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள அந்தச் சாலையை, முன்னாள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்துத் தருவதாக, 1997 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே உறுதி அளித்தார்கள். ஆனால், அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை, தூத்துக்குடிக்கும், கன்னியாகுமரிக்கும் இடையே உள்ள பகுதி. Road Sector Project-லே இருப்பதால், அந்தச் சாலை மிக மோசமான

நிலையில் இருக்கிறது. எந்தவிதத்திலும் அதைச் சரி செய்ய நிதி ஒதுக்காமல் பல ஆண்டுகளாக இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்திலே இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணி தாமதப்படுமானால், தூத்துக்குடிக்கும், கன்னியாகுமரிக்கும் இடையே, திருச்செந்தூர் புண்ணியஸ்தலம், உவரி, சுயம்புலிங்க சுவாமி புண்ணியஸ்தலம், அதேபோன்று கிறித்தவ ஆலயங்களான மணப்பாடியிலேயுள்ள மாதா ஆலயமும், உவரியிலேயுள்ள புனித அந்தோணியார் ஆலயமும் மிக முக்கிய ஆலயங்களாக கன்னியாகுமரிக்கும், தூத்துக்குடிக்கும் இடையிலே இருக்கின்றன. அந்தச் சாலை படுமோசமாக இருக்கிறது—ஆர்.எஸ்.பி. திட்டத்திலே அதை எடுப்பதற்குக் காலதாமதமானால், அதற்கு வேறு நிதி ஒதுக்கி, அந்தச் சாலையைச் செப்பனிட்டுத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், தூத்துக்குடி வரையிலே இருக்கக்கூடிய அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைதான் Road Sector Project-லே இருக்கிறது. தூத்துக்குடியிலே இருந்து கன்னியாகுமரி வரை இருக்கிற சாலை அந்தத் திட்டத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடியிலே இருந்து கன்னியாகுமரி வரை ஒரு சாலை இருக்க வேண்டும்; அமைக்கப்பட வேண்டும். திருச்செந்தூர் வரை ஓரளவு நல்ல சாலை இருக்கிறது. திருச்செந்தூரிலே இருந்து கன்னியாகுமரி வரை இணைப்பதற்கு வேறு வகையான திட்டத்திலேதான் அது மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

13—

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

***29588 — திரு. ம. முத்துராமலிங்கம் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் புதுப்பித்து திருப்பணி நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், திருமங்கலம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 10 உபய திருப்பணிகளுக்காக ரூ.1.23 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10-05

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தத் திருக்கோவில் மாண்புமிகு பேரவைத் தலைவருடைய தந்தையார் திருமிகு பி.டி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்தக் கோவில் மிகவும் பழைமையடைந்து புதுப்பிக்கப்படாமல் பல ஆண்டுகளாக இருக்கின்ற காரணத்தினால், அக்கோவிலுக்கு முழுமையான திருப்பணி நடத்தப்பட வேண்டுமென்று, அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி, இந்த ஆண்டு முழுமையான முறையில் திருப்பணி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** ஏற்கெனவே பழுதுகளை நீக்குவதற்காக, 10 வகையான விமானங்களுக்குத் தேவையான தொகையை ஒதுக்கித்தான் இந்த பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஏற்கெனவே 6 திருப்பணிகள் முடிவுற்றுவிட்டன. எஞ்சியிருப்பவை 4 மட்டுமே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு, இந்த பழுதுபார்ப்புப் பணிகளுக்கு மேலும் திருப்பணி தேவைப்படும் என்பதை அவர்கள் உறுதிப்படுத்துவார்களானால், அந்தப் பணியையும் தொடரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

14— [2000 மார்ச் 3

**கார்களை ஓட்ட காஸ் சிலிண்டர்**

**•23751— திரு. ப. ரங்கநாதன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கார்களை ஓட்ட சமையல் காஸ் சிலிண்டர் பயன்படுத்துவதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1998 ஆம் வருடத்திய மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 52-ன்கீழ் மோட்டார் வாகனங்களில் சமையல் காஸ் பயன்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இது சம்பந்தமாகப் போக்குவரத்துத் துறையினரால் சோதனை செய்யப்படும்போது வாகனங்களில் சமையல் காஸ் சிலிண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளது தெரியும்பட்சத்தில் சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டு மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 53(1) (எ) மற்றும் 54-ன்படி வாகனத்தின் பதிவைத் தற்காலிகமாக ரத்து செய்து அல்லது ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் விலை கூடிவிட்ட காரணத்தினால் மேலைநாடுகளிலெல்லாம் காஸ் சிலிண்டரைப் பயன்படுத்தி கார்களை இயக்குகின்ற ஒரு யுக்தியைக் கையாண்டு வருகிறார்கள். அதேபோன்று இங்கேயும்—பெட்ரோல் விலை கூடிவிட்ட காரணத்தினால்—சிறிய, சாதாரண தொழிலாளர்கள் எல்லாம் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதால் அவை பெருகுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, காஸ் சிலிண்டரைப் பயன்படுத்தி வாகனங்களை ஓட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா, அதற்குண்டான பணிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 3]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகின்ற காஸ் சிலிண்டர் முழுமையாக, சமையலுக்காக மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு இதற்காக மானியம் தந்து குறைந்த விலையிலே அது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதை எடுத்து காருக்குப் பயன்படுத்துவோமேயானால், சமையல் வேலைகளுக்கு என்று அது வருகின்றபோது பற்றாக்குறை ஏற்படும் என்ற காரணத்தினால்தான் அந்தத் தடையைப் போட்டு இருக்கிறார்கள். ஆனால், கடந்த 10 நாட்களுக்கு முன்பாக இது பத்திரிகையிலே வந்த செய்தி - நம்முடைய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்கள் புதிய நவீன தொழில் நுட்பப்படி காஸ் சிலிண்டர்களை மோட்டார் வாகனங்களிலே பயன்படுத்துவதற்கு அனுமதிக்கலாமா என்பதைப் பற்றி மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்றும், விரைவிலே அதைப் பற்றிய மசோதா மத்திய பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்து மத்திய அரசு அதற்கு அனுமதிக்குமேயானால், அதற்கென்று அவர்கள் தனியாக ஒதுக்கீடு தருவார்களேயானால், அதையும் இந்த அரசு பரிசீலித்து அதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

15—

**பால் குளிரூட்டும் நிலையம்**

**•27739— திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, நாட்டார்மங்கலம் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சி தொகுதி, நாட்டார்மங்கலம் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 மார்ச் 3

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சிப் பகுதியிலேயிருந்துதான விழுப்புரத்திலேயுள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்கு மிக அதிகமான அளவிற்கு பால் கொள்முதல் செய்யப்படுகிறது. விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு, இந்தச் செஞ்சிப் பகுதிகளிலிருந்து, செஞ்சி, நாட்டார்மங்கலம் மேல்வளக்கூர் போன்ற பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்யப்படவேண்டுமானால் 60,70 கிலோமீட்டர்களுக்கு மேலே போக்குவரத்துச் செலவு ஆகிறது. அதனாலே அரசுக்கு வீணான செலவுகள்தான் சுமையாக வந்து சேருகின்றன. ஆகவே, மிக அதிகமான அளவிலே பால் கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தினாலும், இந்த வீண் செலவினங்களைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலையாலும், இந்தச் செஞ்சிப் பகுதி மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்றதாலும், அங்குள்ள விவசாயிகள் எல்லாம் துணைத் தொழிலாக பால் மற்றும் கால்நடை வளர்ப்புத் தொழிலையே நம்பியிருக்கின்ற காரணத்தினாலும், செஞ்சி நாட்டார்மங்கலத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க, இந்த ஆண்டாவது அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியைச் சுற்றியுள்ள சங்கங்களில் தற்போது பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு சராசரியாக 15,000 லிட்டர் மட்டுமே. நாட்டார் மங்கலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் 2,000 லிட்டர் பால் மட்டுமே நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டார்மங்கலத்தைச் சுற்றி உற்பத்தியாகும் பால், 50 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் விழுப்புரம் பால் பண்ணைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால் தயாரிக்கும் திறன் கொண்ட விழுப்புரம் பால் பண்ணை தற்போது 48,000 லிட்டர் பாலை மட்டுமே கையாளுகிறது. ஆகவே, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 3]

16—

### நீதிமன்றம் ஏற்படுத்துதல்

**•33301— திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தனி வட்டமாக உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் நீதிமன்றம் ஏற்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) நத்தம் நகரில் சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நத்தம் நகரில் சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தனி வட்டமாக உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அந்தப் பகுதியில் நத்தம் வட்டத்திற்கென்று தனியாக ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் நீண்ட நெடுங்காலமாக, பல்லாண்டு காலமாக நத்தம் நகரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் ஏற்படுத்த வேண்டுமென்று போராடி வருகிறார்கள். அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அரசு தன்னுடைய முடிவிலிருந்து மறுபரிசிலனை செய்து ஒரு Judicial Magistrate Court-ம் District Munsif Court-ம் நத்தம் நகரிலே உருவாக்குவதற்கு முன்வருமா, மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கின்ற குறிப்பில் நத்தத்தில் எந்த நீதிமன்றத்தையும் அமைக்க வேண்டுமென்பதற்கான பரிந்துரைகள் உயர்நீதிமன்றத்திலேயிருந்து அரசுக்குத் தரப்படவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நத்தத்திலே உள்ள மக்களுடைய கோரிக்கையை ஏற்கின்ற வண்ணம், இந்தக் குற்றவியல் நீதிமன்றத்தையும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசு உயர்நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்து அதை ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வழக்கறிஞர்கள் சங்கம், பொதுமக்கள் இவர்கள் கொடுக்கின்ற மனுவை மையமாக வைத்துக் கொண்டு உயர் நீதிமன்றம்தான் பரிந்துரை செய்து இங்கே அரசுக்கு அனுப்புகின்றது. உயர்நீதிமன்றத்திற்குத்தான் அந்தப் பகுதியில் எத்தனை வழக்குகள் இருக்கின்றன, நீதிமன்றம் தேவையா என்பதை நிர்ணயிக்கின்ற அதிகாரம், பரிந்துரைக்கின்ற அதிகாரம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமும் பொதுமக்கள் மூலமும் உயர்நீதிமன்றத்திற்கு வந்து, உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை அரசுக்கு வருமானால், அரசு அது குறித்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. சைதை கா. கிட்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

17—

### தொழிலாளர் குடியிருப்பு

***8024—திரு. சைதை கா. கிட்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தொழிலாளர் குடியிருப்பை, குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்க உரிமை வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பு எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தொழிலாளர்கள் குடியிருப்பை குடியிருக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கும் திட்டத்தை



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து சட்டப் பேரவை உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு இணங்க அதற்கு 14-3-1997 அன்று தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு மொத்தம் 141 தொழிலாளர்களுக்கு சொந்தமாக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் மேற்படி அரசாணைபற்றித் தொடரப்பட்ட வழக்குக்கு இடைக்காலத் தடை பெற்றதால் தற்சமயம் தாமதப்பட்டு, இப்போது இடைக்காலத் தடை நீக்கப்பட்டு, அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அடங்கிய கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தொழிலாளர் குடியிருப்பு வீடுகளை அந்தத் தொழிலாளர்களுக்கே, சொந்தமாக்குவது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இதை அவையிலே அறிவித்திருக்கிறார்கள். ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் வீட்டைப் பதிவு செய்ய பத்திரப் பதிவுத் துறைக்குப் போகின்றபோது, அந்த நிலத்திற்குரிய செயல் அலுவலர், பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகம் கேட்டு, பதிவு செய்ய மறுக்கிறார்கள். 141 பேருக்குப் பதிவு செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பதிவு செய்யப்பட்டது உண்மை. மேலும் பதிவுக் கட்டணமும், பத்திரத் தொகையும் அதிகமாகக் கேட்டு பதிவு செய்யாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே, மீதமுள்ள வீடுகளுக்கும், ஏற்கெனவே 141 வீடுகளுக்கு பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் அந்தப் பத்திரப் பதிவுச் செலவைக் குறைத்தும் அவர்களுக்கு வழங்க நம்முடைய மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் முயற்சிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையின்படி அந்த ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.9,600 என்ற பழைய விலையிலேயே பதிவுக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள மதிப்பின்படி நிர்ணயம் செய்தால் கூடுதலாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்கெனவே அரசு ஏற்று, அந்த ரூ.9,600-க்கே பதிவு செய்து வழங்க வேண்டும் என்று தக்க அறிவுரைகள் சம்பந்தப்பட்ட துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

[2000 மார்ச் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**18—**

**பாரத மாதா ஆலயம்**

***30538—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் பாரத மாதா ஆலயம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**19—**

**கட்டடம் மாற்றுதல்**

***31646— திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலுள்ள வாய் பேசாதோர், காது கேளாதோர் அரசுப் பள்ளியை, சானடோரியம் பெண்கள் சேவை இல்லத்தில் உபயோகப்படாமல் உள்ள கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2000 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரத்திலுள்ள வாய் பேசாதோர், காது கேளாதோர் அரசுப் பள்ளியில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவிகள் காஞ்சிபுரம் பள்ளிக்கு மாற்றப்பட்டுவிட்டதால் தாம்பரம் சானடோரியம் சேவை இல்லத்திலுள்ள கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே உயர்நிலைப் பள்ளி மாணவிகள்தான் மாற்றப்பட்டுவிட்டார்கள். ஆனால், குழந்தைகள் அங்கே இன்னும் பயின்று கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்திற்காக அரசு ரூ.5,000-க்கு மேல் வாடகை தருகிறது. அங்கே இருக்கின்ற குழந்தைகள் எந்தவித வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். இங்கே காலியாக இருக்கின்ற கட்டடங்களைப் பயன்படுத்தினால் அரசுக்கு நிதியாதாரமும் கிடைக்கும், அதைப்போல அந்தக் குழந்தைகளும் பயன்பெறுவார்கள் என்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, ஆய்வு செய்து, அந்தப் பள்ளியை இங்கே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பழுதடைந்திருக்கின்ற கட்டடத்தை நானும் போதுமான வசதி இல்லாத கட்டடத்தை பார்வையிட்டிருக்கின்றேன். உடனடியாக அங்கே புதியதாக வேறு கட்டடம் வாடகைக்குப் பார்க்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, புதிய கட்டடம் அமைகின்றபோது அந்தக் குழந்தைகளுக்கு அங்கு மாற்று இடம் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், சேவை இல்லம் இருக்கின்ற கட்டடத்தில் இந்தக் குழந்தைகளுக்கு தங்கும் வசதி செய்து தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள். சேவை இல்லம் இருக்கின்ற இடத்திற்கு, ஏற்கெனவே சிட்லபாக்கத்தில் இயங்கி வருகின்ற மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளி மாற்றப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லபாக்கத்திலுள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளை அங்கே

கொண்டு வருவதாக இருந்தாலும், இந்தக் காது கேளாதோர், வாய் பேசாதோர் போன்றவர்களையும் அங்கே கொண்டுவர போதுமான கட்டடங்களும், காலி இடங்களும் நிரம்பவே அந்தச் சேவை இல்லத்தில் இருக்கின்ற காரணத்தினால், இவை இரண்டையுமே மாற்றுகின்ற திட்டத்தை மேற்கொண்டு பரிசீலிக்க, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேவை இல்லத்தில் இருக்கின்ற காலி இடங்கள் சேவை இல்லத்தில் படிக்கின்ற மாணவர்களுக்காக மேலும் பல வசதிகளைச் செய்ய வேண்டிய காரணத்தினால், சிவகாசியில் உள்ள பள்ளியை மட்டும் அங்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**20—**

**விரைவு விசைப்படகு**

***27929—திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இயற்கை இடர்பாடுகளால் காணாமல் போகும் மீனவர்களை விரைந்து கண்டுபிடிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரைவு விசைப்படகு வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இயற்கை இடர்பாடுகள் காரணமாக காணாமல் போகும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க அரசு மூலம் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கடற்படை/கடலோரக் காவற்படை மூலமாகக் கடல்/வான் வழியாகவும் தேடுதல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், கடல்வழியாக வணிகக் கப்பல்களுக்குத் தகவல் தரப்பட்டு, காணாமல்



போகும் மீனவர்களைத் தேடும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் தவிர இலங்கை போன்ற அருகிலுள்ள அரசுகளுடன் தொடர்பு கொண்டு, காணாமல் போன மீனவர்களைப் பற்றிய தகவலறிந்தால் அவர்களை தமிழகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) மாவட்டந்தோறும் விரைவு விசைப்படகுகள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், மத்திய அரசு நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள 5 ரோந்துப் படகுகளில் ஒன்று விரைவில் கன்னியாகுமரியைத் தளமாகக் கொண்டு செயல்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயற்கை இடர்பாடுகள் காரணமாகத்தான் மீனவர்கள் கடலிலே காணாமல் போகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அவர்களை மீண்டும் விசைப்படகுகள் மூலம் தேடுவது என்பது இயலாத காரியம். ஏனென்று சொன்னால், கடல் கொந்தளிப்பான நேரத்திலே மீண்டும் விசைப்படகிலே செல்வது என்பது இயலாத காரியம். எனவே, நீண்ட கடற்கரைப் பகுதியை உடைய தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக மீனவர்களைக் காப்பாற்றுகின்ற முகத்தான், ஹெலிகாப்டர் வாங்கப்படுமா என்பதை அரசு மூலம் அறிய விரும்புவதோடு, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் கடந்த ஓராண்டு காலமாக வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்குப் பல்வேறு துரித நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே சொன்னார்கள். ஆனால் கடந்த 10 தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்திருந்த செய்தி மிக வேதனை அளிக்கின்ற செய்தியாக இருக்கிறது. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு 25-12-1999 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படி தமிழகத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை மீட்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், மத்தியிலே இருக்கிற சர்க்கார் அதற்குப் பதில் போட்டது 20-2-2000 அன்று. பாகிஸ்தான் சிறையில் இருக்கும் தமிழர்களை மீட்பதற்கு மத்திய அரசு, மாநில அரசு எவ்வளவு தூரம் அக்கறை எடுத்துக்கொள்கின்றன என்பது இதிலிருந்து புரிய வருகிறது. எனவே, பாகிஸ்தான் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிற அந்த 19 மீனவர்களை மீட்க வேண்டும்.

அதேபோல இலங்கையிலே 5 மீனவர்கள் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் மீட்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது. எடுக்கப் போகிறது என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் வழியாகவும், வான் வழியாகவும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடலோரக் காவல் படை மூலமாக, இன்னும் அதிவேக ரோந்துப் படகுகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் நாங்கள் இயக்க இருக்கிறோம். அது கூடிய விரைவில் இயங்க இருக்கிறது. பாகிஸ்தான் சிறையிலேயுள்ள மீனவர்களைப் பொறுத்தவரை இன்றைய பத்திரிகையைப் பார்த்திருந்தால் நிச்சயமாக அதற்குரிய பதில்கூடத் தெரிந்து இருக்கும்; கடைசியாக 3-1-2000-ல் நமது இந்தியாவைச் சேர்ந்தவர்கள் அங்கே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்திருப்பார்கள். ஆகவே, அதற்கான துரித நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஒவ்வொரு முறையும் இங்கிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் மூலமாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். மேலும் எங்களது செயலாளர் அவர்களும் அங்கேயுள்ள இந்திய தூதரகத்தோடு தொடர்புகொண்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் கடலோரப் பகுதியில் இந்த விரைவுப் படகு விடும் திட்டம் ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் துறையின் மூலமாக கடலில் காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்க இது எந்த வகையில் உதவும் என்பது அனுபவ ரீதியாகப் பார்க்க வேண்டும். கடல் கொந்தளிப்பு நேரங்களில் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உருவாகின்றது. இருந்தாலும் அதைப் பயன்படுத்துகின்ற வகையில், மாவட்டத்தினுடைய மையத்தில் ஒரு பகுதியிலே அதைத் தருவதன் மூலமாகத்தான் அவர்களை விரைந்து கண்டுபிடிக்க முடியும். அதுபோன்று நீண்டகாலக் கோரிக்கையாக ஒரு



ஹெலிகாப்டர் வேண்டும் என்ற ஒரு கோரிக்கை அப்பகுதி மீனவர்களால் வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே அரசு அதையும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 அதிவேக ரோந்துப் படகுகள் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒன்றும், மல்லிப்பட்டினத்தில் ஒன்றும், தூத்துக்குடியில் ஒன்றும், இராமேஸ்வரத்தில் ஒன்றும், கன்னியாகுமரியில் ஒன்றும் இயக்கப்பட முடிவெடுத்து இரண்டு இடங்களில் — மல்லிப்பட்டினத்திலும், இராமேஸ்வரத்திலும் — இயங்கிக் கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரியில் கூடிய விரைவில் அந்தப் படகினை இயக்க இருக்கிறோம். அந்தப் படகுகள் மூலம் இயற்கையின் இடர்பாடுகள் வரும்போது — நிச்சயமாக மீனவர்களுக்கு இயற்கை இடர்பாடுகள் வருகின்றன. அதாவது புயல் வருகிறது என்றால் அதை நாங்கள் அறிவிக்கிறோம். இந்தப் படகில் மற்ற படகுகளுடன் தொடர்பு கொள்வதற்காக தொடர்பு கொள்கின்ற சாதனங்கள் இன்னும் தொலைநோக்குக் கருவிகள் போன்றவை எல்லாம் இருக்கின்றன. ஆகவே அந்தக் கருவிகள் மூலம் அதிவேகமாக, மீனவர்கள் அந்தக் கடல் பகுதியிலே சுழன்று வரும் நேரத்தில் மீனவர்களுக்கு ஏற்படுகின்ற அந்த இடர்பாடுகளிலிருந்து, நிச்சயமாக அவர்களை மீட்க முடியும் என்பதை இங்கே தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரையிலே பாகிஸ்தானிலே அடைக்கப்பட்டிருக்கக்கூடிய மீனவர்களைத் திரும்பப் பெறுவதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதேநேரத்திலே கடந்த 20-2-2000 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4 பேர் மீன் பிடிக்கச் சென்றவர்கள் வரவில்லை. 21-ந் தேதி ஒரு தகவல்; என்னவென்று சொன்னால் இலங்கைக் கடலோரப் படை பிடித்துச் சென்றுவிட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால், உண்மையிலேயே நடந்த சம்பவம் என்னவென்று சொன்னால் அந்த மீன் பிடிக்கச் சென்ற தோமஸ் என்பவருடைய மகன் மைக்கேல், தாமஸ் என்பவருடைய மகன்

[2000 மார்ச் 3

கிப்சன், சேவியர் என்பவருடைய மகன் நிக்கோலஸ், மாடசாமி என்பவருடைய மகன் சுப்பிரமணியன் ஆகிய 4 பேரும் மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். அந்த 4 பேரும் மீன் பிடிப்பதற்காகச் செல்லுகின்ற நேரத்திலே இலங்கையைச் சேர்ந்த மீனவர்களும் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே வந்துவிட்டிருக்கிறார்கள். இவர்கள் இருதரப்பினரும் வாக்குவாதம் செய்து கொண்ட காரணத்தினாலே தமிழக எல்லையிலே இருக்கக்கூடிய நம்முடைய மீனவர்களை இலங்கை மீனவர்கள் அடித்து இழுத்துச் சென்று இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைத்த காரணத்தினாலே அவர்கள் இலங்கையில் அங்கே சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கொடுமை என்பது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த 4 மீனவர்களையும் திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டறிந்து, விரைவிலே அவர்களை மீட்டுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-2-2000 அன்று இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலே மீன் பிடிக்கச் சென்றிருந்த 8 பேர்களும், மேலும் நாகப்பட்டினத்தில் கோடியக்கரையைச் சேர்ந்த 4 மீனவர்களும் ஆக 12 பேர் இன்று இலங்கையிலே இருக்கிறார்கள். இவர்களை மீட்டு வருவதற்காக அரசு துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மேலும், கடந்த 26 ஆம் தேதிதான் அந்தப் பகுதியிலே நாங்கள் அதிவேக ரோந்துப் படகினை, பவளம் என்ற பெயரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் படகுக்கு பவளம் என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் அந்த அதிவேக ரோந்துப் படகை — தற்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். மேலும், சிறைபிடித்துச் செல்லப்பட்ட அந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு நாளைக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 50 தமிழக அரசின் சார்பாக நாங்கள் வழங்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களை மீட்டு வருவதற்குத் தேவையான பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மார்ச் 3]

## *(அ) உடுக்குறியிடாத வினாக்கள்

### முதல் பட்டியல்

1—

### ரேக்கிங் கொடுமையைத் தடுத்தல்

**வினா எண் 14498—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் ரேக்கிங் கொடுமை இன்னும் தொடர்வதை அரசு அறியுமா?

(ஆ) ஒவ்வொரு கல்லூரியிலும் அதைத் தடுக்க புறக்காவல் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) குறிப்பிட்ட புகார் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) தமிழ்நாட்டில் இனிமேல் புறக்காவல் நிலையங்கள் அமைப்பதில்லையெனக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முழுவதுமாகக் கல்லூரிகளில் புறக்காவல் நிலையங்கள் அமைப்பது தேவையற்றது.

2—

### நிறுவன இலாபம் விவரம்

**வினா எண் 19415—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கத்திலி ஒன்றியம், செவ்வாத்தூர் மைக்கா மேட்டில் உள்ள மைக்கா கனிமம் நிறுவனம் இலாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இந்நிறுவனம் தற்சமயம் இலாபகரமாக இயங்கவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

3—

## உளவுப் பிரிவில் பெண்கள் நியமனம்

**வினா எண் 22280—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையில் உளவுப் பிரிவில் (இன்டலிஜென்ஸ்) பெண்கள் அதிக அளவில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காவல் நுண்ணறிவுப் பிரிவில் (Intelligence Wing) தற்பொழுது 2 பெண் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 4 பெண் காவல் ஆய்வாளர்கள், 3 பெண் காவல் சார்பு ஆய்வாளர்கள், 3 பெண் தலைமைக் காவலர்கள் மற்றும் 8 பெண் முதல் நிலைக் காவலர்கள், ஆக மொத்தம் 20 சீருடைக் காவல் அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் தகவல் சேகரிப்பதிலும், நுண்ணறிவுக் கட்டுப்பாட்டு அறையிலும், கணினிப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் தவிர மாநில நுண்ணறிவுப் பிரிவில் உள்ளடங்கிய தனிப் பிரிவில் சீருடை அணியா 25 பெண் தனிப் பிரிவு உதவியாளர்கள் மற்றும் தனிப் பிரிவு உதவி மேலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

(ஆ) நுண்ணறிவுப் பிரிவில் தகவல் சேகரிக்கும் திறமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேற்படி பிரிவில் பணிபுரியத் தேவையான தகுதியும் ஆர்வமும் கொண்ட பெண்கள் இப்பிரிவில் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது நியமனம் செய்யப்படுவார்கள்.



4—

## விரப்பனை பிடிக்கும் செலவு விவரம்

**வினா எண் 23176—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்காக மாநில அரசு வருடந்தோறும் செலவு செய்யும் தொகை எவ்வளவு?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிப்பதற்காக மாநில அரசு கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த செலவு குறித்த விவரம்:—

(ரூபாய் இலட்சத்தில்)

| 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|
| 40.95 | 32.46 | 60.11 | 21.41 | 54.95 | 68.95 |

5—

## காவல் நிலையத்தை மாற்றுதல்

**வினா எண் 24490—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சுட்டனூர் புறக்காவல் நிலையம் (விருதுநகர் மாவட்டம்) முழுக்காவல் நிலையமாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

6—

## புதிய கட்டடம் கட்டும் திட்டம்

**வினா எண் 25956—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலுள்ள மாவட்ட தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர்:**

திருவண்ணாமலை தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட ஒதுக்கப்பெற்ற இடத்தின் மீதான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், தற்பொழுது கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

7—

## தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 25957—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தண்டராம்பட்டில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தண்டராம்பட்டு தீயணைப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கென கீழ்ரவண்டபாடி கிராமம் சர்வே எண் 6/2-ல் 2.18 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் ஒதுக்கீடு செய்து பெறப்பெற்றதும் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப உரிய நேரத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





8—

## துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 25967—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

9—

## புதிய காவல் நிலையங்கள் தொடங்குதல்

**வினா எண் 26052—திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருவிக்குளத்திலும், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், [illegible]லையூரிலும் புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ள குருவிக்குளத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பதற்கான ஆணை 24-9-1999 அன்று வெளியிடப்பட்டு அக்காவல் நிலையம் 27-9-1999 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

[2000 மார்ச் 3

தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரம் வட்டத்தில் உள்ள கடலையூரில் புதிய காவல் நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

### தமிழ்நாடு அரசு லாட்டரிச் சீட்டு

**வினா எண் 26198—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு நடத்தும் லாட்டரி சீட்டில் 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு அரசு நடத்தும் பரிசு சீட்டுத் திட்டத்தின் வாயிலாக 1998-99 ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த மொத்த நிகர வருமானம் ரூ.19,70,09,560 ஆகும். 1998-99 ஆம் நிதி ஆண்டில் 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை கிடைத்த நிகர வருமானம் ரூ.18,50,67,049 ஆகும்.

11—

### புதியதாக ஈப்பு வழங்குதல்

**வினா எண் 28279—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பெரும்பாலை காவல் நிலையத்திற்கு புதியதாக ஈப்பு (ஜீப்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி பெரும்பாலையில் உள்ளது புறக் காவல் நிலையம் ஆகும். இப்புறக்காவல் நிலையத்திற்கு சுவாசாகி மோட்டார் சைக்கிள் 12-12-1997 அன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த புறக்காவல் நிலையம் முழுக்காவல் நிலையமாக நிலை உயர்த்தப்படும்போது புதிய ஈப்பு வழங்கப்படும்.



2000 மார்ச் 3]

12—

### புதிய ஈப்பு வழங்குதல்

**வினா எண் 28280—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, எரியூர் காவல் நிலையத்திற்கு புதிய ஈப்பு (ஜீப்) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், எரியூர் காவல் நிலையத்திற்கு டிராக்ஸ் ஈப்பு ஒன்று 22-6-1995 அன்று வழங்கப்பட்டுள்ளது. அது நல்ல நிலையில் இயங்கியும் வருகிறது. எனவே, புதிய ஈப்பு வழங்க அவசியம் எழவில்லை.

13—

### கணினி வழங்குதல்

**வினா எண் 28306—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், மாவட்ட வணிக வரித் துறை அலுவலகத்திற்கு கணினி வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் வணிக வரிக் கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட, தருமபுரியில் இயங்கும் தருமபுரி வணிக வரி அலுவலர் அலுவலகத்திற்கு, வணிக வரித் துறை, கணினி மயமாக்கும் இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் கணினிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14—

### புறக்காவல் நிலையம் செயல்படுத்துதல்

**வினா எண் 28914—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை தோட்டியோடு சந்திப்பிலுள்ள போக்குவரத்து புறக்காவல் நிலையம் இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அதனை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டியோடு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் ஒருபோதும் புறக்காவல் நிலையம் எதுவும் செயல்பட்டதில்லை. குறிப்பிட்ட அவ்விடத்தில் ஒரு சிறிய காவலர் ஓய்வறை மட்டுமே உள்ளது.

(ஆ) எனவே, இக்கேள்வி எழாது.

15—

### காவல் நிலையங்கள்

**வினா எண் 29613—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்பொழுது எத்தனை காவல் நிலையங்கள் உள்ளன?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

| | | |
|---|---|---|
| 1. சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் குற்றப்பிரிவிற்கான காவல் நிலையங்கள் | .. | 1,204 |
| 2. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் | .. | 58 |
| 3. போக்குவரத்துப் பிரிவுகள் மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளிட்ட போக்குவரத்துக் காவல் நிலையங்கள் | .. | 189 |
| 4. பிற சிறப்புக் காவல் நிலையங்கள்:— | | |
| (அ) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் | .. | 86 |
| (ஆ) போதைப் பொருட்கள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுகள் | .. | 12 |
| (இ) தீண்டாமை ஒழிப்புக் காவல் நிலையங்கள் | .. | 22 |
| மொத்தக் காவல் நிலையங்களின் எண்ணிக்கை | .. | 1,571 |



16—

### அலுவலகத்தை இரண்டாகப் பிரித்தல்

**வினா எண் 31800—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை துணைக் காவல் கண்காணிப்பாளர் சரகத்தை இரண்டாகப் பிரித்து செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

17—

### நோயாளர் ஊர்தி வழங்குதல்

**வினா எண் 31986—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தீயணைப்பு நிலையத்திற்கு நோயாளர் ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி தீயணைப்பு நிலையத்திற்கு மிக அருகில் அதாவது ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அரசு மருத்துவமனையில் நோயாளர் வண்டி ஒன்று உள்ளது மற்றும் தென்காசியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலும் நோயாளர் ஊர்தி உள்ளது. மேலும், தென்காசி நகரில் தொழிற்சாலைகள் அதிகம் இல்லை. குற்றாலம் சீசன் காலங்களான மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய சாலை விபத்துக்கள் இப்பகுதியில் அதிகம் ஏற்படுகின்றன. அப்பொழுது ஏற்படும் சாலை விபத்து அழைப்புகளுக்கு நீர்தாங்கி வண்டி மூலம் சென்று விபத்துச் சேவைகள் செய்து வரப்படுகின்றன. எனவே, தென்காசி தீயணைப்பு நிலையத்திற்கு நோயாளர் ஊர்தி தற்பொழுது வழங்க வேண்டிய அவசியமில்லை.

18—

## நூலகத்திற்குக் கட்டடம்.

**வினா எண் 8288—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, இலங்குளம் ஊராட்சி, பரப்பாடி நூலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, இலங்குளம் ஊராட்சி, பரப்பாடி கிராமத்தில் 25-7-1997 முதல் ஊர்ப்புற நூலகமொன்று வாடகையில்லாத இலவசக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் பெறப்பட்டு உள்ளது. எனினும் சொந்தக் கட்டடம் இல்லாத வாடகைக் கட்டடங்களில் செயல்படும் கிளை நூலகங்களுக்கு மட்டும் நிதி வசதிக்குட்பட்டு தற்போது சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அனைத்துக் கிளை நூலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் நிதி வசதிக்குட்பட்டு, பரப்பாடியிலுள்ள ஊர்ப்புற நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும். பரப்பாடி ஊர்ப்புற நூலகத்திற்குக் கட்டடம் கட்ட தற்போது தேவையான நிதி வசதி இல்லை.



19—

## கலைக் கல்லூரிக்கு அடிப்படை வசதிகள்.

**வினா எண் 17694—திரு ஜி.கே மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பர்கூர் அரசு கலைக் கல்லூரியில் போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

பர்கூர் அரசு மகளிர் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கென ரூ.80.05 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்டி (முதல்வர் குடியிருப்பு உட்பட) முடிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளியாட்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் கல்லூரியில் பயிலும் மாணவியரின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டும் கல்லூரியின் முன்பக்கம் சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு உள்ளது. மற்ற பக்கங்களில் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு உள்ளது.

20—

## ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்தல்.

**வினா எண் 18981—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு ஓர் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு ஓர் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்துத் தருவதற்குப் பதிலாக அவ்விடத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் போடப்பட்டு, பள்ளிக்கு அருகில் தொட்டி கட்டி தண்ணீர் விடப்பட்டு, தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

21—

**குறை தீர்க்கும் நாள்.**

**வினா எண் 21745—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மற்றும் சேலம் மாவட்டத்தில் 1997-98-ல் 1998 ஜூன் மாதம் வரை முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மூலம் எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1997-98-ல் 1998 ஜூன் மாதம் வரை முன்னாள் படைவீரர்கள் குறை தீர்க்கும் நாளில் மொத்தம் 374 மனுக்கள் பெறப்பட்டன. சேலம் மாவட்டத்தில் முதல் குறை தீர்க்கும் நாள் ஜூலை 9 ஆம் தேதிதான் நடத்தப்பட்டு உள்ளது. ஆகவே, ஜூன் 1998 வரை எந்த மனுவும் பெறப்படவில்லை. ஜூலை 9 ஆம் தேதி நடைபெற்ற முதல் குறை தீர்க்கும் நாளில் 45 மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) தமிழ்நாட்டில் பெறப்பட்ட 374 மொத்த மனுக்களில் 327 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டது. மற்ற 47 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

சேலம் மாவட்டத்தில் 9-7-1998 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பெறப்பட்ட 45 மனுக்களில், 39 மனுக்கள் மீது குறைகள் தீர்க்கப்பட்டு விட்டன. மற்ற 6 மனுக்களும் பரிசீலனையில் உள்ளன.



22—

**குடிநீர் இணைப்பு வழங்குதல்.**

**வினா எண் 25575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடன் சாவடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் வழங்கப்படும் குடிநீர் உப்பு நீராக உள்ளதால், அங்கு காவிரி குடிநீர் இணைப்பு ஒப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குத் தற்போது சண்முகாபுரம் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சண்முகாபுரம் மேல்நிலைத் தொட்டிக்கு இராசிபுரம் இடைப்பாடி குடிநீர் திட்ட வழியோர கிராமங்களில் மூன்றாம் கட்டப் பணிகளில் காவிரி குடிநீர் இணைப்பு வழங்கப்பட உள்ளது. அப்போது இப்பள்ளிக்கு காவிரி குடிநீர் வழங்கப்படும்.

23—

**தையல் ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு.**

**வினா எண் 26515—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளில் எத்தனை தையல் ஆசிரியர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி அமர்த்தப்பட்டனர்?

(ஆ) இவர்கள் வேலைவாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனரா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 86 தையலாசிரியர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) ஆம்.

[2000 மார்ச் 3

24—

### டென்னிஸ், வாலிபால் விளையாட்டுத் தளம் அமைத்தல்

**வினா எண் 29976—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் டென்னிஸ் கோர்ட் மற்றும் வாலிபால் விளையாட்டுத் தளம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இவ்விளையாட்டுத் தளங்கள் அமைப்பதற்கான அவசியம் மற்றும் சாத்தியக்கூறுகள் பற்றி பரிசீலித்து தேவையாயின் அவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரி முதல்வருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

25—

### மெட்ரிகுலேஷன் பள்ளி விவரம்

**வினா எண் 30287—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) அவற்றில் பயிலும் மாணவர் எண்ணிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாட்டில் 1,335 மெட்ரிகுலேசன் பள்ளிகளும், 852 மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

(ஆ) அவற்றில் முறையே 4.79 இலட்சம் மற்றும் 5.28 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

26—

### கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

**வினா எண் 30657—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரிக்கு, கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலையைப் பொருத்து, வரும் ஆண்டுகளில் இது குறித்து ஆவன செய்யப்படும்.

27—

### கல்லூரி ஆசிரியைகளுக்குக் கூடுதல் வசதிகள்

**வினா எண் 30659—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரியில் பணி புரியும் ஆசிரியைகளுக்கு தனி ஓய்வறையும், கழிவறை வசதியையும் செய்து தர அரசு முயற்சிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது பணிபுரிந்துவரும் ஆசிரியைகளுக்கு போதிய ஓய்வு அறை மற்றும் கழிவறை வசதிகள் உள்ளது. அரசின் நிதி நிலையைப் பொருத்து வரும் ஆண்டுகளில் தேவைப்படின் அந்த வசதியை மேம்படுத்த ஆவன செய்யப்படும்.

28—

### பூந்தோட்டம் பராமரித்தல்

**வினா எண் 30660—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் மூலமாக அழகிய பூந்தோட்டம் அமைத்து பராமரிக்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வரும் கல்வியாண்டில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மூலம் பூந்தோட்டம் அமைத்து அதனை பராமரிக்குமாறு கல்லூரி முதல்வர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். இது தவிர சிதம்பரம் நகரிலுள்ள வங்கிகள், ரோட்டரி கிளப், லைன்ஸ் கிளப் போன்றவற்றின் உதவியை நாடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

29—

## பிரசவ மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 11954—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பெரிய பள்ளிவாசல் அருகிலுள்ள அரசுக் காலியிடத்தில் பிரசவ மருத்துவமனை அமைக்குமாறு முஸ்லீம்கள் கோரி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனை, ஏனைய வசதிகளுடன், 40 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு, 20 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு மற்றும் பேறுகால பின்-சிகிச்சைப் பிரிவுடன் சிறப்பாக இயங்கி வருவதால், திருப்பூர் பெரிய பள்ளிவாசல் அருகில் பிரசவ மருத்துவமனை அமைக்கும் கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



30—

## மின்சார இணைப்பு

**வினா எண் 19503—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் ஜீவன்தாரா கேணிகள் கொடுக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மின்சார இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 151, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை, நாள் 5-7-1993ன்படி தமிழ்நாட்டில் ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 2000 இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி 1993-94 ஆம் ஆண்டு, 1,342-ம், 1994-95 ஆம் ஆண்டு, 2,358-ம், 1995-96 ஆம் ஆண்டு, 2,442-ம், 1996-97 ஆம் ஆண்டு, 2,203-ம், 1997-98 ஆம் ஆண்டு, 2,000-மும் 1998-99 ஆம் ஆண்டு, 2,000-ம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 48, ஊரக வளர்ச்சி (மதி-1), துறை, நாள் 10-3-1999-ன்படி தமிழ்நாட்டில் ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 2,000 இலவச மின் இணைப்புகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 1,249 மின் இணைப்புகளும், இதர விவசாயிகளுக்கு 751 மின் இணைப்புகளும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாண்டு (1999-2000), 31-7-1999 முடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 219 இலவச மின் இணைப்புகளும் இதர விவசாயிகளுக்கு 20 இலவச மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு (1999-2000) இறுதிக்குள் மொத்த இலக்கீடான 2,000-ம் எய்தப்பட்டுவிடும்.

31—

### மின் கட்டணத்தைச் சீராக்கும் திட்டம்

**வினா எண் 24726—திரு. ஜி. நிஜாமுதீன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*

*மின் கட்டணத்தை வீடு, விவசாயம், தொழில் என பாகுபாடு இல்லாமல் ஒரே சீராக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*விடை —*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*பல்வேறுதரப்பட்ட மின் பயனீட்டாளர்களுக்கு சமுதாய பொருளாதார அடிப்படையில் மின் கட்டணங்களை அரசு நிர்ணயிப்பதால், மின் கட்டணத்தை வீடு, விவசாயம் தொழில் என பாகுபாடு இல்லாமல் ஒரே சீராக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

32—

### குடியிருப்புகளுக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 25294—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு தொகுதி, வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் குடியிருப்புகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை —*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் குடியிருப்புகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.*



33—

### நடமாடும் சுகாதார நிலையம்

**வினா எண் 25295—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டராம்பட்டு தொகுதியில் நடமாடும் சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*விடை —*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,39,209. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாகும். ஆனால், தற்பொழுது 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. எனவே, இத்தொகுதியில் நடமாடும் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அவசியமோ, திட்டமோ இல்லை.*

34—

### புதிய கட்டடம்

**வினா எண் 25425—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை கிராமத்தில் தாய்சேய் நல விடுதிக்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—   [2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 8,682 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 3,110 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் இல்லை. இவற்றுக்குப் படிப்படியாக கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனி வரும் காலங்களில் துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

**கூடுதல் கட்டடம்**

**வினா எண் 25942— திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரிய கொழப்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெருமாநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெரிய கொழப்பலூரில் 6 படுக்கை வசதிகள் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இது பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகும். இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அரசு கட்டடத்தில் செயல்படுகிறது. பொதுப் பிரிவில் ஒரு மருத்துவ அலுவலர் குடியிருப்பும் மற்றும் 8 பணியாளர் குடியிருப்புகளும், குடும்ப நல தனிப் பிரிவில் 1 மருத்துவ அலுவலர் குடியிருப்பும், 4 பணியாளர்



2000 மார்ச் 3]

குடியிருப்புகளும் உள்ளன. மேலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் சராசரியாக நாளொன்றுக்கு பயனடையும் வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை 93 ஆகும். பயனடையும் உட்புற நோயாளிகளின் எண்ணிக்கை சராசரியாக மாதம் ஒன்றுக்கு 16 ஆகும். எனவே, போதுமான கட்டட வசதிகள் உள்ளதால் மேலும் கூடுதல் கட்டடம் கட்ட அவசியமில்லை.

36—

**தனியார் மின் நிலையம்**

**வினா எண் 27368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் தனியார் மின் நிலையம் அமைக்க எவ்வளவு பேர் விண்ணப்பித்துள்ளனர்?

(ஆ) அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ததில் எவ்வளவு பேருக்கு தனியார் மின் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் தனியார் மின் நிலையம் அமைக்க இது வரை யாரும் விண்ணப்பிக்கவில்லை.

(ஆ) யாரும் விண்ணப்பிக்காததால் இவ்வினா எழவில்லை.

37—

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா எண் 27955—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனையாக தகுதி நிலை உயர்த்த வேண்டிய தகுதிகள் யாவை?

விடை—



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக தகுதிநிலை உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட வரையறைகள் ஏதுமில்லை. இருப்பினும், அனைத்து வருவாய் வட்டங்களிலும் ஒரு அரசு மருத்துவமனை செயல்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. எனவே, வட்டத் தலைநகர்களில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களை வட்ட மருத்துவமனைகளாக, ஒவ்வொரு ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் படிப்படியாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. அரசின் நிதி நிலைக்கேற்பவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் சுற்றுப்புற மக்கள் தொகை மற்றும் மருத்துவ மனையின் வருங்கால விரிவாக்கத்திற்குப் போதிய இட வசதி இவற்றினைக் கணக்கில் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

38—

**சித்த மருத்துவமனைக்குக் கட்டட வசதி**

**வினா எண் 29636—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவிற்கு கட்டட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தனிக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தற்சமயம் பரமக்குடி அரசு மருத்துவமனை கட்டடத்தில் சித்தா மருத்துவப் பிரிவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அறையில் சித்தா பிரிவு செயல்பட்டு வருகிறது.



(ஆ) நடப்பாண்டில் மேற்படி சித்தா பிரிவிற்கென தனிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

39—

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 29661—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், குள்ளஞ்சாவடியில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணி நிறைவடைந்து விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், குள்ளஞ்சாவடி 110/22-11 கி.வோ. துணை மின் நிலையத்தில் 16 மெ.வா. திறனுள்ள புதிய மின்மாற்றி நிறுவப்பட்டு 2-12-1998-லிருந்து இயக்கத்திலுள்ளது.

40—

**ஓமியோபதி மருத்துவப் பிரிவில் படுக்கை வசதிகள்**

**வினா எண் 30750—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பேரறிஞர் அண்ணா அரசினர் இயற்கை மருத்துவ மனையில் ஓமியோபதி சிகிச்சை முறைக்கு படுக்கை வசதிகள் இதுவரை இல்லை என்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வசதியை எப்போது அரசு செய்து தரும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின் ஓமியோபதி மருத்துவப் பிரிவில் கடந்த மூன்று ஆண்டுகளில், தோராயமாக 16,000 முதல் 18,000 பேரும், 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை 11,143 பேரும் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர். எவர் ஒருவரும் இதுநாள் வரை உள்நோயாளியாகச் சேர்த்து சிகிச்சையளிக்கப்படவில்லை. எனவே, ஓமியோபதி மருத்துவப் பிரிவுக்கென உள்நோயாளிகள் அறையில் படுக்கைகள் ஒதுக்கப்படவில்லை. எனவே, இப்பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் தேவைக்கேற்ப மற்றும் அவசரத்தைக் கருதி, இதர பிரிவுகளில் காலியாக உள்ள படுக்கைகளில் உள்நோயாளிகளாகச் சேர்த்து சிகிச்சையளிக்கப்படுவர்.

**41—**

## புதிய அலுவலகம்

**வினா எண் 31114—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரத்தில் தமிழ்நாடு மின்சார வாரிய ரெவின்யூ யூனிட் அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதிதாக ஒரு ரெவின்யூ யூனிட் அலுவலகம் அமைக்கக் குறைந்தபட்சம் ஒரு மின் கோட்டமும், மூன்று உபகோட்டங்களும், ஒவ்வொரு உபகோட்டத்திற்கும் நான்கு பிரிவு அலுவலகங்களும் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும். ஆனால் தற்போது எடப்பாடியில் இரண்டு உபகோட்டங்களும், அதற்கு



உட்பட்ட 6 பிரிவு அலுவலகங்கள் மட்டுமே உள்ளன. இவ்வெண்ணிக்கைப் புதியதாக ஒரு ரெவின்யூ யூனிட் அமைக்கப் போதுமானதாக இல்லை.

**42—**

## மின்சார வாரியக் கோட்ட அலுவலகம் தொடங்குதல்

**வினா எண் 31115—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியக் கோட்ட அலுவலகம் ஒன்று எடப்பாடி நகரில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதியதாக ஒரு மின் கோட்டம் அமைக்க குறைந்தபட்சம் 3 (மூன்று) உபகோட்டங்களும், ஒவ்வொரு உபகோட்டத்திற்கும் குறைந்தபட்சம் 4 (நான்கு) பிரிவு அலுவலகங்களும் உள்ளடங்கியதாக இருக்கவேண்டும். ஆனால் தற்போது எடப்பாடியில் இரண்டு உபகோட்டங்களும், அதற்குட்பட்ட 6 பிரிவு அலுவலகங்களும் மட்டுமே உள்ளன. இவ்வெண்ணிக்கைப் புதியதாக ஒரு மின் கோட்டம் அமைக்கப் போதுமானதாக இல்லை; மேலும் அருகில் உள்ள கோட்டத்திலிருந்து மாறுதல் செய்யவோ அல்லது புதியதாக உபகோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் அமைப்பதற்கோ சாத்தியக் கூறுகள் இல்லை.

**43—**

## போக்குவரத்திற்குப் பாலம் திறந்துவிடுதல்

**வினா எண் 31116—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) பூலாம்பாடி, நெருச்சிப்பேட்டை அருகே கட்டப்பட்டுள்ள மின்வாரியப் பாலத்தைப் பொது போக்குவரத்திற்கு அரசு திறந்துவிடுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறை தலைவர் விழிப்புப்பணி/தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களது கடித நாள் 13-7-1994-ன் படி கீழ்மேட்டூர் பேரேஜ் (தரைப் பாலம்) I, II & IV ஆகிய தரைப் பாலங்கள் வழியாக காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் கல்விச்சாலை செல்லும் வாகனம், பொதுமக்கள் இருசக்கர வாகனங்கள், பால் வண்டி ஆகியன சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதியும், மின் உற்பத்தி நிலைய பாதுகாப்பு கருதியும், பாதுகாக்கப்பட்ட இடம் என அறிவிக்கப்பட்டதாலும், பேருந்து, கார், வேன், சுமை ஏற்றிச் செல்லும் வாகனம், ஆகியவற்றைப் பாலம் கடந்து செல்ல அனுமதிப்பது இல்லை. இருப்பினும் அவசர சிகிச்சைக் காரணமாகவும், களப்பணிகள், வயதானவர்கள் ஆகியோரை ஏற்றிச் செல்லும் சிறுவாகனங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னரும் சிறப்புத் தன்மை காரணமாக அனுமதிக்கப்படுகிறது.

44—

## பஞ்சப்படி நிலுவைத் தொகை வழங்குதல்

**வினா எண் 32040—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியப் பணியாளர்களுக்கு 1-1-1999 முதல் வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் வாரியத்தின் 18-9-1999 தேதியிட்ட நிலை ஆணை (முழுவாரியம்) எண் 53-ன் வாயிலாக தமிழ்நாடு மின்வாரியப் பணியாளர்களுக்கு 1-1-1999 முதல் வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டது.

45—

## புதிய குடிநீர்க் குழாய்கள் பதித்தல்

**வினா எண் 21717—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கப் பயன்படுகின்ற இரும்புக் குழாய்கள் துருப்பிடித்துள்ளதால் அவற்றை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குற்றாலம் பேரூராட்சிப் பகுதியில் சுமார் 37 வருடங்களுக்கு முன்னர் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 3.78 கி.மீ. நீளம் பைப்லைன் பதித்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குற்றாலம் மலை மேலிருந்து தண்ணீர் வருவதால் குழாய்களில் தூசி, இலைகள் மற்றும் மரக் கிளைகள் அடைத்து சரியாகத் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது. குற்றாலம் சுற்றுலாத்தலமாக உள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான குடிநீர் வழங்க இயலவில்லை. ஆகவே பேரூராட்சிப் பகுதியில் துருப்பிடித்த குழாய்களை மாற்றி புதிய குழாய்களைப் பதிக்க உத்தேசமாக ரூ. 50.00 இலட்சம் தேவைப்படும். இதற்கு எதிர்வரும் ஆண்டுகளில் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று குழாய்களை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46—

[2000 மார்ச் 3

**படித்துறை கட்டுதல்**

**வினா எண் 21882—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சி, விளார் கிராமத்தில் பொது மக்கள் குளிப்பதற்கு படித்துறை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் 1999-2000 ஆம் நிதியாண்டில் இப்பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

47—

**சமுதாயக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 23639—திரு மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேரூராட்சி, 1-வது வார்டில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வல்லம் பேரூராட்சி வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியில் ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது அப்பகுதி மக்களுக்கு அருகில் உள்ளது. 1-வது வார்டில் சமுதாயக் கூடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் இல்லை.



2000 மார்ச் 3]

48—

**தொகுப்பு விடுகள் கட்டுதல்**

**வினா 24623—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம் இசாகொளத்தூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்குக் கூடுதலாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டுக்கு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 1,273 வீடுகளில் பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 5 ஊராட்சிகளுக்கு 50 வீடுகள் கட்ட ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. மாவட்ட இலக்கிற்கு மேல் ஒதுக்கீடு செய்ய முடியாததாகையினால் 'இசா கொளத்தூர் ஊராட்சிக்குப் பிரித்தளிக்க தற்போது இயலாது'.

(ஆ) வினா எழவில்லை.

49—

**தொகுப்பு விடுகள்**

**வினா 24625—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் ஒன்றியம், இந்திரவனம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்குக் கூடுதலான தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டிற்கு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மொத்தம் 1,273 வீடுகள் கட்டித்தர இலக்கு நிர்ணயித்து அதில் சேத்பட் ஊராட்சி ஒன்றியத்தில் இந்திரவனம் ஊராட்சிக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட இலக்கிற்கு மேல் ஒதுக்கீடு செய்ய முடியாது. ஆகையினால் கூடுதல் வீடுகள் கட்டித்தர இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**50—**

## சுடுகாடு அமைத்தல்

**வினா எண் 24812—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நெடுங்குளம் பஞ்சாயத்தில் உள்ள பூமணியூரில் ஊர் பொதுமக்கள் இறந்துவிட்டால் அவர்களைப் புதைப்பதற்கு சுடுகாடு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு சுடுகாடு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெடுங்குளம் ஊராட்சிக்குட்பட்ட பூமணியூர் மற்றும் கோனேரிப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் பொதுவாக கோனேரிப்பட்டி அருகில் ஆற்றுக்கு ஓரமாக சவங்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. பாலம் அந்த இடம் போதாது என்பதால் மேலும் நிலம் தேவையென பொதுமக்கள் கருதி திரு. நாட்ராயன், த/பெ. நாச்சிமுத்து கவுண்டர்



என்பவரிடம் கோனேரிப்பட்டியில் உள்ள அவரது நிலத்தில் ஆற்றின் கரையோரமாக 50 சென்ட் தானமாகப் பெறப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்ட 50 சென்ட் நிலம் மற்றும் ஏற்கெனவே புதைக்கப்பட்டு வரும் நிலம் ஆகியவைகளில் தற்போது சவங்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. மேற்காணும் நிலத்திற்குச் செல்ல நல்ல பாதை வசதி உள்ளது. இந்த இரண்டு ஊர்களுக்கும் தற்போது இடுகாடு வசதி போதுமானதாக உள்ளது.

**51—**

## பேருந்து நிலையம் பராமரித்தல்

**வினா எண் 24869—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு பேருந்து நிலையம் சரியான பராமரிப்பு இன்றி அசுத்தமாகவும், துர்நாற்றத்துடனும் சீர்கெட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சரியான முறையில் பராமரிக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு நகராட்சி பேருந்து நிலையம் தற்போது சுத்தமாகவும், துர்நாற்றமின்றியும் நல்ல முறையில் நகராட்சியால் பராமரித்து வரப்படுகிறது. இதற்காக நகராட்சியில் 7 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் கொண்டு பேருந்து நிலையத்தில் குப்பைகளை அவ்வப்போது அகற்றியும், சிறுநீர்க் கழிப்பிடங்களைத் தொடர்ந்து சுத்தம் செய்தும் நல்லமுறையில் பராமரித்து வரப்படுகிறது. மேலும் இங்கு உள்ள கழிப்பிடங்களில் இரண்டு இலவச சிறுநீர்க் கழிப்பிடங்களும், நான்கு இடங்களில் கட்டணக் கழிப்பிடங்களும் உள்ளன. கட்டணக் கழிப்பிடங்கள் ஒப்பந்தக்காரர்களால் சுத்தமாக பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. இலவச சிறுநீர்க் கழிப்பிடங்கள் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வரப்படுகின்றன. மேலும் பேருந்து நிலையத்தில் இரண்டு வேளைகளிலும் நீர்த்த சுண்ணாம்பு தெளித்தும், பிளீச்சிங் பவுடர் போட்டும் பராமரித்து வரப்படுகிறது.

52—

[2000 மார்ச் 3

### வடிகால் வசதி செய்தல்

**வினா எண் 25189—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முத்தாறம்பாளையம் ஊராட்சி, செட்டிப்பாளையம் பகுதியில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் முறையான வடிகால் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வடிகால் வசதி அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முத்தாறம்பாளையம் ஊராட்சி, செட்டிப்பாளையம் பகுதியில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வடிகால் வசதி செய்ய வேண்டும் என்பதனை அரசு அறியும்.

(ஆ) வரும் நிதியாண்டில் இப்பணியைச் செய்ய தொடர்புடைய ஊராட்சிமன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

53—

### மயானம் அமைத்தல்

**வினா எண் 25654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டியில் பொது மயானமே இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு மயானம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெடுங்குளம் ஊராட்சிக்குட்பட்ட பூமணியூர் மற்றும் கோனேரிப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் பொதுவாக கோனேரிப்பட்டி பாலம் அருகில் ஆற்றுக்கு ஓரமாக சவங்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. மேலும் அந்த இடம் போதாது என்பதால் மேலும் நிலம் தேவையென பொதுமக்கள் கருதி திரு. நாட்ராயன், த/பெ. நாச்சிமுத்து கவுண்டர் என்பவரிடம் கோனேரிப்பட்டியில் உள்ள அவரது நிலத்தில் ஆற்றின் கரையோரமாகவே 50 சென்ட் தானமாகப் பெறப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்ட 50 சென்ட் நிலம் ஏற்கெனவே புதைக்கப்பட்டு வரும் நிலம் ஆகியவைகளில் தற்போது சவங்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. மேற்படி நிலத்திற்குச் செல்ல நல்ல பாதை வசதியும் உள்ளது.

54—

### கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 25785—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, கூத்தாநல்லூர் நகராட்சிகளில் கொசுத் தொல்லையை ஒழிக்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியில் பேடக்ஸ் 1000 மற்றும் Mosquito Larvicide oil எனப்படும் கொசுப் புழுக்கொல்லி மருந்தினைத் தண்ணீருடன் தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்படுகிறது. நகர் முழுவதும் வாரம் ஒருமுறை ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பகுதி என பிரிக்கப்பட்டு கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது. மேலும் கழிவுநீர்த் தொட்டிகள் தினந்தோறும் கழிவுநீர் லாரி மூலம் அகற்றப்பட்டு மருந்து தெளித்து கொசுப்புழு உற்பத்தி தடுக்கப்பட்டு வருகிறது.

கூத்தாநல்லூர் நகராட்சியில் தஞ்சை மண்டல பூச்சியியல் துறையினரால் வழங்கப்படும் Abate 50 EC/Therophose 50 EC, Baytex 1000 போன்ற திரவ கொசுநாசினி மருந்துகளைக் கைதெளிப்பான்கள் மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் சுழற்சி முறையில் தெளிக்கப்பட்டு கொசு உற்பத்தி தடை செய்யப்படுகிறது. மேலும் கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்ய கழிவுநீர் டாங்க் மற்றும் சில பம்ப் இணைந்த கழிவுநீர் உந்துவண்டி வாங்க 1999-2000 ஆம் ஆண்டு அடிப்படை வசதி திட்டத்தில் ரூ. 3.00 லட்சம் நிதி ஒதுக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கைத் தெளிப்பானுக்குப் பதிலாக இயந்திரத் தெளிப்பான் வாங்கவும் மன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திர சாதனங்களைக் கொண்டு கொசுத் தொல்லையைப் பெருமளவில் கட்டுப்படுத்த இயலும்.

**55—**

## தொகுப்பு விடுகள் கட்டித் தருதல்

**வினா 26156—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் கொ. வல்லுண்டான்பட்டு ஊராட்சி ஆதிதிராவிடர் மக்கட்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கொ. வல்லுண்டான்பட்டு ஊராட்சியில் 10 ஆதிதிராவிடர்களுக்கு நடப்பு (1999-2000) நிதி ஆண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**56—**

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 26158—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சிக்குட்பட்ட மாப்பிள்ளை நாயககன்பட்டியில் ஆதிதிராவிடர் தெருவில் 25 தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், நா. வல்லுண்டான்பட்டு ஊராட்சியில் நடப்பு (1999-2000) ஆம் நிதி ஆண்டில் 10 ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**57—**

## நிழற்குடைகள்

**வினா எண் 26501—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் கட்டப்படும் சில பயணிகள் நிழற்குடைகள் பேருந்துகளே நிற்காத இடங்களில் கட்டப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) இனி வரும் காலங்களில் அவ்வாறு நடைபெறாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) : இல்லை.

58—



### சமத்துவபுரங்கள் உருவாக்குதல்

**வினா எண் 27015—திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

ஆதிதிராவிடர் காலனி என்று தனியாக தொகுப்பு வீடுகள் கட்டுவதைத் தவிர்த்து சிறிய சமத்துவபுரங்களை உருவாக்க அரசு முயலுமா?

விடை —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மத்திய அரசு நிதி உதவியுடன், அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் (Guide Lines)படியும் தான் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டு வருகின்றன. அதன்படி தனித் தனியாக உள்ள வீடுகளும் கட்டித் தரப்பட வேண்டும். எனவே, இத்திட்டத்தின்கீழ் சிறு சமத்துவபுரங்களை உருவாக்க சாத்தியமில்லை.

59—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 27493—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம் கீழ்வில்லியூர் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பழைய குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், கீழ்வில்லியூர் ஊராட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிடர்



குடியிருப்புக்கு கீழ்வில்லியூர் கிராமக் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. கீழ்வில்லியூர் கிராமக் குடியிருப்புக்கு வடவணக்கம்பாடியுடன் சேர்ந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இதிலிருந்து கீழ்வில்லியூர் கிராமக் குடியிருப்புக்கு சரிவர தண்ணீர் வருவதில்லை. எனவே இவ்வூராட்சியினர் அவர்களுக்கென ஒரு ஆழ்துளை கிணறு அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். இப்பணியை ஊராட்சியினரின் ஒப்புதலின்பேரில் அவர்களிடம் வைப்பு நிதி கோரப்பட்டுள்ளது. வைப்பு நிதி கிடைத்தவுடன் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கூடுதலாகக் குடிநீர் கிடைக்கத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. எனவே, கீழ் வில்லியூர் ஆதிதிராவிடர் காலனி குடியிருப்புக்கெனத் தனியாக புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டியதில்லை.

60—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 27576—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி கிராமம், ஏலத்தூர் காமராஜர் நகர் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சி, ஏலத்தூர் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும், காமராஜர் நகர் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டி மூலமும் சேலம் மாவட்டத்திலுள்ள மேச்சேரி, ஓமலூர், காடையாம்பட்டி, நங்கவள்ளி மற்றும் தாரமங்கலம் ஒன்றியங்களைச் சார்ந்த 554 குடியிருப்புகளுக்கு, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் குடிநீர் வழங்கப்பட உள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் 3/2000-க்குள் முடிக்கப்பட்டு

6/2000-க்குள் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. [2000 மார்ச் 3
இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டபின் பணிகள்
மேற்கொள்ளப்படும்.

61—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 27643—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு
விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சக்கரை செட்டிப்பட்டி
ஊராட்சியிலுள்ள நாய்க்குடிச்சாம்பட்டி, சந்தாகாட்டு வளவு,
குருமச்சங்காடு பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க
மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்
துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சக்கரை செட்டிப்பட்டி ஊராட்சி,
நாய்க்குடிச்சாம்பட்டி குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள
மேல்நிலைத் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்கும் திட்டம் வரும் (2000-
2001) நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும். சந்தாகாட்டு வளவு
குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டி கட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.
குருமச்சங்காடு குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை
நீர்த்தேக்கத் தொட்டி கட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்
சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்படும்.

62—

### கால்நடைகளைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 29272—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக
வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும்
வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தி சுற்றித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்காசி நகராட்சி எல்லையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு விளைவிக்கும் கால்நடைகளின் நடமாட்டம் தற்போது அதிகம் இல்லை. எனவே, சுற்றித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான அரசு நடவடிக்கை எதுவும் இல்லை.

63—

### குடிநீர் வடிகால் வாரியம்.

**வினா எண் 29487—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிநீர் வடிகால் வாரிய நிதிநிலை அறிக்கை, செயற்பணிகள், திட்ட மதிப்பீடு தயாரித்தல் குறித்து அரசு எவ்வாறு கண்காணித்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

"குடிநீர் வடிகால் வாரிய நிதிநிலை அறிக்கை, செயற்பணிகள் திட்ட மதிப்பீடு தயாரித்தல் குறித்து அரசு கீழ்க்கண்டவாறு கண்காணித்து வருகிறது".

(1) குடிநீர் வடிகால் வாரிய நிதிநிலை ஒதுக்கீடு பற்றிய ஆய்வு அரசின் நிதித் துறை உயர் அதிகாரிகளால் ஆறு/மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகிறது.

(2) நிதி ஒதுக்கீடு மற்றும் செயல்திறன் பற்றி திட்டம் துறை, மாநில திட்டக் குழுமத்தினால் குறைந்தது ஆண்டுக்கு இரு முறையாவது ஆய்வு செய்யப்படுகிறது.

(3) நிதி ஒதுக்கீடு செலவினம் மற்றும் ஆய்வு மாதமொரு முறை, செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

(4) குடிநீர்த் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணிகள், கள ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும் தொழில்நுட்ப ரீதியில் வாரிய உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பின் வாரிய குழுவால்/அரசால் தகுந்த பரிசீலனைக்குப்பின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ரூ. 25 இலட்சம் மதிப்பிற்கு மேலான திட்டங்கள் அந்தந்த மண்டல தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுக்குப் பின் வாரியத்தினால் தகுந்த பரிசீலனைக்குப் பின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(5) குடிநீர் வடிகால் வாரிய செயல்பணிகளின் பணி முன்னேற்றம் மற்றும் செலவினம் திட்டம் வாரியாக, செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது.

(6) பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்கள், தலைமைச் செயலர், செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை-செயலர், நிதித் துறை அவர்களால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது.

(7) தேசிய நதிநீர் செயல் திட்டங்கள், சுற்றுச்சூழல் இயக்குநர், செயலர், வனத் துறை அவர்களால் அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகிறது. இத்திட்டப் பணி முன்னேற்றம், செலவினம் குறித்து அவ்வப்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

(8) குடிநீர்த் திட்டப் பணிகளில் முன்னேற்றம் பற்றி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகிறது.

(9) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிநீர்த் திட்டப் பணிகளின் முன்னேற்றம் பற்றி விரிவான முறையில் தனியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முக்கிய பொருளாகவும் எடுத்து ஆய்வு செய்து வருகிறார்கள்.



**64—**

## ஆயில் எஞ்சின்களுக்கு டீசல் வழங்குதல்.

**வினா எண் 14814—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல ஆண்டுகளாக மின் இணைப்பு பெற முடியாமல் இருக்கின்ற விவசாயிகளுக்கு அவர்கள் பயன்படுத்தும் ஆயில் எஞ்சின்களுக்கு மானிய விலையில் டீசல் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மேற்கண்ட பொருள் தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

## சமுதாய ஆழ்குழாய்க் கிணறு.

**வினா எண் 26151—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், பணிகொண்டான் விடுதி ஊராட்சி, கச்சனம் பகுதி ஆதிதிராவிட மக்கள் பாசன வசதி பெற ஒரு சமுதாய ஆழ்குழாய்க் கிணறு வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

66—

[2000 மார்ச் 3

**காலியாக உள்ள பணியிடங்கள்**

**வினா எண் 28614—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை வண்ணாரப்பேட்டை அரசு வேளாண்மைப் பொறியியல் பணிமனையில் எத்தனை தொழிலாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன?

(ஆ) அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ)

| வரிசை எண். (1) | தொழிலாளர் விபரம். (2) | அனுமதிக்கப்பட்ட பணியிடம். (3) | குறைக்கப்பட்ட பணியிடம். (4) | காலியாக இருக்கும் இடம். (5) |
|---|---|---|---|---|
| 1. | பிட்டர் | 22 | 12 | 3 |
| 2. | டர்னர் | 20 | 8 | 1 |
| 3. | ஹெமர்மேன் | 10 | 3 | .. |
| 4. | பிளாக்ஸ்மித் | 14 | 5 | 3 |
| 5. | வெல்டர் | 5 | 1 | 1 |
| 6. | மோல்டர் | 4 | 4 | .. |
| 7. | கார்பென்டர் | 3 | 1 | .. |
| 8. | மில்லர் | 1 | 1 | .. |
| 9. | லாரி மஸ்தூர் | 2 | 2 | .. |
| 10. | ஸ்டோர் மஸ்தூர் | 1 | .. | 1 |
| 11. | டூல்ஸ் டெஸ்பாட்சர் | 1 | 1 | .. |
| | மொத்தம் | 83 | 38 | 9 |



2000 மார்ச் 3]

(ஆ) சென்னை வண்ணாரப்பேட்டை அரசு வேளாண்மைப் பொறியியல் பணிமனை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்ததால் அரசுக்கும், தொழிலாளர்களுக்கும் பாதகம் ஏற்படாமல் சீர்செய்யும்பொருட்டு, அரசால் ஓர் உயர்மட்டக் குழு நியமனம் செய்யப்பட்டது. பணிமனையின் செயல்பாடுகள் குறித்து விரிவான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தற்போது வணிக நோக்குடன் செயல்படும் பணிமனையைச் சேவை நோக்குடன் செயல்படும் பணிமனையாக மாற்ற உயர்மட்டக் குழு சிபாரிசு செய்துள்ளது. பணிமனையில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளைக் கருத்தில் கொண்டு செயலிழந்த நிலையில் இருக்கும் வார்ப்பு பிரிவு, தச்சு வேலைப் பிரிவு, கொல்லம் பட்டரை முதலியவற்றிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டாமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, காலிப் பணியிடங்களில் சில குறைக்கப்பட்டுள்ளன. மேலும், தற்பொழுது இருக்கும் பணியாளர்களைக் கொண்டு, பணிமனையினைச் சிறப்பாக இயக்கும் வகையில், உயர்மட்டக் குழு பரிந்துரைத்துள்ளது.

67—

**அலுவலர் பணியிடம் ஒப்படைப்பு**

**வினா எண் 30724—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை வேளாண்மை விரிவாக்க மையத்தில் கடந்த 25 ஆண்டுகளாக இருந்து வந்த** வேளாண்மை அலுவலர் பணியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

**(ஆ)** ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். அரசு அறியும். பணியிடம் பணிப்பெயர்ச்சி செய்யப்பட்டது. ஆனால் ஒப்படைப்பு செய்யவில்லை.

(ஆ) பண்ணை மகளிர் திட்டம், டானிடா அயல்நாட்டு நிதி உதவியுடன் 1986 முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாய பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண்மை தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல், உற்பத்தி அதிகரித்தல், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் உணவு தன்னிறைவை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத்திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் செயல்படுகிறது. இத்தகைய அயல்நாட்டு நிதி உதவியுடன்கூடிய இத்திட்டத்தினைச் செயல்படுத்த புதிய பணியிடங்களைத் (வேளாண் அலுவலர்) தோற்றுவிக்க அரசின் தடை இருப்பதால் அரசு வேளாண் அலுவலர் பணியிடங்களை இத்திட்டத்திற்குப் பணிப்பெயர்ச்சி மூலம் நிரப்பிட ஆணை வழங்கியதன் அடிப்படையில் திசையன்விளை வேளாண்மை அலுவலர் பணியிடத்தை இத்திட்டத்திற்குப் பணிப்பெயர்ச்சி மூலம் நிரப்பிட ஆணை வழங்கப்பட்டது. திசையன்விளை ராதாபுரம் வட்டாரத்திற்குள் வருகிறது. இவ்வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களின் பணிகளைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் பதவி ஒன்று உள்ளது. இது மட்டுமல்லாமல், வட்டார விரிவாக்கப் பணிகளைச் செயல்படுத்த வேளாண்மை அலுவலர் (பயிற்சி வழி தொடர்புத் திட்டம்) ஒருவரும் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களும் உள்ளனர். எனவே, திசையன்விளை கிராமத்தில் வேளாண்மை பணியில் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**68—**

## புதுரக நெல் விதைகள் விவரம்

**வினா எண் 30853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதுரக நெல் விதைகள் 1998-99-ல் எத்தனை ரகம் என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) அவற்றுக்கு விவசாய பெருமக்களிடையே வரவேற்பு எப்படி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1998-99-ல் கோ 47 என்ற ஒரு நெல் ரகத்தை மட்டும் வெளியிட்டது. குட்டையான



மற்றும் சாயாத அமைப்பைக் கொண்ட இந்த நெல் ரகம் 110-115 நாட்கள் வயதுடையது. சொர்னவாரி, கார் மற்றும் குறுவை பருவங்களில் தமிழகமெங்கும் பயிரிட ஏற்றது. அதிக மகசூல் (சராசரி 5800 கிலோ/எக்டேர்) தரவல்லது. குலை நோய் எதிர்ப்புத் தன்மை கொண்டது. ஏடிடீ 36 மற்றும் ஏஎஸ்டி 18 ரகங்களுக்கு மாற்று ரகமாகப் பயிரிட இது ஏற்றதாகும்.

(ஆ) கோ 47 நெல் ரகத்திற்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. 1998-ல் இந்த ரகத்தின் விதை 370 கிலோ விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு (10-10-1999 வரை) விவசாயிகளுக்கு 4700 கிலோ விதை கோவை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுவரை வேளாண் துறைக்கு 870 கிலோ வல்லுனர் விதை வேளாண் பல்கலைக்கழகத்தால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1999-2000) 1725 கிலோ வல்லுனர் விதை வேளாண் துறைக்கு மற்றும் தனியார் கம்பெனிகள் மூலம் கேட்கப்பட்டு உள்ளது. தமிழகத்தின் எல்லா மாவட்ட விவசாயிகளாலும் இந்த ரகம் விரும்பி ஏற்கப்பட்டுள்ளது.

**69—**

## அரசு மானியம்

**வினா எண் 30858—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் பாசன வசதியைப் பெருக்க அரசு மானியம் வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வகைக்காக அவை வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் விவசாயிகளின் பாசன வசதியைப் பெருக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் (50 : 50) பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது. இந்த பாசனப் பகுதி

மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காவேரி பாசனப் பகுதி கீழ்பவானி திட்டம், பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம், கோதையாறு, சித்தாறு பட்டணங்கால் திட்டம், பெரியார் வைகை திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

இதில் பெரியார் வைகை திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், கீழ்பவானித் திட்டம் மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. 1999-2000 ஆம் ஆண்டில் காவேரி பாசனப் பகுதி பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கோதையாறு சித்தாறு பட்டணங்கால் திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (அ) பண்ணை மேம்பாட்டுப் பணிகள் (ஆ) சுழற்சிமுறைப் பாசனப் பணிகள் (இ) விவசாயிகள் சபை அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன. இதில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளில் 5 முதல் 8 எக்டேர் வரை செயல்படுத்தப்படும் பணிகள் அனைத்தும் 100 சதவீதம் முழு மானியத்துடனும் 5 எக்டேருக்குள் செயல்படுத்தப்படும் மற்ற பணிகளின் செலவில் 50 சதவீதம் அரசின் மானியமாகவும் 50 சதவீதம் கடனுதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது. சுழற்சிமுறைப் பாசனப் பணிகள் 100 சதவீதம் முழு மானியத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. விவசாயிகளின் பங்கேற்புக்காக விவசாயிகள் சபைகளின் செயல்பாட்டிற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ. 500 என்ற அளவில் எக்டேர் ஒன்றுக்கு ரூ. 225 மத்திய அரசின் பங்கு, எக்டேர் ஒன்றுக்கு ரூ. 225 மாநில அரசின் பங்கு ஆக ரூ. 450 மானியமாக வழங்கப்படுகிறது. எக்டேர் ஒன்றுக்கு ரூ. 50 விவசாயிகளின் பங்காகும். இதன் அடிப்படையில் 1997-98 ஆம் ஆண்டில் 50 விவசாய சபைகளுக்கு ரூ. 167.89 லட்சமும் 1998-99 ஆம் ஆண்டில் 62 விவசாய சபைகளுக்கு ரூ. 259.91 லட்சமும் செயல்பாட்டு மானியமாக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**70—**

### ஆய்வுக்கூடம் அமைத்தல்

**வினா எண் 31738—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் மாநில அக்மார்க் ஆய்வுக்கூடம் அமைக்க தேவையான நிலம் வழங்கி ஆய்வுக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில்,, எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் தென்காசி, திண்டுக்கல் மற்றும் சித்தோடு ஆகிய மூன்று அக்மார்க் ஆய்வகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு நிதிநிலைக் குழுவின் ஒப்புதல் பெற்று, தென்காசி மாநில அக்மார்க் ஆய்வகத்திற்கு, 2000-2001 ஆம் நிதியாண்டில் சொந்த ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**71—**

### கழிப்பறை கட்டுதல்

**வினா எண் 31863—திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை வேளாண்மை விரிவாக்க மையத்தில் கழிப்பறை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மை விரிவாக்க மையங்களில் தனியாக கழிப்பறை கட்டுவது தொடர்பான பிரேரணை ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

72— [2000 மார்ச் 3

**அரசு செலவில் ஆய்வு**

**வினா எண் 31869—திரு. சீ.வெ. கிருஷ்ணன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி விவசாயிகளிடம் நீர், மண் மாதிரி கட்டணம் ரூ. 5 வீதம் வசூல் செய்யப்படுகிறது. இதைக் குறைத்து அரசு செலவில் ஆய்வு செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள வேளாண்மைத் துறையைச் சார்ந்த மண் ஆய்வகங்களில் மண் மாதிரிகளில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உர சிபாரிசு வழங்குவதற்காக, மாதிரி ஒன்றுக்கு ரூ. 5-ம் பாசன நீர் மாதிரிகளில் அதன் தன்மைக்காக ஆய்வு செய்து, தகுந்த மேலாண்மை உத்திகளை விவசாயிகளுக்கு அளிக்க, மாதிரி ஒன்றுக்கு ரூ. 10-ம் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

மண் மற்றும் நீர் ஒரு ஆய்விற்காக ரூபாய் முப்பது வரை அரசிற்கு செலவு ஏற்பட்ட போதிலும், குறைந்த கட்டணமாக ரூ. 5 மட்டும்தான் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அதை மேலும் குறைத்து அரசு செலவில் ஆய்வு செய்து தருவது என்பது இயலாததாகும்.

73—

**அலுவலர் குடியிருப்பு கட்டுதல்**

**வினா எண் 31871—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம் வேளாண்மை விரிவாக்க அலுவலர் குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை விரிவாக்க அலுவலர் குடியிருப்பு கட்டித்தர அரசிடம் திட்டங்கள் ஏதுமில்லை. ஏற்கெனவே, வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி வழி தொடாயுத திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் 1981-82 ஆம் ஆண்டு முதல் 1987-88 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற திட்டத்தில்தான் குடியிருப்புகள் கட்டப்பட்டன.

74—

**பேருந்து வசதி செய்தல்**

**வினா எண் 13569—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதிக்கு உள்ளடங்கிய செஞ்சி ஒன்றியத்தில் உள்ள அனந்தபுரத்திலிருந்து வரிக்கல், அத்தியூர், செஞ்சி வழியாக திருப்பதி செல்வதற்கு பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அனந்தபுரத்திற்கும், செஞ்சிக்கும் இடைப்பட்ட பகுதியினை செஞ்சியுடன் இணைத்திடும் வகையில் நகர மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் தற்போதுள்ளன. இதுபோலவே அனந்தபுரத்திலிருந்து விழுப்புரத்தை அடைந்திடுவதற்கான பேருந்து வசதிகளும் உள்ளன. இவ்வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இப்பகுதியினர் செஞ்சியிலோ அல்லது விழுப்புரத்திலோ திருப்பதிக்குச் செல்லும் பேருந்து வசதிகளைப் பெறலாம். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-1-ன் மூலமாக விழுப்புரம்-திருப்பதி வழி செஞ்சி, ஆரணி, வேலூர், சித்தூர் வழித்தடத்தில் 1 பேருந்தை 2 நடைகள் இயக்கி வருகிறது. விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை, வேலூர், சித்தூர் வழியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-1, 4 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 8 நடைகள் இயக்கி வருகிறது. இப்பேருந்து வசதிகளை செஞ்சியிலும் விழுப்புரத்திலும் அனந்தபுரம் மற்றும் சுற்றுப்புற கிராமத்தினர் பயன்படுத்திக் கொள்ளலாம். சிறு சிறு

உள்ளாட்சிகளிலிருந்து திருப்பதி போன்ற புனித இடங்களுக்கு நேரடி போக்குவரத்து வசதி அளிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

75—

**சந்திக்கடவு அமைத்தல்**

**வினா எண் 15534—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரம், கவுன் கொட்டாய்க்கருகில் இரயில்வே லைனில் ஆள் கவனிக்கும் இரண்டு கேட்டுகள் அமைக்கும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சந்திக்கடவு (Level crossing) அமைக்க கோரியுள்ள இடத்தினை இரயில்வே நிர்வாகத்தினர் ஆய்வு செய்து, அந்த இடம் 3 மீட்டர் உயரமாக உள்ளதாலும், தொழில்நுட்ப காரணங்களின் அடிப்படையிலும் அந்த இடத்தில் சந்திக்கடவு அமைக்க இயலாது என்று தெரிவித்துள்ளனர்.

76—

**விரைவுப் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 21068—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூரில் இருந்து உதகை, கூடலூர் வழியாக பெங்களூருக்கு ஒரு பேருந்து விட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குன்னூர் - பெங்களூர் (வழி) உதகை, கூடலூர், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய இருமாநிலங்களுக்குரிய தடமாகும். இவ்வழித்தடத்தில்



ஒரு பேருந்தை இயக்க திட்டமேதும் இல்லை. தற்போது குன்னூருக்கு அருகிலுள்ள நகரமான உதகையில் இருந்து பெங்களூருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தால் உதகை மூலம் 8 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் குன்னூர் - பெங்களூர் வழித்தடம் இருமாநிலம் சார்ந்து இருப்பதால் அத்தடம் இயக்கம் பற்றி இருமாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போதுதான் முடிவு செய்ய இயலும். இந்நிலையில் விரைவு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மேற்படி தடத்தில் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

77—

**நகரப் பேருந்து செல்லுதல்**

**வினா எண் 21756—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி நல்லம்பள்ளி, நாகர்கூடல் வழியாக நெக்குந்தி செல்ல நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணைப்படி யாதொரு பேருந்து வசதியும் பெறாத கிராமங்களுக்கு மட்டுமே 30-வது கி.மீ.லிருந்து 35-வது கி.மீ. வரை நகரப் பேருந்தை நீட்டித்து இயக்க இயலும். ஆனால் தற்போது பேருந்து வசதி கோரப்பட்டுள்ள இடங்கள் அனைத்தும் ஏற்கெனவே நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு மேல் வருவதாலும் கோரியுள்ள வழித்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

78—

**பிற மாநில வழித்தடத்தில் பேருந்து**

**வினா எண் 21907—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(a) Is there any proposal to introduce buses by the Karnataka and Tamil Nadu Governments on reciprocal basis in the below mentioned routes?

(i) Hosur to Bangalore via Peddanellore-Kagganur-Sanjapura-Bangalore.

(ii) Hosur to Hosakota via Bangalore Chikkathirupathi-Hosakota.

(b) If so, when they will be implemented?

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்து இயக்கிட கோரப்பட்ட தடம் சுற்றுத்தடம் என்பதால் நேரடி பயணிகள் யாரும் விரும்பி பயணம் செய்யமாட்டார்கள். அந்தசமயத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி நகர் பேருந்து தடம் எண் 9-ன் மூலம் ஓசூரிலிருந்து பெத்தநல்லூர் கக்கனூர் வழியாக 16 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே பெத்தநல்லூரில் இருந்து பெங்களூர் செல்லும் பயணிகள் ஓசூர் சென்றோ அல்லது கக்கனூர் சென்றோ பெங்களூர் பயணம் செய்யலாம். மேலும் நகர் பேருந்து தடம் எண் 17-ன் மூலம் ஓசூரிலிருந்து சிக்கதிருப்பதிக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, ஓசூரிலிருந்து ஓசகோட்டா செல்லும் பயணிகள் சிக்கதிருப்பதி சென்று ஓசகோட்டா பயணம் செய்யலாம். எனவே தற்சமயம் பேருந்து இயக்கிட கோரப்பட்ட புறமாநில வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கும் திட்டம் இல்லை.

79—

### கூடுதல் பேருந்து விடுதல்

**வினா எண் 26253—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) எடப்பாடியிலிருந்து பவானி வரை கோனேரிப்பட்டி வழியாக உள்ள வழித்தடத்தில் மேலும் ஒரு பேருந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதன் விவரம் அரசு அறிவிக்குமா?



2000 மார்ச் 3]

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து கோனேரிப்பட்டி பவானி வழியாக ஈரோடு வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் வாயிலாக ஒரு புறநகர் பேருந்து தினசரி 6 நடைகளுடன் இயக்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலமாக ஒரு நகரப் பேருந்து, கோரிக்கை வழித்தடத்தில் (எடப்பாடி-பவானி) இயக்கப்பட்டு வருகிறது. ஆதலால் தற்போதுள்ள பேருந்து வசதியே இவ்வழித்தடத்திற்குப் போதுமானதாக உள்ளது. எனவே, இத்தடத்தில் கூடுதல் பேருந்து விட தேவை ஏற்படவில்லை.

80—

### பயணவழி உணவகம் நிறுவுதல்

**வினா எண் 30305—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

விக்கிரவாண்டியில் பயணவழி உணவகம் நிறுவ அரசு முன்வருமா?

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக திண்டிவனம் பேருந்து நிலையத்தில் ஒரு உணவகமும், தொழுதூரில் (இராமநத்தம்) ஒரு சாலையோர உணவு விடுதியும் ஏற்படுத்தப்பட்டு உரிமம் அடிப்படையில் தனியார்களைக் கொண்டு பராமரிக்கப் பெற்று வருகின்றது. மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம்-1) மாமண்டூர் என்ற இடத்தில் ஒரு பயண வழி உணவகத்தையும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை உளுந்தூர்பேட்டையில் ஒரு பயணவழி உணவகத்தையும் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது. இந்த பயணவழி உணவகங்களில், போக்குவரத்துக் கழக பேருந்துகள் பயணிகளின் உபயோகத்திற்காக நிறுத்தப்படுவதால் விக்கிரவாண்டியில் மேலும் ஒரு பயணவழி உணவகம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

81— [2000 மார்ச் 3

## போக்குவரத்துக் கழக பணிமனைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 30507—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கும்பகோணத்திலுள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக கிளை மற்றும் பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது பணி முடிக்கப்படும்?

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

82—

## நெடுஞ்சாலைத் துறை ஆணை

**வினா எண் 23214—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் Offer work 1,000 ரூபாய் வரை செய்யலாம் என்று அரசு ஆணை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆணையின் நோக்கம் என்ன?

விடை —

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறையில் ரூ. 1000 வரை Offer-இல் செய்யலாம் என்று அரசு ஆணை ஏதும் இல்லை. இத்துறையில் சாதாரணமாக எல்லாப் பணிகளும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியே



செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலை/பாலப் பணிகள் இவை [illegible] சரி செய்யப்பட வேண்டும் என்பதால் அரசு ஆணை எண் 475, நெடுஞ்சாலைத் துறை, நாள் 18-12-1997-ல் விருப்பப்பிரேரணை offer basis மூலம் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) மற்றும் கோட்டப் பொறியாளர் (நெ) ஆகியோருக்கு முறையே ரூ. 50,000 மற்றும் 25,000 வரை செயல்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

83—

## சாலை விரிவு படுத்துதல்

**வினா எண் 23932—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை [illegible] கோட்டம், குளத்துப்புழை-குருக்கைச் சாலையில் கி.மீ. 0/4-1/0 கி.மீ. 5/0-6/0 கி.மீ. 7/4 - 8/2 வரையிலான சாலையைப் பழுதுநீக்கம் செய்யவும், கி.மீ. 1/4 முதல் 2/0 வரையிலான சாலையை விரிவுபடுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இச்சாலையானது குளத்துப்புழை-குருக்கைச் சாலை கி.மீ. 0/0 8/2 வரையிலான பகுதியே ஆகும். இச்சாலை கி.மீ. 0/4—1/6 மற்றும் 5/0 6/0 வரையிலான பகுதியை ரூ. 8.00 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இதில் கி.மீ. 1/0-2/0 பகுதியை கி. மீ. 1/4 2/0 பகுதியை அகலப்படுத்தவும், சிறப்புப் பழுதுபார்க்கவும் தோராயமாக ரூ. 13 இலட்சமும் (ரூபாய் பதிமூன்று இலட்சங்கள் மட்டும்) கி.மீ. 7/4 8/2 வரை சிறப்புப் பழுது பார்க்க ரூ. 6.00 இலட்சமும் (ரூபாய் ஆறு இலட்சங்கள் மட்டும்) செலவாகும். இப்பகுதிகளில் 1999-2000-ம் ஆண்டு நிதிநிலைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்ள வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

84—  [2000 மார்ச் 3

### கடைகளை அகற்றுதல்

**வினா எண் 23933—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், மேலகரம் பேருந்து நிறுத்தம் அருகில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகள் கடந்த ஜனவரி 1999-ல் அகற்றப்பட்டு விட்டன.

85—

### சாலை உயர்த்துதல்

**வினா எண் 25230—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உப கோட்டம், மடத்தூர் சாலையில் கிலோமீட்டர் 1/0—2/0 வரையிலான சாலையில் எப்போதும் கழிவு நீர் தேங்குவதால் சாலையை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது இத்துறையால் இதர மாவட்டச் சாலையாகப் பராமரிக்கப்படும் மடத்தூர் சாலை கி.மீ. 0/0—2/6 ஆகும். இச்சாலையில் கி.மீ. 2/4, 6-இல் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதியாகும். இவ்விடத்தில் வடிகால் கட்டி 1.00 மீட்டர் அகலமுள்ள சிமெண்ட் கான்கிரீட் பாலம் அமைக்கவும் 60 மீட்டர் நீளச் சாலையை உயர்த்தி மேம்பாடு செய்யவும் ரூ. 4.00 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) தேவைப்படும்.

மேற்கூறிய சாலையை மேம்பாடு செய்யும் பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. மேற்கூறிய பணிகள் எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

86—

### பாலம் உயர்த்திக் கட்டுதல்

**வினா எண் 25470—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, அரியப்பபுரம் பஞ்சாயத்துப் பகுதியான பாவூர்சத்திரம், கடையம் சாலையில் ரகுமானியபுரம் அருகிலுள்ள பாலத்தை உயர்த்திக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் உயர்த்தி கட்டித் தர கேட்கப்பட்டுள்ள பாலம் இதர மாவட்டச் சாலையான ரகுமானியாபுரம் சாலை

(கி.மீ. 0/0—0.6-ல் கி.மீ. 0/4-ல் 0.80 மீட்டர் அகலமுள்ள சிறுகண் பாலம் ஆகும். இப்பாலம் பழுதடைந்துள்ளது. இதனை 1.00 மீட்டர் விட்டமுள்ள குழாய்ப்பாலமாகத் திரும்பக் கட்டுவதற்கு ரூ. 1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தேவைப்படும். நிதி நிலைமைக்கேற்ப இப்பணியினை இந்நிதியாண்டிலோ அல்லது எதிர்வரும் ஆண்டுகளிலோ மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

87—

### சாலை செப்பனிடல்

**வினா எண் 25472—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், குறும்பலாபேரியிலிருந்து வடக்கே கருப்பசாமி கோயிலிலிருந்து கீழப்பாவூர் செல்லும் சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை இத்துறையைச் சார்ந்த இதர மாவட்டச் சாலையான கீழப்பாவூர் கருப்பசாமி கோயில் சாலை வழி மேலூர் சாலை கி.மீ. 0/0—1/4 ஆகும். இச்சாலையின் இருபுறமும் விளை நிலங்கள் உள்ளன. விளை நிலங்களின் உரிமையாளர்கள் தார்ச் சாலை வரை ஆக்கிரமிப்பு செய்து பயிர் செய்து வருகிறார்கள். மேற்படி ஆக்கிரமிப்பை அளவை செய்வதற்காக வி.கே. புதூர் வட்டாட்சியர் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருநெல்வேலி அவர்களால் தொடர்பு கொள்ளப்பட்டார். நில அளவை செய்து ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



88—

### தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 25473—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், பாவூர்சத்திரம்-மேலப்பாவூர் சாலையில் கி.மீ. 1.6—1.8 வரை ஏற்படுகின்ற சாலை அரிப்பைத் தவிர்க்க தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள தடுப்புச் சுவர் கட்டுவதற்கு கோரியுள்ள இடமானது இத்துறையின் (கிராமச் சாலைகள்) பாவூர்சத்திரம்-மேலப்பாவூர் சாலை (கி.மீ.0/0—4/0)-ல் கி.மீ. 1/6—1/8 வலதுபுறம் உள்ள ஓடையில் தண்ணீர் தார்ச்சாலையின் விளிம்பு வரை ஓடுவதால் சாலையில் அரிப்பு ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க சுமார் 53 மீட்டர் நிலத்தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். அதற்குத் தோராயமாக ரூ. 2.70 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) தேவைப்படும். வரும் நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

89—

### வேகத் தடை அமைத்தல்

**வினா எண் 27342—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

**சேலம் மாவட்டம், ஓமலூர் நகரில் பாத்திமா மேல் நிலைப் பள்ளிக்கு எதிரில் தேசிய நெடுஞ்சாலையில் வேகத் தடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?**

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேசிய நெடுஞ்சாலைகளில் வேகத் தடை அமைக்கக் கூடாது என்ற விதிமுறை உள்ளதால் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட தேசிய நெடுஞ்சாலையில் வேகத் தடை அமைக்க இயலாது. அதற்குப் பதிலாக குறிப்புத் தடை மற்றும் எச்சரிக்கை பலகை அமைக்கலாம்.

**90—**

## இரயில்வே மேம்பாலங்கள்

**வினா எண் 28523—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இந்த நிதியாண்டில் கட்டப்பட உள்ள இரயில்வே மேம்பாலங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் நடப்பு நிதி ஆண்டில் 10 (பத்து) இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டப்பட உள்ளன.

(ஆ) (1) திருச்சி-நாமக்கல் சாலையில் (உத்தமர்கோயில் அருகில்) கி.மீ. 7/8-ல் இரயில்வே கடவு எண் 241-க்குப் பதிலாக (இரயில்வே கி.மீ. 326/5-6) இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

(2) பாலக்கரை-திருச்சி கோட்டை இரயில் நிலையங்களுக்கு இடையில் (தென்னூர்) கி.மீ. 137/18—19-ல் இரயில்வே கடவு எண் 84-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

(3) பாலக்கரை-திருச்சி இரயில் நிலையங்களுக்கு இடையில் கி.மீ. 139/2-3ல் இரயில்வே கடவு எண் 85-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.



(4) திருச்சி டவுன் ஸ்ரீரங்கம் இரயில் நிலையங்களுக்கு இடையில் கி.மீ. 328/16-17-ல் இரயில்வே கடவு எண் 246-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

(5) செயின்ட் தாமஸ் மவுண்ட் இரயில் நிலையம் அருகில் இரயில்வே கீழ்ப்பாலம் கட்டுதல்.

(6) தெற்குப் பிரிவு உள்வட்டச் சாலையில் கி.மீ. 0/6-ல் தில்லை கங்காநகர் அருகில் இரயில்வே கீழ்ப்பாலம் கட்டுதல்.

(7) தாம்பரம்-சானடோரியம் இரயில் நிலையங்களுக்கு இடையில் (எம்.ஐ.டி. கேட்) இரயில்வே கி.மீ. எண் 26/1-2-ல் இரயில்வே கடவு எண் 28-க்குப் பதிலாக மேம்பாலம் கட்டுதல்.

(8) ஜோலார்பேட்டை-சேலம் பிரிவில் இரயில்வே கி.மீ. 267/4-6-ல் இரயில்வே கடவு எண் 100-க்குப் பதிலாக மொரப்பூரில் ஓர் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

(9) கரூர் டவுனில் திருச்சி - ஈரோடு பிரிவில் (இரயில்வே கி.மீ. 64/2-3) இரயில்வே கடவு எண் 37-க்குப் பதிலாக (வெங்கைமேடு) ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

(10) சிதம்பரம் நகரில் விழுப்புரம், தஞ்சாவூர் மெயின் லைனில் சிதம்பரம்-சிவப்புரி-கவரப்பட்டு சாலையில் கி.மீ. 0/10-ல் இரயில்வே கடவு எண். 202-க்குப் பதிலாக சாலை மேம்பாலம் கட்டுதல் (இரயில்வே கி.மீ. 247/2-3).

**91—**

## படிவங்களைப் பயன்படுத்துதல்

**வினா எண் 22662—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் தற்போது நடைமுறையிலுள்ள அனைத்துப் படிவங்களும் (Forms), தமிழிலும், ஆங்கிலத்திலும் இணைந்து வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆட்சி மொழித் திட்டச் செயலாக்க விதிமுறைப்படி அனைத்து அரசு அலுவலகங்களிலும் அனைத்து நிலைகளிலும் தமிழே பயன்படுத்தப்படவேண்டும். அதன்படி அரசு அலுவலகங்களிலுள்ள அனைத்துப் படிவங்கள், பதிவேடுகள், கோப்புகள் முதலியன தமிழிலேயே இருத்தல் வேண்டும். அவ்வாறு அனைத்துத் துறைகளிலும் உள்ள படிவங்கள் தமிழில் இருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நிலை எழவில்லை.

92—

### உதவி ஆணையர்கள் பணியிடங்கள்

**வினா எண் 24305—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அறநிலையத் துறையில் காலியாக இருக்கும் உதவி ஆணையர்கள் பணியிடங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றை நிரப்ப ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆறு.

(ஆ) ஆம்.

(இ) உதவி ஆணையர் பணிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து ஆலோசித்துத் தயாரிக்கப்பட்டு



2000 மார்ச் 3]

வருகிறது. மேற்படி தேர்ந்த பெயர்ப் பட்டியல் வெளியிட்ட பின், காலியாகவுள்ள உதவி ஆணையர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

93—

### நகை சரிபார்க்கும் அலுவலர்களுக்குப் பயிற்சி

**வினா எண் 24312—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நகை சரிபார்க்கும் அலுவலர்களுக்கு (Verification Officers) பயிற்சி அளிக்க அரசு ஆய்வு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் பணியாற்றும் துணை ஆணையர் (நகைகள் சரிபார்த்தல்) மற்றும் உதவி ஆணையர்களுக்கு நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை மதிப்பீடு செய்வதில் பயிற்சி அளிக்க குறுகிய கால அடிப்படை பயிற்சித் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

94—

### குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா எண் 24502—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குமாரபுரம் ஊராட்சி, சுவிசேசபுரம் இராம மக்களுக்கு இன்னும் குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை— [2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சியைச் சேர்ந்த சுவிசேசபுரம் கிராம மக்களுக்கு 332 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உணவுப் பொருட்களை அட்டைதாரர்கள் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடை மூலம் பெற்று வருகின்றனர்.

**95—**

### சந்தா செலுத்தும் முறைகளில் மாற்றம்

**வினா எண் 24056—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் சந்தா செலுத்தும் முறைகளில் மாற்றம் செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்பு சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு அமைப்பு சாரா தொழிலாளர்கள் ரூ. 20 செலுத்தி உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டபின்னர் அவர்கள் கட்ட வேண்டிய மாதச் சந்தா ரூ. 20-ஐ குறிப்பிட்ட சில தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வாரியத்திற்குச் செலுத்தலாம் என முடிவு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முழுமையாக செயலாக்கத்திற்கு வந்த பின்னர், சந்தா செலுத்துவதில் இடர்பாடுகள் ஏதேனும் கண்டறிந்தால், அதனைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, தற்போது சந்தா செலுத்தும் முறைகளில் மாற்றம் செய்யத் தேவை ஏதும் எழவில்லை என அரசு கருதுகிறது.



2000 மார்ச் 3]

**96—**

### பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி பிடித்தம்

**வினா எண் 31137—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாரத்தில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு சேமநல நிதி பிடிக்கப்படுகிறதா என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அந்த வசதியைப் பெறும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாரத்தில் பீடி சுற்றும் தொழிலாளர்கள் உட்பட அனைத்து பீடித் தொழிலாளர்களுக்குமே சேமநல நிதி என ஏதும் பீடித் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படுவதில்லை.

மத்திய அரசின், 1976-ம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல செஸ் சட்டம், பிரிவு (3)-ன்படி பீடி தயாரிப்பாளர்களிடமிருந்து அவர்கள் தயாரிக்கும் பீடிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் செஸ் கட்டணம் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது இக்கட்டணம் 1000 பீடிக்கு ரூ. 1 வீதம் வசூல் செய்யப்படுகிறது. இந்த செஸ் கட்டணமே மேற்படி சட்டப் பிரிவு (4)-ன் படி "கன்சாலிடேட்-டெட் ஃபண்டு ஆப் இந்தியா" வில் சேர்க்கப்பட்டு பின்னர், 1976-ம் வருடத்திய பீடித் தொழிலாளர்கள் நல நிதி சட்டம் பிரிவு (3) (ஏ)-ன்படி பீடித் தொழிலாளர்கள் நல நிதியாக உருவாக்கப்பட்டு, அதிலிருந்து பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன. இந்நிதி மத்திய அரசின் ஹைதராபாத் நல ஆணையரால் நிர்வகிக்கப்படுகிறது.

எனவே, பீடித் தொழிலாளர்களுக்கு என சேமநல நிதி பிடித்தம் செய்யப்படுவதில்லை.

97—

### ஜவுளி விற்பனைத் தொகை

**வினா எண் 21393— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து கைத்தறி, விசைத்தறி ஜவுளிகள் கடந்த 1997-98 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழகத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு தமிழகத்திலுள்ள பிரதம கைத்தறித் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், கோ ஆப்டெக்ஸ் மூலமும் 1997-98 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறித் துணியின் மதிப்பு ரு. 19.39 கோடி ஆகும். அவ்வாண்டில், விசைத்தறி துணிகள் ஏதும் அரசு கூட்டுறவு நிறுவனங்களால் பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படவில்லை.

98—

### பண்டிகை முன்பணம் அதிகரிப்பு

**வினா எண் 28193—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணத்தை அதிகரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சங்கங்கள், தங்களது சங்க துணை விதிகளில் வழிமுறைகள் வகுத்து அதனடிப்படையில், பண்டிகை முன்பணம் வழங்கி வருகிறது. மேலும் சங்க உறுப்பினர்களுக்கு பண்டிகை முன்பணம் அவர்களின் கோரிக்கையின் பேரில், தீபாவளி, பொங்கல், ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ்



போன்ற பண்டிகைகளின்போது, ஆண்டுக்கு ஒரு முறை சங்கப் பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பண்டிகை முன் பணம் 10 மாத சம தவணைகளில் நெசவாளர்களின் கூலியிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. சங்கங்களின் நிதி நிலைமைக்கேற்ப சங்க துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவிற்குட்பட்டு பண்டிகை முன் பணமாக சங்கங்களே வழங்கி வருகின்றன.

(ஆ) பண்டிகை முன் பணம் உயர்த்துவது தொடர்பாக சங்க நிர்வாகக் குழு முறைப்படி சங்க துணை விதி திருத்தம் மேற்கொண்டால் அதன்படி முன்பணம் உயர்த்தி வழங்கிக் கொள்ளலாம்.

99—

### கைத்தறிக் கண்காட்சி

**வினா எண் 29567—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் நடைபெற்ற 45-வது கைத்தறிக் கண்காட்சியில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சென்னையில் 28—4—1999 முதல் 12—5—1999 முடிய நடைபெற்ற 45-வது கைத்தறிக் கண்காட்சியில் (கோ ஆப்டெக்ஸ்) மொத்தம் ரூ. 93.55 இலட்சம் மதிப்புள்ள துணிகள் விற்பனையாகின.

100—

### விவசாயிகளுக்கு கடன் வழங்குதல்

**வினா எண் 28206—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பட்டு நூல் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பட்டு நூற்புத் தொழில் முனைவோருக்கு பயிற்சியும், இயந்திர கொள்முதலுக்கு மானிய உதவியும், முதலீட்டுக் கடன் வங்கிகளில் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு மற்றும் மத்திய அரசின் நிதி உதவியில் 15 சதவீதம் மானிய உதவி இயந்திரம் கொள்முதல் செய்ய வழங்கப்படும். இயந்திரத்தின் விலையில் 60 சதவீதத் தொகை வட்டியில்லாக் கடனாக மத்திய பட்டு வாரியத்தின் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தொழிலில் ஈடுபடும் நூற்பாளருக்கு உதவித் தொகையுடன் கூடிய பட்டு நூற்புப் பயிற்சியும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1999-2000 நிதி ஒதுக்கீட்டின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## இரண்டாம் பட்டியல்

1—

### காவலர்களுக்குக் குடியிருப்பு விடுகள்

**வினா எண் 15088—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள காவலர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு இதுவரை திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள காவலர்களுக்கு கட்டப்பட்ட 15 குடியிருப்புகள் தண்ணீர் வசதி



குறைவின் காரணமாக கட்டி முடித்தவுடன் காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்தன. தற்பொழுது 2½ கிலோ மீட்டர் தொலைவிலுள்ள துறையூர் கிராமத்திலிருந்து சேதுபாவாசத்திரம் குடியிருப்புகளுக்கு ஆழ் கிணறு மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு, 15 குடியிருப்புகளும் சேதுபாவாசத்திரம் ஆய்வாளரால் 18-12-1998 அன்று பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு, காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது.

2—

### தீயணைப்பு வாகனங்கள்

**வினா எண் 22319—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லங்கோடு தீயணைப்பு நிலையத்திற்கு புதிய தீயணைப்பு வாகனங்கள் வாங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் திறக்கப்பெற்ற 26 புதிய தீயணைப்பு நிலையங்களில், கொல்லங்கோடு தீயணைப்பு நிலையமும் ஒன்றாகும். 1997-98-ல் பொது ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் அளித்த கடன் தொகை ரூ. 300.00 இலட்சத்தைப் பயன்படுத்தி, கொல்லங்கோடு தீயணைப்பு நிலையம் உட்பட 13 நிலையங்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

### தீயணைப்பு நிலையத்திற்கு உபகரணங்கள்

**வினா எண் 25800—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர், கோட்டூர் தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் மற்றும் கூத்தாநல்லூர் தீயணைப்பு நிலையங்கள் முறையே 13-12-1996 மற்றும் 6-01-1998 முதல் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும், அரசின் நிதி நிலைக்கேற்ப கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கோட்டூர் தீயணைப்பு நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கூத்தாநல்லூர் தீயணைப்பு நிலையத்திற்கு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

**தீயணைப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 25916—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*விழுப்புரம் வட்டம், கண்டமங்கலத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓரிடத்தில் தீயணைபபு நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அந்த இடத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேறெந்த இடத்திலும், தீயணைப்பு நிலையம் இயங்கக் கூடாது. கண்டமங்கலத்தைச் சுற்றிலும் 25 கிலோமீட்டர் தொலைவிற்குள் இரண்டு தீயணைப்பு நிலையங்கள், அதாவது, 20 கிலோ மீட்டர் தொலைவில் வானூர் மற்றும் 23 கிலோ மீட்டர் தொலைவில் விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. கண்டமங்கலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் நிகழும் தீ விபத்துகளை இந்த இரண்டு தீயணைப்பு நிலைய வண்டிகளைக் கொண்டே சமாளிக்க இயலும். எனவே, அங்கு புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.





5—

**தீயணைப்பு நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 25955—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தண்டராம்பட்டு தொகுதி, தாணிப்பாடியில் தீயணைப்பு நிலையம் தொடங்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

25 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பதென்பது அரசின் கொள்கையாகும். தாணிப்பாடி கிராமத்திலிருந்து கிழக்கே 17 கிலோ மீட்டர் தொலைவில் தண்டராம்பட்டு தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கே நிகழும் தீ விபத்துகளை தண்டராம்பட்டு தீயணைப்பு நிலைய ஊர்தியைக் கொண்டு சமாளிக்கலாம். எனவே, அங்கே புதிதாகத் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

6—

**காவல் நிலையம் தொடங்குதல்**

**வினா எண் 25959—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலை நகரத்தில் மேலும் ஒரு காவல் நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை நகரில் மேலும் ஒரு காவல் நிலையம் தொடங்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

**தொலைபேசி இணைப்பு வசதி**

**வினா எண் 25960—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணை காவல் நிலையத்திற்கு தொலைபேசி இணைப்பு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணை காவல் நிலையத்தில் 15-9-1998 அன்று 46889 என்ற எண்ணுள்ள தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது.

**8—**

**அறிவியல் ஆய்வுக் கூடம்**

**வினா எண் 5085—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வகக்கூடம் 30-11-1980-ல் கட்டப்பட்டும் பயன்படுத்த முடியாமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், புவனகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடத்தில் பழுது நீக்கி சீரமைக்கும் பணிகள் ரூ. 3.00 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு கட்டடம், 7-7-1999 அன்று தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**9—**

**பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள்**

**வினா எண் 19077—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் மருங்குளம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கும்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**10—**

**பள்ளிக் கட்டடம் செப்பனிடல்**

**வினா எண் 19089—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளியின் ஓட்டுக் கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளியின் ஓட்டுக் கட்டடம் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித் துறை அவர்களால் பழுதுபார்க்கப்பட்டு பணிகள் முடிக்கப்பெற்றுவிட்டன.

**11—**

**தலைமை ஆசிரியர் பணியிடங்கள்**

**வினா எண் 21655—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 8 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

**12—**

**பள்ளிக்குக் கட்டட வசதி**

**வினா எண் 21730—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் படிக்க போதுமான கட்டட வசதியில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு ஆணை (நிலை) எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ன்கீழ் ரூ. 4.40 இலட்சம் நிதி ஒதுக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லாததால், சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்திலிருந்து நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**13—**

**மதிப்பூதியம்**

**வினா எண் 21810—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

பாட நூல்களுக்கு பாடங்கள் எழுதித்தரும் ஆசிரியர்களுக்கு தமிழ்ப் பாடநூல் நிறுவனம் வழங்கும் மதிப்பூதியத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1995 ஆம் ஆண்டு புதிய வரிசைப் பாட நூல்கள் தயாரிக்கப்பட்ட நிலையில், அப்பாடங்களை எழுதித்தரும் ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் மதிப்பூதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது:

1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் ரூ.4,000

6 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் ரூ. 5,000

9 முதல் 10 ஆம் வகுப்பு வரையில்ரூ. 6,000

11 மற்றும் 12 ஆம் வகுப்பு ரூ. 7,000

மதிப்பூதியத்தை அதிகரிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**14—**

**பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல்**

**வினா எண் 21909—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், புளியரை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொண்டு பராமரிப்புப் பணிகளைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு பொதுப் பணித் துறையைச் சார்ந்ததாகும். எனவே, புளியரை

[2000 மார்ச் 3

அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 முதல் 5 வரை உள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களையும் பொதுப் பணித் துறையே பராமரிக்கும். ஊராட்சி ஒன்றியம் பள்ளிக் கட்டடப் பராமரிப்புப் பணிகளைச் செய்து தரும் கேள்வி எழாது.

**15—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 22967—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறைக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கவும் பள்ளியில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறைக்கு தண்ணீர் வசதி செய்து தருதல் குறித்து சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சம்பந்தப்பட்ட உறுப்பினரின் இசைவைப் பெற்று செய்து தர திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**16—**

**பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள்**

**வினா எண் 24578—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டுகளில் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படும் பள்ளிகள் குறித்த விவரம் மாவட்ட வாரியாக எவ்வளவு?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டுகளில், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாகத் தேவைப்படும் இரண்டு வகுப்பறைக் கட்டடங்களும், மூன்று வகுப்பறைக் கட்டடங்களும், நான்கு வகுப்பறைக் கட்டடங்களும் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் மற்றும் மாவட்டம் (1) | | இரண்டு வகுப்பறைக் கட்டடம் (2) | மூன்று வகுப்பறைக் கட்டடம் (3) | நான்கு வகுப்பறைக் கட்டடம் (4) |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 3 | 2 | 2 |
| 2. | காஞ்சிபுரம் | 7 | 4 | 4 |
| 3. | திருவள்ளூர் | 7 | 4 | 3 |
| 4. | விழுப்புரம் | 8 | 4 | 3 |
| 5. | கடலூர் | 6 | 4 | 3 |
| 6. | வேலூர் | 7 | 4 | 4 |
| 7. | திருவண்ணாமலை | 7 | 4 | 3 |
| 8. | தருமபுரி | 9 | 5 | 3 |
| 9. | சேலம் | 9 | 5 | 3 |
| 10. | நாமக்கல் | 7 | 4 | 4 |
| 11. | தஞ்சாவூர் | 10 | 5 | 3 |
| 12. | நாகப்பட்டினம் | 8 | 4 | 2 |
| 13. | திருவாரூர் | 6 | 3 | 2 |
| 14. | திருச்சி | 8 | 3 | 3 |
| 15. | கரூர் | 7 | 2 | 2 |
| 16. | பெரம்பலூர் | 7 | 3 | 2 |
| 17. | புதுக்கோட்டை | 6 | 4 | 3 |
| 18. | சிவகங்கை | 7 | 2 | 3 |

[2000 மார்ச் 3

| வரிசை எண் மற்றும் மாவட்டம் (1) | | இரண்டு வகுப்பறைக் கட்டடம் (2) | மூன்று வகுப்பறைக் கட்டடம் (3) | நான்கு வகுப்பறைக் கட்டடம் (4) |
|---|---|---|---|---|
| 19. | இராமநாதபுரம் | 8 | 4 | 2 |
| 20. | கோவை | 7 | 3 | 3 |
| 21. | ஈரோடு | 7 | 4 | 2 |
| 22. | மதுரை | 8 | 3 | 3 |
| 23. | திண்டுக்கல் | 6 | 3 | 3 |
| 24. | தேனி | 7 | 3 | 3 |
| 25. | விருதுநகர் | 7 | 3 | 3 |
| 26. | திருநெல்வேலி | 6 | 4 | 2 |
| 27. | தூத்துக்குடி | 7 | 3 | 3 |
| 28. | நாகர்கோவில் | 7 | 4 | 4 |
| 29. | நீலகிரி | 1 | 2 | 1 |
| | மொத்தம் | 201 | 101 | 81 |

(ஆ) சேலம் மாவட்டத்திலுள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் மேலும் 17 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுகின்றன.

**17—**

### நூலகர் நியமித்தல்

**வினா எண் 26504—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், பெரியவீரசங்கிலியில் உள்ள நூலகத்தில் நூலகர் பணியிடம் காலியாக உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நூலகர் நியமித்துத் தர அரசு முன்வருமா?



2000 மார்ச் 3]

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெரியவீரசங்கிலியில் கிளை நூலகமோ, ஊர்ப்புற நூலகமோ அல்லது பகுதிநேர நூலகமோ எதுவுமில்லை.

(ஆ) நூலகம் எதுவுமில்லாத காரணத்தினால் நூலகர் நியமனம் குறித்து கேள்வி எழ வாய்ப்பு இல்லை.

**18—**

### கிளை நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்

**வினா எண் 26526—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், குமளம் கிராமத்திலும் கண்டமங்கலம் கிராமத்திலும் இயங்கும் கிளை நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விழுப்புரம் வட்டம், குமளம் கிராமத்திலும் கண்டமங்கலம் கிராமத்திலும் கிளை நூலகங்கள் ஏதும் செயல்படவில்லை. இவ்விரு ஊர்களிலும் ஊர்ப்புற நூலகங்களே செயல்பட்டு வருகின்றன. இவ்வூர்ப்புற நூலகங்களுக்கு ஊராட்சியால், காலிமனை வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் நூலக ஆணைக் குழுவிற்கு நிலமாற்றம் செய்யப்படவில்லை. கண்டமங்கலம் ஊர்ப்புற நூலகத்திற்கு பத்திரப்பதிவின் மூலம் காலிமனை பெறப்பட்டுள்ளது. வாடகைக் கட்டடத்தில் இயங்கும் காலிமனை உள்ள கிளை நூலகங்களுக்கு முதற்கட்டமாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக மாவட்ட நிதி வசதிக்கேற்ப காலிமனை உள்ள ஊர்ப்புற நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

19— [2000 மார்ச் 3

## பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 29787—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பாம்பூர், பார்த்திபனூர் பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிகள் சுற்றுச் சுவர் இன்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சுற்றுச் சுவர் கட்டித் தர இந்நிதி ஆண்டில் நிதி ஒதுக்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதி, பாம்பூர், பார்த்திபனூர், பரமக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் அமைப்பதற்குப் பதிலாக அரசாணை (நிலை) எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பசுமைவேலி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது அரசின் கொள்கையல்ல.

20—

## பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்

**வினா எண் 30185—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம் மூலம் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் எத்தனை பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அதில் சேலம் மாவட்டத்தில் எத்தனை கட்டப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம் மூலம் தற்போது பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 மார்ச் 3]

21—

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 30200—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், அச்சம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், அச்சம்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட, இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்காக நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

22—

## உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 30299—திரு ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் வீரப் பெருமாள்புரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை— [2000 மார்ச் 3

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் கட்டடங்களுக்கென பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், வீரப்பெருமாள்புரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்ட சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

23—

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 31266—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியில் காளணம்பட்டிக்கு நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகச் சட்டத்தின்படி 1000-க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட இடங்களில் பகுதிநேர நூலகம் அமைக்கலாம். காளணம்பட்டியின் மக்கள் தொகை 500 என்பதால் இங்கு நூலகம் அமைக்க இயலாது.

24—

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 31314—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், வந்தக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், வந்தக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் சுறுச் சுவர் அமைப்பதற்குப் பதிலாக அரசாணை நிலை எண் 581, கல்வி, நாள் 14-7-1994-ன்படி பசுமை வேலி அமைக்க சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரையும் வனத் துறை அலுவலரையும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பது அரசின் கொள்கையல்ல.

25—

**வகுப்பறைகளுக்கு மேல்தளம் அமைத்தல்**

**வினா எண் 31383—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் கட்டப்பட்ட கட்டடத்தில் கூடுதல் வகுப்பறைகளுக்கான மேல்தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் கட்டப்பட்ட கட்டடத்தில் கூடுதல் வகுப்பறைகளுக்கான மேல்தளம் அமைக்க இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/

பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

26—

**சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குதல்**

**வினா எண் 32891—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

தமிழகத்தில் வரும் கல்வியாண்டில் 1999-2000 ஆம் ஆண்டிற்கு புதிதாகச் சுய நிதிக் கலை, அறிவியல் மற்றும் தொழில் கல்லூரிகளைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளதா?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1999-2000 ஆம் கல்வியாண்டில், 20 புதிய சுய நிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. தொழில் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தொழில் கல்லூரிகளை 1999-2000 ஆம் ஆண்டில் தொடங்க தடையின்மைச் சான்று வழங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

27—

**தொலைபேசி வசதி செய்தல்**

**வினா எண் 20142—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அரசினர் புதிய மருத்துவ மனைக்குத் தொலைபேசி வசதி செய்ய நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் இயங்கிவரும் 32 படுக்கைகள் கொண்ட அரசினர் மருத்துவமனைக்கு ஏற்கெனவே தொலை பேசி வசதி அளிக்கப்பட்டு, தொலை பேசி எண் 535674 தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

28—

**இளநிலை உதவியாளராகப் பணி மாற்றம்**

**வினா எண் 23789—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் கணக்கீட்டாளர்கள் உள்முகத் தேர்வு மூலம் பணி மூப்பு இழப்பின்றி இளநிலை உதவியாளராகப் பணிமாற்றம் செய்ய அரசு முடிவு எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் வாரியத்தில் பணிபுரியும் கணக்கீட்டாளர்கள் உள்முகத் தேர்வு மூலம் பணி மூப்பு இழப்பின்றி இளநிலை உதவியாளராகப் பணிமாற்றம் செய்ய வாரிய விதிமுறைகளில் இடமில்லை.

29—

**ஜெனரேட்டர் அமைத்தல்**

**வினா எண் 29010—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் இரவு நேரங்களில் மின்தடை ஏற்படுவதால் ஜெனரேட்டர் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் இரவு நேரங்களில் மின் தடை ஏற்பட்டால் பயன்படுத்தும் பொருட்டு தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் தற்சமயம் உபரியாக உள்ள ஒரு 2.5 கே.வி. ஜெனரேட்டரை செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**30—**

### மின் அழுத்தக் குறைவு போக்குதல்

**வினா எண் 29018—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தர பாண்டியபுரம் பேரூராட்சி, மேலரத வீதி பகுதியில் உள்ள மின் அழுத்தக் குறைவைப் போக்க கூடுதலாக 63 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தர பாண்டியபுரம் பேரூராட்சி, மேலரதவீதி பகுதிக்கு, சுந்தர பாண்டியபுரம் 63 கே.வி.ஏ. மின் மாற்றி 9 மூலமாக மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த மின் மாற்றியில் தொழிற்சாலை மற்றும் விவசாய மின் இணைப்புகள் இணைக்கப்படவில்லை. இந்த மின் மாற்றியில் வீட்டு மின் இணைப்புகள் மட்டும் மொத்தமாக 87 கி.வாட் (87 KW) மின் பளுவிற்கு



இணைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்கூறிய பகுதியில் 3-8-1999 அன்று மின் அழுத்தம் ஆய்வு செய்யப்பட்டது. மின்னழுத்தம் 200 வோல்ட் (P.N.) ஆக இருந்தது எனவே, தற்பொழுது கூடுதலாக ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றி மேற்கூறிய பகுதியில் அமைக்க அவசியம் இல்லை.

**31—**

### மின் அழுத்தக் குறைவைப் போக்குதல்

**வினா எண் 29019—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் கிராமத்திலுள்ள மின் அழுத்தக் குறைவைப் போக்க கூடுதலாக 64 கே.வி.ஏ. மின் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் மின் அழுத்தக் குறைவைப் போக்கிட கூடுதலாக ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை 31-12-1999-க்குள் முடித்து மின்னழுத்தம் சீர் செய்யப்படும்.

**32—**

### மருத்துவமனையில் லிஃப்ட் இயங்கச் செய்தல்

**வினா எண் 29105—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் லிஃப்ட் இயங்குவதில்லை என்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) அவற்றை இயக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நான்கு மின்தூக்கி இயந்திரங்களும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

**33—**

**குடியிருப்பு கட்டுதல்**

**வினா எண் 29622—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பி. கொடிக்குளம், மஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர்களுக்கென குடியிருப்பு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதி, பி. கொடிக்குளம், மஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர்களுக்கான குடியிருப்பு கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் துணை சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**34—**

**வீட்டுக்கு ஒரு மின் விளக்குத் திட்டம்**

**வினா எண் 30933—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் வீட்டுக்கு ஒரு மின் விளக்குத் திட்டத்தினை அரசு அமல்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு குடிசை வீட்டுக்கு ஒரு மின் விளக்கு என்ற திட்டம் தற்பொழுது அமலில் உள்ளது. அந்தத் திட்டத்தின்கீழ் சாத்தான்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் கீழ்க்கண்டபடி இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| (1) | 1998-99 ஆம் ஆண்டில் | .. | 44 |
| (2) | 1999-2000 நடப்பு ஆண்டில் | .. | 35 |

**35—**

**துணை மின் நிலையங்கள்**

**வினா எண் 31108—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மின் விநியோக வட்டத்திற்குட்பட்ட துணை மின் நிலையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இவ்வாண்டு புதியதாக எத்தனை துணை மின் நிலையங்கள் கட்டப்படவுள்ளன என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் தற்போது இயக்கத்திலுள்ள துணை மின் நிலையங்கள் பின்வருமாறு :

| வரிசை எண் | துணை மின் நிலையம் | வோல்டேஜ் விகிதம் (கி.வோ.) |
|---|---|---|
| அ. | 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் | |
| 1. | இங்கூர் .. .. | 230/110 |
| ஆ. | 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் | |
| 1. | இங்கூர் .. .. | 110/33-11 |
| 2. | காங்கேயம் .. .. | 110/33-11 |
| 3. | இராசாத்திவலசு .. .. | 110/33-11 |
| 4. | ஈரோடு .. .. | 110/22 |
| 5. | சூரியம்பாளையம் .. .. | 110/22 |
| 6. | எலுமாத்தூர் .. .. | 110/22-11 |
| 7. | கவுந்தபாடி .. .. | 110/22-11 |
| 8. | கொடுமுடி .. .. | 110/11 |
| 9. | சிவகிரி .. .. | 110/11 |
| 10. | பெருந்துறை சிப்காட் .. .. | 110/11 |
| இ. | 33 கி.வோ. துணை மின் நிலையங்கள் | |
| 1. | குன்னத்தூர் .. .. | 33/11 |
| 2. | திங்களூர் .. .. | 33/11 |
| 3. | சென்னிமலை .. .. | 33/11 |
| 4. | ஊத்துக்குளி .. .. | 33/11 |
| 5. | பானகவுண்டன்பாளையம் .. .. | 33/11 |
| 6. | பழையகோட்டை .. .. | 33/11 |



| | | |
|---|---|---|
| 7. | வெள்ளக்கோயில் .. .. | 33/11 |
| 8. | முத்தூர் .. .. | 33/11 |
| 9. | எல்லபாளையம்புதூர் .. .. | 33/11 |
| 10. | சிவன்மலை .. .. | 33/11 |
| 11. | மேட்டுப்பாளையம் .. .. | 33/11 |
| 12. | தாசநாயக்கன்பட்டி .. .. | 33/11 |
| 13. | வெள்ளோடு (ஆளில்லா) .. .. | 33/11 |
| 14. | கஸ்தூரிபா கிராமம் (ஆளில்லா) .. | 33/11 |

(ஆ) ஈரோடு மின் பகிர்மான வட்டத்தில் நடப்பு ஆண்டில் நிறுவப்படவுள்ள துணை மின் நிலையங்கள் பின் வருமாறு:

(அ) இவ்வாண்டில் பணி முடிக்கப்பட்டு இயக்கப்படுபவை

1. காந்தி நகர் 110-22-11 கி.வோ. துணை மின்நிலையம்

(ஆ) வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகள்

1. கஸ்பாபேட்டை 110/22 கி.வோ. துணை மின்நிலையம்
2. அர்ச்சலூர் 33/11 கி.வோ. துணை மின்நிலையம்

36—

## வருவாய்க் கிராமம் இரண்டாகப் பிரித்தல்

**வினா எண் 20179— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பெரிய வருவாய்க் கிராமங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) ஆம் எனில், நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா ?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) சேலம் மாவட்டத்தில் 608 வருவாய்க் கிராமங்கள் உள்ளன.

(ஆ) அவற்றுள் பிரிக்கக்கூடிய அளவில் பெரிய வருவாய்க் கிராமங்கள் ஏதுமில்லை.

37—

## தொடக்கப் பள்ளிக்கு நிலம்

வினா எண் 27324—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி கிராமம், எலத்தூர் தொடக்கப் பள்ளிக்கு அருகிலுள்ள ச.நெ.103/3-லுள்ள தரிசு நிலத்தைத் தொடக்கப் பள்ளிக்கு ஒதுக்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி கிராமம் புல எண். 103/3 விஸ்தீரணம் 0.72.0 ஹெக்டேர் நிலம் தரிசு நிலமாகும். மேற்படி தரிசு கல்லாங்குத்து நிலமாகும். இதில் ஐந்து நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து புளியமரம் வைத்து வெகுகாலமாக அனுபவித்து வருவதாகவும், எலத்தூர் தொடக்கப் பள்ளி அமைந்துள்ள இடம் புல எண் 103/2சி எனவும், புல எண் 103/3-க்கும் பள்ளி அமைந்துள்ள இடத்திற்கும் 1 பர்லாங் தூரம் உள்ளது எனவும், மேலும் புல எண் 103/3 பள்ளிக்கூடம் கட்டுவதற்குத் தகுதியான நிலம் அல்ல எனவும் தெரிய வந்துள்ளது.

38—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 29119—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, பாரக்காடு பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், முருகம்பாளையம் ஊராட்சி, பாரக்காடு பகுதி, புல எண் 168-ல் 23 குடும்பங்கள் ஆக்ரமணம் செய்துள்ளன. அப்புலம் நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை. அதன் வகைபாடு வண்டிப் பாதை. எனவே அங்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. வேறு இடத்தில் வீட்டுமனைகள் தர மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது.

39—

## விவசாய நிலம் ஒப்படைப்புத் திட்டம்

**வினா எண் 29674—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் 1996-99 ஆகிய மூன்றாண்டுகளில் விவசாய நிலம் ஒப்படைப்புத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியில் 1996-99 ஆகிய மூன்றாண்டுகளில் விவசாய நிலம் ஒப்படைப்புத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 159 ஆகும்.

(ஆ) அதன் விவரம்:

| | | நபர்கள் | ஹெக்டேர் |
|---|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்டோர் | 24 | 1.26.00 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 70 | 2.79.00 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் | 65 | 4.74.05 |
| | மொத்தம் | **159** | **8.79.05** |

40— [2000 மார்ச் 3

## விவசாய நிலங்கள் ஒப்படைப்புத் திட்டம்

**வினா எண் 29675—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் விவசாய நிலங்கள் ஒப்படைப்புத் திட்டத்திற்காக அரசிடம் எவ்வளவு நிலம் தற்போது உள்ளது?

(ஆ) இந்த நிலங்களைக் கேட்டு விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வரப் பெற்றுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் விவசாய நிலங்கள் ஒப்படைப்புத் திட்டத்தின்கீழ் அரசிடம் 13.18.0 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்கள் உள்ளன.

(ஆ) இந்த நிலங்களைக் கேட்டு, ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களில் நான்கு நபர்கள் நிலப் பட்டா வழங்கக் கோரி மனுச் செய்துள்ளனர்.

41—

## விபத்து நிவாரணம்

**வினா எண் 31141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 1998-99-ல் விபத்துக்களில் இறந்தவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட உதவித் தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) அந்த உதவித் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் விபத்துக்களில் இறந்தவர்களுக்கு தருமபுரி மாவட்டத்தில் 18 நபர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 96



2000 மார்ச் 3]

நபர்களுக்கும் விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் அரசால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் தற்போது ரூ. 15,000 வழங்கப்பட்டு வருகிறது. இது சமீபத்தில் (1996 லிருந்து) உயர்த்தப்பட்டது. இத்தொகையை மீண்டும் உயர்த்துவது குறித்து பரிசீலனையில் இல்லை.

42—

## அலுவலகக் கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு

**வினா எண் 31147—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர், திருவாரூர் மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

(ஆ) அந்தக் கட்டுமானங்களைக் கட்டி முடிக்க எவ்வளவு நாட்கள் ஆகும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) கரூர், திருவாரூர் ஆகிய மாவட்டாட்சியர்கள் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு முறையே ரூ.560 லட்சம் மற்றும் ரூ.570 இலட்சம் ஆகும்.

(ஆ) மேற்படி கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் 31-7-2000-ல் முடிக்கப்படும்.

43—

## மேல்நிலைப் பள்ளிக்கு நிலம்

**வினா எண் 31149—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அதன் அருகேயுள்ள புறம்போக்கு நிலத்தை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லை எனில், அதை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சேலம் முதன்மைக் கல்வி அலுவலர், எர்ணாபுரம் கிராமம் புல எண் 241 ஓடைப் புறம்போக்கு நிலத்தினை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நில மாறுதல் செய்யக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, சங்ககிரி கோட்ட ஆட்சித் தலைவரால் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதாகவும், அதில் சில குறைபாடுகள் உள்ளதால், குறை நிவர்த்தி அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றும், நில மாறுதல் முன்மொழிவுகள் சங்ககிரி கோட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரவேண்டி நிலுவையில் உள்ளன என்றும், சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார். சேலம் மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து இந்நில மாற்றம் குறித்த முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் மகுடஞ்சாவடி மேல்நிலைப் பள்ளிக்கு நிலம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

44—

## விபத்து நிவாரண உதவித் தொகை

**வினா எண் 31150—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1998-99-ல் விபத்துக்களில் இறந்தவர்களுக்கு அரசால் உதவித்தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) அதில் எடப்பாடி வட்டத்தில் வழங்கப்பட்டது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1998-99-ல் விபத்து நிவாரண உதவித் தொகை திட்டத்தின்கீழ் 118 நபர்களுக்கு ரூ.16,35,000/- வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) எடப்பாடி வட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் விபத்து நிவாரண உதவித்தொகை திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கு ரூ.1,40,000/- வழங்கப்பட்டுள்ளது.



45—

## வடிகால்கள் சீரமைத்தல்

**வினா எண் 3297—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், பள்ளிவார்த்தி ஊராட்சி, பூதமங்கலம், பெரியகுடி கிராமத்தில் உள்ள அனைத்து வடிகால்கள் தூர்ந்துபோய் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியகுடி வாய்க்காலில் தூர் அகற்றும் பணி 1999 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தான் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணி 1999 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இதற்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததால் இவ்வாண்டு செய்ய இயலவில்லை.

46—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 17761—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் "ராஜீவ் காந்தி" தேசியக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் மூலம் பாதுகாப்பான குடிநீர் எத்தனை கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரத்தை கிராமவாரியாக அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் "ராஜீவ் காந்தி" தேசியக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் உள்ள துரிதப்படுத்தப்பட்டுள்ள ஊரக குடிநீர்த் திட்டம் மூலம் 1997-98 ஆம் ஆண்டு 20 ஊரகக் குடியிருப்புகளுக்கும், குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் மூலம் 8 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

47—

### மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி

**வினா எண் 22372—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை ஊராட்சி, வடக்குத் தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கல்விராயன்பேட்டை ஊராட்சி, வடக்குத் தெருவிற்கு 1989-90-ல் ஒரு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

48—

### குடிநீர் இணைப்பு வழங்கல்

**வினா எண் 24859—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிப் பகுதியில் உள்ள முகைதீன் பள்ளிவாசலுக்குக் குடிநீர் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சி முகைதீன் பள்ளிவாசலுக்குக் குடிநீர் இணைப்பு வழங்க அனுமதி கோரி திருநெல்வேலி குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு நகராட்சியிடமிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவரின் பதில் கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

49—

### ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 25176—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அலங்காநல்லூர் பேரூராட்சியில் கேட்டுக்கடையை மையமாக வைத்து குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகக் கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்பொழுது அலங்காநல்லூர் பேரூராட்சியில் கேட்டுக்கடைக்கு 4 ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து சுமார் 9.4 கி.மீ. நீளத்திற்கு நீர் உந்துக் குழாய் மூலம் 2.50 இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 35 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

50—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 25640—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக கடந்த 1998-99ல் ஃப்புளோரைடால், பாதிக்கப்பட்ட குடிநீர் உள்ள குடியிருப்புகளில் எத்தனை குடியிருப்புகளுக்கு அரசு நல்ல குடிநீர் வழங்கி உள்ளது?

(ஆ) அதன் விவரத்தை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டில், ஃப்புளோரைடால் பாதிக்கப்பட்ட மொத்தம் 752 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சேலம் மாவட்டம். | 132 |
| 2. | நாமக்கல் மாவட்டம் | 43 |
| 3. | கரூர் மாவட்டம் | 46 |
| 4. | திருச்சி மாவட்டம் | 13 |
| 5. | தருமபுரி மாவட்டம் | 385 |
| 6. | ஈரோடு மாவட்டம் | 58 |
| 7. | கோயம்புத்தூர் மாவட்டம் | 15 |
| 8. | விருதுநகர் மாவட்டம் | 8 |
| 9. | வேலூர் மாவட்டம் | 52 |
| | மொத்தம் | **752** |

**51—**

**அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 28269—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஒன்றிய அலுவலக அலுவலர்களுக்குப் பொதுப் பணித் துறை மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஒன்றிய அலுவலக அலுவலர்களுக்கு ஏற்கெனவே 7 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**52—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 28427—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், சமுத்திரம் பஞ்சாயத்தில் சக்கியதன்வலவு என்ற பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், சக்கியதன்வலவு, திருப்பாணி மற்றும் 236 ஃப்புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ள குடியிருப்புகளாகும்.

மேற்கண்ட திட்டத்திற்கு தலைமையிடப் பணிகளைத் தவிர, மற்ற பணிகளுக்கு வடிவமைப்பு மற்றும் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்க ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தலைமையிடப் பணிக்கு மற்றும் இதர வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் சுமார் இரண்டு ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

53—  [2000 மார்ச் 3

**வணிக வளாகம் திறத்தல்**

**வினா எண் 29467—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் வேலை முடிந்து பல மாதங்கள் ஆகியும் கடைகள் திறக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (i) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான "பழைய மார்கெட்"-ல் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கடைகள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன.

(1) 32 கடைகள் புதியதாகக் கட்டப்பட்டன. இதில் 8 இரும்புச் சுருள் கதவு போட்ட கடைகளும், 24 திறந்தவெளிக் கடைகளும் கட்டப்பட்டுள்ளன. இதில் 8 இரும்புச் சுருள் கதவு போட்ட கடைகள் மற்றும் 1 திறந்தவெளிக் கடை பொது ஏலத்தில் விடப்பட்டு 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் திறக்கப்பட்டுள்ளன.

(2) பழைய மார்க்கெட்டில் கடை வைத்து இருந்த பழைய குத்தகைதாரர்கள் 19 பேர்களுக்கு பொது ஏலம் தவிர்த்து நகர்மன்றத் தீர்மான எண் 1190, நாள் 3-2-1999-ல் மாத வாடகை ரூ.1125/- என நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் செயல் முறை ஆணைப்படி பழைய குத்தகைதாரர்கட்கு ரூ.2,000/- மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இதனை அவர்கள் செலுத்தாமல் 16-7-1999-ல் நகராட்சி அனுமதியின்றி கொடைக்கானல் வர்த்தகச் சங்கம் மூலம் கடைகளை எடுத்துக் கொண்டுள்ளனர். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(3) பன்றி இறைச்சிக்காகக் கட்டப்பட்ட 4 கடைகள் பொது ஏலத்தில் போகாததால் காலியாக உள்ளன.



2000 மார்ச் 3]

(ii) கொடைக்கானலில் பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகள் பற்றிய வவரங்கள் கீழ்வருமாறு:

(1) புதியதாக கட்டப்பட்டுள்ள 6 கடைகள் பொது ஏலத்தில் 1-7-1998 முதல் விடப்பட்டுள்ளன.

(2) மாடியில் உள்ள உணவு விடுதி பலமுறை ஏலம் மற்றும் டெண்டர் வைத்தும் போகவில்லை. தற்போது யூனியன் வங்கியாளர்களால் அவ்விடம் பார்வையிடப்பட்டு, அவர்களின் மேல் அலுவலகத்திற்குக் கடிதம் எழுதப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

54—

**பேருந்து கால அட்டவணை அமைத்தல்**

**வினா எண் 30111—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை பேருந்து நிலையத்தில் பேருந்து கால அட்டவணை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை பேருந்து நிலையத்தில் பேருந்து கால அட்டவணை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. இதில் எழுத்துக்கள் மங்கிய நிலையில் இருந்ததால், அட்டவணையைப் புதிதாக எழுதவும், இதர மராமத்துப் பணிகளுக்கும் சேர்த்து நகராட்சியால் மொத்தம் ரூ.14,000/- மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டு அதன்படி 11-8-1999-ல் வேலை உத்தரவும் அளிக்கப்பட்டு, பணி செய்யப்பட்டது.

55—

[2000 மார்ச் 3

குடிநீர்க் குழாய் இணைப்புத் திட்டம்

**வினா எண் 30551—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வில்லுக்குறி பேரூராட்சியில் கருப்புக்கோடு குடிநீர்த் திட்டத்தில் போதுமான தண்ணீர் வளம் உள்ளதால் அதிலிருந்து வீடுகளுக்குக் குழாய் இணைப்புத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வில்லுக்குறி பேரூராட்சிக்குட்பட்ட கருப்புக்கோடு குடிநீர்த் திட்டத்தில் ஓரளவு நீர் ஆதாரம் உள்ளது. இப்பகுதியில் உள்ள வீடுகளுக்குக் குழாய் இணைப்புக் கொடுத்தால் பொதுக் குழாய்களுக்குத் தண்ணீர் வரத்து பாதிப்பு ஏற்படும். மேலும் பேரூராட்சிப் பகுதி முழுவதும் விநியோகம் செய்ய போதுமான தண்ணீர் இல்லாததால் கருப்புக்கோடு திட்டப் பகுதிகளுக்கு மட்டும் வீட்டு இணைப்புக் கொடுப்பது பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதால், வீட்டுக் குடிநீர்க் குழாய் இணைப்புத் திட்டம் பரிசீலனையில் இல்லை.

56—

தொடக்கப் பள்ளிக் கட்டடத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 30679—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், காசிமேஜர்புரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைப் பராமரித்துச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியம், காசிமேஜர்புரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைப் பராமரித்து சுற்றுச்சுவர் அமைக்க ரூ.70,000/- செலவாகும். ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லை என்பதால் தற்போது சுற்றுச்சுவர் அமைக்கும் வாய்ப்பு இல்லை. இருப்பினும் நிதி வசதி சீராகும்போது இப்பணி மேற்கொள்ளப்படும்.

57—

பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 30300—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் புதியதாகப் பேருந்து நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

58—

ஒன்றியப் பணிக்குரிய ஏப்புகளின் படிசலின் அளவை அதிகப்படுத்துதல்

**வினா எண் 30898—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) வேடசந்தூர் தொகுதி. குஜிலியம்பாறை ஒன்றியம். ஒன்றியப் பணிக்காகப் பயன்படுத்தும் ஜீப்புகள், டீசல் பற்றாக்குறை காரணமாகப் பணி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கு அதிகாரிகள் செல்ல இயலவில்லை என்பதால் டீசலின் அளவை அதிகப்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் இரண்டு ஜீப்புகள் உள்ளன. மேற்படி ஜீப்புகளுக்குக் கீழ்க்கண்டவாறு கூடுதலாக எரிபொருள் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது:

ஒரு மாதத்திற்கான எரிபொருள் அளவு :

| | |
|---|---|
| (அ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் | .. 75 லிட்டர் |
| (ஆ) ஊராட்சி ஒன்றிய ஆணையர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அலுவலர்கள் | .. 100 லிட்டர் |
| (இ) கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் | .. 100 லிட்டர் |

இதற்கு மேலும் எரிபொருள் அளவை உயர்த்தும் சாத்தியக்கூறு இல்லை.

59—

### பாதுகாப்பு அறை அமைத்தல்

**வினா எண் 31624—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றித் தரப்படும்?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்து வரப்படுகிறது. இந்தப் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டப்பட்டு உள்ளது. பேருந்து நிலையம் பயனுக்குக் கொண்டு வந்ததும் இந்த அறையும் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

60—

### விவசாயிகளுக்கு டீசல் விற்பனை

**வினா எண் 22067—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு டீசல் விற்பனை செய்யப்படுகிறது?

(ஆ) இதுபோன்ற விற்பனை அமைப்பை எடப்பாடி தாலுகாவில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் எந்த ஒரு வேளாண்மைப் பொறியியல் சங்கம்/மையம் மூலமாகவும் விவசாயிகளுக்கு டீசல் விற்பனை செய்யப்படவில்லை.

(ஆ) டீசல் விற்பனை செய்ய மைய அரசுதான் முடிவு செய்கிறது.

61—

### தோட்டக்கலைப் பட்டயத்தாரர்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 30203—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தாம் வகுப்பு முடித்து, இரண்டு வருடத் தொழிற் பயிற்சியாகத் தோட்டக்கலைத் துறையில் பட்டயம் பெற்றவர்கள் தமிழகத்தில் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்கள் இதுவரையில் வேளாண்மைத் துறையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனரா?

(இ) இல்லையெனில் அரசு அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பத்தாம் வகுப்பு முடித்து, இரண்டு வருடத் தொழிற் பயிற்சியாகத் தோட்டக்கலைத் துறையில் பட்டயம் பெற்றவர்கள் 453 பேர் உள்ளனர்.

(ஆ) இதுவரை 45 பேர் தோட்டக்கலைத் துறையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(இ) அரசாணை எண் 457 வேளாண்மைத் துறை (வேநி 5) நாள் 28-7-1993-ன்படி வேளாண்மைத் துறையில் வயல் விளக்க அலுவலர் பணியிடங்கள் முழுவதும் நீக்கப்படவும், தற்போது வயல் விளக்க அலுவலராகப் பணிபுரிந்து வருவோர் அனைவரையும், வேளாண்மை உதவி அலுவலராகப் பதவி உயர்த்தவும் வழிவகை செய்யப்பட்டு, வேளாண்மை உதவி அலுவலர் மொத்த பணியிடங்கள் 4500 என்ற எண்ணிக்கைக்கு மிகைப்படக் கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளதை யடுத்து, அரசாணை எண் 118 வேளாண்மைத் துறை (வேநி 5) நாள் 7-3-1995 மற்றும் அரசாணை எண் 361, வேளாண்மைத் துறை (வேநி5) நாள் 30-6-1995 மூலம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடங்களில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை பட்டயதாரிகளைக் கொண்டு நேரடி நியமனம் செய்வதற்கு வழியில்லை என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையில் அரசு இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட இயலாது.



62—

### கற்றாழை வளர்க்க மானியம்

**வினா எண் 30370—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கற்றாழை வளர்க்க வாய்ப்பான சூழ்நிலை உள்ளதால் கற்றாழை வளர்க்க அரசு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில், அரூர், பாலக்கோடு, கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை ஆகிய தொகுதிகளில் தேசிய மானாவாரி நீர்பிடிப்புத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்க கற்றாழை நடுவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. பென்னாகரம் பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனினும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் அந்தந்த நீர்வடிப் பகுதி மக்கள் விரும்பினால் கற்றாழை வளர்ப்புத் திட்டத்தை மானிய உதவியுடன் செயல்படுத்த இயலும்.

63—

### விவசாய மக்கள்தொகை

**வினா எண் 30713—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரின் மக்கள்தொகை என்ன?

(ஆ) அவர்களில் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நில கையகப்படுத்துவோர் எண்ணிக்கை (Operational holding) 79,98,932 பேர் ஆகும். அவர்களில் 5 ஏக்கருக்கும் அதற்கும் குறைவான நிலம் உள்ளவர்கள் எண்ணிக்கை 71,22,611 பேர் ஆவர்.

64—

**ஏரி தூர் எடுத்தல்**

**வினா எண் 15811—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போரூர் பெரிய ஏரி நீண்ட நெடுங்காலமாகத் தூர் வாரப்படாமல் உள்ளதால் பெரிய திட்டத்தின்கீழ் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இப்பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஐந்து மதகுகள் கொண்ட போரூர் ஏரியின்கீழ் சுமார் 240 ஹெக்டேர் நிலம் பாசனத்தில் இருந்தது. ஆனால், விளை நிலம் எல்லாவற்றிலும் வீடுகள் கட்டப்பட்டுள்ளதால் தற்சமயம் போரூர் ஏரியின்கீழ் எந்தவிதப் பாசனமும் இல்லை. எல்லா மதகுகளும் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன. பாசனத் தேவைக்காக ஏரியைத் தூர் வாரத் தேவையில்லை. எனினும் போரூர் பெரிய ஏரியில் தூர் வாரும் பணி நிதி நிலைமையைப் பொறுத்து எதிர்காலத்தில் எடுத்துக்கொள்ளப்படும். தற்போது போரூர் ஏரியிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் சென்னை மாநகரக் குடிநீர்த் தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.



65—

**பேருந்துகள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 2085—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசிற்குச் சொந்தமான பல்வேறு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எத்தனை உள்ளன?

(ஆ) சேதமடைந்த பேருந்துகளைப் பழுதுபார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசிற்குச் சொந்தமான பல்வேறு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 17,160.

(ஆ) சேதமடைந்த பேருந்துகள் அந்தந்தப் பணிமனைகளிலேயே பழுதுபார்க்கப்படுகின்றன. சேதம் அதிகமாக இருந்தால் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு பழுதுபார்க்கப்படுகின்றன. மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தகுதிச் சான்றிதழ் பெற பேருந்துகளுக்குக் கால முறைப் பராமரிப்பு செய்யப்படுகின்றது. அதற்கு இடைப்பட்ட காலத்திலும் தகுதிச் சான்றிதழ் பெறும் தரத்திற்கேற்ப பராமரிப்புப் பணி செய்யப்படுகின்றது. பேருந்து வழித்தடத்தில் பழுதடைந்தால் வயர்லெஸ் மூலம் தகவல் தரப்படுகின்றது அல்லது அருகிலுள்ள பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பழுதுபார்க்கப்படுகின்றது. பேருந்துகளைப் பழுதுபார்ப்பதற்காக தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பேருந்துகளின் பழுதுகளை உடனுக்குடன் நீக்கிட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

66—

**பேருந்து வசதி செய்தல்**

**வினா எண் 24927—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், முதுமொத்தான்மொழி ஊராட்சி, தங்கம்மாள்புரம் கிராம மாணவ மாணவியர், பொதுமக்களின் நலன் கருதி மாலை 5 மணி முதல் 6 மணிக்குட்பட்ட நேரத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை —

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திசையன்விளை-நவ்வலடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.2 கி.மீ. தூரத்தில் உட்புறமாக தங்கம்மாள்புரம் என்ற கிராமம் அமைந்துள்ளது. மக்கள்தொகை சுமார் 400-க்கும் குறைவாக உள்ள இக்குக்கிராமத்திற்கு தற்போது 2 நகரப் பேருந்துகள் மூலம் 2 நடைகள் பேருந்து வசதி உள்ளது. மேலும், தங்கம்மாள்புரத்திலிருந்து 1.2 கி.மீ. தூரத்திலேயே உள்ள திசையன்விளை-நவ்வலடி பிரதான சாலை வழியாக 3 புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளில் ஒன்றை கோரிக்கை நேரத்தில் இக்கிராமத்திற்குச் சென்றுவரும்படியாக இயக்கினால், கால அட்டவணையில் மாற்றம், ஏற்கெனவே பயன்படுத்திவரும் பயணிகளுக்குக் கூடுதல் கட்டணம், பயணநேரம் அதிகரிப்பு [illegible] உருவாக்க வழிவகுக்கும். எனவே, மக்கள் தொகை மிகவும் [illegible] குறைவாகக் கொண்ட இக்குக்கிராமத்திற்குக் கோரிக்கை நேரத்தில் பேருந்து இயக்கச் சாத்தியக்கூறு இல்லை.

**67—**

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 26492—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, பருவதன அள்ளி ஊராட்சி வழியாகப் புதுப்பட்டிக்குச் செல்லும் நகரப் பேருந்தை பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக காலை 8-00 மணி மற்றும் மாலை 5-00 மணி அளவில் நேரம் மாற்றி இயக்கவோ அல்லது புதிய பேருந்து இயக்கவோ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் பெண்ணாகரத்திலிருந்து புதுப்பட்டிக்கு இயங்கி வரும் நகரப் பேருந்து தடம் எண் 6 மற்றும் தடம் எண் 9 முறையே பல்முனைத் தடங்களில் இயங்கி வருகிறது. இதில் தடம் எண் 6 மாலையில் பி. அக்ரஹாரத்திலிருந்து பென்னாகரம் செல்லும் பள்ளி மாணவர்களுக்கு ஏற்றவாறும், மாலையில் பெண்ணாகரத்திலிருந்து பள்ளிவிட்டு கொப்பாளூர் செல்லும் மாணவர்களுக்கு ஏற்றவாறும் இயக்கப்படுகிறது. அதேபோல் தடம் எண் 9 காலை மற்றும் மாலையில் செல்லமுடியிலிருந்து பெண்ணாகரம் சென்று வரும் பள்ளி மாணவர்களுக்கு ஏற்றபடியும் இயக்கப்படுகிறது. எனவே, தடம் எண் 6 மற்றும் 9-ஐ புதுப்பட்டிக்கு காலநேரம் மாற்றி இயக்கினால் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் பள்ளி மாணவ மாணவியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, பெண்ணாகரத்திலிருந்து புதுப்பட்டிக்கு வரும் பேருந்துகளின் காலநேரத்தை மாற்றியமைக்க இயலாத நிலை உள்ளது. புதிய பேருந்து தற்போது இயக்க இயலாது.

**68—**

## பேருந்துகளில் இலவச பஸ் பாஸ்

**வினா எண் 30419—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை, எளிய கிராமப்புற மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பட்டப் படிப்பு வரை மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பள்ளிக் கல்வி, தொடக்கப் பள்ளி இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் இலவச பயணம் செய்ய 1990ஆம் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்டனர். அரசு இந்தச் சலுகையை +2 (12ஆம்) வகுப்பு வரை படிக்கும மாணவர்களுக்கும்

1996-97 முதல் நீட்டித்துள்ளது. கல்லூரிக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்லூரி இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சட்டக் கல்வி இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு பயணம் செய்ய 50% மாதாந்திரச் சலுகை ஏற்கெனவே அளிக்கப்படுகிறது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிதி பாலிடெக்னிக் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் மேற்படி 50% சலுகை வழங்கப்படுகிறது. வினாவில் கோரியபடி இலவசப் பயணம் செய்ய அனுமதிக்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

69—

## வாகன ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 30429—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை

70—

## விளம்பர போர்டுகள்

**வினா எண் 18899—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் நெடுஞ்சாலைகளில் விளம்பர போர்டுகள் (Hoarding) வைப்பதற்காக மரங்கள் வெட்டப்படுவதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில் இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை —

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையின் சாலை ஓரங்களில் விளம்பர போர்டுகள் வைப்பதற்காக மரங்கள் ஏதும் வெட்டப்படவில்லை. அவ்வாறு மரங்கள் வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுவதுமில்லை.

71—

## ஓவிய நுண்கலைக் குழு

**வினா எண் 10334—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓவிய நுண்கலைக் குழுவின் பணிகளில் கடந்த காலத்தில் தேக்கம் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தேக்கத்தை நீக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டு வரை அரசிடமிருந்து பெற்று வந்த தொடர்ந்திர மானியத் தொகை ரூ.5 இலட்சத்தை மட்டுமே பயன்படுத்தி நிர்வாகம் மற்றும் திட்டப் பணிகள் தொடர்பான செலவுகளை மேற்கொள்ளப்பட வேண்டி இருந்ததால் நிதிப் பற்றாக்குறை காரணமாக அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்த முடியாமல் தேக்கநிலை ஏற்பட்டது.

(ஆ) தற்சமயம் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைக்கெனத் தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு ஓவிய நுண்கலைக் குழுவிற்குப் புதிய பொதுக் குழு அமைக்கப்பட்டு 1997-98 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்காக மட்டும் ரூ.10 இலட்சமும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.15

இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு குழுவின் திட்டப் பணிகள் செம்மையாக நடைபெற்று வருகின்றன. தற்போது ஓவிய நுண்கலைக் குழுவின் பணிகளில் தேக்க நிலை ஏதுமில்லை.

72—

## சவகர் சிறுவர் மன்றம் தொடங்குதல்

**வினா எண் 29830—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், புவனகிரியில் சவகர் சிறுவர் மன்றம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், புவனகிரியில் சவகர் சிறுவர் மன்றம் தொடங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

73—

## சவகர் சிறுவர் மன்றங்கள் தொடங்குதல்

**வினா எண் 29831—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு வட்டத்திலும் சவகர் சிறுவர் மன்றங்கள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

வட்டம் வாரியாகச் சவகர் சிறுவர் மன்றம் தொடங்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.



74—

## டீசல் வழங்குதல்

**வினா எண் 20698—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளுக்கு டீசல் தட்டுப்பாடான நேரங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக டீசல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:-**

கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் போதிய உள்ளமைப்பு வசதிகள் மற்றும் நிதி வசதிகள் இல்லாததாலும், இந்தியன் ஆயில் கம்பெனி நிர்ணயித்துள்ள நிபந்தனைகள் நிறைவடையாததாலும், தமிழக விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் டீசல் வழங்க வழிவகை இல்லை.

75—

## நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 20704—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், நாச்சியப்பா கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம், நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கு 1994-95 முதல் 1999-2000 வரை மாணவர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிட்டுள்ள வண்ணம் உயர்த்தப்பட்டுள்ளது:

| வ. எண் | ஆண்டு | | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1994-95 | - | 894 |
| 2 | 1995-96 | - | 899 |
| 3 | 1996-97 | - | 900 |
| 4 | 1997-98 | - | 1200 |
| 5 | 1998-99 | - | 1337 |
| 6 | 1999-2000 | - | 1500 |

76—

## கூடுதல் மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 22868—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் வனப் பகுதிக்கு மிக அருகாமையில் உள்ள பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கி வன வளத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகத்திற்கென மைய அரசால் வழங்கப்படும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மாநிலத்தில் செயல்பாட்டில் உள்ள மண்ணெண்ணெய் வழங்கல் அளவின்படி வழங்குவதற்கே போதுமானதாக இல்லை என்பதால் வனப் பகுதிக்கு அருகாமையில் உள்ள கிராம மக்களுக்குக் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்குவதற்கு வழிவகை இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



77—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பித்தல்

**வினா எண் 23064—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை தாலுகாவில் உள்ள உரிகம் அல்லது கோட்டையூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் உள்ள உரிகம் அல்லது கோட்டையூர் கிராமங்கள் அஞ்செட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் உள்ளது. இப்பகுதிகளில் உள்ள மக்கள்தொகை 8,500 மட்டுமே என்றாலும் இங்கு பெரும்பாலான பகுதி மலைப் பிரதேசமாக இருப்பதால் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு மிகக் குறைவாகும். எனவே தேன்கனிக்கோட்டை தாலுகாவில் உள்ள உரிகம் அல்லது கோட்டையூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

## பகுதி நேர அங்காடி

**வினா எண் 23545—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்திரான்பட் ஊராட்சியைச் சார்ந்த கட்டுவான்பிறை கிராமத்தில் பகுதி நேர அங்காடி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கட்டுவான்பிறை கிராமம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளபோதிலும் அண்டைய மாவட்டமான தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ளது. எனவே, கட்டுவான்பிறை கிராமத்தோடு அண்டைய வேறு பகுதிகளைச் சேர்க்க வாய்ப்பு இல்லாததாலும், 86 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்ட கட்டுவான்பிறை கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க தற்போதுள்ள விதிகளின்படி வாய்ப்பில்லை.

79—

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 24012—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்கானூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருக்கானூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டக் கோரும் கருத்துரு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.

80—

**மகளிருக்குச் சிறு வணிகக் கடன்**

**வினா எண் 25757—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

(அ) 1998-99 மார்ச் முடிய சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் பெண்களுக்கு இட்லிக் கடை, பெட்டிக் கடை மற்றும் தொழில் தொடங்க எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 1998-99 மார்ச் முடிய கட்டுறவு நகர வங்கிகள் மூலம் 492 மகளிருக்கு இட்லிக்கடை, பெட்டிக் கடை மற்றும் தொழில் தொடங்க சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.3,22,500/- வழங்கப்பட்டுள்ளது.

81—

**வீடு கட்ட கடன் வழங்குதல்**

**வினா எண் 26250—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் பொது மக்களுக்கு வீடு கட்டும் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பத்தில் கடலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றும் மற்றும் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இரு வங்கிகளிலும் வீடு கட்ட கடன் வழங்கப்படுவதில்லை. ஆனால், கடலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைமையகத்தின் மூலம் மட்டுமே அம்மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு புது வீடு கட்ட ரூ.6 இலட்சமும் ஏற்கெனவே உள்ள வீட்டைப் புதுப்பிக்க/பழுதுப் பார்க்க ரூ.50,000/- வரையிலும் கடன் வழங்கப்படுகிறது.

82— [2000 மார்ச் 3

**நியாய விலை அரிசி**

**வினா எண் 26907—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) 1998ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து கேரளாவுக்குக் கடத்தப்பட்ட நியாய விலை அரிசி எவ்வளவு டன்கள் வருவாய்த் துறை மற்றும் வட்ட வழங்கல் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

(இ) இது சம்பந்தமாக எத்தனை வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கைப்பற்றப்பட்ட பொது விநியோகத் திட்ட அரிசியின் அளவு 2607.50 குவிண்டால்.

(ஆ) அவற்றின் மதிப்பு ரூ.25,91,847.

(இ) கைப்பற்றப்பட்ட வாகனங்கள்:

| லாரி | ஆட்டோ | ஜீப் |
|---|---|---|
| 30 | 1 | 1 |

83—

**நியாயவிலைக் கடைகளை மகளிரே நடத்துதல்**

**வினா எண் 26908—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சில மாவட்டங்களில் மகளிரே நியாயவிலைக் கடைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதைப்போல, சேலம் மாவட்டத்திலும் நியாயவிலைக் கடைகளை மகளிரே நடத்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 7 மகளிர் நியாயவிலைக் கடைகள் 16-8-1995 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக புதிய மகளிர் நியாயவிலைக் கடைகள் தொடங்க இம்மாவட்டத்தில் உள்ள மகளிர் அமைப்புகளை கேட்டதில் எந்த ஒரு அமைப்பும் கடையினை ஏற்று நடத்த முன்வரவில்லை. இருப்பினும் இம்மாவட்டத்தில் இயங்கி வரும் பகுதிநேர நியாயவிலைக் கடைகளை படிப்படியாக மகளிர் குழுக்கள் அமைப்புகளுக்கு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

84—

**புதிய நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா எண் 31263—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், மோர்பட்டி ஊராட்சியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், மோர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த குடும்ப அட்டைகள் கோப்பம்பட்டி நியாயவிலைக் கடையுடன் இணைக்கப் பட்டுள்ளன. கோப்பம்பட்டி நியாயவிலைக் கடையில் மொத்தம் 540 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் மோர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 222 குடும்ப அட்டைகளும் அடங்கும். மோர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மோர்ப்பட்டி, நாடுகண்டனூர் மற்றும்

தெப்பக்குளத்துப்பட்டி ஆகிய மூன்று கிராமங்களின் 365 குடும்ப அட்டைகளைத் தனியே பிரித்து விட்டால் தாய்க்கடையான கோப்பம்பட்டி நியாயவிலைக் கடையில் 175 குடும்ப அட்டைகளே மீதம் இருக்கும். மேலும் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை தனித்தியங்கவல்லதாக இருக்க வேண்டுமெனில், அக்கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளாவது இருக்கவேண்டும். மேலும், தற்போது நியாயவிலைக் கடை அமைந்துள்ள கோப்பம்பட்டிக்கும், மோர்ப்பட்டிக்கும் இடையே 2 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. எனவே, மொத்தம் 540 குடும்ப அட்டைகளே உள்ள கோப்பம்பட்டி நியாயவிலைக் கடையைப் பிரித்து, மோர்ப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**85—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 31344—சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார் கோட்டை ஊராட்சியிலுள்ள ஊராளிப்பட்டிக்கு நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், வேல்வார்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த ஊராளிப்பட்டி கிராமத்தில் 104 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், ஊராளிப்பட்டிக்கும் தற்போது கடை அமைந்திருக்கும் வெள்ள பொம்மன்பட்டிக்கும் இடையே ஒன்றரை கிலோமீட்டர் தூரமே உள்ளதாலும், ஊராளிப்பட்டியில் ஒரு முழு நேர மற்றும் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியகூறுகள் இல்லை.



**86—**

### புதிய ரேஷன் கடை அமைத்தல்

**வினா எண் 31857—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், சுக்காம்பட்டி ஊராட்சி, எஸ். புதுப்பட்டிக்கு புதிய ரேஷன் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம் மற்றும் தொகுதி, எஸ். புதுப்பட்டி கிராமத்தின் குடும்ப அட்டைகள் வளவிசெட்டிப்பட்டி கிராம நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 1,354 குடும்ப அட்டைகள் கொண்டுள்ள வளவிசெட்டிப்பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து 521 குடும்ப அட்டைகளைத் தனியே பிரித்து செக்கனத்துப்பட்டியில் ஒரு புதிய நியாயவிலைக் கடை அமைக்க மாவட்ட ஆட்சியரால் ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. எஸ். புதுப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மொத்தம் 379 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், அக்குடும்ப அட்டைகளை இணைத்துள்ள வளவி செட்டிப்பட்டி நியாயவிலைக் கடைக்கும் எஸ். புதுப்பட்டிக்கும் இடையே ஒன்றரை கிலோமீட்டர் தூரமே இருப்பதாலும் எஸ். புதுப்பட்டி கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சத்தியக்கூறுகள் இல்லை.

**87—**

### புதிய நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 31879—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, சித்தூர் ஊராட்சிக்குட்பட்ட அம்மாபட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, சித்தூர் ஊராட்சிக்குட்பட்ட அம்மாபட்டி கிராமத்தில் 467 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே, அக்கிராமத்தில் மேலும் ஒரு நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**88—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா எண் 30240—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட சண்முகபுரத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட சண்முகபுரத்தில் 102 குடும்ப அட்டைகளே உள்ளதால் அக்கிராமத்தில் நியாயவிலைக் கிளைக் கடை அமைக்க சாத்தியமில்லை.



**89—**

### புதிய ரேஷன் கார்டுகள் வழங்குதல்

**வினா எண் 30290—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் புதிய ரேஷன் கார்டுகள் முற்றாக வழங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) பெறப்பட்ட மொத்த மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 31-5-1999 முடிய 1,64,827 குடும்ப அட்டைகள் அச்சிட்டு 1,54,083 அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 10,744 குடும்ப அட்டைகள் உரிய கோரிக்கை வரப்பெறாமல் வழங்கப்படாமல் உள்ளன. மேலும் 1-6-1999 முதல் 31-8-1999 வரை 13,873 புதிய விண்ணப்பங்கள் வரப்பெற்றதில் விசாரணை மூலம் 7,769 விண்ணப்பங்கள் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**90—**

### கணிப்பொறி மையங்கள் தொடங்கும் திட்டம்

**வினா எண் 13738—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் கணிப்பொறி மையங்களைத் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய தகவல் தொகுப்பு மையம் (National informatic Centre) சென்னை உயர் நீதிமன்றத்தில் கணிப்பொறி வசதியினை அளித்து, தற்போது அங்கு 62 முனையங்களுடனும் கணிப்பொறிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த மையம் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் உட்பட 23 மாவட்ட நீதிமன்றங்களுக்கும் கணினி பொறிகளை அளித்துள்ளது. இவற்றில் திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், கடலூர், தருமபுரி, சேலம் தஞ்சாவூர் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் கணினி வசதி தொடங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்ட நீதிமன்றங்களில் பொதுப் பணித் துறை தேவையான சிறப்புப் பணிகளை மேற்கொண்டதும் கணினி வசதி செயல்படத் தொடங்கும். இது தவிர சென்னை உயர் நீதிமன்றத்தில் ரூ.1.09 கோடி செலவிலும் சார்பு நீதிமன்றங்களிலும் ரூ.42.30 கோடி செலவிலும் மேலும் கணினி மயமாக்கும் திட்டத்தை பதினொன்றாவது நிதிக்குழுவின் முன் பரிசீலனைக்கு வைப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளர் செயற்குறிப்பு அனுப்பி உள்ளார். இவற்றில் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரூ.1.09 கோடி செலவில் கணினி மயமாக்கும் செயற்குறிப்பினை உடனடியாக அனுமதிக்க வேண்டி அவர் அரசைக் கேட்டுக்கொண்டார். அரசு அதனை ஏற்றுக்கொண்டு, அரசு ஆணை (டி) எண் 923, உள் (நீதி மன்றங்கள் 4) துறை, நாள் 27-10-1999-ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் முழுமையாக கணினி மயம் ஆக்குவதற்கு ரூ.1.09 கோடி செலவிற்கு அரசு நிர்வாக ஒப்புதல் பிறப்பித்து உள்ளது. மேலும் அதே அரசு ஆணையில் இது குறித்து ஒப்பந்தப்புள்ளி பெற்று மென்பொருள் நிபுணரை (Software Consultant) தேர்வு செய்யவும், கணிப்பொறி சம்பந்தமான உலோகப் பொருள்களை வாங்கவும் நடவடிக்கை எடுத்து அதன் பின்னர் இதற்காக ஆகும் செலவினை அனுமதிக்கத் தேவையான செயற்குறிப்பினை அனுப்புமாறு பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். 22-11-1999 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் கணினி மையம் (Computer Cell) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.





91—

## கழிப்பறை வசதி செய்தல்

**வினா எண் 31915—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியிலுள்ள கிளைச் சிறைச்சாலைக்கு கழிப்பறை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

போதுமான கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

92—

## கைதிகளின் குறை தீர்த்தல்

**வினா எண் 32948—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 செப்டம்பர் மாதம் வரை தமிழகத்தில் உள்ள சிறைச் சாலைகளில் கைதிகள் உண்ணாவிரதம் எத்தனை பேர் மேற்கொண்டனர்?

(ஆ) ஆம் எனில், அந்த கைதிகளின் குறை தீர்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 செப்டம்பர் மாதம் வரை தமிழகத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் பல்வேறு நாட்களில் மொத்தம் 2,896 சிறைவாசிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

(ஆ) உண்ணாவிரதம் இருந்த சிறைவாசிகளிடம் சிறை நடைமுறை விதிகளின்படி சிறையில் உண்ணாவிரதம் இருப்பது தவறு என எடுத்துக் கூறியும், அவர்களது கோரிக்கை அரசு விதிகட்கு மாறான நேர்வுகளாக இருப்பதைச் சுட்டிக் காட்டி, சிறைவாசிகளால் சிறை அலுவலர்களின்

விளக்கம் ஏற்கப்பட்டு அவர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது. மேலும் பொதுவாக சிறைவாசிகளின் நியாயமற்ற மற்றும் அரசு விதிகட்கு மாறான கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணா விரதம் மேற்கொள்வதால் அவர்களது நியாயமற்ற கோரிக்கைகள் ஏற்கப்படுவதில்லை.

93—

**கோ-ஆப்டெக்ஸ் கடைகள்**

**வினா எண் 25600—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடைகள் நட்டத்தில் இயங்கியதால், எத்தனை கோ-ஆப்டெக்ஸ் கடைகள் மூடப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளைத் திறக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள எட்டு (8) கோ-ஆப்டெக்ஸ் கடைகள் நட்டத்தில் இயங்கியதால் மூடப்பட்டுள்ளன:—

1. அந்தியூர்.
2. நடராஜா, சிதம்பரம்
3. மாயாவரம், பி.எம்.எஸ்.
4. குறிஞ்சி, சென்னை
5. வில்லிவாக்கம்
6. கோடம்பாக்கம்
7. ஓமலூர்
8. திருச்சி, பாலக்கரை

(ஆ) மேற்கண்ட கடைகளில், தொடர்ந்து விற்பனையைப் பெருக்க முடியாத சூழ்நிலையிலும், நட்டத்தில் இயங்கியதையும் கருத்தில்கொண்டு கடைகள் மூடப்பட்டன. குறிப்பிட்ட இடங்களிலுள்ள வேறு பகுதிகளில் விற்பனையினைப் பெருக்கவும், இலாபம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டும், தகுந்த இடங்களில் மீண்டும் கடைகள் திறக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.



94—

**உரிமைச் சான்று**

**வினா எண் 17295—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதித் துறை மூலம் வீடுகள் பெற்று அரசு நிர்ணயித்த பணம் செலுத்தியபிறகும் உரிமைச் சான்று அளிக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் ஒதுக்கீடு பெற்றவர்கள் அதற்கான முழுத் தொகையும் கட்டினால்கூட உரிமைச் சான்று பெறுவதற்கு 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை முன்பு விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த நிபந்தனை நீக்கப்பட்டு, வீட்டிற்கான முழுத் தொகையும் கட்டிய உடன் கால தாமதமின்றி கிரயப் பத்திரம் வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

95—

**ஆவணங்களின் எண்ணிக்கை**

**வினா எண் 28584—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) தமிழகத்தில் 1998-99 ஆம் ஆண்டில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ள ஆவணங்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு வருவாய் வர வேண்டியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1999 தேதியில் சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள ஆவணங்களின் எண்ணிக்கை 26,197.

(ஆ) இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் சுமாராக ரூ.3.5 கோடி ஆகும்.

**96—**

### பட்டா மாற்றம்

**வினா எண் 31138— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்தவுடன் அங்கேயே பட்டா மாற்றம் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பட்டா மாறுதல் மனுக்கள் ஆவணப் பதிவின்போது அதற்கான உரிய கட்டணத்துடன் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த பட்டா மனுக்கள் உரிய பதிவு விவரங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஒவ்வொரு வாரமும் அனுப்பப்படுகின்றன. இதன் மீது வட்டாட்சியர்கள் பெயர் மாற்றம் செய்கின்றனர். நில உடைமைப் பதிவேடுகள் வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்படுவதால் பட்டா மாற்றம் பதிவுத் துறை செய்திட இயலாது.

(ஆ) எழவில்லை.



**97—**

### சொத்துக்களின் மதிப்பு

**வினா எண் 31204—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சில இடங்களில் பதிவு செய்யப்படும் சொத்துக்களின் சந்தை விலையை விட வழிகாட்டி மதிப்பு அதிகமாக இருப்பதால் அதைச் சீராக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில் உள்ள வழிகாட்டி மதிப்புக் குழு வழிகாட்டிப் பதிவேடுகளில் உள்ள சொத்துக்கள், மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் முறையீடுகளின் அடிப்படையில் கள ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளைக் களைகிறது. மேலும் நீதியரசர் திரு. ஜி. ராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு உயர் மட்டக் குழுவினர் பரிந்துரை அடிப்படையில் வழிகாட்டி மதிப்பினை சரியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் நிர்ணயித்திட மதிப்பு நிர்ணய நடவடிக்கையில் வழி காட்டி மதிப்பு பிரிவில் ஆலோசனை வழங்க வருவாய்த் துறை அலுவலர் ஒருவரை உறுப்பினராக அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சந்தை விலையை விட வழிகாட்டி மதிப்பு அதிகமாக உள்ள நிகழ்வுகளில், வழிகாட்டிக் குழுவின் மூலம் சீராக்கப்பட்டு வருகிறது.

**98—**

### பத்திரப் பதிவு

**வினா எண் 31541—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) பத்திரப் பதிவு அலுவலகங்களில் குறைவான மதிப்பீடு செய்யும் (Under Valuation) முறையைப் பயன்படுத்தி பத்திரப் பதிவு நடப்பதால் அரசுக்கு வருமானக் குறைவு ஏற்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பதிவுக்கு வரும் ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களின் மதிப்பு, வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டில் உள்ள மதிப்புகளை சரி பார்த்து, அந்த ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைவான மதிப்பீட்டில் ஆவணங்கள் எழுதப்பட்டிருந்து பதிவுக்கு வந்தால், அந்த ஆவணங்களை பதிவுக்கு ஏற்று, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)(1)-ன் கீழ் உண்மையான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக அவற்றை முத்திரை தனித் துணை ஆட்சியர்களிடம் அனுப்பப்படுகின்றன. அவ்வாறு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது.

(ஆ) இந்த நடைமுறையினால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

99—

**உடல் ஊனமுற்றோர் பணி நிரந்தரம்**

**வினா எண் 21426—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாற்காலி பின்னும் பணியிலுள்ள உடல் ஊனமுற்றோர்களை பணி நிரந்தரம் செய்து விகித அடிப்படையில் ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) நாற்காலி wire பின்னும் பார்வையற்றவர்களுக்கு முதலில் நிர்ணயிக்கப்பட்ட தொகுப்பூதியம், அரசாணை எண் (பல்வகை) 398,



2000 மார்ச் 3]

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 26-09-1992-ன்படி ரூ.800 மதிப்பூதியம் அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் அரசாணை (நிலை) எண் 255, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28-10-1996-ன்படி ரூ. 800-லிருந்து ரூ.1200 ஆக உயர்த்தப்பட்டது. அரசாணை நிலை எண்102 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 27-05-1999-ன்படி மாதத் தொகுப்பூதியம் ரூ.1940-லிருந்து ரூ.2040 ஆக உயர்த்தப்பட்டது. அரசாணை எண்132 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 02-07-1999-ல் இவர்களின் தொகுப்பூதியம் ரூ.2500 ஆக உயர்த்தப்பட்டது. எனவே நாற்காலி பின்னும் பணியிலுள்ள உடல் ஊனமுற்றோர்களை பணி நிரந்தரம் செய்து விகித அடிப்படையில் ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

100—

**மூன்று சக்கர வண்டி மற்றும் உதவித்தொகை வழங்குதல்**

**வினா எண் 23503—திரு. கே.ரவி அருணன்** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டி மற்றும் உதவித் தொகைக்கு மனுச் செய்து காத்திருப்போர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு மூன்று சக்கர வண்டி மற்றும் உதவித் தொகை எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மூன்று சக்கர வண்டிக்கு மனுச் செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 232; உதவித் தொகைக்கு மனுச் செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை 300.

[2000 மார்ச் 3

(ஆ) நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் படிப்படியாக காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு மூன்று சக்கர வண்டி மற்றும் உதவித் தொகை வழங்கப்படும்.

## மூன்றாம் பட்டியல்

1—

### நோட்டுப் புத்தகங்களுக்கு வரி விலக்கு

**வினா எண் 22581—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழகத்தில் படிக்கும் மாணவர்கள் உபயோகப்படுத்தும் நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள வரி செலுத்தும் வணிகர்களிடமிருந்து பேப்பர்களை கொள்முதல் செய்து மாணவர்கள் உபயோகப்படுத்தும் நோட்டுப் புத்தங்களை தயாரித்து விற்பனை செய்யும்போது அவற்றிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ல் மூன்றாவது அட்டவணை பகுதி 'பி' வரிசை எண் 5ஏ-ன்படி 5-3-1997 முதல் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

2—

### கேளிக்கை வரியினைக் குறைத்தல்

**வினா எண் 22586—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கேபிள் தொலைக்காட்சியின் மீது விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினை குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கேபிள் தொலைக்காட்சிக்கு 1-6-1997-க்கு முன்னர் 20 சதவிகித கேளிக்கை வரி விதிப்பு இருந்தது. 1-6-1997-லிருந்து ஓர் இணைப்பிற்கு மாதம் ஒன்றுக்கு பின்வரும் விகிதங்களில் வரி விதிக்கப்படுகிறது.

(1) மாநகராட்சி எல்லைக்கு உட்பட்டவை..ரூ 20 ஓர் இணைப்பிற்கு

(2) நகராட்சி எல்லைக்கு உட்பட்டவை ..ரூ.15 ஓர் இணைப்பிற்கு

(3) நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் கிராம பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டவை..ரூ.10 ஓர் இணைப்பிற்கு

தற்போது குறைந்த அளவிலேயே கேபிள் டி.வி. மீது வரி விதிக்கப்படுவதால் அதன் மீதான வரியினைக் குறைக்கும் எண்ணம் அரசிற்கு இல்லை.

3—

### வரி குறைப்பு செய்தல்

**வினா எண் 23878—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரிச் சலுகையை எதிர்நோக்கி பாண்டிச்சேரி போன்ற அண்டை மாநிலத்திற்கு வாகனப் பதிவிற்கு செல்வதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் வரி இழப்பைத் தவிர்க்க, அதற்கான வரி குறைப்பு செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர் :**

வரிச் சலுகையை எதிர்நோக்கி பாண்டிச்சேரி போன்ற அண்டை மாநிலத்திற்கு வாகனப் பதிவிற்குச் செல்வதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் வரி இழப்பை தவிர்க்கும் பொருட்டே மோட்டார் வாகனங்களின் வரிச் சட்டம் 20-2-1990 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, வெளி மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்படும்

மோட்டார் வாகனங்களுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கு இணையான நுழைவு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அதனால் வருவாய் இழப்பு என்பது தவிர்க்கப்படுகிறது. எனவே, வருவாய் இழப்பைத் தவிர்க்க வரிக் குறைப்பு செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு இடமில்லை.

4—

### மாணவ மாணவியர்களுக்கு படிப்புக் கட்டணம்

**வினா எண் 16934—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிலும் தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவ, மாணவியரிடமிருந்து படிப்புக் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1200 என்று வசூல் செய்யப்பட்ட தொகை மேற்படி மாணவ, மாணவியருக்கு அரசு மானியத்திலிருந்து திரும்ப வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 722, சமூக நலத் துறை, நாள் 13-10-1977-ல் Post metric கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கும் வருமான வரம்பின்றி கல்விக் கட்டணச் சலுகை அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட பழங்குடியின/கிருத்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையில் வழங்கப்பட்ட கல்விக் கட்டணச் சலுகை சுயநிதி நிறுவனங்களுக்கு (Self Financed Educational Institutions) நீட்டிக்கப்படவில்லை. எனவே, திருநெல்வேலி மாவட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடி மாணவ, மாணவியரிடமிருந்து படிப்புக் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.1200 வசூல் செய்யப்பட்ட தொகை அரசு மானியத்திலிருந்து திரும்ப மேற்படி மாணவ, மாணவியருக்கு வழங்க இயலாது.



5—

### கிளை நூலகமாக்குதல்

**வினா எண் 24902—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, ராதாநரசிம்மபுரம் கிராமத்தில் இயங்கும் பகுதிநேர நூலகத்தை தரம் உயர்த்தி கிளை நூலகமாக இயக்கிட அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி ராதாநரசிம்மபுரம் கிராமத்தில் இயங்கும் பகுதிநேர நூலகத்தினை கிளை நூலகமாக தரம் உயர்த்தித் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இக்கிளை நூலகம் 1-9-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

6—

### கிளை நூல்நிலையம் அமைத்தல்

**வினா எண் 24971 —திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சியில் ஒரு கிளை நூல்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சியின் மக்கள் தொகை 6,745 ஆகும். 1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டம் 45(பி)-ன்படி 5000 மக்கட் தொகைக்குமேல் உள்ள இடங்களில் ஒரு நூலகம் திறக்க வழிவகை உள்ளது எனினும் அரசு நிதி நிலை காரணமாக இவ்வாறு 5000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள

இடங்களில் எல்லாம் நூலகம் திறக்க இயலாத நிலை உள்ளது. எனினும் எடப்பாடி தொகுதி வெள்ளரிவெள்ளி ஊராட்சியில் கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் பொது மக்கள் நிறைவேற்றித் தரும் பட்சத்தில் முதற்கட்டமாக ஒரு பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யலாம்.

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. ரூ.1000 தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்படி வெள்ளரிவெள்ளி ஊராட்சியில் மேற்படி நிபந்தனைகளை ஊர் மக்கள் நிறைவு செய்து தந்தால் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யுமாறு மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

பின்னர் இப்பகுதி நேர நூலகத்தினை ஊர்ப்புற நூலகமாகவோ அல்லது கிளை நூலகமாகவோ தரம் உயர்த்த ஆவன செய்யலாம்.

7—

### ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

**வினா எண் 26681—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் (இடைநிலை ஆசிரியர்) எத்தனை உள்ளன?

(ஆ) ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் எத்தனை மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள்?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

(அ) தமிழகத்தில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 44 உள்ளன.

(ஆ) ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் முதலாண்டில் 40 மாணவர்களும் இரண்டாமாண்டில் 40 மாணவர்களும் பயின்று வருகிறார்கள்.

8—

### உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண்—29778—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சித்தூர், உயர்நிலைப் பள்ளிக்கு உரிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

சேலம் எடப்பாடி தொகுதி, சித்தூர், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு உரிய கட்டடம் கட்டுவதற்கு இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

9—

### பகுதி நேர நூலகம் அமைத்தல்

**வினா எண் 30150—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, கெண்டயன் அள்ளி ஊராட்சி, வெள்ளமண்காடு என்ற கிராமத்திற்கு பகுதி நேர நூலகம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 மார்ச் 3

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி 5000-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் கிளை நூலகமும், 1000-க்கு அதிகமான மக்கட் தொகை கொண்ட ஊர்களில் பகுதி நேர நூலகங்களும் ஏற்படுத்தலாம். ஆனால் தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன் அள்ளி ஊராட்சி வெள்ளமண்காடு கிராமத்தின் மக்கள் தொகை 300 ஆகும். எனவே இந்த கிராமத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க சாத்தியக்கூறு தற்பொழுது இல்லை.

10—

**நூலகத்திற்கு கட்டடம்**

**வினா எண் 30175—திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுகத்திலுள்ள நூலகத்திற்கு கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுத்திடுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கடலூர் துறைமுகத்தில் 2 கிளை நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை கடலூர் முதுநகர் (வடக்கு) மற்றும் கடலூர் முதுநகர் (தெற்கு) ஆகியவையாகும். இந்நூலகங்களில் கடலூர் முதுநகர் (தெற்கு) இலவச கட்டடத்திலும், கடலூர் முதுநகர் (வடக்கு) வாடகை கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. இந்நூலகங்களுக்கு காலிமனை பெறப்படவில்லை. காலிமனை பெறப்பட்டதும் இந்நூலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11—

**நூலகத்திற்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 31479—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரில் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் பொது நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூரில் கிளை நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை ஏதும் பெறப்படவில்லை. இக்கிளை நூலகத்திற்கு காலிமனை வழங்கக் கோரி, குன்னூர் வட்டாட்சியருக்கு மாவட்ட நூலக அலுவலரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலிமனை ஏதும் பெறப்படவில்லை. காலிமனை பெறப்படுமாயின், அதில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

**பாலிடெக்னிக் அமைத்துத் தருதல்**

**வினா எண் 31695—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்கு பாலிடெக்னிக் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

13—

**பாலிடெக்னிக் ஏற்படுத்துதல்**

**வினா எண் 31702—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை பகுதியை மையமாக வைத்து பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு இருக்கும் மாணவிகள் நலன் கருதி பாலிடெக்னிக் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

14—

### ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்துதல்

**வினா எண் 31841—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்துவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

15—

### சமையலர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 18756—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலி பணியிடமாக உள்ள சமையலர் பணியிடத்தை உடனே நிரப்ப அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

11-12-1991-ல் பெண்ணாகரம் அரசு மருத்துவமனைக்கு பணியிடப்பெயர்ச்சி மூலம் நிரப்பிட சமையலர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டது. அரசாணை எண் 1364, சுகாதாரம், நாள் 21-12-1992-ன்படி 6:1 எனும் விகிதாச்சாரம் நடைமுறையில் உள்ளதாலும் மாவட்டத்தில் உபரிப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் இந்த காலிப் பணியிடம் நிரப்ப தற்போது சாத்தியமில்லை.

16—

### சித்த மருத்துவர்கள் விவரம்

**வினா எண் 28535—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் சித்த மருத்துவர்கள் எத்தனை பேர் என்பதை அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி தொகுதியில் சித்த மருத்துவர் எத்தனை பேர் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள எட்டு (8) அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும், ஒரு சித்த உதவி மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவைகளில் அனைத்திலும் உதவி மருத்துவ அலுவலர்கள் பணி புரிகின்றனர். சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் எட்டு அரசு சித்த மருத்துவமனைகளின் இடங்கள் பின்வருமாறு:

1. அரசு மருத்துவமனை, ஆத்தூர்.
2. அரசு மருத்துவமனை, மேட்டூர் அணை.

3. அரசு மருத்துவமனை, ஏற்காடு.

4. அரசு மருத்துவமனை, சங்ககிரி.

5. அரசு மருத்துவமனை, ஓமலூர்.

6. அரசு மருத்துவமனை, எடப்பாடி.

7. அரசு மருத்துவமனை, ஜலகண்டபுரம்.

8. அரசு மருத்துவமனை, கெங்கவல்லி.

(ஆ) எடப்பாடி தொகுதியில் உள்ள மூன்று அரசு மருத்துவமனைகளில் மூன்று சித்த உதவி மருத்துவர்கள் பணிபுரிகின்றனர்.

17—

**I.T.I. படித்தவர்களைப் பணியில் அமர்த்துதல்**

**வினா எண் 28917—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) I.T.I. பயின்று மின் வாரியத்தில் தொழில் பயின்ற 5000 பேரை 25-11-1998 அன்று மீண்டும் பணியில் அமர்த்துவதாக கூறியிருந்ததால், அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த அரசின் நடவடிக்கை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) 3-10-1996 நாளிட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மின் வாரியத்தில் தொழில் பழகுநர் பயிற்சி பெற்றவர்கள் மற்ற விண்ணப்பதாரர்களுடன் நேர்முகப் பேட்டியில் கலந்து கொண்டு, எல்லாத் தகுதிகளும் சமமாக இருக்கும் பட்சத்தில் தொழில் பழகுநருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 4 அனல் மின் நிலையங்களில் பணி புரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தும் பணி முடிவடைந்தவுடன் மேலும் தேவை ஏற்பட்டால் தேவையின் அடிப்படையில் I.T.I. பயின்றவர்களைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.





18—

**விவசாய மின் இணைப்புத் திட்டம்**

**வினா எண் 31109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் கோட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றிய பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் நிலுவையிலுள்ள மனுக்களின் மீது இந்த நிதியாண்டில் மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டம், எடப்பாடி ஒன்றிய பகுதிகளில் விவசாய மின் இணைப்புக் கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை 2,143 ஆகும்.

(ஆ) நிலுவையில் உள்ள மனுக்களின் சாதாரண மற்றும் திருத்தப்பட்ட சுயநிதித் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு கோரியுள்ள மனுக்களில் 105 மனுதாரர்களுக்கு இந்த நிதி ஆண்டில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள மனுதாரர்களுக்கு அரசு குறியீட்டிற்கு ஏற்ப எதிர்வரும் காலங்களில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

**வீட்டு மனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 22005—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் , பூந்துறையில் வசித்துவரும் ஏழை நாடார் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறை கிராமத்தில் வசித்துவரும் நாடார் இன மக்களிடமிருந்து வீட்டு மனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் வரவில்லை.

**20—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 29147—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், நெருப்பொச்சல் கிராமம், எஸ்.எப்.நெ. 105, 193, 194, 195, 197, 198, 199, 200 எண்ணுள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம், நெருப்பொச்சல் கிராமம் க.ச. 105 "வண்டிப் பாதைப் புறம்போக்கு" புல எண் 193, 194, 195, 197, 198, 199 மற்றும் 200 நெடுஞ்சாலைப் புறம்போக்கு ஆகும். சுமார் 550 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி 550 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா இந்த நெடுஞ்சாலையில் வழங்க இயலாது. மேலும் இவர்களுக்கு தேவையான அளவு வேறு புறம்போக்கு நிலம் நெருப்பொச்சல் கிராமத்தில் இல்லை. வேறு இடத்தில் பட்டா வழங்க நடவடிக்கை மாவட்ட அளவில் உள்ளது.

**21—**

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 29673—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் 1996 முதல் 1999 வரை மூன்றாண்டுகளில் எந்தெந்த இடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?



(ஆ) அதன் மூலம் பயனடைந்தோர்களின் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியில் 1996 முதல் 1999 வரை மூன்றாண்டுகளில் கீழ்க்கண்ட 11 கிராமங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது:—

(1) சேந்திரகிள்ளை

(2) மஞ்சக்குழி சம்பந்தம் காலனி

(3) பெரியப்பட்டு

(4) நக்கரவந்தன்குடி

(5) கீழ்ச்சாவடி

(6) தில்லை விடாங்கன்

(7) வடக்குத் திட்டை

(8) பு. உடையூர்

(9) அரிய கோஷ்டி

(10) கோயிலாம்பூண்டி

(11) சித்தலப்பாடி

(ஆ) 755 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**22—**

**புறம்போக்கு நிலங்கள்**

**வினா எண் 31048—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் வட்டத்திலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்கள் எத்தனை ஏக்கர்?

விடை—                                                    [2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் வட்டத்தில், தெற்கு வட்டத்தில் 2179.27 ஏக்கர் மற்றும் வடக்கு வட்டத்தில் 833.11 ஏக்கருமாக மொத்தம் 3012.3 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் உள்ளன.

23—

**மின் விளக்குகள் அமைக்க மானியம்**

**வினா எண் 25652—திரு. இ. கணேசன்**—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பேரூராட்சிகளின் மின் விளக்கு பராமரிக்கவும் கட்டணம் கட்டவும் கடந்த 1997-98-ல் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அந்த ஆண்டில் எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1997-1998 ஆம் ஆண்டு மின் விளக்கு பராமரிக்க பேரூராட்சிகளுக்கு அரசு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. மின் விளக்குகள் புதிதாக அமைக்க மட்டுமே மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1997-1998 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் பேரூராட்சிகளுக்கு நிதிப் பங்கீட்டின் வாயிலாக ஒவ்வொரு காலாண்டும் பிரித்தளிக்கப்பட்ட தொகையிலிருந்து பிடித்தம் செய்து மின் கட்டணம் கட்ட வழங்கப்பட்ட தொகை ரூ.3,39,18,760.

(ஆ) இடங்கணசாலை பேரூராட்சிக்கு மின் கட்டணம் கட்ட வழங்கப்பட்ட தொகை ரூ.77,600.



2000 மார்ச் 3]

24—

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டுதல்**

**வினா எண் 30143—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாச்சூர் ஊராட்சி, கீழப்பட்டி கிராமத்திற்கு ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பாச்சூர் ஊராட்சி, கீழப்பட்டி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசை குடிநீர்த் திட்டம் செயலில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன. விரைவில் எல்லா பணிகளையும் முடித்து மக்களின் பயனுக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

**தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 29971—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் சமுதாய தரிசு நில மேம்பாட்டு திட்டப் பணிகளுக்காக நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதியில் சமுதாய தரிசு நில மேம்பாட்டு திட்டப் பணிகளுக்காக நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

26—

**புகையிலை பயிரிடுதல்**

**வினா எண் 30130—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பறங்கிப்பேட்டை மற்றும் புவனகிரி ஒன்றியங்களில் புகையிலை பயிரிடப்படும் மொத்த நிலப் பரப்பு எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் கிடைக்கும் புகையிலையின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பறங்கிப்பேட்டை மற்றும் புவனகிரி வட்டாரத்தில் புகையிலை சாகுபடி ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

27—

**நெல் உற்பத்தி**

**வினா எண் 30134—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் எத்தனை ஹெக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகிறது?

(ஆ) இதன் மூலம் எவ்வளவு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி ஒன்றியத்தில் 11,267 ஹெக்டேர் நிலத்தில் குறுவை, சம்பா, தாளடி பருவங்களில் கீழ்க்கண்டவாறு நெல் பயிரிடப்படுகிறது:—



| | ஹெக்டேர் |
|---|---|
| குறுவை | 1037 |
| சம்பா | 9193 |
| தாளடி | 1037 |
| மொத்தம் .. | 11,267 |

(ஆ) இதன் மூலம் 64,324.0 மெட்ரிக் டன் அளவில் கீழ்க்கண்டவாறு 1998-99 ஆம் ஆண்டு நெல் உற்பத்தி செய்யப்பட்டது:—

| | மெட்ரிக் டன் |
|---|---|
| குறுவை | 6,325.0 |
| சம்பா | 52,400.0 |
| தாளடி | 5,599.0 |
| மொத்தம் .. | 64,324.0 |

28—

**எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி**

**வினா எண் 32219—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி எத்தனை மில்லியன் டன்?

(ஆ) தமிழ்நாட்டில் மொத்த விவசாய நிலத்தில் எண்ணெய் வித்துக்களின் பயிரிடும் விகிதம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 1998-99 ஆம் ஆண்டில் 20.917 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

(ஆ) தமிழ்நாட்டில் மொத்த விவசாய நிலத்தில் எண்ணெய் வித்துக்களின் பயிரிடும் விகிதம் 20 சதவீதம் ஆகும்.

29—

[2000 மார்ச் 3

## மராமத்துப் பணிகள் செய்தல்

**வினா எண் 25490—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி குளத்தில் கடந்த 20 ஆண்டுகளாக கருவை மரம் ஏலம் விடாமலும் மராமத்துப் பணிகள் செய்யாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் வட்டத்தில் உள்ள கிழவனேரிகுளத்தில் சமூக வனத் துறையால் கீழ்க்காணும் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரித்து வரப்பட்டுள்ளன:

(1) 1970 கிழவனேரி கருவேல் தோட்டம் —20 எக்டேர்

(2) 1985 கிழவனேரி கருவேல் தோட்டம் —3.5 எக்டேர்

இத்தோட்டங்களில் முதிர்ச்சி காரணமாக 1970 கிழவனேரி கருவேல் தோட்டம் (20 எக்டேர்) 10-11-1980-ல் பொது ஏலத்தில் ரூ.41,600-க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர் இது மறு தளிர்வு தோட்டமாக பராமரிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் (1999-2000) பொது ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் ஏரி மற்றும் குளங்களில் ஏற்படுத்தப்பட்ட சமுதாயத் தோட்டங்கள் யாவும் கிராம சமூக வன ஊழியர் மற்றும் தோட்டக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் (மராமத்துப் பணிகள்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட தோட்டங்களில் கிழவனேரி வனத்தில் சமூக வனத் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட கருவேல் தோட்டமும் ஒன்றாகும். பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டதன் மூலமே இத்தோட்டத்தின் மர மகசூல் 341 டன் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



2000 மார்ச் 31]

30—

## இருப்புப் பாதைக்கு போடப்படும் மரங்கள்

**வினா எண் 26087—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய இருப்புப் பாதைக்கு போடப்படும் மரங்கள் நமது தமிழ்நாட்டில் எந்தக் காடுகளில் உள்ளன?

(ஆ) அவைகள் என்ன வகையான மரங்கள் என்பதை அரசு தெரிவிக்குமா?

(இ) அதற்கு காங்கிரீட் பலகைகள் தயாரிப்பதால் மரத் தேவைகள் குறைந்துள்ளதா என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இருப்புப் பாதைக்கு போடப்படும் மரங்கள் தமிழ்நாட்டில் பொள்ளாச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய கோட்டங்களில் உள்ள காடுகளில் உள்ளன.

(ஆ) நாங்கு, காட்டுப்பின்னை, வெள்ளை குந்திரிகள், வெள்ளகில் மலை வேம்பு (அ) சந்தன வேம்பு, பன்வாதின்ஜன் கருங்குங்கிலியம் போன்ற மரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

(இ) சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே இருப்புப் பாதைக்கு மரப் பலகைக்கு பதிலாக கான்கிரீட் பலகை உபயோகப்பட்டு வருவதால் இரயில்வே துறைக்கு மரங்கள் வழங்கப்படவில்லை.

31—

## மரங்களை ஏலம் விடுதல்

**வினா எண் 26369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையிலுள்ள மரங்களை ஏலம் விடுவதன் மூலம் 1998-1999-ல் அரசுக்கு வந்துள்ள வரவு எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வனத் துறையில் மரங்களை முறையாக வெட்டி மர மண்டிக்கு கொண்டு வந்து ஏலம் விடுவது 1979-லிருந்து நிறுத்தப்பட்டது. வனங்களில் மரங்கள் ஏதும் வெட்டப்படுவதில்லை. எனினும் வனத்திலுள் முதிர்ச்சியினால், காற்று, வெள்ளம் மற்றும் மழை போன்றவைகளினால் விழுந்த தடி மரங்களை விற்பனைக்கு மர மண்டிக்கு கொண்டு செல்லப்பட்டு ஏலம் விடப்படுகிறது. மேற்படி மரங்கள் அரசின் பிற துறைகளுக்கு தேவையானவற்றை வனப் பயன்பாட்டு அலுவலர் மூலம் அரசு நிர்ணயித்த விலைக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்டவாறு சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ள தடி மரங்களினால் கிடைக்கப்பெற்ற வருவாய் 1998-99-ல் ரூ.4.53 கோடி இவ்வாண்டு சந்தன மரம் மூலம் கிடைத்த வருவாய் ரூ.25.33 கோடி. 1999-2000 ஆம் ஆண்டில் அக்டோபர் 1999 முடிய 52.26 கோடி வருவாய் மரத்தின் அளவு 330.05 டன்.

32—

**மனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 29679—திரு. ஏ.வி.ஏ. நாசர்,** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் கோட்டத்திற்குட்பட்ட காடுவனப் பகுதியில் மக்கள் வசித்த மனைப் பட்டா கேட்டு அரசிற்கு விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் கோட்டத்திற்குட்பட்ட வனப் பகுதியில் மக்கள் வசித்த மனைப் பட்டா கேட்டு அரசிற்கு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. அரசு பதிவேடுகளில் 'காடு' என பதிவு செய்யப்பட்ட நிலங்களை உச்ச நீதிமன்ற ஆணை எண் டபிள்யூ.பி.202/95(சி), நாள் 12-12-1996-ன்படியும், வனப் பாதுகாப்பு சட்டம் 1980-ன்படியும் வனமற்ற பிற பணிக்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, வனப் பகுதிகளில் மனைப் பட்டா வழங்க இயலாது.

33—

**வனப் பகுதிகளில் மனைப் பட்டா**

**வினா எண் 29751—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பிச்சாவர வனப் பகுதிகளில் நீண்ட நாட்களாக வசிப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பிச்சாவர வனப் பகுதி வனச் சட்டம் பிரிவு 16-ன் கீழ் காப்புக் காடாக அறிக்கை செய்யப்பட்ட பகுதியாகும். அரசு பதிவேடுகளில் 'காடு' என அறிவிக்கப்பட்ட நிலங்களை உச்ச நீதிமன்ற ஆணை எண் டபிள்யூ.பி. 202/95(சி), நாள் 12-12-1996-ன் படியும் வனப் பாதுகாப்பு சட்டம் 1980-ன்படியும் வனமற்ற பிற பணிக்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, வனப் பகுதிகளில் மனைப் பட்டா வழங்க இயலாது.

34— [2000 மார்ச் 3

**விவசாயிகளுக்கு இழப்புத் தொகை**

**வினா எண் 30346 திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனப் பகுதிக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களில் காட்டு பன்றிகளால் ஏற்படும் சேதங்களுக்கு விவசாயிகளுக்கு இழப்புத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இழப்புத் தொகை கோருவதற்கான விதி முறைகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு நிவாரணமாக அதிகபட்சமாக ரூ.2,500 வரை வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) பாதிக்கப்பட்டவர் சம்பவம் நடைபெற்ற 2 தினங்களுக்குள் அருகிலுள்ள வனத் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

(2) சம்பவம் நிகழ்ந்த 3 தினங்களுக்குள் சரகருக்கும் குறையாத நிலையிலுள்ள அதிகாரியால் களத் தணிக்கை செய்யப்படல் வேண்டும்.

(3) பயிர் சேதம் ஏற்படின், பாதிக்கப்பட்டவர் கொடுக்கும் மதிப்பீட்டில் வனவருக்கும் குறையாத நிலையிலுள்ள அதிகாரியால் மேலொப்பம் இடப்படுவதுடன் வட்ட வருவாய் ஆய்வாளருக்கும் குறையாத நிலையிலுள்ள வருவாய் அலுவலர்களால் மேலொப்பம் பெறப்பட வேண்டும்.

(4) பயிர் சேதத்திற்கு நிவாரணம் கோரும்போது நிலத்தின் உரிமையாளர் என்பதற்கான ஆதாரமாகிய சிட்டா அடங்கல் போன்றவை பிர்கா வருவாய் அலுவலருக்கும் குறையாத நிலையில் உள்ள வருவாய் அலுவலரால் வழங்கப்படல் வேண்டும்.

மேற்கூறிய விதிகளுக்குட்பட்டு மாவட்ட வன அதிகாரிகளிடமிருந்து வரப்பெறும் பிரேரணைகளை பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட வனப் பாதுகாவலர்களால் நிவாரணம் வழங்க ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.



2000 மார்ச் 3]

35—

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 23724—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் புறநகர்ப் பேருந்துகளை மாங்கரை, பெண்ணாகரம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி முதல் மாங்கரை வரையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தருமபுரி நகரப் பேருந்துகள் 2, நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கி வருகின்றது. ஏற்கெனவே இயங்கி வரும் தருமபுரி முதல் ஒகேனக்கல் வரை செல்லும் நேரடி புறநகர் பேருந்துகளை மாங்கரை வழியாக தடத்தை மாற்றி இயக்கினால் தடத்தின் நீளம் அதிகரிப்பது மட்டுமில்லாமல் பயண கட்டணமும் கூடுதலாகும். இதனால் ஏற்கெனவே நேரடி பேருந்தில் பயணம் செய்பவர்கள் பாதிப்படைவார்கள், மற்றும் நேரடி பயணிகள் யாரும் இந்த சுற்றுத் தடத்தில் பயணம் செய்யவும் விரும்ப மாட்டார்கள். மேலும் தருமபுரி - பெண்ணாகரம் வழித்தடத்தில் 22 புறநகர் பேருந்துகளைக் கொண்டு 55 நடைகளும் 11 நகரப் பேருந்துகளைக் கொண்டு 84 நடைகளும் இயக்கப்படுகிறது. பெண்ணாகரம் - ஒகேனக்கல் வழித் தடத்தில் 13 புறநகர் பேருந்துகளைக் கொண்டு 46 நடைகளும் ஒரு நகரப் பேருந்தைக் கொண்டு 8 நடைகளும் இயக்கப்படுகிறது. இவ்வாறு பகுதிவாரியாக பேருந்து வசதி உள்ளது. எனவே, நேரடிப் பேருந்துகளை தடம் மாற்றி இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

36—

**பேருந்தை நீட்டித்து இயக்குதல்**

**வினா எண் 23761—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலிருந்து இராமகொண்ட அள்ளிமாணிக்காடு வழியாக மஞ்சாராப்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்து எண் 4-ஐ சாம்பளிக்காடு வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மஞ்சாராப்பட்டியிலிருந்து சாம்பளிக்காடு செல்லும் 1.3 கி.மீ. தூரமுள்ள சாலை சரியில்லாத காரணத்தால் நகரப் பேருந்து தடம் எண் 4-ஐ மஞ்சாராப்பட்டியிலிருந்து சாம்பளிக்காடு வரை தற்போது நீட்டித்து இயக்க இயலாது.

37—

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா எண் 24982—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், மேலக்கொள்ளுக்காடு, புதுநகர் வெட்டுவாக்கோட்டை, குளந்திரான்பட்டு வழியாக கறம்பக்குடிக்கு அரசு போக்குவரத்துக் கழக புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். நகரத் தடம் எண் 23-ல் பட்டுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடிக்கு அலிவலம், பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம் மேலக்கொள்ளுக்காடு, வெட்டுவாக்கோட்டை, ராங்கியன் விடுதி, குளந்திரான்பட்டு வழியாக தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டது. இந்த வழித்தடத்தில் அனந்கோபாலபுரம் முதல் மேலக் கொள்ளுக்காடு வரையிலான சாலை பழுதுபட்டதன் காரணமாக பேருந்து இயக்கம் நிறுத்தம் செய்யப்பட்டது. தற்போது சாலை பழுது பணி தற்காலிகமாக நிவர்த்தி செய்யப்பட்டு 25-9-1999 முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ள நான்கு நடைகளையும் பட்டுக்கோட்டை -கறம்பக்குடி (வழி) பாதிரங்கோட்டை, அனந்தகோபாலபுரம், புதுநகர், வெட்டுவாக்கோட்டை, ராங்கியன்விடுதி தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே புதிய பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.



38—

**அழகர்கோவிலுக்கு நகரப் பேருந்து**

**வினா எண் 24984—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, கச்சைகட்டி, பாலமேடு, வெள்ளையம்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டி - அழகர்கோவில் (வழி) கச்சைகட்டி, பாலமேடு, வெள்ளையம்பட்டி, தடத்தின் தூரம் 41 கி.மீ. ஆகும். தடத் தூரம் 30.0 கி.மீ.க்கு மேல் உள்ளதாலும், தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், அரசு விதிகளின்படி மேற்கண்ட தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. மேலும் கச்சைகட்டி, பாலமேடு, வெள்ளையம்பட்டி ஆகிய இடங்களிலிருந்து அழகர்கோவில் மற்றும் வாடிப்பட்டிக்கு பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளது. வாடிப்பட்டியிலிருந்து அழகர்கோவில் செல்ல அலங்காநல்லூர் சுகுபட்டி வழியாக 8 தனிச் சுற்றுக்கள் நகரப் பேருந்து வசதி உள்ளது. இதன்மூலம் ஏற்கெனவே நகரப் பேருந்து வசதிகள் பெற்ற பகுதிகளாக இருப்பதாலும் பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றிருப்பதாலும் குறைந்த தூரம் உள்ள இந்த வழித்தடத்தில் புறநகர் பேருந்துகள் இயக்க தேவை எழவில்லை.

39—

**கூடுதல் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 25099—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து சோழவந்தான் வாடிப்பட்டி, பாலமேடு, அலங்காநல்லூர் போன்ற பகுதிகளுக்கு காலை, மாலை நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சோழவந்தான் பகுதிக்கு 214 தனிச் சுற்றுக்களும், வாடிப்பட்டிக்கு 182 தனிச் சுற்றுக்களும் பாலமேடு பகுதிக்கு 118 தனிச் சுற்றுக்களும், அலங்காநல்லூருக்கு 338 தனிச் சுற்றுக்களும் நகரப் பேருந்து வசதி உள்ளது. காலை, மாலை நேரங்களில் போதிய அளவிற்கு நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே காலை, மாலை நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

**40—**

**மதுரை நீதிமன்றத்திற்கு பேருந்து**

**வினா எண் 25104—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டியிலிருந்து செல்லூர் வழியாக மதுரை நீதிமன்றத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டியிலிருந்து பெரியார் பேருந்து நிலையத்திற்கு 140 தனிச் சுற்றுக்களும், அண்ணா பேருந்து நிலையத்திற்கு 4 தனிச் சுற்றுக்களும் என பேருந்து வசதி உள்ளது. மேலும் வாடிப்பட்டியிலிருந்து சமயநல்லூர் வழியாக பெரியார் பேருந்து நிலையத்திற்கு 2 மாநகர விரைவுப் பேருந்துகள் 5-8-1999 முதல் இயக்கப்படுகின்றன. மதுரை வந்து நீதிமன்றம் செல்ல போதிய பேருந்து வசதி உள்ளதால் வாடிப்பட்டி—நீதிமன்றம் என புதிய தடம் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**41—**

**முடுவார்பட்டிக்குப் பேருந்து**

**வினா எண் 25106—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டியிலிருந்து அலங்காநல்லூர் வழியாக முடுவார்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வாடிப்பட்டியிலிருந்து தனிச்சியம், கொண்டையாம்பட்டி வழியாக அலங்காநல்லூருக்கு தினசரி 35 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. அலங்காநல்லூரிலிருந்து முடுவார்பட்டிக்குச் செல்வதற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அலங்காநல்லூர், முடுவார்பட்டி வழியாக இயக்கப்படும் 86 தனிச் சுற்றுக்கள் பேருந்து வசதியுள்ளது. சுமார் 1,200 மக்கள் தொகை கொண்ட முடுவார்பட்டி கிராம மக்கள் தங்களது அன்றாடத் தேவைகளுக்கு அதிகபட்சம் மதுரைக்கே வருவதால், வாடிப்பட்டி செல்லும் பயணிகள் மிகக் குறைவு. இவர்கள் மேற்கண்ட வசதிகளைப் பயன்படுத்தி அலங்காநல்லூர் வந்து மாறிச் செல்ல ஏற்கெனவே உள்ள வசதிகளே போதுமானது. வாடிப்பட்டி-முடுவார்பட்டி (வழி) அலங்காநல்லூர் என தனிப் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

**42—**

**பேருந்துகளை மீண்டும் இயக்குதல்**

**வினா எண் 26473—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி (1) சங்கரன்கோவில், தேவிப்பட்டணம் வழி நகரம் தலைவன்கோட்டை - வாசுதேவநல்லூர், இராமநாதபுரம் சிவகிரி (2) புளியங்குடி - இராஜபாளையம் வழி வாசுதேவநல்லூர் இராமநாதபுரம், இராயகிரி கரிவலம், பந்தப்புளி செந்தட்டியாபுரம் ஆகிய இரு பேருந்துகளையும் மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புளியங்குடி - ராஜபாளையம் வழித்தடத்தில் பந்தப்புளி அருகே இருக்கும் பாலம், சேதமடைந்ததாலும், பந்தப்புளியிலிருந்து செந்தட்டியாபுரம் வரையுள்ள சாலை பழுதடைந்து இருந்ததாலும், 8-12-1998 முதல் பந்தப்புளி வழியாக இயக்க இயலாமல் இருந்த காரணத்தினால், நேர் வழியில் இயக்கப்பட்டு வந்தது. பின்னர் கழகத்தில் நிலவிய உதிரி பாகங்கள் பற்றாக்குறை காரணமாக 9-5-1999 முதல் 6-6-1999 முடிய தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 7-6-1999 முதல்

இப்பேருந்து மீண்டும் நேர் வழியில் இயக்கப்பட்டு வருகிறது. பாலம், சாலை ஆகியவற்றைப் பழுதுபார்க்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு பாலம் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. ஆனால் பந்தப்புளியிலிருந்து செந்தட்டியாபுரம் வரை சுமார் 3.0 கி.மீ. தூரத்திற்கு சாலை, மிகவும் பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் இருப்பதால், பந்தப்புளி-செந்தட்டியாபுரம் வழியாக பேருந்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. சாலை சரிசெய்யப்பட்டவுடன் பந்தப்புளி வழியாக பேருந்து இயக்க இயலும். சங்கரன்கோவில் - தேவிப்பட்டணம் தடத்தில் இயக்கப்பட்ட பேருந்தும், உதிரி பாகங்கள் பற்றாக்குறை காரணமாக 17-5-1999 முதல் 7-6-1999 முடிய தற்காலிகமாக இயக்கப்படவில்லை. இத்தடத்தில் 8-6-1999 முதல் முறையாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

43—

### நகரப் பேருந்து

**வினா எண் 29936—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செஞ்சியிலிருந்து தேசூர் வரை செல்லும் தடம் எண் டபிள்யூ-2 என்னும் நகரப் பேருந்து தென்னாத்தூர் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாற்றி இயக்க அரசு முனையுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சியிலிருந்து இல்லோடு, பென்னகர், வடக்குப்பட்டி, முனைப்பட்டு, தென்னாத்தூர், சேயமங்கலம் வழியாக தேசூருக்கு இயக்கப்பட்டு வந்த நகரப் பேருந்தின் நடைகள் முனைப்பட்டு, தென்னாத்தூர் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு இடையே புதிய மதகு ஒன்று கட்டும் பணி நடைபெற்று வந்ததால் இந்நடைகள் திருமால்பாடி வழியாக தேசூருக்கு இயக்கப்பட்டு வந்தது. மதகு கட்டுமானப் பணி முடிந்தவுடன் இந்நடைகள் மீண்டும் முனைப்பட்டு, தென்னாத்தூர் வழியாக தேசூருக்கு 15-8-1999 முதல் இயக்கப்பட்டு வருகிறது.



44—

### செக்கானூரணியில் பேருந்து நின்று செல்லுதல்

**வினா எண் 30038—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலிருந்து சென்னை செல்லும் அரசு விரைவுப் பேருந்து செக்கானூரணியில் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலிருந்து சென்னை செல்லும் அரசு விரைவுப் பேருந்து செக்கானூரணியில் நின்று செல்ல 1-11-1999 முதல் கட்டண நிலையாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

45—

### புறநகர் பேருந்து இயக்குதல்

**வினா எண் 30041—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பூலாங்குடிக்கு (நயினார்கோவில்) பரமக்குடியிலிருந்து பேருந்து வசதியில்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமத்திற்கு புறநகர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடியிலிருந்து தடம் எண் 21 நகர் பேருந்து மூலம் பஞ்சலூர், சாத்தனூர் வழியாக சுமார் 34 கி.மீ. தொலைவில் உள்ள பூலாங்குடிக்கு நான்கு நடைகளும், பஞ்சலூருக்கு நான்கு நடைகளும், சாத்தனூருக்கு நான்கு நடைகளும் என இயக்கப்பட்டு

வருகிறது. மேற்படி பேருந்தின் பயணிகள் அடர்வு 58 சதவீதம் மட்டுமே உள்ளதால் பயணிகள் தேவைக்கு இதுவே போதுமானது: எனவே பரமக்குடி - பூலாங்குடி வழித்தடத்தில் புறநகர் பேருந்துகள் ஏதும் இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

46—

## அரசு போக்குவரத்துப் பணிமனை

**வினா எண் 30045—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடியாத்தம் அரசு போக்குவரத்துப் பணிமனையில் எத்தனை பேருந்துகள் உள்ளன?

(ஆ) இதில் எத்தனை பேருந்துகள் நல்ல நிலையில் உள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) குடியாத்தம் அரசு போக்குவரத்துப் பணிமனையில் மொத்தம் 76 பேருந்துகள் உள்ளன.

(ஆ) அனைத்து பேருந்துகளுமே நல்ல நிலையில் உள்ளன.

47—

## பேருந்தை நீட்டித்து இயக்குதல்

**வினா எண் 30049—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) திருநெல்வேலி பணிமனையில் இயங்கி வரும் தடம் எண் 10-ஐ பத்மநாதபுரம், குஞ்சன்விளை வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு திருநெல்வேலி பணிமனையிலிருந்து திசையன்விளை பகுதியை தொடர்புபடுத்தி தடம் எண் 10 என நகரப் பேருந்து எதுவும் இயக்கப்படவில்லை. திசையன்விளை பணிமனையிலிருந்து தற்போது இயக்கப்பட்டுவரும் தடம் எண் 10 நகரப்



பேருந்து பல் முனை வழித்தடத்தில், திசையன்விளை-மலையன்குடி, திசையன்விளை - வள்ளியூர், திசையன்விளை - இடிந்தகரை (வழி) மொத்தான்மொழி, திசையன்விளை-இடிந்தகரை (வழி) ஆயன்குளம், திசையன்விளை - படுக்கப்பத்து மற்றும் திசையன்விளை - புத்தன்தருவை என இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கைப்படி, தடம் மாற்றி இயக்கினால் கடக்குளம், கரிசல், அதிசயபுரம் போன்ற ஊர்களுக்குப் பேருந்து வசதியில் இழப்பு ஏற்படுவது மட்டுமின்றி, தடத்தின் தூரம் அதிகரிப்பதால் ஏற்படும் கூடுதல் கட்டணம், கூடுதல் பயண நேரம், கால அட்டவணை மாற்றம் போன்றவை ஏற்பட்டு புதிய பிரச்சினையை உருவாக்க வழிவகை செய்யும். மேலும், பத்மநாதபுரம், குஞ்சன்விளை வழியாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் தற்போது நாளொன்றுக்கு 50-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, திசையன்விளை பணிமனை தடம் எண் 10 நகரப் பேருந்தை பத்மநாதபுரம், குஞ்சன்விளை வழியாக தடம் மாற்றி இயக்க இயலாது.

48—

## அபாய விளக்குகள் சீர் செய்தல்

**வினா எண் 30388—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகளில் அபாய விளக்குகள் சரியில்லாததால் ஏற்படும் விபத்து பற்றி அரசு அறியுமா?

(ஆ) அதைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசு விரைவுப் பேருந்துகளில் அனைத்து அபாய விளக்குகளும் சரியாக இயங்குகின்றன. மேலும் தொடர் பராமரிப்பின் மூலம் விளக்குகள் பழுதில்லாமல் எரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) அபாய எச்சரிக்கையை மேம்படுத்தும் வகையில் பேருந்தின் முன் பக்கம் மற்றும் பின்பக்கம் உள்ள பார்வைக் கண்ணாடியின் ஓரத்தில் விளக்கு வெளிச்சத்தில் பிரதிபலிக்கக் கூடிய நாடா ஒட்டப்பட்டுள்ளது.

[2000 மார்ச் 3

எதிர் வாகனங்களின் வெளிச்சம் படும்போது இது ஒளிருவதால் எளிதாக அடையாளம் காண முடிகின்றது.

49—

**பேருந்து வசதி செய்தல்**

**வினா எண் 30698—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், நெஞ்சிக்காளிபாளையம் சுண்டக்காம்பாளையம், வேலாம்பூண்டி, மாலமேடு ஆகிய கிராமங்கள் வழியாக காலை 7-30 மணி அளவில் சின்னதாராபுரத்திலிருந்து அரவக்குறிச்சி வரை பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சிராப்பள்ளி கோட்டத்திலிருந்து கோரிக்கையிலுள்ள அரவக்குறிச்சி சின்னதாராபுரம் (வழி) வேலாம்பூண்டி, சுண்டக்காம்பாளையம், நெஞ்சிக்காளிபாளையம் வழியாக பல நோக்கு திட்டத்தில் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், மேற்குறிப்பிட்டுள்ள நகரப் பேருந்தின் கால அட்டவணையை மாற்றம் செய்து கோரிக்கையின் வழித்தடத்தில் காலை நேரத்தில் இயக்கினால் தற்போது இப்பேருந்து இயங்கும் கரூர்-அரவக்குறிச்சி வழித்தட பள்ளி மாணவர்களுக்குப் பேருந்து வசதி ரத்தாகி பாதிப்பு உண்டாகும். எனவே, தற்போதுள்ள பேருந்துகளின் கால அட்டவணையை மாற்றம் செய்ய சாத்தியக் கூறு இல்லை.

50—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 5798—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தொகுதியில் தேவனூர் கெங்கபுரம் சாலை கி.மீ. 2/4-ல் உள்ள ஓடை, ஆற்காடு-ஜெயபுரம் சாலை



2000 மார்ச் 3]

கி.மீ. 64/2-ல் உள்ள ஓடை மற்றும் தாழங்குப்பம் - எதப்பட்டு சாலை கி.மீ. 5/2-ல் உள்ள ஓடைகளில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள

(1) தேவனூர்-கெங்கபுரம் சாலையில் பாலம் அமைத்தல்:

தேவனூர் கெங்கபுரம் சாலையில் கி.மீ. 2/4 இல் 34.12 மீ. நீளத்திற்கு ரூ. 56.50 இலட்சம் மதிப்பில் ஒரு மேம்பாலமும் மற்றும் 11.10 மீ. நீளத்தில் 14.50 இலட்சம் மதிப்பில் ஒரு சிறிய பாலமும் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.5 திட்டத்தின் வாயிலாக செயற்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. ஆற்காடு - விழுப்புரம் சாலை கி.மீ. 64/8 இல் ஒரு பாலம் மற்றும் தாழங்குப்பம்-எதப்பட்டு சாலை கி.மீ. 5/2 இல் பாலம் அமைக்கும் பணியை நிதி நெருக்கடி காரணமாக தற்சமயம் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

51—

**சாலையோரப் பூங்கா அமைத்தல்**

**வினா எண் 17852—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் சுமார் 14 மீட்டர் தூரத்திற்கு இடவசதியிருப்பதால் சாலையோரப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 49-ல் சாலையோரப் பூங்கா அமைக்கும் திட்டம் குறித்த செயற்குறிப்பு தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

52—

## நெடுஞ்சாலைத் துறையின் செலவினங்கள்

**வினா எண் 23215—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் first and final Bill மூலம் செலவழிக்கின்ற முறை குறித்து புகார் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) நெடுஞ்சாலைத் துறையில் first and final Bill மூலம் செலவழிக்கின்ற முறை குறித்து புகார் முறையீடு ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

53—

## சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 23921—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உப கோட்டம், புல்லுக்காட்டுவலசை சாலையில் கி.மீ. 0/0-2/0 வரை, மேட்டூர் இரயில்வே பீடர் ரோடு, கி.மீ. 0/0-1/7, வரை, இலஞ்சி, வல்லம், பள்ளிவாசல், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை கி.மீ. 8/0-10/4 வரை, வெள்ளக்கால், வி.கே. புதூர், வெள்ளக்கால், கழுகுநீர்குளம் சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையிலான சாலையைப் பழுது பார்த்து சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட புல்லுக்காட்டுவலசை சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையுள்ள பகுதிகள் மற்றும் இலஞ்சி, வல்லம், பள்ளிவாசல் சாலையில் கி.மீ. 3/0-5/6 வரையுள்ள பகுதிகளில் சிறப்பு பழுது பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மேட்டூர் இரயில்வே பீடர் சாலை (கி.மீ. 0/0-2/4)- வரை உள்ள பழுதுகளை நொடிக்கல் போட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் இச்சாலையில் உள்ள பழுதுகளை சீரமைத்து மேம்பாடு செய்ய நிதிநிலைமைக்கேற்றவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை சாலையானது திருச்செந்தூர்- தென்காசி - செங்கோட்டை சாலை கி.மீ. 124/0-129/4 வரை உள்ள பகுதியாகும். இச்சாலையை மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. பணி விரைவில் செய்து முடிக்கப்படும். வெள்ளக்கால் கழுநீர்குளம் சாலை பராமரிக்கப்பட்டு சாலையில் கி.மீ. 0/0-2/0 வரை, சீர் செய்து மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

54—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 24755—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, குளமங்கலம் - வடக்கால் செல்லும் தார்ச்சாலை சுமார் 7 கி.மீ. மிக மோசமாக பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை எப்போது செப்பனிடப்படும்?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் கீரமங்கலம்-குளமங்கலம் வடக்கு சாலையாகும். இச்சாலையின் நீளம் 7.2 கி.மீ. ஆகும். (0/0 முதல் 7/2 வரை) இச்சாலையில் கி.மீ. 0/0-1/0 இன் ஓடுதளப் பகுதி 92/93 ஆம் ஆண்டிலும், கி.மீ. 1/0-3/0 இன் ஓடுதளப் பகுதி 93/94 ஆம் ஆண்டிலும் புதுப்பிக்கப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 3/0-4/0 மற்றும் கி.மீ. 4/0-5/0 ஆகிய சாலைகளின் ஓடுதளப்பகுதியை ரூ. 5.03 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கி.மீ. 5/0-7/2 வரையிலான ஓடுதளப் பகுதியில் ஏற்பட்டுள்ள நொடிகள் நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பணியாளர்களைக் கொண்டு சீர் செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**55—**

### பாலத்தை அகலப்படுத்துதல்

**வினா எண் 25456—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், சுரண்டை பேரூராட்சி குறுங்காவனம் அருகே சிற்றாற்றின் குறுக்கே பழுதடைந்த குறுகிய பாலத்தினை அகலப்படுத்தி புதிதாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2000 மார்ச் 3]

**56—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 25804—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, கூத்தாநல்லூர் புதுபாலம்—திருராமேஸ்வரம் சாலையை அகலப்படுத்தி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலையான திருராமேஸ்வரம் - பாண்டுகுடி சாலை கி.மீ. 0/0-5/2 ஆகும். தற்போது இச்சாலையில் உள்ள போக்குவரத்து செறிவிற்கு தற்போதைய 3.00 மீட்டர் அகலமுள்ள ஓடு பாதையே போதுமானதாக உள்ளதால் இச்சாலையை உடனடியாக அகலப்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை. இச்சாலையில் கி.மீ. 4/6-5/2 வரை மழையினால் கடும் சேதமடைந்துள்ளது. இதர பகுதிகள் நொடிகள் போடப்பட்டு சீர் செய்யப்பட்டு வருகிறது. பழுதடைந்த பகுதியான கி.மீ. 4/6-5/2 சீர் செய்ய ரூ. 2.00 இலட்சம் செலவில் நடப்பாண்டில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**57—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 25806—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் - வடபாதிமங்கலம்-மூலங்குடி சாலை கரும்பு அபிவிருத்தித் திட்ட சாலையாக உள்ளதை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றி செப்பனிட்டுத் தரப்படுமா?

விடை—

[2000 மார்ச் 3

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையையும் சேர்த்து 1366 கி.மீ. நீளமுள்ள 295 கரும்புச் சாலைகளை அரசு இதர மாவட்ட சாலைகளாக மாற்றி நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிற்கு மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. வினாவில் குறிப்பிட்டுள்ள வடபாதிமங்கலம்—கோட்டூர் சாலையில் கி.மீ. 10/450-11/4 வரையுள்ள தார்ச் சாலையைச் சீரமைக்கும் பணி ரூ. 4.70 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சாலையில் உள்ள பழுதுகளை தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டுள்ளது.

58—

**சாலை அகலப்படுத்துதல்**

**வினா எண் 25807—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, லெட்சுமாங்குடி மாவூர் சாலையை அகலப்படுத்த ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் சரியான பெயர் கும்பகோணம்—குடவாசல்—கொரடாச்சேரி லெட்சுமாங்குடி—மாவூர் சாலை ஆகும். இச்சாலையில் கி.மீ. 16/8-20/6—வரை தமிழ்நாடு சாலை அபிவிருத்தித் திட்டம் 1ல் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கி.மீ. 20/6-52/0 வரை 31/4 கி.மீ. தூரம் பெரிய மாவட்டச் சாலையாக பராமரிப்பில் உள்ளது. இது 3.66 கி.மீ. அகலம் கொண்ட தார்ச் சாலையாகும். வெட்டாறு மற்றும் வெள்ளாறு ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. சுமார் 2 மீ. முதல் 3 மீ. உயரத்தில் அமைந்துள்ளதால் மண் வேலை செய்து சாலையை அகலப்படுத்தி



2000 மார்ச் 3]

தேவையான இடங்களில் தடுப்புச் சுவர் அமைத்து 5.50 மீ. அகலத்திற்கு தார்தளம் அமைக்க ஒரு கி.மீ. க்கு ரூ. 15.00 இலட்சம் வீதம் 31.4 கி.மீ.க்கு ரூ. 471.00 இலட்சம் தேவை. இந்தப் பணி எந்த அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களிலும் இடம் பெறவில்லை.

அரசின் தற்போதைய நிதி நிலையில் மேற்படி சாலை அகலப்படுத்தும் பணியை எடுத்துக்கொள்ள இயலவில்லை.

59—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 25809—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூத்தாநல்லூர், தண்ணீர்குளம், வீராக்கி சாலையை செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை மன்னார்குடி நெடுஞ்சாலை, உட்கோட்ட பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலையான கூத்தாநல்லூர்—அதிச்சபுரம்—கண்டமங்கலம்—வேதபுரம் சாலை 0/0-7/6 கி.மீ. ஆகும். இச்சாலையில் கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் 1998-ல் பெய்த பெரும் மழையினால் சாலை பாதிப்புக்கு உள்ளாகியது. கி.மீ. 0/0-1/0 பகுதியில் நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 2/2-2/8 மற்றும் கி.மீ. 3/0-4/6-க்கு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் வரும் நிதி ஆண்டுகளில் பகுதி பகுதியாக புதுப்பிக்கப்படும்.

60—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 27140—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடக்கூர் மண்டலக்கோட்டை சாலை மிக மோசமான நிலையில் உள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது இத்துறையின் பராமரிப்பில் உள்ள மண்டலக்கோட்டை—வடக்கூர் சாலை கி.மீ. 0/0-9/2 எனும் இதர மாவட்டச் சாலையாகும். தற்போது இச்சாலையில் மிகவும் மோசமாக பழுதடைந்த பகுதிகளை சீர் செய்யும் பொருட்டு தனி சீர் பணியாக கி.மீ. 0/0-1/0. 1/0-2/0 மற்றும் கி.மீ. 3/0-4/0 ஆகிய 3.0 கி.மீ. நீளப் பகுதியை மொத்தம் ரூ. 15,15,000 மதிப்பீட்டில் செய்ய ஒப்பந்த அடிப்படையில். பணி ஒப்படைக்கப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள கி.மீ. 2/0-3/0 மற்றும் 4/0-9/2 ஆகிய பகுதிகளில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சீர் செய்யப்பட்டு சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**61—**

**புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 27142—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், அம்மன்பேட்டை தமிழ்ப் பல்கலைக்கழகம் வரை (வழி சக்கர-சம்பந்தம் இராமநாதபுரம், நீலகிரி, பிள்ளையார்பட்டி ஊராட்சி வழியாக) செல்ல உள்ள புறவழிச் சாலையை உடனடியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள புறவழிச் சாலையை அமைக்க தோராயமாக ரூ. 25.00 கோடி தேவைப்படும். பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**62—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 16065—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ராஜாமடத்தில் உள்ள சத்திரம் மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**63—**

**இந்து சமய அறக்கட்டளை**

**வினா எண் 18827—திரு. ஜ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை நிர்வகிக்கும் மடங்கள் மற்றும் கோவில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள், பொது ஏல முறையில் விட்டதில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் (பசலி 1407) திருக்கோவில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்கள் குத்தகை/வாடகைக்கு பொது ஏலத்தில் விட்டதில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு ரூ. 17.08 கோடி வருமானம் வந்துள்ளது.

64— [2000 மார்ச் 3

### மீனாட்சியம்மன் கோவிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 21270—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி மீனாட்சியம்மன் கோவிலை புதுப்பித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தற்போது இயலாது.

65—

### கோவில்களில் ஆபரணங்களின் மதிப்பு

**வினா எண் 23851—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக் கோவில்களில் உள்ள தங்கம் போன்ற ஆபரணங்களின் பொருள்மதிப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றின் நம்பகத் தன்மையை அரசு எவ்வாறு உறுதிப்படுத்துகிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டுக் கோவில்களில் உள்ள தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கக்கூடும் என்பதால் அவற்றின் மதிப்பினை தெரிவிக்க இயலாது.

(ஆ) திருக்கோவில்களிலுள்ள தங்கம் மற்றும் வெள்ளி போன்ற ஆபரணங்களை அவ்வப்போது சரிபார்த்து மதிப்பீடு செய்ய தற்போதுள்ள



2000 மார்ச் 3]

10 இணை ஆணையர் சரகத்திலும், 10 துணை ஆணையர்/நகை சரிபார்ப்பவர் பணிபுரிந்து வருகிறார்கள். ஒவ்வொரு சரகத்திலும் துணை ஆணையர்/ நகை சரிபார்க்கும் ஒரு வைர நுண்ணறிஞர், ஒரு தொழில்நுட்ப உதவியாளர் உள்ளனர். இக்குழு, அவ்வப்போது, அந்தந்த சரகத்திலுள்ள திருக்கோவில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை சரிபார்த்து வருகிறது. மாநில அளவில் சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகத்தில் தலைமையிட உதவி ஆணையர்/ நகை சரிபார்ப்பவர் மற்றும் அவரின் கீழ் பணியாற்றும் குழு நகைகளை சரிபார்ப்பதுடன், தங்க இரதம் போன்ற முக்கிய விசேட பணிகளை மேற்பார்வையிடுவதுடன், நகைகளையும், சரிபார்த்து வருகிறது.

66—

### திருக்கோவில்களில் பணியாட்களைத் தேர்வு செய்தல்

**வினா எண் 24309—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிருவாகத்தின் கீழ் உள்ள திருக்கோவில்களில் நிரப்பப்பட உள்ள பணியிடங்கள் குறித்து செய்தித்தாட்களில் விளம்பரம் செய்து ஒளிவு மறைவற்ற முறையில் பணியாட்களை தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்கோவில்களில் ஏற்படும் பணியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்படும்போது திருக்கோவிலைச் சுற்றியுள்ள நகரம் மற்றும் கிராமங்களில் நன்கு விளம்பரம் செய்யப்படுகிறது. மேலும் அந்தந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு அறிவிப்பு அனுப்பி அவ்வலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. நியமனங்கள் வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள்

வரிசைப்படி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நியமனத்தின்போது விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்து நேர்முகத் தேர்வு மூலம் பரிசீலித்து தகுதிபெற்ற நபர்களை தேர்வு செய்து அறங்காவலர் குழு தீர்மானத்துடன் ஆணையரால் பரிசீலிக்கப்பட்டு பின்னர்தான் நியமன ஆணை வழங்கப்படுகிறது.

67—

## கருணை இல்லம்

**வினா எண் 25318—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் இயங்கி வரும் கருணை இல்லத்தில் எத்தனை மாணவர்கள் பயில்கிறார்கள்? அவர்களின் சுகாதார நிலை குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோவிலுடன் இணைந்த கருணை இல்லத்தில் 27 சிறுவர்கள் பயில்கின்றனர். இவர்களது உடல் நிலை சரியில்லாத நிலையில் அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

68—

## ஆதிகேசவப் பெருமாள் ஆலயம்

**வினா எண் 26032—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்திற்குச் சொந்தமான ஆணையடி எஸ்டேட்டின் மொத்த பரப்பளவு எவ்வளவு?

(ஆ) தற்போது எத்தனை பரப்பளவு கைவசம் உள்ளது?



(இ) மீதி ஆக்கிரமிப்பு எப்போது அகற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்திற்குச் சொந்தமான ஆணையடி எஸ்டேட்டின் மொத்தப் பரப்பளவு 100 ஏக்கர் ஆகும்.

(ஆ) மேற்படி பண்ணை 100 ஏக்கர் பரப்பளவில் 88 ஏக்கர் பரப்பளவு மட்டும் ஆலயத்தின் சுவாதீனத்தில் உள்ளது.

(இ) மீதமுள்ள 12 ஏக்கர் பரப்பளவில் 29 ஆக்கிரமிப்பாளர்கள் வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகியவற்றை பயிர் செய்து வருகிறார்கள். நிலத்தை ஆக்கிரமித்துள்ள நபர்களை உடனடியாக தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் 39/96-ன் பிரிவு 78, 79-ன் படியும் சிவில் வழக்குகள் தொடர்ந்து அதன் மூலம் வெளியேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

69—

## தமிழில் ஓதுவோரின் எண்ணிக்கை அதிகரித்தல்

**வினா எண் 26832—திரு. பெ.க. திருவேங்கடம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு கோவில்களில் தமிழில் ஓதுவார்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[2000 மார்ச் 3

70—

**திருமறைக்காடு சிவன் கோவில்**

**வினா எண் 27670—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள திருமறைக்காடு சிவன் கோவிலுக்குச் சொந்தமான விளைநிலங்கள் எவ்வளவு உள்ளன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள திருமறைக்காடு சிவன் கோயிலுக்கு 36 கிராமங்களில் 2270.08 ஏக்கர் நன்செய் நிலங்களும் 3840.23 ஏக்கர் புன்செய் நிலங்களும் 4124.97 ஏக்கர் மானாவாரி நிலங்களும் ஆக மொத்தம் 10235.28 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவை தவிர நில அளவை செய்யப்படாமல் 2000 ஏக்கர் நிலமும் மற்றும் மத்திய அரசு உப்புத் துறையின்கீழ் குத்தகை அடிப்படையில் 2425.95 ஏக்கர் நிலங்களும் உள்ளன.

71—

**திருப்பணி நிதியுதவித் திட்டம்**

**வினா எண் 29693—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் அறநிலையத் துறை மூலமாக செயல்படுத்தப்படும் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 1996-99 மூன்றாண்டுகளில் பயனடைந்த திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) அவை யாவை?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் அறநிலையத் துறை மூலமாக செயல்படுத்தப்படும் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 1996-99 மூன்றாண்டுகளில் கீழ்க்கண்ட 6 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன:—

**கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி உதவித் திட்டம்:** (தலா ரூ. 25,000 மட்டும்)

1. அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், வரகூர், சிதம்பரம் வட்டம் (1996-97).

2. அருள்மிகு முருகன் திருக்கோயில், நக்ரவந்தங்குடி, சிதம்பரம் வட்டம் (1996-97).

3. அருள்மிகு பேச்சியம்மன் திருக்கோயில், கோயிலாம்பூண்டி, சிதம்பரம் வட்டம் (1996-97)

**துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணி நிதியுதவித் திட்டம்:** (தலா ரூ. 25,000 மட்டும்).

1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெற்குப் பிச்சாவரம், சிதம்பரம் வட்டம் (1997-98)

2. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், மாதாகோயில் தெரு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் வட்டம் (1997-98)

3. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பெரிய தெரு, கன்னங்குடி, சிதம்பரம் வட்டம் (1998-99).

72—

**விநாயகர் கோயில் சொத்துக்கள்**

**வினா எண் 29854—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) குன்னூர் நகரிலுள்ள அருள்மிகு விநாயகர் கோவிலுக்கு அசையாச் சொத்துக்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அருள்மிகு விநாயகர் திருக்கோவிலுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் (1) | சொத்து விவரம் (2) | புல. எண் (3) | பரப் பளவு (4) | வாடகை விவரம் (5) |
|---|---|---|---|---|
| 1. | கல்யாண மண்டபம் | 24/112 | 2400 ச.அடி | இந்துக்களுக்கு மட்டும் நாள் 1-க்கு ரூ. 800 வீதம் வாடகைக்கு விடப்படுகிறது. |
| 2. | திரையரங்கு | பி.24/113 | 16,000 சதுர அடி | திரையரங்கு மாதம் 1-க்கு ரூ. 7,500-க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. |
| 3. | மனைக் கட்டுகள் | 24/112 மற்றும் 211/112 | 21 மனைக் கட்டுகள் | நியாயவாடகை மாதம் 1-க்கு ரூ. 5,743 கிடைக்கிறது. |

73—

### ஆலயத்திற்கு கூடுதல் வசதிகள்

**வினா எண் 30762—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம் அருள்மிகு லக்ஷ்மி நரசிம்மசுவாமி ஆலயத்திற்கு மின்வசதி, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகளை செய்ய அரசு முயற்சிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோயில் முழுவதும் நன்முறையில் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கழிப்பறை வசதிகளுக்காக மாவட்ட நிர்வாகம் மூலம் சுற்றுலா மைய நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

74—

### திருப்பணி செய்ய நிதியுதவி

**வினா எண் 31103—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மற்றும் தனிப்பட்ட சமுதாயத்தினர் கோயில்களுக்கு அறநிலையத் துறை மூலம் திருப்பணி செய்ய நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் திருக்கோயில்களுக்கு எவ்வித நிதி உதவியும் துறை மூலம் செய்யப்படுவதில்லை. தனிப்பட்ட சமுதாயத்தினரால் நிர்வகிக்கப்பட்டு, பொதுக் கோயிலாக உள்ளதும், துறைக் கட்டுப்பாட்டில் உள்ளதுமான திருக்கோயில்களில், புராதனமான திருக்கோயில்களுக்கு, அக்கோயில்களின் நிதி நிலை, திருக்கோயில் அமைந்துள்ள பகுதியில் நன்கொடை பெற ஏதுவான சூழ்நிலை, திருப்பணியின் தன்மை இவற்றைப் பரிசீலித்து ஆகும் செலவில் 30 சதவீதம் மிகாது அளிக்கப்படுகிறது. இது தவிர இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் பகுதியில் உள்ள பொதுமக்கள் (அப்பகுதி மக்கள்) வழிபடும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் ஆண்டுக்கு 100 திருக்கோயில்களுக்கு மட்டும் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது.

75— [2000 மார்ச் 3

## நேர்முக உதவியாளர் பணியிடம்

**வினா எண் 32312—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) மண்டல இணை ஆணையர்களுக்கு நிர்வாகத்தில் துணை புரிவதற்கு உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர் பணி இடங்கள் உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

76—

## செயல் அலுவலர் நியமனம்

**வினா எண் 32316—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கவுந்தப்பாடி அருள்மிகு நாட்ராயசாமி மற்றும் செல்லாண்டியம்மன் திருக்கோவில்களுக்கு செயல் அலுவலர் நியமிக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கவுந்தப்பாடி அருள்மிகு நாட்ராயசாமி மற்றும் செல்லாண்டியம்மன் திருக்கோவில்களுக்கு செயல் அலுவலர் நியமிக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.



2000 மார்ச் 3]

77—

## வஃக்ப் வாரியச் சொத்துக்கள்

**வினா எண் 19372—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வஃக்ப் வாரியச் சொத்துக்கள் சட்டத்திற்குப் புறம்பாக தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை மீட்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வஃக்ப் சட்டம், 1995-ல் வகை செய்யப்பட்டுள்ளவாறு வஃக்ப் சொத்துக்கள் மீதுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு வஃக்ப் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(2) வஃக்ப் சட்டப் பிரிவு 54(1)-ல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆக்கிரமிப்பு சொத்திலிருந்து வெளியேறும்படி அறிவிப்பு அனுப்பவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வஃக்ப் சட்டப்பிரிவு 54(3)-ல் அந்த அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் மறுப்புரை ஏதேனும் வந்திருப்பின் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வஃக்ப் வாரியம் அவர்களே விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தி விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்விசாரணையின் போது வஃக்ப் சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என முதன்மை செயல் அலுவலர் திருப்தியடைந்தால் ஆக்கிரமிப்பை அகற்ற ஆணையிட்டு உடைமையை முத்தவல்லி வசம் ஒப்படைக்கவும் அச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. வஃக்ப் சட்டப்பிரிவு 55-ன்படி ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பை அகற்றாத சூழ்நிலையில் அத்தகைய நிலங்கள் அமையப் பெற்றிருக்கும் எல்லைக்குட்பட்ட உப கோட்ட நீதிபதியிடம் (Sub Divisional Magistrate) விண்ணப்பிக்கவும் அந்நீதிபதி ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற கட்டளையிட்டு நிலம் அல்லது கட்டடத்தை காலி செய்வதற்கு ஆணை பிறப்பித்து உடைமையை தொடர்புடைய முத்தவல்லிக்கு அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நீதிபதியின் ஆணைக்குட்பட்டு ஆக்கிரமிப்பாளர்கள் காலி செய்ய மறுப்பின் காவல்

துறை உதவியுடன் ஆக்கிரமிப்பை அகற்றவும் 1995ஆம் வருடத்திய வஃக்ப் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. மேலும் இச்சட்டத்திற்கு உட்பட்டு 323 ஆக்கிரமிப்பாளர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. 60 வழக்குகளுக்கு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5 வழக்குகள் தமிழ்நாடு வஃக்ப் சட்டப் பிரிவு 55-ன்கீழ் உப கோட்ட நீதிபதிக்கு (Sub Divisional Magistrate) அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சிய 55 வழக்குகள் உப கோட்ட நீதிபதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எஞ்சியுள்ள வழக்குகள் அனைத்தும் செயலர், தமிழ்நாடு வஃக்ப் வாரியத்தின் விசாரணையில் உள்ளன.

78—

## சிறைத் துறை காவலர்கள் ஊதியம்

**வினா எண் 28632—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறைக்கு இணையான ஊதியம் சிறைத் துறை காவலர்களுக்கு வழங்குமாறு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறைக்கு இணையாக சிறைத் துறை காவலர்களுக்கும் ஊதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. ஐந்தாவது ஊதியக் குழுவின்கீழ் வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் அலுவலர் குழுவின் பரிந்துரையின்கீழ் கிளைச் சிறை அலுவலர்கள் மற்றும் சிறைக் காவலர்களுக்கு ஊதிய விகிதம் திருத்தி வழங்கப்பட்டுள்ளது. காவல் துறைக் காவலர்களின் ஊதிய விகிதத்தை ஒரு நபர் கமிஷன் பரிந்துரையின்பேரில் திருத்தி வழங்கியபோது இம்மாதிரி இணையாக உள்ள பதவிகளின் நிலைகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதம் வழங்கிய பிறகு மாநில



அளவில் உள்ள பிற பதவிகளுக்கு இணையாக ஊதிய விகிதம் வழங்குவது முறையாகாது என முடிவு செய்யப்பட்டது. ஆதலால் சிறைத் துறை காவலர் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பதவிகளின் ஊதிய விகிதத்தை காவல் துறை காவலர்களுக்கு இணையாக வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது.

79—

## நகல் பெருக்கி இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 18819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நகல் பெருக்கி இயந்திரம் (ஜெராக்ஸ் மிஷின்) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பதிவுத் துறையிலுள்ள 593 சார்பதிவகங்களில், 1995-96ஆம் ஆண்டிலிருந்து இந்நாள்வரை 22 சார்பதிவகங்களுக்கு நகல்பெருக்கி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிதி நிலையைப் பொறுத்து, அனைத்து சார்பதிவகங்களுக்கும் படிப்படியாக நகல்பெருக்கி இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

80—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 20040—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆரணி சார்பதிவகம் அரசுக் கட்டடத்திலேயே இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

**81—**

**சார்பதிவாளர் அலுவலகம் கட்டுதல்**

**வினா எண் 24106—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கவுந்தப்பாடியில் சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சார்பதிவாளர் அலுவலகம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கவுந்தப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் தற்போதைக்கு இல்லை.

**82—**

**சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 25907—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம் கண்டமங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கண்டமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**83—**

**பத்திரப் பதிவு அலுவலகம் சீரமைத்தல்**

**வினா எண் 25908—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டியில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தைச் சீரமைத்து கட்டடம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

விக்கிரவாண்டியில் உள்ள சார்பதிவு அலுவலகக் கட்டடத்தைச் சீரமைத்து கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**84—**

**சார்பதிவாளர் அலுவலகம்**

**வினா எண் 27824—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன?

(ஆ) சொந்தக் கட்டடங்களில் இயங்குவது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 23 சார்பதிவகங்கள் உள்ளன.

(ஆ) அரசுக் கட்டடத்தில் 9 சார்பதிவகங்கள் இயங்குகின்றன.

**85—**

**சார்பதிவாளர் அலுவலகம்**

**வினா எண் 27825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன?

(ஆ) சொந்தக் கட்டடங்களில் இயங்குவது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 17 சார்பதிவகங்கள் உள்ளன.

(ஆ) அரசுக் கட்டடத்தில் 7 (ஏழு) சார்பதிவகங்கள் இயங்கி வருகின்றன.

**86—**

**பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா எண் 31967—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, ஏரியோடு பேரூராட்சி பத்திரப் பதிவு அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, ஏரியோடு பேரூராட்சி பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு புதிய அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**பதிவாளர் அலுவலகத்திற்குப் புதியக் கட்டடம்**

**வினா எண் 32058—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு புதியக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**கிளை அச்சகங்கள் நிறுவுதல்**

**வினா எண் 30378—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மாவட்டம்தோறும் அரசிதழ்களை அச்சிட கிளை அச்சகங்கள் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட அரசிதழ்கள் மதுரை, புதுக்கோட்டை, சேலம், திருச்சி மற்றும் விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு கிளை அச்சகங்களில் அவ்வச்சகங்கள் அமைந்துள்ள மாவட்டத்தை ஒட்டியுள்ள பிற மாவட்டங்களை ஒருங்கிணைந்து அந்தந்த மாவட்ட அரசிதழ்கள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இந்நிலையில் இப்போதுள்ள அச்சகங்கள் போதுமானதாக உள்ளதாலும், இவ்வச்சகங்கள் நவீனமயமாக்கப்பட உள்ளதாலும் மாவட்டந்தோறும் தொழில் அரசிதழ்களை அச்சிட கிளை அச்சகங்கள் நிறுவ வேண்டிய தேவை ஏற்படவில்லை.

89—

**கழிவு இயந்திரங்களை ஏலம் விடுதல்**

**வினா எண் 30489—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் நீண்டகாலமாக பயன்படாத நிலையிலுள்ள இயந்திரங்களை ஏலம் விட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் :**

(அ) இத்துறையில் உள்ள இயந்திரங்களின் உழைக்கும் காலம் அவற்றின் புத்தக மதிப்பு, அவற்றைப் பழுதுபார்க்க செய்யப்பட்டச் செலவு மற்றும் அவற்றின் தற்போதைய செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு இயந்திரங்கள் கழிவு செய்யப்படுகின்றன. கழிவு



செய்யப்பட்ட இயந்திரங்கள் விதி முறையினைப் பின்பற்றி பொது ஏலத்தில் விடப்படுகின்றன.

(ஆ) உபயோகமற்ற பண்டகப் பொருட்கள் மற்றும் கழித்தொழிக்கப்பட்ட இயந்திரங்கள் 10-2-1999, 24-3-1999 மற்றும் 14-7-1999 ஆகிய தேதிகளில் பொது ஏலத்தில் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. மீதமுள்ள கழித்தொழிக்கப்பட்ட இயந்திரங்களை பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

90—

**மூன்று சக்கர மிதிவண்டி வழங்குதல்**

**வினா எண் 29495—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர மிதி வண்டி வழங்குவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 வரை ஆண்டுக்கு 1,000 மூன்று சக்கர சைக்கிள் என்றிருந்ததை 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளில் ஆண்டுக்கு 1,500 மூன்று சக்கர சைக்கிள்கள் என அதிகரித்து வழங்கப்பட்டன. 1999-2000 ஆண்டில் 2,000 மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு அதிகப்படுத்தப்படுகிறது. அதேவேளையில் மூன்று சக்கர சைக்கிளின் தேவையும் அதிகரிப்பதால் அந்தந்த ஆண்டும் ஊனமுற்றோரை இனம் கண்டு தேவைப் பட்டியல் தயார் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

(ஆ) இனி வரும் காலங்களில் காலதாமதத்தை தவிர்க்க முன்கூட்டியே தேவைப் பட்டியல் தயார் செய்து அதனடிப்படையில் மூன்று சக்கர சைக்கிள் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

91— [2000 மார்ச் 3

## உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 24188—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த அனைத்து ஏழை குழந்தைகளுக்கும் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த அனைத்து ஏழைக் குழந்தைகளுக்கும் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் உதவித் தொகை வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 50,920-க்குக் கீழ் இருப்பின் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்/மாணவியர்களுக்கு மைய அரசின் கல்வி உதவித் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு உட்பட்டு இருப்பின் மேற்கண்ட மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற முடியாத மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு மாநில கல்வி உதவித் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

92—

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

**வினா எண் 28702—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை ஆதிதிராவிடர் விடுதிகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1075 விடுதிகள் உள்ளன. அவை 731 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள்; 344 மாணவியர் விடுதிகள் ஆகும்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 33 ஆதிதிராவிடர் நல விடுதிகள் உள்ளன. அவை 22 ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர் விடுதிகளும், 8 பள்ளி மாணவியர் விடுதிகளும், 2 கல்லூரி மாணவர் விடுதிகளும், 1 கல்லூரி மாணவியர் விடுதியுமாகும்.

93—

## கிராமிய நூற்பு நிலையம்

**வினா எண் 29813—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, கிராமிய நூற்பு நிலையத்திற்குப் போதுமான பஞ்சு வழங்காததால் அடிக்கடி செயல்படாமல் இருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கிராமிய நூற்பு நிலையம் வருடம் முழுவதும் இயங்கத் தேவையான பஞ்சு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை கிராமிய நூற்பு நிலையத்திற்கு சிட்ட உற்பத்திக்குத் தேவையான பஞ்சு தட்டுப்பாடின்றி தமிழ்நாடு கதர் கிராமியத் தொழில் வாரியத்தால் வழங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராமிய நூற்பு நிலையம்

[2000 மார்ச் 3

கடந்த செப்டம்பர் 1999 இல் 10 நூற்பாளர்களைக் கொண்டு 4025 சிட்டங்கள் உற்பத்தி செய்துள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

94—

**மட்பாண்டம் உற்பத்தியாளர் சங்கத் தொழிற்கூடங்கள் புதுப்பித்தல்**

**வினா எண் 30081—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரத்தில் மட்பாண்டம் உற்பத்தியாளர் சங்கத்திற்கு உட்பட்ட தொழிற்கூடங்கள் பழுதடைந்திருப்பதால் அவற்றைப் புதுப்பிக்க அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

13-3-1960-ல் 80 உறுப்பினர்களோடு ஆரம்பிக்கப்பட்ட சுந்தரபாண்டியபுரம் மட்பாண்ட உற்பத்தியாளர் சங்கம் கடந்த மூன்றாண்டுகளாக உற்பத்தி மற்றும் விற்பனை ஏதும் நடைபெறாமல் உள்ள காரணத்தினாலும், இச்சங்கத்திற்கு 1994-95 ஆம் ஆண்டில் ரூ.1,26,716.55 நட்டம் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் மேற்படி சங்கத்தினை செயல்படுத்த வாரியம் எடுத்த முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லையாதலாலும் அச்சங்கத்தினைச் சார்ந்த பழுதடைந்திருக்கும் தொழிற்கூடங்களைப் புதுப்பிக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

**ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**

**வினா எண் 31018—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 60 வயதுக்கு மேற்பட்ட மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) 60 வயதுக்கு மேற்பட்ட மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

96—

**புதிய தொழிற்கூடம் அமைத்தல்**

**வினா எண் 31592—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் மட்பாண்டத் தொழிற்கூடம் பழுதடைந்துள்ளது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அல்லது புதிய தொழிற்கூடம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுந்தரபாண்டியபுரத்திலுள்ள மட்பாண்ட தொழிற் கூட்டுறவு சங்கம் செயல்படாமல் உள்ளது. இச்சங்கத்தில் கடந்த 3 ஆண்டுகளாக உற்பத்தி மற்றும் விற்பனை ஏதும் நடைபெறவில்லை. மேற்படி சங்கத்தினைச் செயல்படுத்த வாரியத்தால் எடுக்கப்பட்ட முயற்சிகள் ஏதும் பலனளிக்கவில்லையாதலால் அங்குள்ள பணிக்கூடத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

**மூங்கில் பொருட்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி**

**வினா எண் 31634—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் கதர், பட்டு ரகங்கள், கைமுறை காகித வகைகள், தோல் பொருட்கள், தேன், நார் மற்றும் மூங்கினால்

[2000 மார்ச் 3

செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தற்பொழுது இண்டர்நெட் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விவரம், விலை, தரம் ஆகியவை உலகெங்கும் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்றுமதி குறித்து தேவை நமூனாக்கள் பெறப்படின், அப்பொருட்களை மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மூலம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட வாய்ப்புள்ளது.

98—

**அணைக்கட்டுகளில் மீன்களின் அளவு**

**வினா எண் 28227—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99-ல் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1 மற்றும் 2 அணைக்கட்டுகளில் துறையின் மூலமாகப் பிடித்த மீன்களின் அளவு எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைத்த இலாபம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) கீழே குறிப்பிட்டுள்ள நீர்த் தேக்கங்களில் 1998-99 ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன்களின் எடை விவரங்கள் கீழ்வருமாறு:-

| | |
|---|---|
| பேச்சிப்பாறை | 10,810 டன்கள் |
| பெருஞ்சாணி | 319 டன்கள் |
| சிற்றாறு 1 மற்றும் 2 | 3,716 டன்கள் |
| | 14,845 டன்கள் |



2000 மார்ச் 3]

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைத்த வருவாய் விவரம் பின்வருமாறு:-

| நீர்த்தேக்கத்தின் பெயர் (1) | வருவாய் (2) |
|---|---|
| பேச்சிப்பாறை | ரூ. 1,30,269.00 |
| பெருஞ்சாணி | ரூ. 3,815.00 |
| சிற்றாறு 1 மற்றும் 2 | ரூ. 44,042.00 |
| | ரூ. 1,78,126.00 |

99—

**மீன் பிடிப்போருக்கு இலவச வீடுகள்**

**வினா எண் 29296—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ சேலம் மாவட்டம், மேட்டூர் வட்ட காவேரி ஆற்றில் மீன் பிடிப்பவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99ஆம் ஆண்டில் "இந்திரா அவாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு காவேரிபுரம் ஊராட்சியில் 10, கூனாண்டியூர் ஊராட்சியில் 10, ஆக 20 வீடுகள் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனீட்டாளருக்கும் வழங்கப்பட்டுவிட்டன. நடப்பு நிதியாண்டிலும் இதே திட்டத்தில் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் ஒதுக்கீடு செய்வதற்காக 103 விண்ணப்பங்கள் மீனவர்களிடமிருந்து மேட்டூர், மீன் துறை உதவி இயக்குநரால் பெறப்

பட்டு, சேலம் ஊரக வளர்ச்சி முகமை, திட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூனாண்டியூர் ஊராட்சியில் 10 வீடுகள் 1999-2000-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

100—

### மீன் குஞ்சு உற்பத்தி

**வினா எண் 29346—திரு. ஏ.கே.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், லால் பேட்டையில் உள்ள மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் ஆண்டு உற்பத்தி எவ்வளவு?

(ஆ) இதன் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டு உற்பத்தி (வருடவாரியாக)

| ஆண்டு | நுண் மீன் குஞ்சு உற்பத்தி இலக்கு | நுண் மீன் குஞ்சு உற்பத்தி சாதனை |
|---|---|---|
| | (இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) |
| 1994-1995 | 150.00 | 162.50 |
| 1995-1996 | 175.00 | 140.00 |
| 1996-1997 | 150.00 | 150.00 |
| 1997-1998 | 150.00 | 100.25 |
| 1998-1999 | 150.00 | 48.00 |



(ஆ) ஆண்டு வருமானம் (வருடவாரியாக)

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகளின் மதிப்பு (ரூபாய்) |
|---|---|
| 1994-1995 | 1,31,300.00 |
| 1995-1996 | 1,21,800.00 |
| 1996-1997 | 1,31,575.00 |
| 1997-1998 | 1,27,800.00 |
| 1998-1999 | 33,600.00 |

உற்பத்தி செய்யப்பட்ட நுண் மீன் குஞ்சுகள் நாற்றங்கால்களில் இருப்பு செய்யப்பட்டு விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்த்தெடுக்கப்பட்டதின் விவரம்

| ஆண்டு | இருப்பு செய்யப் பட்டது | வளர்த் தெடுத்தது | அவற்றின் மதிப்பு |
|---|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1993-1994 | 58.70 | 7.12 | 2.17 |
| 1994-1995 | 57.00 | 10.51 | 3.14 |
| 1995-1996 | 44.50 | 4.15 | 1.25 |
| 1996-1997 | 24.50 | 1.76 | 0.53 |
| 1997-1998 | 58.25 | 4.38 | 1.31 |

## நான்காம் பட்டியல்

1—

### திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள்

**வினா எண் 15961—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்களை உடனடியாக 'சி' படிவம் சமர்ப்பிக்காவிட்டால் 10 சதவிகித வரி மற்றும் தண்டத் தொகை வசூலிப்போமென விற்பனை வரி அதிகாரிகள் நிர்பந்தித்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1-4-1996 முதல் 4-3-1997 வரையிலான காலத்திற்கு விற்பனைக்கு 'சி' படிவம் சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களிக்க அரசு உத்தரவிடுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பனியன் உற்பத்தியாளர் சங்கத்தினரின் கோரிக்கை அரசினால் பரிசீலனை செய்யப்பட்டு 1-4-1996 முதல் 4-3-1997 வரை நடைபெற்ற வெளி மாநில பனியன் விற்பனைக்கு 'சி' மற்றும் 'டி' படிவம் தாக்கல் செய்வதிலிருந்து விலக்களித்து 21-7-1999 நாளிட்ட அரசு கடிதம் எண் 8353/சி1/98-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

2—

### கழிப்பறை வசதி

**வினா எண் 19682—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி காவல் நிலையத்தில் போதிய கழிப்பறை வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக புதிய கழிப்பறை கட்ட அரசு முன் வருமா?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி, எடப்பாடி காவல் நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 763, உள் துறை, நாள் 1-6-1999-ல் அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பழைய கட்டடத்தை இடிக்கும் பணி நிறைவு பெற்றதும் புதிய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. எனவே, கழிப்பறை கட்ட தனி கருத்துரு தேவையில்லை.

3—

### சிப்காட் தொழிற்பேட்டை

**வினா எண் 21284—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, கீழ் எடையானம் கிராமத்தில் உள்ள சுமார் 1,000 ஏக்கர் புஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தி சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி எடையானம் கிராம எல்லையில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

4—

### பங்குகள் விற்பனை

**வினா எண் 21974—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுத் துறை நிறுவனங்களில் 26 சதவிகிதம் தவிர மற்ற பங்குகளை விற்றுவிடுவது என்ற மத்திய அரசின் கொள்கை குறித்து மாநில அரசு கருத்து தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) பொதுத் துறை நிறுவனங்களில் 26 சதவிகிதம் தவிர மற்ற பங்குகளை விற்றுவிடுவது என்ற மத்திய அரசின் கொள்கை குறித்து மாநில அரசு இதுவரை கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

5—

**மது விற்பனை**

**வினா எண் 22625—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் கட்டுப்பாட்டை மீறி வெளிநாட்டு மதுக்கடைகளில் கள்ளச்சாராயம் விற்பனை செய்வதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினை அரசு மீண்டும் ஏற்படுத்தி உள்ளது. மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் போலி/இரண்டாம் தர மதுவகைகளின் விற்பனையைத் தடுப்பதற்கு, கடைகளை முறைப்படி சோதனை செய்வதற்கு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படும் கள்ளச்சாராய விற்பனையைத் தடை செய்யும் நோக்குடனும், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் தொடர்புடைய விதிகளை அரசு திருத்தியுள்ளதோடு, சட்டத்தை மேலும் கடுமையாக்கியுள்ளது.

6—

**கலப்புத் திருமணங்கள்**

**வினா எண் 23492—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலைமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 மற்றும் 1998 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற கலப்புத் திருமணங்கள் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1997 ஆம் ஆண்டில் 7,868-ம் மற்றும் 1998 ஆம் ஆண்டில் 7,307-ம் ஆக மேற்குறித்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 15,175 கலப்புத் திருமணங்கள் பதிவாகியுள்ளன.

7—

**குழந்தைகள் பராமரிப்பு**

**வினா எண் 23870—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 24 மணி நேரமும் பணியில் உள்ள போலீஸ்காரர்களால் தங்களுடைய குழந்தைகளைச் சரியாக பராமரிக்க முடியவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அக்குழந்தைகளுக்கு சிறப்பான தனிப் பள்ளி, கல்லூரி ஏற்படுத்த அரசு முயலுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு காவலர் சேமநல நிதி மற்றும் தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்விக் கொடை நிதி ஆகியவற்றிலிருந்து தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் முதல் உதவி ஆய்வாளர் பதவியிலுள்ளோரின் பிள்ளைகள், கீழ்க்காணும் கல்வி பயில கல்விக்கொடை அதற்கெதிரே குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| படிப்பின் விவரம் | | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு பயில்வோருக்கு | - | ரூ.500/- |
| பட்டப் படிப்பு/ஐ.டி.ஐ. பயில்வோருக்கு | - | ரூ.2000/- |

[2000 மார்ச் 3

பட்ட மேற்படிப்பு/பட்டயப் படிப்பு பயில்வோருக்கு .. ரூ.3000/-

பொறியியல், மருத்துவம் மற்றும் இதர தொழில் கல்வி பயில்வோருக்கு .. ரூ.5000/-

2. ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும்/நகரத்திலும் ஒவ்வொரு ஆண்டும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும், தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் முதல் ஆய்வாளர் வரை பதவியிலுள்ளோரின் பிள்ளைகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

3. ஒவ்வொரு ஆண்டும் பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் அரசுத் தேர்விலும் தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்வி படிப்பில் சேரும் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் முதல் ஆய்வாளர் வரை பதவியில் உள்ளோரின் பிள்ளைகளில் முதல் ஆறு இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு கல்விக் கொடை வழங்கப்படுகிறது.

முதல் இடத்தைப் பெறும் மாணவருக்கு .. ரூ.40,000
(ஆண்டு ஒன்றுக்கு ரூ.10,000 வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.)

2 ஆம் இடம் முதல் 6 ஆம் இடம் வரை வரும் மாணவர்களுக்கு தலா .. ரூ.20,000
(ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.)

4. மேற்கூறியவாறு கல்விக் கொடை/பரிசுத் தொகை வழங்கப்படுவதால், தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் மற்றும் அதிகாரிகளின் பிள்ளைகளுக்கு என தனிப் பள்ளி, கல்லூரி ஏற்படுத்தும் எண்ணம் தற்போது அரசிற்கு இல்லை.

8—

### மதுக் கடைகள் ஏலம்

**வினா எண் 23882—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு நிதியாண்டில் தமிழ்நாட்டில் நீதிபதிகள் முன்னிலையில் மதுக் கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கடைகள் ஏலம் விடப்பட்டன?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி எந்த ஒரு மதுபான சில்லறை விற்பனை கடையும் நீதிபதிகள் முன்னிலையில் 1998-1999-ல் ஏலம் விடப்படவில்லை.

9—

### தீ விபத்து

**வினா எண் 23893—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 மற்றும் 1998 ஜூன் மாதம் முடிய தீ விபத்தில் இறந்த ஆண்கள் மற்றும் பெண்கள் எத்தனை பேர்?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997 மற்றும் 1998 ஜூன் மாதம் முடிய உள்ள காலத்தில் தீ விபத்தில் இறந்த ஆண்/பெண் விவரம் கீழ்க்கண்டவாறு:

| ஆண்டு | தீ விபத்தில் இறந்தவர்கள் விவரம் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 1997 (1-1-1997 முதல் 31-12-1997 முடிய) | 79 | 108 |
| 1998 (1-1-1998 முதல் 30-6-1998 முடிய) | 27 | 17 |

10—

### காவல் நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 23976—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

தர்மபுரி தொகுதி, மதிகோன் பாளையம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தர்மபுரி தொகுதி, மதிகோன்பாளையத்தில் காவல் நிலையம் கட்டத் தேவையான நிலம் காவல் துறை வசம் இல்லை. தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்ய தர்மபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் காவல் துறை தலைமை இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளார். நில ஆர்ஜிதம் செய்தபின் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

**காவலர் குடியிருப்பு**

**வினா எண் 24444—திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி காவல் நிலையக் காவலர்களுக்கு குடியிருக்க காவலர் குடியிருப்பு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆயக்குடி காவல் நிலையத்தில் பணிபுரியும் 23 பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்ட காவல் துறை வசம் நிலமில்லை. நிலம் கையகப்படுத்திய பின்னர் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

**தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடங்கள்**

**வினா எண் 25454—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை, செங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டத் தேவையான நிலம் தேர்வு செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



(இ) ஆம் எனில், எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சுரண்டை தீயணைப்பு நிலையத்திற்கு பங்களா சுரண்டையில் 1½ ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் இந்நிலம் வருவாய்த் துறையினரால் தீயணைப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, இதற்குப் பதிலாக சுரண்டை 2-வது கிராமம் சர்வே எண் 962/1-ல் 0.98 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செங்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 10 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பெற்று, நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் ஒதுக்கீடு செய்து, பெறப்பட்டதும், அரசின் நிதிநிலைக்கேற்ப கட்டடங்கள் கட்ட உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

**களவுபோன பொருட்களின் மதிப்பு**

**வினா எண் 25997—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் (1998) திருட்டுப் போயுள்ளதாக காவல் நிலையங்களில் புகார் பதிவாகி உள்ள பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றில் எவ்வளவு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 31-12-1998 தேதி முடிய புகார் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டவை 1,111 இனங்கள். களவுபோன பொருட்களின் மதிப்பு ரூ. 1,67,89,975.

[2000 மார்ச் 3

(ஆ) அவற்றுள் 31-03-1999 வரையில் ரூ. 1,40,66,508 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இனம் வாரியாக மீட்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றின் மதிப்பு கீழே தரப்பட்டுள்ளன:—

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | இரண்டு சக்கர மோட்டார் வாகனங்கள் (274) | .. | 60,14,000 |
| 2. | நான்கு சக்கர வாகனங்கள் (18) | .. | 44,72,500 |
| 3. | தாலிக்கொடி மற்றும் தங்க நகைகள் | .. | 6,20,800 |
| 4. | தொலைக்காட்சிப் பெட்டிகள் (6) | .. | 1,24,500 |
| 5. | இதர வகைகள் | .. | 26,77,374 |
| 6. | மிதி வண்டிகள் (59) | .. | 92,750 |
| 7. | மின்சார மோட்டார் | .. | 49,000 |
| 8. | மின்சார கம்பித் திருட்டுகள் | .. | 14,584 |
| 9. | தொலைபேசி கம்பித் திருட்டு | .. | 1,000 |
| | மொத்தம் | .. | **1,40,66,508** |

**14—**

**கள்ளச் சாராய விற்பனையைத் தடுத்தல்**

**வினா எண் 27671—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில், தமிழகத்தில் கள்ளச் சாராயம் அருந்தி உயிர் இழந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எந்த மாவட்டத்தில் கள்ளச் சாராயம் அதிகம் விற்பனை செய்யப்படுகிறது?

(இ) கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் நடந்த 9 சம்பவங்களில் மொத்தம் 76 நபர்கள் உயிர் இழந்துள்ளனர்.

(ஆ) குறிப்பாக, இம்மாவட்டத்தில்தான் கள்ளச் சாராயம் அதிகம் விற்பனை செய்யப்படுகிறது என்பதனை தனித்துக் கூறுவது என்பது இயலாத ஒன்றாகும்.

(இ) கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். கள்ளச் சாராயத்தை தடுக்கும் நோக்கத்தோடு 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4, 5, 7 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவிலக்குக் குற்றங்களுக்காக 3 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ. 10,000 வரை அபராதமும் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயம் விற்கப்படுவதாகக் கருதப்படும் கிராமங்களில் தொடர்ந்து மதுவிலக்குச் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கள்ளச் சாராயம் அருந்தி உயிர் இழந்ததற்கு, அந்தப் பகுதியில் உள்ள மாவட்ட காவல் துறை மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவு அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கிராமங்களில் விழிப்புணர்வு கமிட்டிகள் அமைக்கப்பட்டு, கள்ளச் சாராயம் காய்ச்சல்/ விற்றல் ஆகியவற்றினைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது மற்றும் விற்பனை செய்வதை அடியோடு ஒழிக்கவும், போலி மற்றும் இரண்டாம் தர மதுபானத்தை ஒழிக்கவும் 86 மதுவிலக்கு அமலாக்க அலகுகளைக் கொண்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, இம்மாநிலத்தில், 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கள்ளச் சாராய இறப்புகள் அனைத்தும், மெத்தில் ஆல்கஹால் தொடர்புடையதாக உள்ளன. எனவே, மெத்தில் ஆல்கஹால் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களின் மீதான கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மெத்தில் ஆல்கஹால் மைய அரசு சட்டத்தின்கீழ் வருவதால், இதைக் குடிப்பதற்கு இயலாததாக்கும் பொருட்டு, கசப்புத் தன்மையை சேர்த்து, நிற மாற்றம் செய்திட இந்திய

பிரதமருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறான சிறப்பு நடவடிக்கைகளால், தமிழகத்தில், கள்ளச் சாராய வியாபாரம் நடைபெறுவது வெகுவாக தடுக்கப்பட்டுள்ளது.

**15—**

### கட்டடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 27828—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம, எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள காவல் நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையம் உட்பட 20 காவல் நிலையங்களுக்கு ரூ. 4.62 கோடி செலவினத்தில் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான வேலை பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**16—**

### காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 27861—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடியில் உள்ள காவல் நிலையம் எந்த வருடம் கட்டப்பட்டது?

(ஆ) காவல் நிலையத்தின் கட்டடம் எந்த நிலையில் உள்ளது?





விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி காவல் நிலையக் கட்டடம் பொதுப்பணித் துறை கட்டடங்கள் பற்றிய பதிவேட்டில் பதிவு பெறாமையால் கட்டடம் கட்டப்பட்ட வருடம் தெரியவில்லை. இக்கட்டடம் 1922 ஆம் வருடம் முதல் காவல் துறை பராமரிப்பில் இருந்து வருகிறது. எடப்பாடி காவல் நிலையக் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாக இருப்பதால், அதற்குப் பதில் புதிய காவல் நிலையக் கட்டடம் கட்ட அரசாணை எண் 763, உள் துறை, (காவல்-10), நாள் 1-6-1999-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டும் பணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**17—**

### குடியிருப்புகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 28277—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் காவலர் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், அதைச் செப்பனிட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் காவலர் குடியிருப்புகளில் பழுதுபார்க்கும் பணிகள் 2000-2001 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

18—

## கட்டட வசதி

**வினா எண் 31174—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் காவல் நிலையத்திற்கு கட்டட வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்ட ஏரியூர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண் 694, உள் துறை, நாள் 5-6-1998-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

19—

## மதுக் கடைகள் ஏலம்

**வினா எண் 31528—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை மதுக் கடைகள் ஏலம் விடப்பட்டன?

(ஆ) அவற்றின் மூலம் 1997-98-ல் மாநில அரசிற்கு வந்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் மொத்தம் 525 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கடைகளில் 479 கடைகள் புதுப்பிக்கப்பட்டன. இதன் மூலம்





ரூ. 39,78,35,668 வருவாய் கிடைத்தது; மற்றும் 46 கடைகள் நியமன அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டன. இதன் மூலம் மாநில அரசிற்கு ரூ. 1,15,74,780 வருமானம் கிடைத்தது.

20—

## மதுபானக் கடைகள் உரிமம்

**வினா எண் 31530—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மதுபானக் கடைகள் உரிமம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) எவ்வளவு ரூபாய்க்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டத்தில் மொத்த மதுபானக் கடைகள் 75-ல் 1999-2000 ஆம் ஆண்டில் 36 கடைகளுக்கு உரிமம் புதுப்பிக்கப்பட்டது. அவ்வாறு உரிமம் புதுப்பிக்கப்பட்டதன் வாயிலாக மொத்தம் ரூ. 10,75,77,900 வருமானம் கிடைத்துள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 10 கடைகள் ஏலத்தில் விற்கப்பட்டு ரூ. 2,65,09,000 வருமானம் கிடைத்தது. ஆகவே, மொத்தம் 46 கடைகளின் மூலம் அரசிற்கு ரூ. 13,40,86,900 வருவாய் கிடைத்தது.

21—

## பணியாளர்களின் எண்ணிக்கை

**வினா எண் 31792—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை தீயணைப்பு நிலையத்திற்கு போதுமான பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், 21 பேராக உயர்த்தித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தக்கலை தீயணைப்பு நிலையம் ஓர் ஒற்றை ஊர்தி தீயணைப்பு நிலையமாகும். இந்நிலையத்திற்கு முன்னணி தீயணைப்போர்-2, தீயணைப்போர் ஓட்டி-2 மற்றும் தீயணைப்போர்-6 ஆக மொத்தம் 10 பணியிடங்கள், 10-10-1980 நாளிட்ட அரசாணை நிலை எண் 2661-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணியாளர்களைக் கொண்டு இந்நிலையம் தற்பொழுது நன்கு செயல்பட்டு வருகிறது. எனவே, ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையை 21 ஆக உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**22—**

**ஈப்பு வழங்குதல்**

**வினா எண் 31805—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈப்பு வைத்துக்கொள்ள தகுதியுள்ள காவல் துறை அதிகாரிகள் 10 பேருக்கு ஈப்பு வழங்க அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாகனங்கள் வைத்துக்கொள்ள தகுதியுள்ள காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் வாகனம் வழங்கப்பட்டுள்ளன.

**23—**

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 31914—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, பாளையம் கிராமத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓரிடத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அந்தப் பகுதியில் மக்கள் தொகை 50,000-க்கு மேற்பட்டிருக்க வேண்டும் என்பது புதிதாக தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த கடைபிடிக்கப்பட்டு வரும் அளவுகோல்களில் ஒன்றாகும். பாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் மக்கள் தொகை 8,718 ஆகும். மேலும், கடந்த மூன்றாண்டுகளில் மிகக் குறைந்த தீ விபத்து அழைப்புகள், அதாவது 3 மட்டும் ஏற்பட்டுள்ளது. எனவே, பாளையத்தில் புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**24—**

**பணி நியமனம்**

**வினா எண் 33232—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயணைப்புத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு எப்போது பணி நியமனம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அரசு ஆணை எண் 1677, உள் (காவல்-3) துறை, நாள் 20-12-1999-ல் 1057 தீயணைப்போர் பதவிக்கான காலியிடங்களுக்கு மாநில அளவில் ஆட்கள் தேர்ந்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்திற்கு அனுமதியளித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கிடையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்தினால் மேற்படி 1057 தீயணைப்போர் காலியிடங்களுக்கு ஆட்கள் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமத்தினால் ஆட்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டதும், காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

25— [2000 மார்ச் 3

### கூடுதல் இடைநிலை ஆசிரியர்கள் நியமித்தல்

**வினா எண் 19201—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 525, பள்ளிக் கல்வி நாள் 29-12-1997-ல் புதிதாக வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பெரும்பாலை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்புகளின் பிரிவுகளின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் இடைநிலை ஆசிரியர் வழங்குவது குறித்து அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பரிசிலனை செய்யப்படும். தற்போது அப்பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

26—

### தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்

**வினா எண் 21803—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இலாபகரமாக நடத்துவதற்கு அரசு எடுத்து வரும் முயற்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவர்களுக்கு மலிவான விலையில் தரமான புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தமிழ்நாடு



2000 மார்ச் 3]

பாடநூல் நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதில் இலாப நட்ட நோக்கம் கிடையாது. மேலும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகவும், 6 முதல் 8 வரை மதிய உணவு அருந்துவோருக்கு இலவசமாகவும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இதன் முழு செலவையும் அரசு ஏற்கிறது. இச்சூழலில், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு இலாப நட்ட கணக்கு பார்ப்பது பொருத்தமாகாது.

27—

### கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 22427—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள அரசு மகளிர் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தற்சமயம் எவ்வளவு மாணவர்/மாணவிகள் பயின்று வருகிறார்கள்?

(ஆ) மாணவ, மாணவிகள் படிப்பதற்கு புதியதாக கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்**

(அ) எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் எண்ணிக்கை 1922.

எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கை 2093.

(ஆ) நடப்பு நிதியாண்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடில்லை. ஆதலால் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மகளிர் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டட வசதி செய்ய சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

28— [2000 மார்ச் 3

**காலிப் பணியிடங்கள்**

**வினா எண் 31692—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புல்லுக்காட்டுவலசை அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள தமிழாசிரியர் பணியிடம் கடந்த ½ ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், புல்லுக்காட்டுவலசை, அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாக இருந்த தமிழாசிரியர் பணியிடம் 6-12-1999 அன்று நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டது.

29—

**மின்சாரம் தயாரித்தல்**

**வினா எண் 25447—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் கிடைக்கும் தேங்காய் மட்டை, ஓடு மற்றும் தென்னை கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் கிடைக்கும் தேங்காய் கழிவுகளில் இருந்து மின்சாரம் 'தயாரிக்க திட்டம் எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.



2000 மார்ச் 3]

30—

**மருத்துவர் நியமனம்**

**வினா எண் 28925—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம், கல்லபாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மருத்துவர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குடியாத்தம், கல்லபாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை இரண்டாகும். தற்போது முதுநிலை குடிமை மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்துள்ளார். மற்றொரு பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடம் விருப்பத்தின்பேரில் கேட்கப்படும் மாறுதலின் மூலம் நிரப்பப்பட்டுவிடும் அல்லது தேர்வாணைக் குழு மூலம் தேர்வு பெற்று வரும் மருத்துவ அலுவலர் மூலம் நிரப்பப்பட்டுவிடும்.

31—

**மகளிர் மருத்துவர்**

**வினா எண் 29657—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் தாய்-சேய் நலப் பிரிவிற்கு மகளிர் மருத்துவரையே நியமனம் செய்யும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் தாய்-சேய் நலப் பிரிவிற்கு மகளிர் மருத்துவரே நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

32—

### துணை மின் நிலையம்

**வினா எண் 30917—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தமங்கலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தமங்கலம் கிராமத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டு, பொது கட்டுமான வட்டம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்கெனவே 1999-2000 நிதியாண்டிற்கான பணிகள் முடிவு செய்யப்பட்ட நிலையில், சாத்தமங்கலம் 110/22 கே.வி. துணை மின் நிலையப் பணிகள் அடுத்த நிதியாண்டில் (2000-2001) சேர்க்கப்படும்.

மேற்படி மின் நிலைய பணிகள் 4/2000-ல் தொடங்கப்பட்டு 2000-2001-ல் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



33—

### சுகாதார உதவியாளருக்கு பதவி உயர்வு

**வினா எண் 31162—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது சுகாதாரத் துறையில் பணியாற்றிவரும் பயிற்சி பெற்ற சுகாதார ஆய்வாளர்களுக்கு வழங்க வேண்டிய சுகாதார மேற்பார்வையாளர் பதவி உயர்வு, ஊராட்சி ஒன்றிய சுகாதார உதவியாளருக்கும் வழங்கப்படுவது உண்மையா?

(ஆ) அது பற்றி விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றி வந்த அனைத்து ஊராட்சி ஒன்றிய சுகாதார உதவியாளர்களும் அரசு ஆணை எண் 1930, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-1982-ன் மூலம் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். மேலும், பலநோக்கு சுகாதாரத் திட்டம் அரசு ஆணை எண் 2152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 4-11-1988-ன்படி அமல்படுத்தப்பட்டபோது, ஊராட்சி ஒன்றிய சுகாதார உதவியாளர்கள் அனைவரும் பலநோக்கு சுகாதார மேற்பார்வையாளர்களாக பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஊராட்சி ஒன்றிய சுகாதார உதவியாளர்களுக்கு தனியாக பதவி உயர்வு ஏதும் வழங்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியத்தில் சுகாதார உதவியாளர் என்ற பதவி தற்போது இல்லை.

34—

### மின் கம்பங்கள்

**வினா எண் 31959—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வட மதுரை ஒன்றியம் பாடியூர் ஊராட்சியில், 'இ' புதூர் சாலையிலுள்ள மின் கம்பங்கள், சாலையில் நெருக்கமாக அமைந்துள்ளதை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வேடசந்தூர் தொகுதி, வட மதுரை ஒன்றியம், பாடியூர் ஊராட்சியில் 'இ' புதூர் சாலையில் பேருந்து செல்வதற்கு இடைஞ்சலாக உள்ள ஒரு மின் கம்பத்தை மாற்றி, சாலையோரத்தில் அமைத்திடத் தேவையான விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டு தொகை ஆகியவற்றை தலைவர், பாடியூர் பஞ்சாயத்து அவர்களிடமிருந்து பெறப்பட்டு உடனடி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

35—

### மின் அழுத்தக் குறைவு

**வினா எண் 31989—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டம், தென்காசி ஒன்றிய பகுதியான சில்லறைபுரவு ஊராட்சி மன்ற பகுதி குறுக்கிட்டானூர் கிராமத்தில் (குறுக்கிட்டானூர் எஸ்.எஸ்.-1) மின் அழுத்தக் குறைவினைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம், சில்லறைபுரவு ஊராட்சி குறுக்கிட்டானூர் கிராமத்தில் மின் மாற்றி எண்-1 பகுதியிலுள்ள மின்னழுத்தக் குறைவைப் போக்கிட மேம்பாட்டுப் பணிகட்கான மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 31-1-2000-க்குள் இப்பணி முடிக்கப்படும்.



36—

### மின் அழுத்தக் குறைவைப் போக்குதல்

**வினா எண் 31990—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி 7-வது வார்டு மோட்டை கிராமத்தில் ஏற்படுகின்ற மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி 7-வது வார்டு மோட்டை கிராமத்தில் மின்னழுத்தம் திருப்தியாக உள்ளது. தற்சமயம் ஒருமுனை மின்னழுத்தம் 215 வோல்ட் ஆக உள்ளது.

37—

### மின் அழுத்தக் குறைவு

**வினா எண் 31991—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வல்லம் கிராமத்தில், மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வல்லம் கிராமத்தில் மின்னழுத்தம் திருப்தியாக உள்ளது. தற்சமயம் ஒருமுனை மின் அழுத்தம் 200 வோல்ட் ஆக உள்ளது.

38—

[2000 மார்ச் 3

### மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 32033—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகரில் இயங்கி வரும் அரசு சித்த மருத்துவமனைகளுக்கு அரசு மருத்துவமனை வளாகத்தில் தனிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனை இயங்கும் கட்டடத்தில் சித்தா மருத்துவப் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட அறையில் சித்தா மருத்துவப் பிரிவு 18-7-1997-ல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப மேற்படி சித்தா மருத்துவப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட, பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39—

### நிவாரணத் தொகை

**வினா எண் 27234—திரு. டி. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 1998 நவம்பர், டிசம்பர் மாதம் பெய்த பெருமழையினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை எவ்வளவு?

(ஆ) யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ. 10,97,756.

(ஆ) தோட்டக்கலை பயிர் இழப்பிற்காக பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 795.

வேளாண்மை பயிர் இழப்பிற்காக பயனடைந்தவர்கள் எண்ணிக்கை 1912 ஆக மொத்தம் 2707.

40—

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 27979—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், கல்நார்சாம்பட்டி ஊராட்சி, ஓடை புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், கல்நார்சாம்பட்டி ஊராட்சி, ஓடை புறம்போக்கு நிலத்தில் ஆக்ரமணங்கள் இல்லை. ஆனால், மேற்படி கிராமம் புல எண் 19, வண்டிப் பாதை புறம்போக்கு 1.81.5 எக்டேரில் 46 நபர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டி வசித்து வருகின்றனர். அங்கு உயர்மின் அழுத்தக் கம்பிகள் செல்வதால் ஆட்சேபணையுள்ளவை; அந்நிலத்தில் பட்டா வழங்க இயலாது.

41—

### நிலங்களுக்குப் பட்டா

**வினா எண் 31238—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, டீ கடை, மந்தமேடு ஆகிய ஊர்களில் விவசாயம் செய்துவரும்

புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கோடிஅள்ளி ஊராட்சி, ம கடை, கோடுபள்ளம் மூலலைன் ஆகிய ஊர்களில் வசிக்கும் 76 நபர்களுக்கு அவர்களால் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்துவரும் நிலங்களில் 0.93.0 ஹெக்டேர் நிலமும், மந்தைமேடு கிராமத்தில் இருக்கும் 13 நபர்களுக்கு அவர்களால் சாகுபடி செய்யப்பட்டுவரும் 6.28.5 ஹெக்டேர் நிலமும் மேய்ச்சல் தலை புறம்போக்கு நிலங்களாக கிராமக் கணக்குகளில் வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்துவரும் நபர்களுக்கு பட்டா வழங்குவது குறித்து மேற்படி நிலங்களை புஞ்சை போடுகளாக நில வகை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில வகை மாற்றம் செய்த பின்னர் நில ஒப்படை வழங்க தகுதியின் அடிப்படையிலும், விதிமுறைகளை அனுசரித்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**42—**

### சான்றிதழ்கள்

**வினா எண் 31822—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி, தென்காசி வட்டத்தில் மட்டும் வாழ்ந்து வந்த கிருஷ்ணன் வகை சமுதாய மக்கள் தற்போது வேலை நிமித்தம் தமிழகம் முழுக்க வாழ்ந்து வருவதால், அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு குடிபெயர்ந்து வசித்து வருபவர்களுக்கு, அவர்களின் பூர்வீகத் தன்மை அறிந்து,





அவர்களின் பூர்வீக மாவட்டங்களிலேயே, தக்க விசாரணைக்குப் பின்னர், சாதிச் சான்றிதழ்களை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணன் வகை சமுதாய மக்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும்.

**43—**

### பட்டா மாற்றம்

**வினா எண் 33250—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலம் விற்பனை செய்யும்போது, பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பங்கள் கொடுத்தும் பட்டா மாற்றாமல் இருப்பது அரசுக்குத் தெரிய வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பட்டா மாறுதல் செய்யும்போது உட்பிரிவு இல்லாத பட்டா மாற்றம் 15 நாட்களுக்குள்ளும், உட்பிரிவுடன் கூடிய பட்டா மாற்றம் 30 நாட்களுக்குள்ளும் செய்யப்பட வேண்டும் என அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுகுறித்து அடிக்கடி திடீர் தணிக்கைகள் மற்றும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. இருப்பினும், சில நேர்வுகளில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்கையில் புலத்தின் உட்பிரிவு குறிப்பிடப்படாமல், பிரதான புல எண்ணே பதிவு செய்யப்படுகிறது. பத்திரங்கள் சில அதிகாரம் பெற்ற முகவர்கள் (Power Agents) மூலம் பதிவு செய்யப்படுவதால், சரியான விவரங்கள் குறிப்பிடப்படாமல் உள்ளது. அம்மாதிரி முகவர்களின் விவரங்கள் பத்திரத்தில் குறிப்பிடப்படுவதில்லை. சிலர் தமது அனுபவத்தில் இல்லாத நிலங்களைக் கிரையம் செய்து கொடுக்கின்றனர். அவற்றை கிரையம் பெற்றவரின் அனுபவத்தில் கொண்டுவர இயலாது மற்றும் வருவாய் கணக்குகளில் உள்ள திட்டப் பரப்பிற்கு மாறுபட்டும் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றை நேரடியாக புலத் தணிக்கை செய்த பின்னரே, உண்மை நிலவரம் கண்டறிய நேரிடும். பத்திர அடிப்படையில் பட்டா வழங்க சில இனங்களின் மூலத் தொடர் பத்திரங்கள் சரிபார்க்கப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகிறது. கிரையம் பெற்றவர்கள் சிலர் தொலை தூரத்தில் உள்ள நகரங்களில் வாழ்வதாலும்

[2000 மார்ச் 3

அவர்களின் சரியான முகவரி கிடைக்காமையாலும் பட்டா மாற்றம் செய்ய இயலாத சூழ்நிலை உருவாகிறது. இதனைத் தவிர்த்து, ஒரு சிலர் புறம்போக்கு நிலங்களையும் சேர்த்து பத்திரப் பதிவு செய்து வருகின்றனர். இதன்மீது பதிவுத் துறை நடவடிக்கை எடுப்பதில்லை. மேலும் ஒரே நிலத்தினை வெவ்வேறு நபர்கட்கு கிரையம் செய்து வருவதும் வழக்கத்தில் காணப்படுகிறது. இருப்பினும், அனைத்து விவரங்கள் அடங்கிய பத்திரங்கள் மீது தாமதமின்றி பட்டா மாறுதல் செய்யப்பட்டு வருகிறது.

44—

## இணைப்புப் பாதை அமைத்தல்

**வினா எண் 12770—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி பூலான் குடியிருப்பிலிருந்து திருமலை கோயில் செல்லும் பாதையில் அப்பாகுறிச்சி சாஸ்தா கோவில் செல்ல இணைப்புப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் பேரூராட்சி பூலான் குடியிருப்பிலிருந்து திருமலை கோயில் செல்லும் பகுதியில் சாலை எதுவும் இல்லை. அப்பகுதி புன்னை நிலமாக தனியார் வசம் உள்ளதால் இணைப்புப் பாதை அமைக்க இயலாது.

45—

## பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**வினா எண் 20610—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 மார்ச் 3]

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள நீரில் புளோரைடு கலந்திருப்பதால் அப்பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 1999 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகள் எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்துள்ளது?

(ஆ) இந்தத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 613 ஊரகக் குடியிருப்புகள் புளோரைடால் பாதிக்கப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் 31-3-1998 வரை 56 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 1998-99-ல் 132 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளில் நடப்பு நிதியாண்டில் 52 குடியிருப்புகளுக்கும், 2000-2001-ல் 373 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு ரூ. 650 இலட்சம் நிதி ஒதுக்கீடு மத்திய, மாநில அரசுகளின் பங்கீடு முறையே 50 : 50 என்ற அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.

46—

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 24854—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம் கோதண்டபுரம் ஊராட்சி, அருந்ததிபாளையத்திற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கோதண்டபுரம் ஊராட்சி அருந்ததிபாளையம் இதன் மக்கள் தொகை 500. இக்கிராம குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுடன், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீராதாரப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதரப் பணிகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேற்படி குடியிருப்புக்கான குடிநீர் திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டில் முடித்துப் பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

47—

**ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு குடிநீர் வசதி**

**வினா எண் 24855—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கோதண்டபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.



48—

**தரைப்பாடி குடியிருப்புக்கு குடிநீர் வசதி**

**வினா எண் 24856—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம் இஞ்சிமேடு (மதுரா) தரைபாடி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியத்தினைச் சேர்ந்த இஞ்சிமேடு ஊராட்சி தரைபாடி கிராமக் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் நமத்தோடு மற்றும் 22 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்க சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தரைபாடி கிராம குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, அதன்மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நீராதாரப் பணிகள் முடிவடைந்துள்ளது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் 2001 ஆம் ஆண்டில் முடிவடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அங்கு தற்போது கையிறைப்பான் ஒன்றும், திறந்தவெளி கிணறு ஒன்றும் உள்ளன. அதிலிருந்து இக்கிராம மக்கள் குடிநீர் பெற்று வருகின்றனர்.

49—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 26998—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி கஞ்சல் நத்தம் ஊராட்சி, காமராஜ்பேட்டை கிராம மக்கள் குடிநீர் கஷ்டத்தால் மிகவும் அவதிப்படுவது அரசுக்கு தெரிய வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நடப்பாண்டில் ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல் மற்றும் ஊராட்சி காமராஜர்பேட்டை மேலூரர் மற்றும் குடியிருப்புகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று காமராஜர்பேட்டை மேலூரில் கட்டப்பட்டு இவ்விரு குடியிருப்புகளுக்கும் திட்டம் 1998-99 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு மக்கட் பயனுக்குக் கொண்டுவரப்பட்டு 1-6-1999 முதல் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 30,000 லிட்டர் கொள்ளளவு காமராஜர்பேட்டை மேலூரில் 1998-99 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளதால், நடப்பாண்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான திட்டம் ஏதுமில்லை.

**50—**

## புளோரைடு திட்டம்

**வினா எண் 29232—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மத்திய அரசின் உதவியோடு செயல்படும் தமிழக அரசின் புளோரைடு திட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

(ஆ) திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடித் தொகுதியில் புளோரைடால் பாதிக்கப்பட்ட 193 குடியிருப்புகளில் 31-3-1999 வரை 13 குடியிருப்புகளுக்கு ரூ.52.14 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 180 குடியிருப்புகளுக்கும் 3/2000-ல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

(ஆ) குடிநீர்த் திட்டத்திற்காக 31-3-1999 வரை 13 குடியிருப்புகளுக்கு ரூ.52.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 180 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் திட்ட மதிப்பீடு ரூ.13.09 கோடியாகும்.

**51—**

## விவசாயத் தொழில்நுட்ப இயந்திரங்கள்

**வினா எண் 30706—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்திற்குத் துணை புரியும் வகையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப இயந்திரங்கள் யாவை?

(ஆ) இதற்கு அரசு எவ்வகையில் துணை புரிகின்றது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரியில் கீழ்க்கண்ட இயந்திரங்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1. உழுது, சால் அமைத்து பருத்தி விதைக்கும் கருவி.
2. வாய்க்கால்/வடிகால் தோண்டும் கருவி.
3. பவர் டில்லருடன் இணைத்து அதிக நீர் இறைக்கும் குழாய் பம்பு.
4. தீவனச் சோளம் அறுவடை இயந்திரம்.

5. நிலக்கடலை அறுவடை கருவி.
6. நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் இயந்திரம்.
7. மரவள்ளிக் கிழங்கு மாவைப் படிய வைக்கும் கருவி.
8. சக்தி சாண எரி வாயுக்கலன்.
9. மதிய உணவு மைய அடுப்பு.
10. காப்பிப் பழத்தை தோல் நீக்கிக் கழுவும் கருவி.
11. கத்தரிக்காய் விதை எடுக்கும் கருவி.
12. தக்காளி விதை பிரித்தெடுக்கும் கருவி.
13. சாண எரிவாயு மற்றும் சூரிய ஆற்றல் பூச்சி கவர்ச்சிப் பொறி.
14. டிராக்டர் கொத்துக் கலப்பையுடன் இணைந்த குழிப்படுகை அல்லது அகலப்பாத்தி அமைத்து விதை விதைக்கும் கருவி.
15. பவர் டில்லரால் இயங்கும் மஞ்சள் அறுவடை செய்யும் கருவி.
16. பவர் டில்லரால் இயக்கப்படும் மிகுதிறன் குழி தோண்டும் கருவி.

(ஆ) (1) மேற்கண்ட கருவிகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கும், விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் பிரபலப்படுத்துவதற்கும், தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்துடன் (அக்ரோபெட்) சேர்ந்து செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(2) விவசாயத்திற்குத் துணை புரியும் வகையில் மண் தள்ளும் இயந்திரங்கள், உழுவைகள் மற்றும் அதன் உபகரணங்களாகிய சட்டி கலப்பை, ஒன்பது டைனி கலப்பை (9-Tiny Cultivator) ரோட்டா வேட்டர்கள் அறுவடை இயந்திரங்கள் (Harvestor) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. இதில் நெல் அறுவடை செய்யும் கம்பைன் ஹார்வெஸ்டர் இயந்திரம் சமீபத்திய கண்டுபிடிப்பாகும். வேளாண்மைப் பொறியியல் துறையினால் இரண்டு நெல் அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டு, சேலம் மற்றும் மதுரை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மணிக்கு ரூ.1050 என்ற வீதத்தில் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

**52—**

### தோட்டக்கலை பட்டயம் பெற்றோர் பணி அமர்த்துதல்

**வினா எண் 30715—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை டிப்ளமோதாரிகள் எத்தனைபேர் படிப்பு முடித்து பணிக்காக காத்திருக்கின்றார்கள்?

(ஆ) அவர்களுக்கு எப்போது பணி வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ)வேளாண் துறையில் பட்டயம் பெற்றோர் 1848 பேர் வேலை வாய்ப்பில்லாமல் உள்ளனர். தோட்டக்கலையில் 453 பேர் பட்டயம் பெற்றோரில் 45 பேர் தோட்டக்கலைத் துறையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) அரசாணை எண் 457, வேளாண்மைத் துறை (வேநி.5) நாள் 28-7-1993-ன்படி வேளாண்மைத் துறையில் வயல் விளக்க அலுவலர் பணியிடங்கள் முழுவதும் நீக்கப்படவும், தற்போது வயல் விளக்க அலுவலராகப் பணி புரிந்து வருவோர் அனைவரையும், வேளாண்மை உதவி அலுவலராகப் பதவி உயர்த்தவும் வழிவகை செய்யப்பட்டு, வேளாண்மை உதவி அலுவலர் மொத்தப் பணி இடங்கள் 4,500 என்ற எண்ணிக்கைக்கு மிகைப்படக்கூடாது என்று ஆணையிடப் பட்டுள்ளதையடுத்து அரசாணை எண் 118, வேளாண்மைத் துறை (வேநி.5), நாள் 7-3-1995 மற்றும் அரசாணை எண் 361, வேளாண்மைத் துறை (வேநி.5) நாள் 30-6-1995-ன் சிறப்பு விதி திருத்தங்களின்படி, வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகளில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடங்களில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பட்டயதாரிகளைக்கொண்டு நேரடி நியமனம் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதால், தற்போதுள்ள சூழ்நிலையில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட இயலாது.

**53—**

### வனவிலங்கு சரணாலயம் அமைத்தல்

**வினா எண் 26096—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) தமிழ்நாட்டில் வனவிலங்கு சரணாலயங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதைப் பராமரிக்க அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு?

(இ) அதிலுள்ள பணியாளர்கள் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 18 வனவிலங்கு சாரணாலயங்கள் உள்ளன.

(ஆ) அவைகளைப் பராமரிக்க அரசுக்கு ஏற்படும் செலவு ஒரு ஆண்டுக்கு தோராயமாக ரூ.671.17 இலட்சங்கள் ஆகும்.

(இ) அவைகளிலுள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 858 ஆகும்.

2. தமிழ்நாட்டில் வனவிலங்கு சரணாலயங்களைத் தவிர 3 தேசிய பூங்காக்களும் உள்ளன.

3. மேற்கண்ட சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் குறித்த தகவல்கள் பின்வருமாறு:-

| வரிசை எண் | சரணாலயம்/தேசிய பூங்கா பெயர் விவரம் | ஆண்டு பராமரிப்பு செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த பணியாளர் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சரணாலயங்கள்— | | | | |
| 1 | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் | 6.68 | 38 | இச்சரணாலயங்களை தவிர மன்னார் வளைகுடா கடல் வாழ் உயிரின தேசியபூங்காவும் இப்பணியாளர்களால் பராமரிக்கப்படுகிறது. |
| 2 | காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் | 0.30 | | |
| 3 | சித்தரங்குடி பறவைகள் சரணாலயம் | 0.32 | 38 | இச்சரணாலயங்களை தவிர மன்னார் வளைகுடா கடல் வாழ் உயிரின தேசியபூங்காவும் இப்பணியாளர்களால் பராமரிக்கப்படுகிறது. |
| 4 | கீல்செல்வனூர் மேல் செல்வனூர் பறவைகள் சரணாலயம் | — | | |



2000 மார்ச் 3]

| வரிசை எண் | சரணாலயம்/தேசிய பூங்கா பெயர் விவரம் | ஆண்டு பராமரிப்பு செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த பணியாளர் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 5 | ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயம் | 70.89 | 111 | — |
| 6 | வல்லநாடு வெளிமான் சரணாலயம் | 0.23 | | |
| 7 | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் | | | |
| 8 | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் | 166.21 | 148 | — |
| 9 | இந்திராகாந்தி வன உயிரின உய்விடம் | 248.84 | 265 | இந்திராகாந்தி தேசிய பூங்காவும் இப்பணியாளர்களால் பராமரிக்கப்படுகிறது. |
| 10 | முதுமலை வன உயிரின உய்விடம் | 163.17 | 207 | முதுமலை தேசிய பூங்கா மற்றும் முக்குருத்தி தேசிய பூங்கா ஆகியவைகளும் இப்பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது. |
| 11 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | 2.00 | | |
| 12 | காரிகிளி பறவைகள் சரணாலயம் | 1.00 | 66 | கிண்டி தேசிய பூங்காவும் இப்பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது. |
| 13 | புலிகேட் பறவைகள் சரணாலயம் | 1.00 | | |
| 14 | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் | 3 | .. | |
| 15 | கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் | 6.34 | | |
| 16 | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் | 1.35 | 3 | .. |
| 17 | வடுவூர் பறவைகள் சரணாலயம் | 3.46 | | |
| 18 | காரைவெட்டி பறவைகள் சரணாலயம் | .. | | |
| | மொத்தம் | 671.17 | 858 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2. தேசிய பூங்காக்கள் | | | | |
| (1) மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசிய பூங்கா | | 81.69 | .. | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம், காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம், சித்தரங்குடி பறவைகள் சரணாலயம், கீழ்செல்வனூர் மேல்செல்வனூர் பறவைகள் சரணாலயம் ஆகிய சரணாலயத்திற்கான 38 பணயாளர்களால் இந்த தேசிய பூங்கா பராமரிக்கப்படுகிறது. |
| (2) இந்திரா காந்தி தேசிய பூங்கா | | .. | .. | இந்திரா காந்தி வன உயிரின உய்விடத்திற்கான 265 பணியாளர்களால் இந்த தேசிய பூங்கா பராமரிக்கப்படுகிறது. |
| (3) முதுமலை தேசிய பூங்கா<br>(4) முக்குர்த்தி தேசிய பூங்கா | | .. | | முதுமலை வன உயிரின உய்விடத்திற்கான 207 பணியாளர்களால் இந்த இரு தேசிய பூங்காக்களும் பராமரிக்கப்படுகிறது. |
| (5) கிண்டி தேசிய பூங்கா | | .. | .. | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம் மற்றும் புலிகாட் பறவைகள் சரணாலயத்திற்கான 66 பணியாளர்கள் மூலம் இந்த தேசிய பூங்கா பராமரிக்கப்படுகிறது. |

**54—**

### சாலை அமைத்தல்

**வினா எண் 29844—திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையில் சிங்காரப்பேட்டை முதல் காவலூர் வரையிலான சுமார் 65 கி.மீ. தூரம் உள்ள சாலை அமைப்பு வசதியை வனத் துறை செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**55—**

### சாலை இணைப்பு

**வினா எண் 30092—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் திவான்பகதூர் சாலையை வனக் கல்லூரியின் குறுக்காக பாரதி பார்க் சாலையுடன் இணைக்கும் திட்டத்தை அரசு பரசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**56—**

### இலவசப் பேருந்து பயணம்

**வினா எண் 24928—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவில், கன்னியாகுமரி, வள்ளியூர் (வழி ராதாபுரம்) தடம் எண் 583-இல் இலவசப் பேருந்து பயண (பாஸ்) மாணவ, மாணவியர் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அமுலில் உள்ள அரசாணைப்படி, இலவசப் பேருந்து பயண அட்டைகள் நகர பேருந்துகளில் மட்டுமே செல்லுபடியாகும். நகர பேருந்துகள் இல்லாத வழித்தடங்களில் புறநகர் சாதாரணப் பேருந்துகளில் இதே பயண அட்டைகள் அனுமதிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவில் தடம் எண் 515 எப், 515இ, 515ஜி, 566, 571, 578, 574 போன்ற புறநகர் பேருந்துகளில் இலவசப் பேருந்து பயண அட்டைகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் குறிப்பிடப் பட்டுள்ள தடம் எண் 583 வழித்தடத்தில் பள்ளி நேரத்தில் நகரப் பேருந்து இயக்கப்படவில்லை. இதன் காரணமாக பள்ளி மாணவ, மாணவியர் வசதிக்காக இலவசப் பயண அட்டை இதே வழித்தடத்தில் சென்ற கல்வியாண்டிலிருந்து அனுமதிக்கப்பட்டு வருகிறது. இந்த கல்வியாண்டிலும் இந்தச் சலுகை தொடரப்பட்டு வருகிறது.

57—

## சாலை வசதி செய்தல்

**வினா எண் 2436—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம் அரகாசனஹள்ளி ஊராட்சி, சின்னம்பள்ளி முதல் நாகாவதி அணை வரை சாலை மிகவும் பழுதடைந்து பேருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதால் விரைவில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சின்னம்பள்ளியிலிருந்து சோனகவுண்டனூர், பூதநாயக்கன்பட்டி, பெத்தானூர் வழியாக மாற்றுச்சாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருவதாலும் சின்னம்பள்ளியிலிருந்து செல்லும் பழைய பாதை செப்பனிட்டு ஆறு குறுக்கிடும் மூன்று இடங்களில் பாலம் கட்ட பெருந்தொகை தேவைப்படுவதாலும் இப்பணியை அரசின் நிதிநிலை நெருக்கடி காரணமாக அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.





58—

## சாலைகளைத் தார்ச் சாலைகளாக்குதல்

**வினா எண் 21829—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை கி.மீ. சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், சேலம் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) கோட்ட பராமரிப்பில் உள்ள அரசுச் சாலைகளின் மொத்த நீளம் 1998-99ஆம் ஆண்டின்படி 1912.496 கி.மீ. ஆகும். இவை அனைத்தும் ஏற்கெனவே தார்ச் சாலை போடப்பட்டு நல்லநிலையில் உள்ளன.

59—

## தார்ச் சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 24519—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பஸ் நிலையத்திலிருந்து சந்தைப்பேட்டை வரை உள்ள தார்ச்சாலை மிகவும் மோசமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த தார்ச்சாலையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன், தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட நெடுஞ்சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் கொமாரபாளையம்—எடப்பாடி சாலை (கி.மீ. 0/0-25/0) ஆகும். எடப்பாடி பஸ் நிலையத்திலிருந்து சந்தைப்பட்டை வரையுள்ள பகுதியானது கி.மீ 25/0-25/6 வரையிலான 0-60 கி.மீ. நீள சாலையாகும். தற்போது இச்சாலையில் உள்ள குழி பள்ளங்களுக்கு தார் நொடிகள் போட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப சாலை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**60—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 25778—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, பெரும்பாக்கம் நெடுஞ்சாலையில் காவேரியாம்பூண்டி அருகே ஐயம்பாளையம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது தற்சமயம் 5.65 மீட்டர் அளவுள்ள நான்கு கண்கள் கொண்ட தரைப்பாலம் ஆகும். இத்தரைப் பாலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவ்விடத்தில் தற்போது தரைமட்டப் பாலத்திற்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.



**61—**

**அறநிலையத் துறை மூலம் கல்லூரிகள்**

**வினா எண் 26021—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறை மூலம் நடத்தப்படும் கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) புதிதாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்துறை சார்பாக கல்லூரிகள் தொடங்கும் உத்தேசம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இந்து சமய அறநிலையத் துறை மூலமாக ஐந்து கல்லூரிகள் மற்றும் பன்னிரண்டு மேனிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இல்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**62—**

**திருமண மண்டப நன்கொடைக் கட்டணம்**

**வினா எண் 28888—திரு ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்னத் திருப்பதியில் உள்ள திருமண மண்டபம் பொது மக்கள் உபயோகத்திற்கு விடப்படுகிறதா?

(ஆ) கலப்பு திருமணம் செய்வோருக்கு கட்டணத்தில் ஏதேனும் சலுகை வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்ட விதிகளில் கட்டண சலுகைகள் வழங்க வழிவகை செய்யப்படவில்லை. எனவே, கலப்புத் திருமணம் செய்வோருக்கு திருமண மண்டப நன்கொடைக் கட்டணத்தில் சலுகைகள் ஏதும் வழங்கப்படுவதில்லை.

63—

### பக்தர்களுக்கு வசதிகள்

**வினா எண் 30761—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சயம அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு பௌர்ணமிதோறும் சராசரி எவ்வளவு மக்கள் கூடுகின்றனர்?

(ஆ) அன்றைய தினம் கோயிலின் சராசரி வருமானம் எவ்வளவு?

(இ) அன்றைய தினம் பக்தர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு பௌர்ணமிதோறும் கிரிவலம் வரும் பக்தர்கள் சராசரியாக மூன்று இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் மக்கள் கூடுகின்றனர். கிரிவலம் வரும் பக்தர்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் திருக்கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.



(ஆ) பௌர்ணமி தினத்தன்று, திருக்கோயிலில் சுவாமி தரிசனத்திற்காக தர்ம தரிசனமும், சிறப்பு தரிசனமும் அனுமதிக்கப்படுகிறது. சிறப்பு தரிசன டிக்கெட் விற்பனை மூலம் பௌர்ணமி ஒன்றுக்கு சராசரியாக ரூ.3,00,000 வருமானம் கிடைக்கப்பெறுகிறது. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினம் உள்ளிட்டு உண்டியல் திறந்து எண்ணப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு உண்டியல் மூலம் சராசரி ரூ.6,00,000 வருமானம் வரப்பெறுகிறது.

(இ) திருக்கோயில் நிர்வாகத்தால் பக்தர்கள் வசதியாக சுவாமி தரிசனம் செய்யும்பொருட்டு வரிசைமுறை அனுமதிக்கப்படுகிறது. பொது தரிசனம் தவிர சிறப்பு தரிசனம் செய்ய விரும்பும் பக்தர்களுக்காக தனியே வரிசை முறை அனுமதிக்கப்பட்டு நபர் ஒன்றுக்கு ரூ.20 டிக்கெட் கட்டணமாகப் பெற்று சிறப்பு தரிசனம் செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் குடிநீர் வசதிக்காக ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைத்து தொடர்ந்து குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பக்தர்களின் வசதிக்காக கூடுதல் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு வருகிறது. மேலும், பக்தி நெறி பரப்பும் பொருட்டு காலை மாலை இரு வேளைகளிலும் ஓதுவார்களைக் கொண்டு தேவாரம், திருவாசகம் ஓதப்படுகிறது.

64—

### புதிய நிர்வாகிகள்

**வினா எண் 32309—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னும் திருக்கோயில் நிர்வாகத்தை புதிய நிர்வாகிகளிடம் ஒப்படைக்காத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

[2000 மார்ச் 3

(அ) மற்றும் (ஆ) புதிய அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அறங்காவலர் குழுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றே பொறுப்பு ஏற்க பதவி மேற்கொள்ள செய்யப்பட்டு, தீர்மானப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பதவி முடிந்த அறங்காவலர்களை, புதிய அறங்காவலர் குழுத் தலைவர் அல்லது தனி அறங்காவலரிடம் பொறுப்பு ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. பொறுப்பு ஒப்படைக்கவில்லையெனில் இலாகா அலுவலர்கள் உதவியுடன் பொறுப்பு ஏற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவ்வாறு அலுவலர்கள் உத்தரவின்படி பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லையெனில் 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 101-ன்படி ஆணையர் அவர்களிடம் திருக்கோயில் சொத்துக்களை பட்டியலுடன் சான்று பெற்று, முதல்நிலை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை அணுகி பொறுப்பு ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க புதிதாக நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டு உள்ளது.

**65—**

### தீர்க்கப்பட்ட வழக்குகள்

**வினா எண் 20694—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மூலமாக கடந்த 1997-98 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்திற்கு என்று தனியாக நுகர்வோர் குறைதீர் மன்றம் நிறுவப்படவில்லை. சேலத்துடன் இணைந்திருந்த நாமக்கல் பகுதியில் நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மூலமாக கடந்த 1997-98 ஆம் ஆண்டில் பதிவான மொத்த வழக்குகள் 41. அதில் தீர்க்கப்பட்ட வழக்குகள் 10.

(ஆ) நிலுவையிலுள்ள வழக்குகள்—31.



2000 மார்ச் 3]

**66—**

### கிணறு இழப்பீட்டுத் திட்டம்

**வினா எண் 26905—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிணறு வெட்ட சிறு பாசனக் கடன் வாங்கிய விவசாயிகளின் கிணறுகளில் நீர் இல்லாமல் வறண்டு விட்டதால் பொய்த்த கிணறு இழப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் சேலம் மாவட்டத்தில் மட்டும் எத்தனை பேர்கள் உதவித் தொகை பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொய்த்த கிணறு நிதி இழப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நாளது தேதி வரையில் 299 பேருக்கு ரூ.47.66 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் மட்டும் 15 பேருக்கு பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதியாக மொத்தம் 2,82,391 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**67—**

### நியாய விலைக்கடை

**வினா எண் 27605—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், பெரியவேட்டுவபாளையத்தில் ஒரு நியாய விலைக்கடை அமைத்துத் தருமாறு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2000 மார்ச் 3

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெரியவேட்டுவபாளையம் கிராமத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட கட்டடத்தில் பணிக்கம்பாளையம்-2 என்ற பெயரில் நியாய விலைக்கடை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, புதிதாக பெரியவேட்டுவபாளையத்தில் மேலும் ஒரு நியாய விலைக்கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**68—**

## கிராமங்களில் நியாய விலைக்கடைகள்

**வினா எண் 30238—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெத்தரெங்காபுரம், புஷ்பவனம், அரசன்குளம், கொத்தன்குளம் புதியிருப்புவிளை, தாமரைக்குளம், கரைச்சுத்துப்புதூர் ஆகிய கிராமங்களில் நியாயவிலைக் கிளைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் ஏழு கிராமங்களில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை, தாய்க் கடையிலிருந்து இக்கிராமங்களுக்கிடையே உள்ள தூரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



2000 மார்ச் 3]

| வரிசை எண் | கிளைக் கடை கேட்டுள்ள கிராமத்தின் பெயர். | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை. | தூரம் (கி.மீ.). |
|---|---|---|---|
| 1 | பெத்தரெங்காபுரம் | 149 | 2 |
| 2 | புஷ்பவனம் | 125 | 3 |
| 3 | அரசன்குளம் | 55 | 3 |
| 4 | கொத்தன்குளம் | 30 | 2 |
| 5 | புதியிருப்புவிளை | 50 | 1.5 |
| 6 | தாமரைக்குளம் | 38 | 4 |
| 7 | கரைச்சுத்துப்புதூர் | 283 | 1 |

பெத்தரெங்காபுரம், புஷ்பவனம், அரசன்குளம், கொத்தன்குளம் மற்றும் தாமரைக்குளம் ஆகிய கிராமங்கள் தாய்க் கடையிலிருந்து 2 கிலோமீட்டர் தூரம் இருந்தபோதிலும், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 200-க்கும் குறைவாக உள்ளதால் கிளைக் கடை அமைக்க சாத்தியமில்லை. புதியிருப்புவிளையில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் தாய்க் கடையிலிருந்து அமைந்துள்ள தூரம் இரண்டுமே குறைவாக உள்ளதால் இக்கிராமத்தில் கிளைக்கடை அமைக்க சாத்தியமில்லை. கரைச்சுத்துப்புதூர் கிராமத்தில் 283 குடும்ப அட்டைகள் இருந்த போதிலும், தாய்க் கடை அமைந்துள்ள புலிமான் குளத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலேயே உள்ளது. எனவே, கரைச்சுத்துப்புதூர் கிராமத்திற்கென தனியாக நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியகூறுகள் இல்லை.

**69—**

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 31260—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், மல்வார்பட்டி ஊராட்சி, மல்வார்பட்டிக்கு நியாய விலைக் கடை கட்டடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், மல்வார்பட்டி ஊராட்சி, மல்வார்பட்டி கிராம நியாய விலைக் கடையானது 520 குடும்ப அட்டைகளுடன் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்ட இந்த் நிதியாண்டில் எந்தத் திட்டத்திலும் நிதி ஆதாரமில்லை.

70—

**நியாய விலைக் கடைக்குக் கட்டட வசதி**

**வினா எண் 31322—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வான்ராயன்பட்டி கிராம நியாவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர இந்த நிதியாண்டில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

71—

**ரேஷன் கடை கட்டடம்**

**வினா எண் 31877—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வேடசந்தூர் தொகுதி, ஆர். புதுக்கோட்டை ஊராட்சி, கருங்குளத்திற்கு ரேசன் கடை கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், ஆர். புதுக்கோட்டை ஊராட்சியைச்சேர்ந்த கருங்குளத்தில் உள்ள நியாய விலைக் கடை தற்பொழுது ஊர் பொது மக்களால் தரப்பட்ட வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்நிதியாண்டில் இல்லை.

72—

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 25146—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி, கானூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் முறைகேடு நடந்துள்ளதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈ. டி. 412 கானூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், உறுப்பினர்களுக்கு தகுந்த அறிவிப்பு வழங்காமல் 25-8-1998 அன்று மகாசபை கூட்டம் போட்டதாக கையெழுத்து பெற்று விட்டதாகவும், தலைவருக்கு இதுகுறித்து அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்பு தலைவர் இத்தவறை ஒப்புக்கொண்டு, சங்க உறுப்பினர்களுக்கு முறைப்படி அறிவிப்பு கொடுத்து, கூட்டம் நடத்தப்படும். சங்க உறுப்பினர்களிடையே சின்னகானூர் கிராமத்தில் புதிய சங்கம் அமைப்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருந்ததால் சங்க உறுப்பினர்களின்

நலன் கருதி சின்னக்கானூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 8-2-1999 அன்று பதிவு செய்து கொடுக்கப்பட்டது. இதன் மூலம் சங்க உறுப்பினர்களிடையே உள்ள கருத்து வேறுபாடு விலகியது. மேலும், தாய் சங்கத் தலைவர் திரு. கா.செ. அவிற்சியப்பன் மற்றும் நிர்வாகஸ்தர் திரு. கா.சு. நஞ்சப்பன் ஆகிய இருவர் மீதும் தவணை கடந்த கடன் காரணமாக தாவா நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகையில் இவ்விருவரும் 8-12-1998 அன்று கே.766 கானூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனுக்காக அசல் மற்றும் வட்டித் தொகையை முழுமையாகச் செலுத்தி தவணை தவறிய கடன் தொகையை அடைத்துள்ளார்கள்.

73—

### பால் கொள்முதல் செய்தல்

**வினா எண் 26381—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் பால் கொள்முதல் செய்யும் மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கம் எங்கு உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் பால் கொள்முதல் செய்யும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சேலத்தில் உள்ளது.

(ஆ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 1999-2000 ஆம் ஆண்டில் இதுவரை சராசரியாக நாள் ஒன்றுக்கு 3.00 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது.

74—

### மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் விவரம்

**வினா எண் 31539—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பங்குதாரர்களின் தகராறுகளால் வருடக் கணக்கில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எத்தனை?



(ஆ) அவற்றின் நில மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பங்குதாரர்களிடைய ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவும், டெபாசிட்தாரர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவும் கீழ்க்கண்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன:—

| | (1) | மூடப்பட்ட நாள் (2) |
|---|---|---|
| 1. | இராதாகிருஷ்ணா மில்ஸ், கோவை | .. 10-08-1986 |
| 2. | கமல் ஸ்பின்னர்ஸ், உடுமலைப்பேட்டை | .. 20-01-1997 |
| 3. | தனலட்சுமி மில்ஸ், கோவை | .. 12-10-1997 |
| 4. | நியு சிட்டி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கோவை | .. 20-12-1986 |

(ஆ) மேற்கண்ட நிறுவனங்களின் நில மதிப்பு குறித்து தொழிலாளர் துறையில் விவரங்கள் இல்லை.

75—

### மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதி

**வினா எண் 31557—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலையிழந்துள்ள மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், பலன் பெற்றவர்கள் எண்ணிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ)1989-1990 ஆம் ஆண்டிலிருந்து தீபாவளிப் பண்டிகையின் போது மூடப்பட்ட/நீண்டகாலமாக இயங்காமலுள்ள நிறுவனங்களில் பணிபுரிந்து/

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், இவ்வாண்டும் (1999) அரசு ஆணை (டி) எண் 966, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 27-10-1999 மூலம் மூடப்பட்டுள்ள 35 தொழில் நிறுவனங்களில் பணி புரிந்த 14,051 தொழிலாளர்களுக்கு தலா ரூ.500 வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இது தவிர, மேற்கு வங்க அரசு திட்டத்தினைப் போன்று மூடப்பட்டுள்ள/நீண்டகாலமாக இயங்காமலுள்ள நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250 வீதம் உதவித் தொகை வழங்க அரசு ஆணை (நிலை) எண் 88, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்: 28-6-1999-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி தொழிற்சங்க உறுப்பினர்கள் அடங்கிய ஆய்வுக்குழு நான்கு முறை கூடி 119 மூடியுள்ள தொழில் நிறுவனங்களை ஆய்வுகள் செய்தன. அதில் முதற்கட்டமாக 60 நிறுவனங்கள் மேற்படி திட்டத்தின்கீழ் தகுதியுள்ள நிறுவனங்கள் எனத் தெரிவு செய்யப்பட்டு அதன் தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. அந்த விண்ணப்பங்கள் தொழிலாளர் துறையின் சார்நிலை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அதன்பின் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தால் மேலாய்வு செய்யப்பட்டு அரசுக்கு அவ்வப்போது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு வருகின்றன. தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை விரைவில் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 40,000 பேர் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்பட்டு இதுவரை 3,269 தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.250 வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**76—**

**சுற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா எண் 29496—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற கட்டடங்கள் உள்ள வளாகத்திற்கு சுற்றுச்சுவர் (Compound wall) கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

**77—**

**சிறைக்காவலர்கள் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 31120— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் காவலர்கள் காலி பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறைக் காவலர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சிறைக் காவலர்கள் பணியிடங்களைக் குறித்து சிறைத் துறைத் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்று பரிசீலனை செய்து அரசு கடிதம் (நிலை) எண் 50, உள் துறை, நாள் 18-1-1999, 147 சிறைக் காவலர்கள் (11 பெண் காவலர்கள் உள்பட) பணியிடம் தேர்வு செய்வதற்கு தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும், பூந்தமல்லி சிறப்பு கிளைச் சிறைக்கு புதிதாக 37 இரண்டாம் நிலைக் காவலர்களை தேர்வு செய்யவும் அரசு கடித எண் 17654எ/சிறை 2/99-4 உள் துறை, நாள் 31-5-1999-ல் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**78—**

**விதிமுறைகள்**

**வினா எண் 33217—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

சேலம் மத்திய சிறைச்சாலையில் கைதிகளை பார்வையாளர்கள் சந்திக்க விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

ஆம். சிறை நடைமுறை நூல் தொகுதி 2-ல் உள்ள விதிமுறைகளின்படி சேலம மத்திய சிறையிலுள்ள கைதிகளை பார்வையாளர்கள் சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

**79—**

**சிறையில் பெண்களுக்குத் தனிப் பிரிவு**

**வினா எண் 33233—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சிறையில் பெண்களுக்கு தனிப்பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**80—**

**குடும்ப நீதிமன்றங்கள்**

**வினா எண் 33316—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நீதிமன்றங்கள் தமிழ்நாட்டில் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) அவற்றை மாவட்ட அளவில் விஸ்தரிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆறு.

(ஆ) தற்போதைக்கு இல்லை.

**81—**

**அரசு அலுவலர்களுக்கு வீடு**

**வினா எண் 26199—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

**(அ)** மற்றும் **(ஆ)** மாவட்ட தலைமையிடம் மற்றும் வருவாய் கோட்டத் தலைமையிடம் இவற்றில் மட்டும் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் எடப்பாடி ஒரு தாலுகா என்பதால் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் செயற்படுத்தவில்லை. இருப்பினும், எடப்பாடியில் அரசு அலுவலர்களிடமிருந்து போதிய தேவை ஏற்பட்டால் அரசுக்கு சொந்தமான நிலம் மற்றும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரை ஆகியவை இருப்பின், அரசின் பிரத்தியேக அங்கீகாரம் பெற்று திட்டம் செயற்படுத்த வீட்டுவசதி வாரியத்தால் ஆவன செய்ய இயலும்.

**82—**

**சுயதொழில் தொடங்க கடனுதவி**

**வினா எண் 22767—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 3

(அ) பிரதமர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்கள் சுயதொழில் தொடங்க கடன் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கலை எளிதாக்கி உடன் கடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதமர் நிதி உதவித் திட்டத்தின் (PMRY) படி சுயதொழில் தொடங்க படித்த வேலையற்ற இளைஞர்களிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு நேர்காணல் நடத்தி வட்டார ஆய்வுக்குழு (Task Force Committee) வினால் பரிந்துரைக்கப்பட்டு துரிதமாக மாவட்ட தொழில் மையங்களின் மூலம் வங்கிகளுக்கு கடன் ஒப்புதல் பெற அனுப்பபடுகிறது. அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குத் துரிதமாகப் பயிற்சியளிக்கப்பட்டு வங்கிகளால் "கடன் தொகை" பட்டுவாடா செய்யப்படுகிறது. கடன் கிடைக்கப்பெறாத நபர்களின் விண்ணப்பங்கள் மீது கடன் வழங்கப்படாததற்கான காரணம் பரிசீலிக்கப்பட்டு வங்கி மேலாளர்களின் துணையுடன் கடன் வழங்க மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டு வருவதால் நடைமுறைச் சிக்கல் கணிசமான அளவு குறைக்கப்பட்டு உள்ளது.

83—

**சத்துணவு மையம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 23642—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காவாலிப்பட்டி ஊராட்சி, மேலமேட்டுப்பட்டி கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

காவாலிப்பட்டி ஊராட்சி மேலமேட்டுப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி எதுவும் இல்லாததாலும், போதுமான பயனாளிகள் இல்லாததாலும் அங்கு பள்ளி சத்துணவு மையமோ, குழந்தை நல மையமோ, அமைக்க தற்போது சாத்தியக் கூறு இல்லை.

84—

**சத்துணவு மையம்**

**வினா எண் 25216—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் சிவவிடுதி ஊராட்சியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிவவிடுதி ஊராட்சியில் தற்சமயம் பள்ளி சத்துணவு மையம் நடைபெற்று வருகிறது.

85—

**சேகோ தொழிற்சாலை**

**வினா எண் 28610—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாககளுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை சேகோ பேக்டரிகள் இயங்குகின்றன?

(ஆ) அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1948ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சேகோ தொழிற்சாலைகள் 847 ஆகும்.

(ஆ) அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 12,108 ஆகும்.

**86—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 29282—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சி, நல்லாத்துப்பாளையத்தில் உள்ள பள்ளி சத்துணவுக்கூடம் பயன்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது பயன்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். போதிய குழந்தைகள் இல்லாததால் மூடப்பட்டிருந்த நல்லாத்துப்பாளையம், சத்துணவு மையம் தற்போது 11-10-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**87—**

**பால்வாடி அமைத்தல்**

**வினா எண் 29302—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிகோட்டை ஊராட்சி கொ. வல்லுண்டாம்பட்டு ஆதிதிராவிடர் தெருவில் குழந்தைகட்கு ஒரு பால்வாடி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பயனாளிகள் எண்ணிக்கை போதிய அளவு இல்லாததால் அங்கு பால்வாடி அமைக்க சாத்தியமில்லை.

**88—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 29643—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி சார்பதிவாளர் அலுவலகம் பழுதடைந்த கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதியதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

**ஊதிய விகிதம்**

**வினா எண் 30124—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தை நல அமைப்பாளர்கள், ஊட்டச்சத்துப் பணியாளர்கள் ஊதிய விகிதம் என்ன?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை பேர் பணியாற்றுகின்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) குழந்தை நல அமைப்பாளர்கள் மற்றும் ஊட்டச்சத்து பணியாளர்களின் ஊதிய விகிதம் ரூ.600-10-700-20-1,100 ஆகும். 1-1-1996ல் அடிப்படை ஊதியம் ரூ.760 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் தற்போது 18,527 குழந்தை நல அமைப்பாளர்களும் மற்றும் 19,498 ஊட்டச் சத்துப்பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

**90—**

### பால்வாடி அமைத்தல்

**வினா எண் 31577—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை, ஒன்றியம், வேல்வார்கோட்டை ஊராட்சியில், ராசகவுண்டன்பட்டிக்கு பால்வாடி அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராசகவுண்டன்பட்டி கிராமத்தில் புதிய குழந்தைகள் நல மையம் தொடங்க சாத்தியக்கூறு இல்லாததால் அங்குள்ள குழந்தைகள் ஊராளிப்பட்டி கிராமத்தில் உள்ள குழந்தை வளர்ச்சித் திட்ட மையத்தில் பயனடைந்து வருகின்றனர்.



**91—**

### ஊட்டச்சத்து வழங்குதல்

**வினா எண் 32563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சமுதாய ஊட்டச்சத்து மையத்தில் நாள்தோறும் வயதிற்கேற்ற எடை இல்லாத எவ்வளவு குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படுகிறது?

(ஆ) ஒவ்வொரு நாளும் இந்த மையங்களின் மூலம் எவ்வளவு தாய்மார்கள் ஊட்டச்சத்து உணவு பெற்று பயன் பெறுகின்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இயங்கும் சமுதாய ஊட்டச்சத்து மையங்களில் 6 மாதம் முதல் 5 வயதுள்ள குழந்தைகளில் வயதிற்கேற்ற எடை இல்லாத 8.79 இலட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் ஊட்டச் சத்து வழங்கப்படுகிறது.

(ஆ) ஊட்டச்சத்து உணவு பெறும் தாய்மார்களின் எண்ணிக்கை 3.24 இலட்சம் ஆகும்.

**92—**

### கலப்புத் திருமண உதவித் திட்டம்

**வினா எண் 23465—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் ஆண்டில் அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவி திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை இணைகளுக்கு நிதி அளிக்கப்பட்டது?

(ஆ) எடப்பாடி தொகுதியில் எத்தனை இணைகளுக்கு நிதி வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவி திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு 31 இணைகளுக்கும், 1998-99 ஆம் ஆண்டு 22 இணைகளுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டது.

(ஆ) எடப்பாடி தொகுதியில் 1997-98 ஆம் ஆண்டில் விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. அதனால் பயனாளிகள் எவரும் இல்லை. 1998-99 ஆம் ஆண்டில் 5 மனுக்கள் பெறப்பட்டு 1998-99 ஆம் நிதியாண்டில் தேவையான நிதி ஒதுக்கீடு பெறப்படாமையால் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கும் நிதி வழங்கப்படும்.

93—

### பள்ளி விடுதிக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 5585—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நந்தனார் அரசினர் மாணவியர் மேல்நிலைப்பள்ளி விடுதிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 22-3-1999 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

94—

### மாணவர் விடுதி

**வினா எண் 21121—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும்



வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், களப்பாள் என்ற இடத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் மாணவர் விடுதி ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. மாநில திட்டக்குழு புதிய விடுதிகள் திறப்பது அவசியமில்லை என்றும், தற்போதுள்ள விடுதிகளை பராமரிக்கவும் மற்றும் தரத்தை மேம்படுத்தவும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

95—

### பாதை வசதி செய்தல்

**வினா எண் 27323—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கடையாம்பட்டி ஒன்றிய நடுப்பட்டி கிராமம், அம்பேத்கர் நகரிலுள்ள மக்களில் 73 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியும் பாதை வசதி இல்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடுப்பட்டி கிராமம், எலத்தூர் அம்பேத்கர் நகர் ஆதிதிராவிடர் காலனிக்கு பாதை வசதிக்காக நடுப்பட்டி கிராமம் புல எண் 45/6எ1-ல் 0.08.5 ஹெக்டேர் நிலம் ஓமலூர் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர்

[2000 மார்ச் 3

அவார்டு எண் 40/95-96, நாள் 27-3-1996 அன்று கையகப்படுத்தப்பட்டு 18-6-1999-ல் மேற்கண்ட நிலம் பாதை வசதி செய்யப்பட்டுள்ளது.

96—

**ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

**வினா எண் 29257—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-1998 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சி மூலம் எவ்வளவு பேர் தையல் இயந்திர இயக்குநர் பயிற்சி, ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை உற்பத்தி தொழில் நுட்பவியல் பயிற்சி பெற்றார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தையல் இயந்திர இயக்குநர் பயிற்சி: 1997-98-ல் இப்பயிற்சி அளிக்கவில்லை. (1998-99-ல் இதுவரை 81 பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.)

ஆடை வடிவமைப்புப் பயிற்சி: 1997-98-ல் இப்பயிற்சி அளிக்கவில்லை. 1998-99-ல் 30 நபர்கட்கு (17 ஆண், 13 பெண்) இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆடை உற்பத்தித் தொழில் நுட்பவியல் பயிற்சி: 1998-99-ல் 28 நபர்கட்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது (19 ஆண், 9 பெண்).

97—

**விடுதியை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 15911—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை, தமிழ்நாடு ஹோட்டல் விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2000 மார்ச் 3]

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு ஹோட்டல் விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

**சுற்றுலாத் துறை பேருந்து**

**வினா எண் 26337—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடை விடுமுறைக் காலங்களில் சில சுற்றுலாத் தலங்களை இணைத்து சுற்றுலாத் துறை பேருந்து எடப்பாடியிலிருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோடை விடுமுறை காலங்களில் சில சுற்றுலாத் தலங்களை இணைத்து சுற்றுலாத் துறைப் பேருந்து எடப்பாடியிலிருந்து இயக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசிடம் ஏதுமில்லை.

99—

**மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்**

**வினா எண் 29463—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை யாவை?

[2000 மார்ச் 3

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 13 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அரசு சார்பிலும், 84 மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையங்கள் தனியார் சார்பிலும் உள்ளன.

(ஆ) அரசு மீன் வளத் துறை சார்பில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்:—

1. லால்பேட்டை
2. தஞ்சாவூர்
3. மணிமுத்தாறு
4. மணிமுத்தாறு (தேசிய மீன் விதைப்பண்ணை)
5. பவானிசாகர்
6. மேட்டூர் அணை
7. பூண்டி
8. அகரப்பேட்டை
9. கடானா
10. கிருஷ்ணகிரி

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்:

11. சாத்தனூர்
12. ஆழியார்
13. மஞ்சளார்

தனியார் சார்பில் கீழே குறிப்பிட்ட மாவட்டங்களில் மீன்குஞ்சு உற்பத்தி/வளர்ப்புப் பண்ணைகளின் எண்ணிக்கை விவரம்:

| மாவட்டத்தின் பெயர் | | எண்ணிக்கை |
|---|---|---|
| செங்கை | .. | 2 |
| கடலூர் | .. | 6 |
| தஞ்சாவூர் | .. | 43 |
| நாகப்பட்டினம் | .. | 3 |
| புதுக்கோட்டை | .. | 1 |
| திண்டுக்கல் | .. | 1 |
| மதுரை | .. | 5 |
| தருமபுரி | .. | 1 |



2000 மார்ச் 3]

| மாவட்டத்தின் பெயர் | | எண்ணிக்கை |
|---|---|---|
| ஈரோடு | .. | 5 |
| திருநெல்வேலி | .. | 12 |
| கன்னியாகுமரி | .. | 5 |
| மொத்தம் | .. | 84 |

**100—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 29836—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கோட்டையூர் மண்ணவாடி, சேத்துக்குழி-குள்ளவீரம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கோட்டையூரில், ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 1998-99 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு 10 வீடுகள் சேலம் மாவட்ட ஆட்சியரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி முடிவுபெற்று, பயனீட்டாளர்களிடம் வீடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், 1999-2000 ஆம் ஆண்டில் கோட்டையூரில் 26, மண்ணவாடியில் 20, சேத்துக்குழியில் 5, ஆக 51 வீடுகள் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மேற்படி திட்டத்தின்கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடு குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2000 மார்ச் 3

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மருத்துவப் பயிற்சி மாணவர்கள் உண்ணாவிரதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பொதுவாக, ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கின்ற நாட்களிலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவது இல்லை. இருந்தாலும் மிக முக்கியமான பிரச்சினை என்று பல உறுப்பினர்கள் வலியுறுத்தியதன் காரணத்தினால் கேட்க அனுமதிக்கிறேன். மருத்துவக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது குறித்து கவனஈர்ப்பாகக் கொண்டுவர திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோரும், சிறப்புக் கவனஈர்ப்பாகக் கொண்டுவர திரு. நா. பெரியசாமி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன், திரு. ஜி. நிஜாமுதீன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம் ஆகியோரும் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவர திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இப்பிரச்சினையைச் சிறப்புக் கவனஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசுமாறு முதலிலே திரு. சி. ஞானசேகரன் அவர்களை அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12 நாட்களாக சென்னை, செங்கல்பட்டு, சேலம், கோவை, திருநெல்வேலி, மதுரை, தஞ்சை ஆகிய பகுதிகளில் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அந்த மருத்துவமனைகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அரசு பயிற்சி டாக்டர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பணிக்குச் செல்லாமல், கல்லூரிக்குச் செல்லாமல் தங்களுடைய 16 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலே, அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சில நூதனப் போராட்டங்களைச் செய்தது குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட வருத்தப்பட்டு, அதைக் கண்டித்தும் இருக்கிறார்கள். அப்படி மாணவர்களாக இருக்கிறவர்கள் சவரத் தொழிலையும், அதேபோல Shoe polish போடுகின்ற தொழில்களையும் செய்வது, அந்தத் தொழில்களை அவமானப்படுத்துவது ஆகாதா என்கிற





கோணத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களைக் கண்டித்திருக்கிறார்கள்.

மாணவர்கள் பொதுவாகக் கூட்டமாகச் சேருகிறபோது— நாமெல்லாம்கூட மாணவர்களாக இருக்கிறபோது— போராட்டம் என்று வருகிறபோது, 10 பேரோடு 11 ஆவதாக இணைந்துவிடுகிறோம். வேண்டுமென்றோ மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காகவோ அப்படிச் செய்யப்பட்டது அல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை, அதேபோல மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும்பொருட்டு அவர்கள் அந்த நூதனமான போராட்டத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் 16 அம்சக் கோரிக்கைகள் என்று வைத்திருந்தாலும்கூட, இருப்பது இரண்டு முக்கியமான கோரிக்கைகள்தான். பயிற்சி டாக்டர்களுக்கு இங்கே 2,250 ரூபாய் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாணவர்களிடம் பேசுவதற்கு முன்பாகவே 3,000 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நாங்கள் காணிக்கையாக்குகிறோம். ஆனால், கேரளாவை மட்டுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாணவர்களும் மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அங்கே 7,000 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பொதுவாக Sub-Inspector போன்ற பணிக்கு நாம் Select செய்து அவர்களை பயிற்சிக்கு அனுப்புகிறபோதே ஒரு Sub-Inspector-கான சம்பளத்தைக் கொடுத்துவிடுகிறோம். அதே போல அந்தப் பயிற்சி டாக்டர்களும் மருத்துவமனைகளிலே நோயாளிகளைக் கவனிப்பதற்கான பொறுப்பிலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தாலே டாக்டர்களுக்கு எவ்வளவு சம்பளத்தைக் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு அவர்களுக்கும்கூடக் கொடுக்கலாம். அந்த அளவிற்கு இல்லையென்று சொன்னாலும்கூட, நம்முடைய மருத்துவ மாணவர்கள் கோரிக்கை வைத்திருப்பது என்னவென்றால், ஏழு ஆயிரம் ரூபாய் மாதத்திற்குக் கொடுக்க வேண்டும் என்பதாகும். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் கருணையோடு பரிசீலித்து, அந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டும் என்று நான் எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

இரண்டாவதாக, அரசு மருத்துவக் கல்லூரிகளிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுடைய ஒரு ஆதங்கம்; ஒரு கோரிக்கை;

அது என்னவென்று சொன்னால், தனியார் மருத்துவக் கல்லூரிகளை நம்முடைய தமிழகத்திலே நாம் அனுமதித்து விடுவோமோ என்கிற ஓர் அச்சம் அவர்களுடைய உள்ளத்திலே இருக்கின்றது. பொதுவாக எம்.பி., பி.எஸ். படித்து முடித்திருக்கிற, எம்.டி. படித்து முடித்திருக்கிற டாக்டர்களுக்கே வேலைவாய்ப்பை நாம் இன்னும் முழுமையாகக் கொடுக்க முடியாமல் இருக்கிறோம். வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நம்முடைய தமிழகத்திலே நாம் ஆரம்பிக்க விட்டுவிட்டோம் என்று சொன்னால், தங்களுக்கு எல்லாம் எதிர்காலம் ஓர் இருண்ட காலமாகத்தான் இருக்கும்; வேலைவாய்ப்பு இருக்காது என்கிற காரணத்தாலே, தனியார் கல்லூரிகளை இங்கே அனுமதிக்கக்கூடாது என்கிற ஒரு கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும்கூட, இதே அவையிலே "நாங்கள் தனியாருக்கு நிச்சயமாக அனுமதி கொடுக்க மாட்டோம்" என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் அவர்கள் பேசிவிட்டுச் சென்றபோது, அவர்கள் முதலிலே ஒத்துக்கொண்டுவந்து, பிறகு அதை எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கூட்டத்திலே முடிவு எடுத்ததாகவும், பிறகு உண்ணாவிரதம் தொடருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள. ஆனால், "தனியார் மருத்துவக் கல்லூரியை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று எழுத்து மூலமாக எப்படிக் கொடுக்க முடியும்? அது மத்தியிலே இருக்கக்கூடிய Medical Council of India தானே தரவேண்டும்" என்கிற ஒரு கருத்தும் இருக்கிறது. ஆனால், இங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் சட்டம்பற்றி சீனியர் வழக்கறிஞர்களை எல்லாம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அந்த வழக்கறிஞர்கள், இந்த மாமன்றத்திலே தனியார் கல்லூரிகளை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலையை மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனாலே டெல்லியிலே இருக்கக்கூடிய Medical Council of India அனுமதி கொடுத்தாலும்கூட, நம்முடைய அரசு அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய பொறுப்பு நாம் ஒரு Essentiality Certificate மட்டும்தான் கொடுக்க முடியும். நாம் தனியாருக்கு, மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு எந்தவிதமான ஒரு அதிகாரத்தையோ, ஒரு உத்தரவையோ வழங்க இயலாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். Essentiality Certificate மட்டும்தான் அரசாங்கம் கொடுக்கிறது. நீதிமன்றத்திற்குப் போய் அவர்களுக்கும் Essentiality Certificate-ஐக்



கொடுங்கள் என்று சொல்லிவிட்டால், அவர்களுக்கும் கொடுக்கக்கூடிய நிர்பந்தத்திற்கு நாம் ஆளாகிவிடுவோம். ஆகவே, இந்த மாமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராடி வருகிறார்கள். கடந்த நான்கு நாட்களாக அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். "பாம்பின் கால் பாம்பறியும்" என்று சொல்வார்கள். அதுபோல சென்ற ஆட்சியிலே நான் கூட— எங்களுடைய வேலூரிலேயிருந்த அரசு பொறியியல் கல்லூரியை பர்கூருக்கு மாற்றுவதாக அன்றைய முதல்வர் உத்தரவிட்ட காரணத்தாலே நானும்—நான்கு நாட்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தேன். என்னோடு எங்களுடைய கட்சித் தொண்டர்களும் அப்போது உண்ணாவிரதம் இருந்தார்கள். அது எந்த அளவிற்கு ஆபத்தான ஒன்று என்பதை நான் அறிந்த வகையிலே சொல்கிறேன். இப்போது கிட்டதட்ட 30 மாணவர்கள் சென்னையிலேயும் சரி (குறுக்கீடு) அந்த உண்ணாவிரதம் வெற்றி அடைந்து பர்கூருக்குப் போகவிருந்த அந்த அரசு பொறியியல் கல்லூரியை G.O. போட்டு வேலூரிலேயே நிறுத்தியிருக்கிறோம். நம்முடைய மருத்துவக் கல்லூரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவிலே பேச்சை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கிட்டத்தட்ட 30 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சென்னையை எடுத்துக்கொண்டால் பயிற்சி டாக்டர்கள் சுஜா மற்றும் நந்தகுமார், ஜெயகணேஷ், அருணாசலம் போன்ற மாணவர்கள்; தஞ்சை, கோவை, மதுரை போன்ற இடங்களிலே மாணவர்கள் மயக்கம் போட்டு, கைது செய்யப்பட்டு அவர்களுக்கெல்லாம் மருத்துவமனைகளிலே குளுகோஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மருத்துவக் கல்லூரி மாணவர்களே நோயாளிகளாக மாறிவிட்ட நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிற காரணத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள்-இன்னொன்று, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று அந்த மாணவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்—எப்படியாவது அவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களிடம் பேசிவிட்டார். துறையினுடைய செயலாளர் பேசிவிட்டார். அவர்கள் தனிச் செயலாளரிடம் பேசிவிட்டார்கள். பிறகு ஏன் "மாணவர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு பிறகு வாருங்கள் நான் பேசுகிறேன்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த நிலையில் இருக்கிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். ஆகவே மாண்புமிகு

முதல்வர் அவர்கள் கருணையோடு—தங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் காத்துக்கொண்டிருக்கிற—அந்த மாணவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அவர்களுக்கு சம்பளத்தைக் கொஞ்சம் அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல "தனியார் கல்லூரியை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று அவர்கள் தமது வாயால் நேரிடையாகச் சொன்னால், அந்த மாணவர்கள் போராட்டத்தை இந்தக் கணத்திலேயே வாபஸ் பெறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மத்தியிலே சொன்னதைவிட, எழுதிக்கொடுக்கின்ற வாக்குறுதி சிறந்தது என்று அவர்கள் கருதுகிறார்களா? அப்படியானால் இந்த அவையை அவர்கள் அந்த அளவுக்கு கௌரவமாக மதிக்கவில்லையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். இந்த அவையிலேயே சொல்லி இருக்கின்றோம். அதற்குப் பிறகும் வெளியிலே எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிற கூற்றை நான் ஏற்றுக்கொள்கின்றேன். Assurance - உறுதிமொழி என்று இந்த அவையில் வந்துவிட்டால் —அதற்கு 'உறுதிமொழிக் குழு' என்றொரு குழு இருக்கிறது—பிறகு அது கண்டிப்பாகச் செயல்படுத்தக்கூடிய ஒன்றாகிவிடும் என்பது உண்மை. இந்த அவையிலே கொடுக்கக்கூடிய உறுதிமொழி என்பது, வெளியிலே எழுதிக்கொடுப்பதைவிட மிக உறுதியான ஒன்று என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நிச்சயமாக அதை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் இந்த அவையின் மூலமாக நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தாலும், முதல்வர் அழைத்துப் பேசவேண்டும் என்று விரும்புகிற அவர்களை முதல்வர் அவர்கள் நேரடியாக அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாணவர்களின் அந்த இரண்டே கோரிக்கைகளை முதல்வர் அவர்களும் நிச்சயமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களை அழைத்து, அதைப் பேசி முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய போராட்டம் தமிழகத்திலே மிகப் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறுகின்ற இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக அவர்கள் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் தொடங்கி, இப்போது காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் வரையில் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களுடைய போராட்டத்தின் காரணமாக அவர்கள் மயக்கமுற்று உயிருக்கு ஆபத்தான நிலை என்றெல்லாம் தினசரி செய்திகள் வந்துகொண்டிருப்பது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, இதற்கு சுமுகமான தீர்வு காண வேண்டும். இதிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அரசுச் செயலாளர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியதாகப் பத்திரிகைச் செய்தி வந்தது. இதற்கு இடைப்பட்ட காலத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த உதவித் தொகையை உயர்த்தி அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரடியாக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கையைக் கேட்டு அதை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். அந்த விருப்பத்திற்கு மாறாக இந்த உத்தரவு இருப்பதால் ஜனநாயக ரீதியாக அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நேரில் அழைத்துப் பேசி அந்தத் தீர்வினை அறிவித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் இதை ஒருதலைப்பட்சமாக அறிவித்ததாக அவர்கள் கருதுகின்றார்கள். ஆகவே இந்த விஷயத்தை மறுபரிசீலனை செய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசவேண்டும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இதிலே பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நாம் காலத்திலே பரிசீலித்து முடிவு செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். நம்முடைய அரசு இதைத்

தட்டிக் கழித்துவிடாமல் பரிசீலனை செய்து உடனடியாக அவர்களை அழைத்துப் பேசி தீர்வு காண்பதற்கான முயற்சிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பயிற்சி டாக்டர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய 16 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போது தொடர் உண்ணாவிரதத்தை சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே சில மாணவ, மாணவிகள் மயக்கமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய 16 அம்சக் கோரிக்கைகளில் மிக முக்கியமானவை இரண்டு மூன்று கோரிக்கைகள்தான். உதவித் தொகையைப் பொறுத்தவரையில், இப்போது அவர்களுக்கு ரூ.2,250-ம், ரூ.2,500-ம் கொடுக்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். அதை முதல்வர் அவர்கள் ரூ.3,000 ஆக உயர்த்திக் கூட கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூறுகிறபடி பார்த்தால்—எதற்கெடுத்தாலும் அண்டை மாநிலங்களை உதாரணம் காட்டுகிற முதல்வர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்—இதே உதவித் தொகையானது, அரியானாவிலே ரூ.11,000 ஆகவும், டெல்லியிலே ரூ.9,000 ஆகவும், பாண்டிச்சேரியில் ரூ.8,000 ஆகவும், மகாராஷ்டிரத்திலே ரூ.6,000 ஆகவும், ஆந்திராவிலே ரூ.6,000 ஆகவும், கேரளாவிலே ரூ.4,500 ஆகவும் கொடுக்கப்படுகிறது என்று 20 ஆம் தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் மிக விளக்கமாக வந்திருக்கிறது. ஆகவே நீங்கள் ரூ.3,000 கொடுத்தது போதாது என்ற காரணத்தால்தான் அவர்கள் அந்தப் போராட்டத்தில் மீண்டும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மருத்துவமனைகளில் புற நோயாளிகளுக்கு சிகிச்சை பார்க்கக்கூடியவர்கள் அந்தப் பயிற்சி மருத்துவர்கள்தான். அங்கே அந்த பயிற்சி மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதும், அதேபோல அறுவை சிகிச்சை போன்ற பணிகளைச் செய்வதும் இப்போது தடைபட்டிருக்கின்றன என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, இதில் நீங்கள் கௌரவம்



பார்க்கக்கூடாது. "அவர்கள் வேலைநிறுத்தத்தை, உண்ணாவிரதத்தை விட்டுவிட்டுத்தான் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்" என்று நீங்கள் கூறி, அவர்கள் ''பேச்சுவார்த்தை நடத்தினால்தான் நாங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவோம்" என்று சொல்லி, இப்படி இரண்டு தரப்பிலும் போட்டி போட்டுக்கொண்டு அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினால் மக்கள்தான் துன்பப்படுகிறார்கள்.

இதிலே மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவது, உதவித் தொகை. இதுகுறித்து கூறியாகிவிட்டது. அடுத்தபடியாக, தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு அங்கீகாரம் கொடுப்பது. நீங்கள் கூறி இருக்கிறீர்கள், "மத்தியிலே இருப்பவர்கள்தான் அங்கீகாரம் கொடுக்கிறார்கள்; நாங்கள் என்ன செய்வது என்று". தற்போது மத்தியிலே ரேஷன் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் "நாங்கள் உயர்த்தமாட்டோம்" என்று கூறியிருக்கிறீர்கள். அதற்கு ஒன்று கூறுகிறீர்கள், இதற்கு மட்டும் ஏன் நீங்கள் அப்படிக் கூற மறுக்கிறீர்கள். அங்கீகாரம் கொடுப்பது மத்தியிலே இருந்தாலும் நீங்கள் அவர்களுக்கு எழுதி அனுப்புங்கள், அங்கு அந்த அவையிலே வைத்து ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள்.

முற்பகல் 10-40

மூன்றாவதாக, கி.ஆ.பெ. விசுவநாதன் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், மத்தியிலே அதற்கு அங்கீகாரம் வாங்காமலேயே நீங்கள் அந்தக் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறீர்கள். அங்கே, இரண்டு வருடம், மூன்று வருடம் படித்த மாணவர்களுடைய நிலைமையெல்லாம் இப்போது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஒரு பெரிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எப்படி இவ்வளவு காலம் இதைக் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. அதேபோல பல் மருத்துவமனையிலே—அந்தக் கல்லூரியிலே—அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்துவிட்ட காரணத்தால், அந்த மாணவர்களுடைய வாழ்க்கைத்தரமும் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆக அவர்கள் இத்தனை பிரச்சினைகளை முன்வைத்திருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, இதில் இவ்வளவு தாமதமாக, நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கான காரணத்தைச் சொல்கிறேன். ஆளுங்கட்சியிலே இருக்கிற முக்கியமான பிரமுகர்கள், ஆளும் கட்சியிலே இருக்கிற மத்திய

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 மார்ச் 3

அமைச்சர்கள் எல்லாம் புதிதாக ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இருக்கிற காரணத்தால், இப்படி ஏதாவது ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்து அதைத் தடை செய்து விட்டால், ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் அந்தக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகுமோ என்ற காரணத்தால்தான் அதை நீங்கள் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நீங்கள் உடனடியாக மாணவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய 16 அம்சக் கோரிக்கைகளை ஏற்று, நல்ல முடிவு காண வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பயிற்சி மருத்துவர்கள், வேலை நிறுத்தத்திலே ஆரம்பித்து இப்போது உண்ணாவிரதம் வரை போராட்டத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கை மாண்புமிகு முதல்வரை அவர்கள் காணவேண்டும் என்பது. எனவே, நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு நிமிடம் அந்த மாணவர்களைக் கண்டால் அத்தனை போராட்டங்களும் தூள் தூளாக்கப்படும் என்பது அவர்களைத் தூண்டிவிடக்கூடியவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அந்தப் பயிற்சி டாக்டர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தாய் உள்ளத்தோடு ரூ.2,250 என்பதை, அவர்களைப் பார்க்காமலேயே 3,000 ரூபாய் என்று வாரிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல பட்ட மேற்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.2,500 என்பதை, அவர்கள் நேரில் கோரிக்கை வைக்காமலேயே, அரசு அதிகாரிகளிடம் பேசும்போதே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைப் பார்க்காமலேயே, ரூ.4,000 என வாரி வழங்கியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலே தாய் உள்ளத்தோடு இந்த ஆட்சியை நடத்தக்கூடிய முதல்வர் அவர்கள் எப்படியாவது அந்த மாணவர்களுக்கு ஒருசில நிமிடங்களை ஒதுக்கிக் கொடுத்து அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் கேட்டு 'ஆவன செய்யப்படும்' என்று சொன்னால் அவர்கள் முழு மனதோடு ஏற்றுக்கொள்வார்கள் என்பதனைச் சொல்லி அவர்களுடைய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி



2000 மார்ச் 3] [திரு. ஐ. கணேசன்]

மக்கள் கட்சியின் சார்பாக வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

முற்பகல் 10-45

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல தினங்களாக பயிற்சி மருத்துவர்களும், மாணவர்களும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அவர்களது கோரிக்கைகளில் பல ஏற்கப்பட வேண்டியவையாகும். சில கோரிக்கைகளை ஏற்றால் இந்த நாட்டிற்கு, நாட்டின் முன்னேற்றத்திற்கு பாதிப்பாக அமையக்கூடும். அத்தகைய கோரிக்கைகளும் இதில் இருக்கின்றன. குறிப்பாக அவர்கள் வைத்துள்ள சம்பள உயர்வு, Hostel வசதி, போலி மருத்துவர்களைத் தடை செய்ய வேண்டும், நூலகக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு ஏற்று அதற்கான பரிகாரங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

அதே நேரத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தடை செய்வதே, அல்லது அனுமதிக்கக் கூடாது என்பதோ இந்த நாட்டிற்கு ஒத்துவராத ஒரு கருத்தாகும். இன்றைய காலகட்டத்திலே பல்வேறு துறைகளை தனியார்களுக்கு விட்டால்தான் இந்த நாடு முன்னேறும் என்ற நிலையிலே மத்தியில் இருக்கும் ஆட்சி முதல் மாநிலங்களில் இருக்கும் ஆட்சிகள் வரை நினைக்கின்றன. மின்சாரக் கட்டமைப்பு உட்பட, தனியாரிடம் வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்து அதற்கான தக்க ஏற்பாடுகளைச் செய்கின்ற இந்த நேரத்திலே, இதுபோன்ற தனியார் மருத்துவக் கல்லூரிகளையோ அல்லது சில தனியார் அமைப்புகளையோ, தடை செய்வது என்பதோ அல்லது அனுமதிக்கக் கூடாது என்பதோ நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் பாதிப்பாக அமையும். அதற்கு மாற்றாக அவர்கள் ஒரு கருத்தை வைக்கலாம். தனியார் மருத்துவக் கல்லூரிகளில், கல்வியின் தரத்தை உயர்த்தி நியாயப்படுத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும். கல்வியை வியாபாரப் பொருளாக மாற்றக் கூடாது. இவற்றுக்கெல்லாம் அரசு சட்டத்தின் மூலம் வழிவகை செய்ய வேண்டுமென்ற நியாயமான கோரிக்கைகளை வழங்க வேண்டுமே தவிர அதற்கு மாறாக, தனியார் மருத்துவமனைக் கல்லூரிகளையோ அல்லது தனியார் பல் மருத்துவமனைக் கல்லூரிகளையோ பிற தனியார் நிறுவனங்களையோ தடை செய்ய வேண்டுமென்பது, அது நாட்டின்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 மார்ச் 3

பொருளாதார வளர்ச்சியை, பொருளாதார முன்னேற்றத்தை, கல்வி முன்னேற்றத்தை நிச்சயமாக பாதிக்கக்கூடியதாக அமையும். ஆகவே அரசு நிதானத்தோடு அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலித்து அவர்கள் கேட்கின்ற, ஏற்புடையதாக இருக்கின்ற சம்பள உயர்வு போன்ற முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்து, சம்பளம் வாரி வழங்க வேண்டும். ஏனென்றால் மற்ற மாநிலங்களில் சம்பளங்கள் கூடுதலாக வழங்குகிறார்கள். நிச்சயமாக இந்தக் காலகட்டத்திலே 3000 ரூபாய் என்பது போதாத தொகை. ஆகவே இந்தக் கோரிக்கையை கவனத்தில்கொண்டு போதிய சம்பளங்களை வழங்கி மற்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்று, மற்ற கோரிக்கைகள் குறித்து அவர்களுக்குப் போதுமான விளக்கம் அளித்து அரசு இதில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும். இப்படி ஒவ்வொருவரும் போராடி., முதலமைச்சரோ அல்லது மற்ற உயர் அதிகாரிகளோ சந்தித்திருக்க வேண்டும் அல்லது பேசியிருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக பிரதிநிதிகள் பேசினாலே போதும். முறையாக தீர்வு கண்டால் அவர்கள் அமைதியாகிவிடுவார்கள் என்ற நிலையிலே இதை வலியுறுத்தி அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களாக தமிழகத்திலே இருக்கின்ற பயிற்சி மருத்துவர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு விதமான · போராட்டங்களை நடத்தி, இப்போது சாகும் வரை உண்ணாவிரதம் என்கிற போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகள் இரண்டு என்பதை இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் வலியுறுத்தினார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் சற்று உயர்வாக இருக்க வேண்டும் என்பதோடு, தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குகின்ற நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பவைதான் மிக முக்கியமான கோரிக்கைகளாக இருக்கின்றன. இவற்றைத்தான் வலியுறுத்தினார்கள். பயிற்சி மருத்துவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையைக் காட்டிலும் நமது முதலமைச்சர் அவர்கள் அதிகமாகக் கொடுப்பதற்கு முன்வந்திருந்தாலும்கூட, இன்னும் அது சற்றுக் குறைவாக இருக்கிறது என்பது அவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. இதையெல்லாம் விட "நமது முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மனிதநேயம் கொண்டவர்கள்; எனவே அவர்கள் அழைத்துப் பேசினால் தங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் நிச்சயமாக நிறைவு செய்யப்படும்" என்று கருதுகிறார்கள். அப்படி



2000 மார்ச் 3] [திரு. லா. சந்தானம்]

இல்லையென்றாலும் முதலமைச்சர் அவர்களுடைய அந்த ஆறுதலான சொற்களால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். எனவே முதலமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசி அதிலே நியாய உணர்வு உள்ள கோரிக்கைகளை ஏற்று, அந்த மாணவர்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தையும், தொடர்ச்சியாக அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிற அறப் போரராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஃபார்வார்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

முற்பகல் 10-50

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பல மாவட்டங்களில் தங்களுடைய நியாயமான சில கோரிக்கைகளை முன்வைத்து பல்வேறுவிதமான போராட்டங்களையெல்லாம் நடத்தி, இறுதியாக, தீர்வு ஏற்படாத காரணத்தினால் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற ஒரு போராட்டத்திற்குச் சென்று இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில தலையிட்டு ஒரு சுமுகமான தீர்வைக் கண்டு அந்த உண்ணாவிரதப் போராட்டத்தை அந்த மாணவர்கள் திரும்பப் பெறுகிற வகையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

பயிற்சி டாக்டர்களுக்கு அளித்து வருகின்ற தொகை என்பது போதுமானதாக இல்லை, அதைச் சற்று உயர்த்த வேண்டும். அதுபோன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடம் தரக் கூடாது என்ற ஒரு நீண்டகாலக் கோரிக்கை முக்கியமான கோரிக்கையாகும். தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடம் தருவதன் மூலமாக, அந்தப் பொதுத் துறை நிறுவனங்களுக்கு நாம் செல்கின்றபோது வசதிக் குறைவுகள் மற்றும் பொருளாதார அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்பது சாதாரண மக்களுக்கு நன்கு தெரியும். இந்தத் தனியார் மருத்துவத் துறைக்குச் செல்கின்றபோது வசதி படைத்தவர்கள் மட்டும்தான் அதனால் பயன்பெற முடிகிறது. அந்த வகையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடம் தராத வகையில் - இருந்தாலும்கூட மத்திய அரசுதான் அதற்கு முழுப் பொறுப்பு என்று இருக்கின்ற காரணத்தினால் மருத்துவக் கழகமும், மத்திய அரசும் இதை நம்முடைய தலையிலே திணிப்பதற்கான வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்—மாநில அரசு ஒரு சட்டத் திருத்தத்தைக்

கொண்டுவந்து அதன் மூலமாக மாநில அரசைக் கலக்காமல் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு இடம் தரக் கூடாது என்ற வகையில் நாம் ஒரு முடிவுக்கு வருவோமேயானால், நம்முடைய மாநிலத்திலே மருத்துவத் துறையைப் பொறுத்தமட்டில் இந்தத் தனியார் மயமாக்குதல் என்பதைத் தடை செய்ய முடியும், நிறுத்த முடியும். அந்த வகையிலே மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வருகின்ற அந்தப் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து ஜனநாயக அடிப்படையில் நம்முடைய அரசு அதைச் சந்தித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசி, தலையிட்டு நல்ல தீர்வு ஏற்படுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி விடுதிகளில் அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தர வேண்டும்; போலி மருத்துவர்களை ஒழித்திட வேண்டும்; மருத்துவக் கல்லூரிக் கல்வியை வியாபாரமாக்குவதைத் தடை செய்ய வேண்டும். அதேபோலப் பயிற்சிக் காலத்திலே பயிற்சி மருத்துவர்களுக்கு நிதியுதவியை அதிகரித்துத் தர வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த சில நாட்களாகப் பயிற்சி மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் நடத்தி வரக்கூடிய போராட்டத்தை நாம் எல்லாம் அறிவோம். இந்தக் கோரிக்கைகளில் மிக முக்கியமானது தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்பதாகும். அதேபோல, பிற மாநிலங்களிலே கொடுக்கப்படக்கூடிய அளவுக்கு அவர்களுடைய உதவித் தொகையை அதிகரித்துத் தர வேண்டும் என்பதும் முக்கியமான கோரிக்கையாகும். தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிக்கக் கூடாது என்பதனை அரசு ஏற்கெனவே இதே மன்றத்திலே அறிவித்திருந்தாலும்கூட மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்கள் மத்தியிலே இன்னும் அச்சம் நீடிக்கின்றது. அதற்குக் காரணம், தமிழ்நாடு அரசு தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுக்கமாட்டோம் என்று சொன்னாலும்கூட இந்திய மருத்துவ கவுன்சில் மற்றும் நீதிமன்றங்கள் மூலமாக அதாவது back door entry என்று சொல்வார்கள், அந்த வழியாகத் தனியார் மருத்துவக் கல்லூரிகள் இந்த மண்ணிலே, தமிழ்நாட்டிலே நுழைந்துவிடுவதற்கும் வாய்ப்பு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு எதிராக தமிழ்நாடு ஒரு பெரிய தடுப்புச் சுவரை எழுப்ப வேண்டும் என்பதுதான் அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது என்று



நான் கருதுகின்றேன். எனவே, இந்த மன்றத்திலே நான் ஒரு உத்தரவாதமான அறிவிப்பை தமிழ்நாடு அரசிடத்திலேயிருந்து எதிர்பார்க்கின்றேன். தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்த அரசு அனுமதி கொடுக்காது என்பது மட்டுமல்ல; அதைத் தடுத்து நிறுத்துவதற்கும் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த அரசு அறிவிக்குமா? அறிவிக்க வேண்டும் என்பதுதான் புதிய தமிழகம் கட்சியினுடைய வேண்டுகோள். எனவே, இதிலே ஒரு சாதகமான முடிவை எடுத்து அவர்களுடைய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

அதேபோல, ஏறக்குறைய 15 வருடங்கள், 20 வருடங்கள், 25 வருடங்களுக்கு முன்பு கட்டிய கல்லூரி விடுதிகளிலே, அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர், கழிப்பிட வசதிகள் எல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவற்றைச் சீரமைத்துத் தருவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், அவர்கள் போராட்டங்கள் நடத்துகின்றபோது ஒவ்வொரு தொழிலையும் அவமானப்படுத்தக்கூடிய வகையிலே சவரத் தொழில் செய்வது, அதுபோல், shoe polish போடுகின்ற தொழில் செய்வதெல்லாம் மனித உரிமை மீறல் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்தப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க நான் வேண்டுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-55

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பெயர் இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஐ. கணேசன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் கொடுத்துள்ள இந்த சிறப்புக் கவனஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகளின் மீது அரசின் சார்பிலே சில கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

என்னுடைய விவரமான பதிலைச் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதன் பேரில் சில விளக்கங்களை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, ஏதோ மருத்துவப் பயிற்சி மாணவர்களைக் கைது செய்து இருப்பதாகச் சொன்னார்கள். இதுவரையிலே தமிழ்நாட்டில் எந்த மருத்துவப் பயிற்சி மாணவர்களையும் கைது செய்யவில்லை. தஞ்சை மருத்துவமனையிலே சிலர் மயக்கம் உற்றார்கள் என்றவுடன் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அவர்களை அழைத்துக்கொண்டுபோய் மருத்துவமனையிலே சேர்த்து இருக்கிறார்கள். இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஏதோ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே, கேரளாவிலே பயிற்சி மருத்துவர்களுக்கு 4000 ரூபாய் கொடுப்பதாகவும், ஆந்திராவிலே 6000 ரூபாய் கொடுப்பதாகவும், எனவே அதற்கு நிகரான ஊதியத்தை இங்கேயும் கொடுக்கவேண்டும் என்று கூறியதோடு மற்றவற்றுக்கெல்லாம் மற்ற மாநிலங்களைக் காட்டுகின்ற நேரத்தில், பக்கத்தில் இருக்கக்கூடிய மாநிலங்களைக் காட்டுகின்ற நேரத்தில், இதை ஏன் அவர்கள் பார்க்கவில்லை என்று கேட்டார்கள். அதற்குச் சொல்கிறேன். இதற்கு முன்னாலே 1997-ல் பயிற்சி மாணவர்களுக்கு 1,500 ரூபாய் என்றும், P.G. மாணவர்களுக்கு 1,750 ரூபாய் என்றும் இருந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள்தான் மாணவர்களை அழைத்து அப்போதும் பேச்சுவார்த்தை நடத்தி, 1,500 ரூபாய் என்று இருந்ததை 2,250 ரூபாய் என்றும், P.G. மாணவர்களுக்கு 1,750 ரூபாய் என்று இருந்ததை 2,500 ரூபாய் என்றும் உயர்த்தினார்கள். அப்போது கேரளாவிலே, ஆந்திராவிலே, கர்நாடகாவிலே நம்முடைய மாநிலத்தைவிட குறைவாகத்தான் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். கடந்த ஆண்டு கேரளாவிலேயும், ஆந்திராவிலேயும் பயிற்சி மாணவர்களுடைய சம்பளத்தை உயர்த்தினார்கள். கேரளாவில் 2,752 ரூபாய் என்று இப்போது வழங்கப்படுகிறது; ஆந்திராவில் 2,900 ரூபாய் என்று வழங்கப்படுகிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் இதை எண்ணிப் பார்த்துத்தான் 2,250 ரூபாய் ஊதியமாகப் பெற்றுக்கொண்டிருந்த பயிற்சி மாணவர்களுக்கு 3,000 ரூபாய் என்றும், அதைப்போலவே P.G. மாணவர்களுக்கு 2,500 ரூபாய் என்று இருந்ததை 4,000 ரூபாய் என்றும் உயர்த்தித் தந்து இருக்கிறார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ஆந்திராவிலேயும், கேரளாவிலேயும் 2,750 ரூபாய் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் 6,000 ரூபாய்; அதேபோல் கேரளாவிலே 4,500 ரூபாய்; வேண்டுமானால் இந்தத் தகவல்களைப் பாருங்கள்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னிடமும் இருக்கிறது. அவர்கள் பயிற்சி மாணவர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நானும் பயிற்சி மாணவர்களைப் பற்றித்தான் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆந்திர அரசாங்கத்திடம் இருந்தும், கேரள அரசாங்கத்திடம் இருந்தும் விவரங்களைப் பெற்றுத்தான் இங்கே சொல்லுகிறேன். பயிற்சி மாணவர்களுக்கு கேரளாவில் ரூ. 2,752; ஆந்திராவில் ரூ.2,900. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது Non-service P.G. candidate. அதற்கு கேரளாவிலேகூட 4,000 ரூபாய்தான் அடிப்படை. ....(குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்; அப்புறம் நீங்கள் சொல்லுங்கள்; P.G. மாணவர்களைப்பற்றித்தான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் விவாதம் நடத்தக் கூடாது. உட்காருங்கள். ஏதாவது தேவை என்றால் அப்புறம் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் P.G. மாணவர்களை மூன்றாகப் பிரிக்கிறார்கள். முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு என்று பிரிக்கிறார்கள். அங்கே முதலாம் ஆண்டு P.G. மாணவர்களுக்கு 4,000 ரூபாய்; இரண்டாம் ஆண்டு P.G. மாணவர்களுக்கு 4,219 ரூபாய்; மூன்றாம் ஆண்டு P.G. மாணவர்களுக்கு 4,439 ரூபாய். இதுதான் இன்றைய தினமும் கேரளாவிலே வழங்கப்பட்டு வருகிறது. இதுபற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசி, 4000 ரூபாய் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகும் இந்தப் பயிற்சி மாணவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள்.

அதோடு கி.ஆபெ. விசுவநாதன் கல்லூரியிலே மாணவர்களை அனுமதி இல்லாமல் சேர்த்துவிட்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். Medical Council of India நமக்கு அனுமதி கொடுத்துவிட்டது. அந்த அடிப்படையிலே மாணவர்களைச் சேர்த்தோம்; அதற்குள்ளாக ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தாலே, மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. காலதாமதம் ஆயிற்று. இருந்தாலும் அடுத்து வந்த ஆட்சியிலே அதை முறைப்படி தெரிவித்து—

அவர்களிடமிருந்து அனுமதி பெற்று, கி.ஆ.பெ. விசுவநாதன் மருத்துவக் கல்லூரி நடைபெறுவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதை மாணவர்களிடத்திலே நான் விளக்கமாகச் சொல்லி, மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த கடிதங்களையெல்லாம் எடுத்துக் காண்பித்ததற்குப் பிறகு அவர்கள் அதிலே முழு திருப்தி அடைந்துவிட்டார்கள்.

முற்பகல் 11-00

அதேபோல சுய நிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதிலே இந்த அரசாங்கம் கட்டுப்பாட்டோடு, ஒரு முடிவோடு இருக்க வேண்டுமென்று திரு. சுந்தரம் சொன்னார். எனக்கு விந்தையாக இருக்கிறது. தமிழ்நாட்டில் சுயநிதிக் கலாச்சாரத்தை ஆரம்பித்து வைத்தவர்களே அ.இ.அ.தி.மு.க. ஆட்சியினர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி யாருடைய காலத்திலே வந்தது? விநாயகா மருத்துவக் கல்லூரி யாருடைய காலத்திலே வந்தது? இந்த ஆட்சி 1996-லே பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு எங்கேயாவது ஒரேயொரு மருத்துவக் கல்லூரி தனியார் துறையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால் தமிழக அரசாங்கம் 1989 ஆம் ஆண்டு இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை எடுத்ததை மீண்டும் 1991-இல் அவர்கள் ஆட்சிக்கு வந்து, அதை அவர்களிடத்திலே கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)அப்படிப்பட்ட கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் இங்கே பேசுவது விந்தையாக இருக்கிறது.

அது மட்டுமல்ல. யார் யார் தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதிக்க வேண்டுமென்று இந்த அரசினை வற்புறுத்துகிறார்கள் என்றால், காஞ்சி சங்கராச்சாரியார், பங்காரு அடிகளார், ஏ.சி. முத்தையா, ஜே.பி.ஆர்., ஜெகத்ரட்சகன், ஏ.சி. சண்முகம், இராமகிருஷ்ணா மிஷின்ஸ், கோவை, இப்படி 10 பேர் தனியார் மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று 3 ஆண்டு காலமாக அரசாங்கத்தை அணுகி, நாங்கள் முடியாது என்று சொன்ன காரணத்தினாலே, 'இந்த அரசுக்கு அப்படிப்பட்ட அதிகாரமே இல்லை' என்று அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போய், உயர்நீதிமன்றம் 'நீங்கள் ஏன் இதைப் பரிசீலிக்கக் கூடாது' என்று எங்களுக்கு ஆணை பிறப்பித்து, 'எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பது இல்லை. இதுதான் இந்த அரசாங்கத்தின் முடிவு' என்று நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ஒரு Contempt Petition கூட ஒரு மருத்துவக் கல்லூரியால் உயர்நீதிமன்றத்திலே போடப்பட்டிருக்கிறது. எங்களுடைய மக்கள்



நல்வாழ்வுத் துறைச் செயலாளர் அவர்கள் அதைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையை மிகத் தெளிவாக மூன்று ஆண்டுகளாக இதே அவையிலே திரும்பத் திரும்பச் சொல்கிறோம்.

மாணவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இதற்குத் தனியாக ஒரு சட்டம் கொண்டுவாருங்கள் என்கிறார்கள். நான் கேட்கிறேன்— மாண்புமிகு உறுப்பினர் டி. மணி அவர்கள்கூட இங்கே பேசினார்கள்— கேரளாவிலே அப்படி ஒரு சட்டம் இருக்கிறதா? இந்தியாவிலே தமிழ்நாடு ஓர் அங்கம். தமிழ்நாடு ஒரு தனி நாடாக ஆனால் அப்படி ஒரு சட்டம் கொண்டுவரலாம். ஆனால் இந்தியா முழுவதற்கும் Medical Council of India தான் இந்த மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதற்கான அதிகாரம் படைத்த அமைப்பு என்றிருக்கும்போது, எப்படி தனியாக ஒரு சட்டம் கொண்டு வருவது? இருந்தாலும்கூட 1ஆம் தேதி மாணவர்களை அழைத்து நான் நேரில் பேசிய நேரத்திலே, என்னிடத்திலே ஒரு விளக்கத்தைத் தந்தார்கள்.

விநாயகா பல் மருத்துவக் கல்லூரிக்கு நாம் அனுமதி மறுத்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்காடியபோது, எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக விதி 5 (a)-ல் நமக்கு இருக்கின்ற அதிகாரத்தை வழக்கறிஞர்கள் எடுத்துச் சொன்னபோது அங்கே உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் Observation என்ற முறையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். 'அப்படித் தனியாக உங்களுக்கு அதிகாரம் வேண்டுமென்றால் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அதை நீங்கள் நிறைவேற்றலாமே' என்று கொடுத்திருக்கிறார்கள். இதை என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அப்போதும் அவர்களிடத்திலே சொன்னேன். இதை சட்டப்படி கொண்டுவருவதற்கான வாய்ப்பு இருக்குமானால், தமிழக அரசின் சட்ட இலாக்காவோடு கலந்து பேசி உரிய திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இவ்வளவு சொன்னதற்குப் பிறகும், மீண்டும் மீண்டும் அவர்கள் இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்களே, என்ன காரணம்?

நம்முடைய ஞானசேகரன் சொன்னார். அமைச்சர் 1ஆம் தேதி அன்று அவர்களைக் கூப்பிட்டுப் பேசினார். அவர்கள் திருப்தியோடு சென்றார்கள், இந்தச் சட்டத் திருத்தத்தினைப் பொறுத்தவரையில் அவர்கள் அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொண்டார்கள், ஆனால் அவர்கள் போனதற்குப் பிறகு மறுபடியும் எழுத்துமூலமாகக் கேட்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதுதான் இங்கு இருக்கக்கூடிய பிரச்சினையே. அவர்கள் நம்முடைய தலைமைச் செயலாளரோடு பேசும்போதோ அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரோடு பேசும்போதோ, நாங்கள் பேசும்போதோ,

முதலமைச்சருடைய செயலாளர் பேசும்போதோ ஒத்துக்கொள்கிறார்கள். மறுபடியும் அவர்கள் மருத்துவக் கல்லூரிக்குத் திரும்பியவுடன், ஏதோ ஒருசக்தி அவர்களை இந்தப் போராட்டத்திலிருந்து மீளவிடாமல், தொடர்ந்து இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறது.

நான் விளக்கமாகச் சொல்கிறேன். நம்முடைய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 24-1-2000 அன்று என்னுடைய வீட்டிலே என்னைச் சந்தித்தார்கள். இந்தப் பிரச்சினைகள் குறித்துச் சொன்னார்கள். எழுத்து மூலமாகத் தாருங்கள் என்று நான் கேட்டேன். 26 ஆம் தேதி எழுத்து மூலமாகத் தந்தார்கள்.

உடனே நான் மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளருக்கு அனுப்பி, அதைப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னேன். மறுபடியும் 8-2-2000 அன்று மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரைச் சந்தித்துப் பேசினார்கள். 15-2-2000 அன்று மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரையும், மருத்துவக் கல்லூரி இயக்குநரையும் சந்தித்துப் பேசினார்கள். மறுபடியும் 16 ஆம் தேதி பேசினார்கள். அப்படிப் பேசியதற்குப் பிறகு, செயலாளர் அவர்களிடத்திலே தெளிவாகச் சொல்லி, "முதலமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணத்திலே இருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வரட்டும், பேசலாம், நீங்கள் போராட்டம் நடத்த வேண்டாம்" என்று வேண்டுகோள் விட்டார்கள். அதோடு அறிக்கையும் விட்டார்கள். அதையும் ஏற்காமல் அவர்கள் 17 ஆம் தேதி முதற்கொண்டு வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொல்லி போராட்டத்திலே ஈடுபட்டார்கள். எப்படிப்பட்ட போராட்டங்கள் என்பதையெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத் திரும்ப நான் சொல்ல விரும்பவில்லை. மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் அப்படிப்பட்ட போராட்டங்களிலே ஈடுபடுவது முறைதானா என்பதை மட்டும் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-05

மருத்துவ கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில் அவர்களுடைய பெற்றோர்கள் எப்படியெல்லாம் தன்னுடைய மகன் வரவேண்டுமென்று எண்ணி இருப்பார்கள்? அதற்கு மாறாக எந்தெந்தத் தொழில்களில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை எண்ணுகின்ற நேரத்திலே உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. முதலமைச்சர் ரொம்பவும் வேதனைப்பட்டார். அவர்கள் இவ்வளவு வேலைகளுக்கு இடையிலேயும் 19 ஆம் தேதி திருச்சிக்குச் சென்றிருந்தபோது--பத்திரிகை



நிருபர்கள் கேட்டார்கள். அப்போது--அங்கே விளக்கமாக "மாணவர்கள் போராட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். 24 ஆம் தேதி நான் சென்னைக்குத் திரும்பியவுடன் அவர்களோடு பேச இருக்கிறேன். அதுவரையிலே அவர்களுடைய போராட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்றுகூடச் சொல்லவில்லை, ஒத்திவைத்துவிட்டு என்னோடு 24 ஆம் தேதி பேசுவதற்கு அவர்கள் வரவேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் அந்தப் போராட்டத்தை நீட்டித்தார்கள்.

மறுபடியும் முதலமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணத்தில் இருந்துகொண்டே, காரைக்குடியில் இருந்து தொலைபேசி மூலமாகத் தலைமைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு, "நான் வருவதற்குள்ளாக மாணவர்களை அழைத்து நீங்கள் பேசுங்கள். எல்லாக் கோரிக்கைகளைப் பற்றியும் விவாதியுங்கள். நான் 24 ஆம் தேதி வந்த பிறகு உங்களோடு அவர்களையும் சேர்த்து வைத்துப் பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்" என்று சொன்னார்கள். தலைமைச் செயலாளர் இரண்டு மணி நேரம் பேசியிருக்கிறார். 16 கோரிக்கைகளையும் விவரமாகப் பேசியிருக்கிறார். பேசிவிட்டுச் சொல்லியிருக்கிறார், "24 ஆம் தேதி முதலமைச்சர் வருகிறார், எனவே உங்களுடைய போராட்டத்தை ஒத்திவைத்துவிட்டு, நீங்கள் 24 ஆம் தேதி பேச்சுவார்த்தைக்கு வாருங்கள். முதலமைச்சர் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்" என்று. ஆனால் அதுவரையிலே அவர்கள் தலைமைச் செயலாளர் பேச்சைக் கேட்பதாக இல்லை. தொடர்ந்து போராட்டத்தை நடத்தினார்கள். பிறகுதான் 24 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் சென்னைக்குத் திரும்பியதும், என்னையும், தலைமைச் செயலாளரையும், நிதித் துறைச் செயலாளரையும், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரையும் அழைத்து, பிற மாநிலங்களிலே எந்த அளவுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து, தமிழகத்திலே 2,250 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிற பயிற்சி மாணவர்களுக்கு 3,000 ரூபாய் என்றும், 2,500 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிற பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு 4,000 ரூபாய் என்றும் உயர்த்திக் கொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அப்போது, இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று நிதித் துறைச் செயலாளர் சொன்னதற்குப் பிறகும்கூட "பரவாயில்லை, இந்த மாணவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்போம்" என்று முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு அதை அறிவித்தார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் "தொடர்ந்து நாங்கள் போராட்டத்திலே ஈடுபடுவோம்" என்று சொன்னார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மார்ச் 3

பிறகு "1 ஆம் தேதி முதற்கொண்டு நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட இருக்கிறோம்" என்று அறிவித்து இருந்தார்கள். உடனே அன்று பகல் 12-30 மணிக்கு என்னுடைய அறையிலே அழைத்து 2 மணி நேரம் அவர்களிடத்திலே பேசினேன். 16 கோரிக்கைகளையும் விவாதித்தேன். "14 கோரிக்கைகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்" என்று சொன்னபோது "நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை. நீங்கள் செய்யுங்கள், நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இரண்டே இரண்டு பிரச்சினைகள். ஒன்று எங்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையை உயர்த்தித் தர முடியுமா" என்று கேட்டார்கள். அப்போது நான் "இதற்கே 4 கோடி ரூபாய் செலவாகும் என்கிறார்கள். இன்று அரசாங்கத்தின் நிலைமையை எண்ணுகின்ற நேரத்தில் மேலும் உயர்த்திட முடியுமா என்று என்னாலே சொல்ல முடியவில்லை. இருந்தாலும் நீங்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, வாருங்கள், நான் முதலமைச்சரிடத்திலே அழைத்துக்கொண்டு போகிறேன். அங்கே பேசிப் பார்ப்போம்" என்று சொன்னேன். "சரி" என்று ஒப்புக்கொண்டார்கள். மறுபடியும் தனியார் மருத்துவக் கல்லூரிகளைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு, "நான் வாக்குறுதி தந்திருக்கிறேன். முடியுமானால் சட்ட இலாகாவோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுக்கிறேன்" என்று விளக்கமாகச் சொன்னேன். அது முடிந்தவுடனே ஒரு மாணவர் பிரதிநிதி எழுந்து, "எங்களுடைய கோரிக்கைகளை இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டு விளக்கம் அளித்து, எங்களுக்காக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கொடுத்ததற்கு நன்றி, நாங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு நாளைக்கு வருகிறோம், எங்களை முதலமைச்சரிடத்திலே அழைத்துக் கொண்டு போங்கள்" என்று என்னிடத்திலே சொன்னார்கள்.

அதற்குப் பிறகு மறுபடியும் இரவு 12 மணிக்கு ஏதோ ஒரு சக்தி, அவர்களை "வேலைநிறுத்தத்தை தொடர்ந்து செய்யுங்கள்" என்று ஆட்டிப் படைக்கிறது. மாணவர்கள் பலியாகி இருக்கிறார்கள். இதுதான் உண்மை. எனவே உங்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, மாணவர்களை அழைத்துக் கொண்டுபோய் முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசுவதிலே கௌரவப் பிரச்சினை கிடையாது. இந்த முதலமைச்சரைவிட வேறு எந்த முதலமைச்சர் இதை இவ்வளவு பொறுமையாகக் கையாள முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கிறேன். நினைத்து இருந்தால் கடுமையான நடவடிக்கையை இந்த அரசாங்கத்தால் எடுத்து இருக்க முடியாதா? இதுவரையிலே இந்த அரசாங்கம் கருணையோடுதான் மாணவர்களுடைய பிரச்சினையை அணுகி இருக்கிறதே தவிர, கடுமையான நடவடிக்கை என்று எங்குமே எடுத்ததில்லை. இன்னும் சொல்லவேண்டுமானால், வெட்கத்தோடு



2000 மார்ச் 3] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சொல்கிறேன், எங்கேயோ படிக்கின்ற மாணவர்கள் இங்கே சென்னை மருத்துவக் கல்லூரிக்கு போராட்டத்தை நடத்துகிறார்கள். அதைத் தடுக்க முடியாதா? இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் "அதையெல்லாம் தடுக்க வேண்டாம், மாணவர்களுடைய பிரச்சினையை நாம் அமைதியாகச் சந்திப்போம்" என்று எனக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதையும் மீறி அவர்கள் தொடர்ந்து போராடுவார்களேயானால், நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

இந்த அவையின் மூலம் நான் மாணவர்களுக்கும், அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். மாணவர்கள் பிரச்சினை மட்டுமல்ல, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கருணை உள்ளத்தோடு கவனிக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் தமிழகத்தில் இருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவரைச் சந்திக்க வாருங்கள், போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வாருங்கள், அழைத்துக்கொண்டு செல்ல நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, இதற்கு மேலும் இதுபற்றித் தொடர்ந்து விவாதிக்க எதுவும் இல்லாத காரணத்தால் இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

முற்பகல் 11-10

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களை இன்று, "கடிதோச்சி மெல்ல எறிக" என்ற திருவள்ளுவருடைய வாக்குக்கு இணங்க, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி, அதன் பிறகு இந்தக் கோரிக்கையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலே ஒரு விளக்க உறுதியைக் கேட்டிருக்கிறார்கள். நான் மீண்டும் மீண்டும் சொல்லுகின்றேன், இவ்வளவு நேரம் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விவரங்கள் அனைத்தையும் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். இதில் எந்தக் கருத்தையும், எந்த ஒரு அம்சத்தையும் யாரும் தவறு என்று கூற முடியாது. அந்த அளவுக்குத் துல்லியமாக நாங்கள் மாணவர்களிடத்திலே நடந்து கொண்டிருக்கின்றோம். இருந்தபோதிலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் குறிப்பிட்டதுபோல, "எழுதிக் கொடுங்கள், எழுதிக் கொடுத்தால்தான் நம்பமுடியும்" என்று சொல்லுகின்ற அளவுக்கு இந்த அரசை அவ்வளவு கீழ்த்தரமாக மதிப்பீடு செய்கின்ற ஒரு சூழ்நிலை இருப்பதை எதிர்க்கட்சித் தலைவர்கூட நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று நம்புகின்றேன்.

நான் குறிப்பிட்டதைப்போல, இதே அவையில் பலமுறை அளிக்கப்பட்ட வாக்குறுதி; இன்றைக்கும் அளிக்கப்பட்டிருக்கின்ற வாக்குறுதி; இவற்றை அந்த மாணவர்கள் ஏற்றுக்கொண்டு வேலைக்குச் செல்ல வேண்டும், படிப்புக்குச் செல்ல வேண்டும் என்றுதான் நான் அவர்களை எல்லாம் கேட்டுக்கொள்கின்றேன். வேறு எதையும் சொல்வதற்கு என்னால் இயலவில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை. இப்போது நான் கேட்பது, எழுதிக் கொடுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்பது தவறு. அதை ஒத்துக் கொள்கின்றேன். ஆனால், அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதில் என்ன பிரச்சினை இருக்கிறது? ஏன் நீங்கள் அவர்களைக் கூப்பிட்டுப் பேசக்கூடாது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது நான் வைத்திருக்கின்ற அன்பு, மதிப்பு, இதன் காரணமாக ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். கூப்பிட்டுப் பேசுவதற்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. பேசிய பிறகும், இதேநிலைதான் என்றால் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் தயாராக இருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அழைத்துப் பேசிய பிறகும் அவர்கள் போராட்டத்தைத் தொடருவார்களேயானால் நாங்கள் அதற்கு ஆதரவு கொடுக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய இந்த உறுதியை ஏற்றுக்கொண்டு நான் அவர்களை அழைத்துப் பேசுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 9-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன்
திரு. சி.டி. தண்டபாணி
திரு. குத்தாலம் பி. கல்யாணம்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. நா. பெரியசாமி



## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிதல், டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்:

"2000 ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல். திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் இப்புதிய நூற்றாண்டின் முதல் ஆளுநர் உரையை தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் நல்ல திட்டங்களை உள்ளடக்கியும், உலகத்தின் மூத்த மொழியான, தமிழ் மொழியை விரைந்து முதன்முதலில் இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிட வேண்டுமென்ற தமிழக மக்களின் எண்ணங்களைத் தெரிவித்தும் 1-3-2000 நாளன்று இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடனும், உவகையுடனும், உவந்தளித்த பேருரைக்கு தமிழக சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் முன்மொழிந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை அன்புடனும், கனிவுடனும் இப்பேரவையின் சார்பாக வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல், டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

---

@ 419 முதல் 429 வரையிலான பக்கங்களில் மேதகு ஆளுநர் ஆற்றிய ஆங்கில உரை இணைப்பு-1 ஆகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையில் படித்த ஆளுநர் உரையின் தமிழாக்கம் 430 முதல் 443 வரை இணைப்பு-2 ஆகவும் அச்சிடப்பெற்றுள்ளன.

முற்பகல் 11-15 [2000 மார்ச் 3

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 2000 ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் இப்பேரவையில் ஆற்றிய உரையினை முன்மொழிந்து, அதன்மீது எனது கருத்துகளைச் சொல்வதற்கு எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அரிய வாய்ப்பிற்கு என் மனமார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)*

மாற்றுத் தலைவர் அவர்களே, கடுகினும் சிறிய ஆலம் வித்து மண்ணில் புதைந்து, மழை நீர் பெற்று, மண்ணைப் பிளந்து, முளைத்து, படர்ந்து, இமயமாய் உயர்ந்து, தண்ணிழல் தரும் பாங்கினைப்போல, என் தமிழ் நெஞ்சின் ஆழத்திலிருந்து தோன்றி உருவாகிவரும் நன்றி எனும் இச்சொல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பாதங்களில் பாங்காய்ப் படர்ந்து இப்போது வணங்குகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். கருணையைத் தலைமையாய் ஏற்றுக் கொண்டிருக்கும் கல்வி மாகடல், காண்பவர் போற்றிடும் கனிவு, பேரன்பிற்குரிய பேராசான், இப்பேரவை முன்னவர்க்கும், தங்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத்தின் தந்தை எங்கள் இளம் பூரணனுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

மாற்றுத் தலைவர் அவர்களே, மரபுகள் கெடாமல், வளம் செறிந்த இந்த மண்ணின் கலாச்சாரத்திற்குக் குறைவு ஏற்படாமல், இப்பூமியில் கால்களை அழுந்தப் பதிந்துகொண்டு, வேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்திற்கு ஈடுகொடுக்கின்ற வகையில், உதய சூரியனினுடைய கதிர்களைப் போல டாக்டர் கலைஞர் அவர்கள் தன் எண்ணக் கரங்களால், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகளாகவும், சாதனைப் பட்டியலாகவும், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரையின் தொடக்கத்திலேயே, இந்தப் புத்தாயிரம் ஆண்டு மலர்ந்த நாளில், கடல் சூழ்ந்த கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவருக்கு அமைத்துள்ள 133 அடி உயர வானளாவிய சிலை உலகளாவிய புகழைச் சேர்ப்பதாக ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது.



2000 மார்ச் 3] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

மக்கள் நலன் காப்பதில் மேலும் செம்மையாகச் செயல்படுவதற்கு திருவள்ளுவரின் கருத்துரைகள் நமக்குக் கலங்கரை விளக்கமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எண்ணிப் பார்த்தேன்; தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை ஏறத்தாழ 25 ஆண்டுகளாக குமரி முனையில் வான்புகழ் வள்ளுவனுக்கு ஒரு சிலை அமைக்கத் தூண்டியது எது? அதனை அவர் எண்ணி எண்ணிச் செயல்பட்டு, வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் உருவாக்கி, அது அமைந்து, சிலை திறப்பு விழாவிற்குத் தயாராக நின்ற பிறகும் அவரைப் பெரிதும் உணர்ச்சி வயப்பட வைத்தது எது? அந்தச் சிலை அமைப்புப் பணியோடு அவரை இந்த அளவிற்கு ஒன்றிப்போக வைத்தது எது என்று நான் எண்ணிப் பார்த்தேன். அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தபொழுது எல்லாப் பேருந்துகளிலும், திருவள்ளுவருக்கு ஒரு படமும், எல்லாப் பேருந்துகளிலும் ஒரு திருக்குறளும் எழுதப்பட வேண்டுமென்று அறிவிப்புச் செய்து அதனை நடத்திக் காட்டினார்கள்.

அடுத்து, மற்றொரு முறை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபொழுது, வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்தார்கள். அப்பொழுதே குறள்பால் அவர் கொண்ட ஈடுபாடு கொஞ்சம் ஆறியிருக்க வேண்டும். குறளோவியம் எழுதத் தொடங்கினார்கள். குறளோவியம் தீட்டியபொழுதாவது குறள்பால் அவர் கொண்டிருந்த ஈடுபாடு ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்க வேண்டும். ஆனால், நாளாக நாளாக, நாத்திகனான ஒரு தலைவன் திருவள்ளுவரைத் தெய்வமாகவே வழிபடுங்கள் என்று அறிவித்து, "அழையுங்கள் அய்யன் திருவள்ளுவர்" என்று அறிவித்தாரே, அதற்கு என்ன காரணம்? எது காரணமாக இருக்க முடியும்? தலைவர் அவர்களே, அவர்கள் வள்ளுவராகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் காரணமாக இருக்க முடியும் என்ற இந்தக் கருத்தினை இந்த மாமன்றத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அய்யன் திருவள்ளுவர் 'உடைமை' என்று பாடிய பத்து அதிகாரங்களுடைய குறட்பாக்களின் வடிவில், அவற்றின் பொருளில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அன்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, பொறையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாணுடைமை என்ற உடைமைகள் பத்து என்று சொல்லத்தக்க வகையில் தமிழக முதல்வர் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 100 திருக்குறள் பாக்களின் வடிவில், அவற்றின் பொருளில், அவற்றின் பொருளைச்

செயலாக்கி இந்த அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அய்யன் திருவள்ளுவராகவே டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் இந்த அவையிலே சொல்லி மகிழ நான் விரும்புகின்றேன்.

முற்பகல் 11-20

இந்த மாமன்றத்திலே மேலும் ஒரு கருத்தினைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சற்று முன்பு நடந்த விவாதத்தின்போதுகூட தன்னுடைய பொறையுடைமையைக் காட்டுகின்ற வகையில், எவ்வளவு பொறுமையாக, எவ்வளவு பண்போடு அவர்கள் பதிலளித்தார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தங்களுடைய மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."

என்பது போல தம்மை இகழ்வாரை எல்லாம் பொறுத்து, தீயச் செயல்களை, சமூக விரோதச் செயல்களைச் செய்வதற்கு அஞ்சி, நாணி நாணுடைமை காட்டி உலகத்தோடு ஒட்ட ஒழுகி, ஒழுக்கமுடைமை காட்டி, ஓய்வறியாமல் ஊக்கத்தோடு உழைத்து, இந்தத் தமிழ்ச் சமுதாயம் உய்ய ஊக்கமுடைமை காட்டி, வள்ளுவமாக வாழ்ந்து கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையிலே அறிவித்திருக்கின்ற அந்த உறுதிமொழியைக் கேட்டு நானும் ஒரு டாக்டர் என்கிற காரணத்தினால் பணிவன்போடு என்னுடைய வேண்டுகோளையும் அந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாற்றுத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள இந்திய அரசமைப்புச் சட்டம் மறு ஆய்வு செய்யப்படும்போது, இந்திய துணைக் கண்டத்தில் ஒருமைப்பாடும், ஒற்றுமையும், மதச்சார்பின்மையும், உறுதியும், வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கேற்ப, சிறுபான்மை சமுதாய மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்டதாக அரசமைப்புச் சட்டம் அமைய வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்தும் என்கிற கருத்தும், அதனைத் தொடர்ந்து இந்த அரசின் மொழிக் கொள்கையாக திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும், சிறப்புப் பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ்



மொழியை முதற்கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும் என்னும் கருத்தும் டாக்டர் கலைஞர் அவர்கள் திரும்பத் திரும்ப தாரக மந்திரமாக சொல்லிக் கொண்டிருக்கிற கருத்துக்களாகும்; அவை மரியாதைக்குரிய மாண்புமிகு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களால் தி.மு.க. மாநாட்டில் தீர்மானமாக முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள உயிர் மூச்சான கொள்கையாகும். கடினமான இச்செயலை, மனம் தளராமல், நிறைவேற்றுவதற்கு வேண்டிய மெய்யான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு இருக்கிற நமது தமிழக முதல்வர் அவர்கள் ஆள்வினை உடையவர். இதனை

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

என்ற குறளின் உட்பொருளாக வாழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள். 'முயற்சி திருவினையாக்கும்' என்ற குறள் வெண்பாவின் முதலடிக்குச் சொந்தக்காரர் அவர்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்."

கார்கில் போரில்

'அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்பதில்லையே'

என்ற மகாகவியின் வழிநின்று போர்புரிந்த தீரம் மிகுந்த இராணுவ வீரர் நிவாரண நிதிக்கு ரூ.50 கோடியை அள்ளித் தந்ததும், தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அந்த வீரர்கள் குடும்பத்திற்கு அடுக்குமாடி வீடு என்றும், தனி வீடு என்றும், தமிழக அரசாங்கத்தில் வேலைவாய்ப்பு என்றும், இலவசக் கல்வி என்றும் வசதிகள் செய்து கொடுத்ததும், கனியன் பூங்குன்றனார் வரிசையிலே நின்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனச் சொல்லி ஒரிசாவில் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால்பவுடர் என்றும், பணம் என்றும் நம்முடைய முதல்வர் அவர்கள் நிவாரண உதவிகளை அளித்ததும் தமிழக முதல்வர் அவர்கள் அன்புடைமை, அருளுடைமை, அறிவுடைமை ஆகியவற்றிற்கு ஒரு சான்றாக வீற்றிருக்கிறார் என்பதை நமக்கெல்லாம் சொல்வதாக

அமைந்திருந்தது என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இவை போதாதென்று, தலைவரவர்களே, அண்மையில் தருமபுரியில் மூன்று நீலோற்பல மலர்கள் நெருப்பிலே வெந்து போயினவே மூன்று வீணைகள் விறகுகளாக எரிந்து போயினவே, இந்தத் துயரச் செய்தி காதிலே விழுந்தவுடனே தன் கண்களில் குளமாகத் தேங்கி நின்ற கண்ணீரை அப்படியே உள்வாங்கி இதயத்தின் அடித்தளத்திற்கு அனுப்பிவிட்டு, எரிந்து போன தமிழகத்துச் செங்கோட்டு யாழ்களின் குடும்பங்களைத் தாயாகத் தன் கரங்களிலே ஏந்திக்கொண்டு, நட்டஈடு என்ற பெயரால் தன் அன்பைக் காணிக்கையாக்கி, பொருள் என்றும், அந்த மங்கையர்கரசிகளின் உடன் பிறந்தவர்களுக்கு அரசு அலுவல் என்றும் வேலைவாய்ப்புகள் என்றும் வழங்கி அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை இம்மூன்றிற்கும் டாக்டர் கலைஞரே சான்று, அழிக்கமுடியாத சான்று என்று அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

தமிழ் மக்களிடத்திலே, இவர் கொண்டுள்ள அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? மாற்றுத் தலைவர் அவர்களே,

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு."

என்ற குறள், அன்றாடம் தொலைக்காட்சிச் செய்திகளில், இலைமறை காயாய்ச் சொல்லப்படுகிறது அந்த இலைமறை காய்ச் சம்பவம், இந்தச் சம்பவங்களை நமக்கு நினைவுபடுத்தத்தானோ என்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உரையின் முற்பகுதியிலே குறிப்பிட்டதைப்போல, தமிழின மரபுகள் கெடாமல், மண்ணின் கலாசார மாண்புகள் மாறாமல், இனம் காத்து, மொழி காத்து, பேணிப் பராமரிக்கும் செயல்தான் மேதகு ஆளுநர் உரையில் அரசு அறிவித்துள்ள 'குறள் பீடம் விருது'.-அதை வரவேற்றுப் பாராட்டுகின்ற நேரத்தில்—துரிதயுகத்தில்— விஞ்ஞானம் காட்டும் மகத்தான வளர்ச்சியில், தகவல் தொழில்நுட்பத்தை, அரசு நிர்வாகத்தில் பயன்படுத்திக்கொண்டு, திருவாரூரைப்போல, தஞ்சை மாவட்டத்தைப்போல, மாவட்ட நிர்வாகத்தைக் கணினி மயமாக்கும் திட்டத்தை, ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தும் முயற்சியை இந்த அரசு முனைப்புடன் மேற்கொள்ளும் என்ற தகவலைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்; போற்றுகின்றேன்.



இந்த இடத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். எங்கள் தருமபுரி மாவட்டத்தில், மாங்கனி அதிகமாக விளைகிறது என்பது நீங்கள் நன்றாக அறிந்ததே. குறிப்பாக, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், பர்கூர் ஆகிய பகுதிகளில் தரம் மிகுந்த, சுவைமிகுந்த, சாறு மிகுந்த மாங்கனிகள் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்தில் விளைகின்றன. அவ்வளவு மிகுதியான விளைச்சல் உண்மையைச் சொல்ல வேண்டுமானால், தருமபுரி மாவட்டத்தில் விளைகின்ற மாங்கனிகளைத்தான், பிரிக்கப்படாத சேலம் மாவட்டம் என்ற நினைப்பில் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி 'சேலம் மாம்பழம், சேலம் மாம்பழம்' என்று வாய்க்கு வாய் சொல்லிக் கொள்வார்கள். நாங்களும் அவர்களிடத்திலே கொண்டுள்ள மரியாதை காரணமாக, பாசம் காரணமாக அதைக் கண்டு கொள்வதில்லை. எங்களுடைய மாவட்டத்தில் கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகூட, பத்து அல்லது இருபது மாங்கன்றுகளை நட்டு, அவற்றினுடைய பயனை எதிர்பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

எங்களுடைய மாவட்டத்திலே ஓசூரிலே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து, தொடங்கிக் கொடுத்த உழவர் சந்தை மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஓசூரில் காய்கறி விளைச்சல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், நிறைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், தருமபுரி மாவட்ட விவசாயி தன்னுடைய மாங்காய்களை மிகக் குறைந்த அடிமாட்டு விலைக்கு மும்பை, பெங்களூர் சந்தைக்கு விற்கின்ற அவல நிலையைப் போக்க, உடனடியாகத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒரு மையத்தை, கிருஷ்ணகிரியில் ஆரம்பித்துத்தர வேண்டும்; அமைத்துத்தர வேண்டும் என்று மெத்தப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். விரைவாகவும், துல்லியமாகவும், சென்னை, ஹைதராபாத், பெங்களூர், மும்பை போன்ற பெருநகரங்களில் மாங்கனி விற்கப்படுகின்ற... (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிகின்ற உரையிலே பேசிக் கொண்டிருக்கிறேன். ஒரு சில மணித் துளிகளை அதிகமாகச் சேர்த்து அளிக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மாங்கனி விற்கப்படுகின்ற அன்றாடச் சந்தை

விலைப் பட்டியலை, மா விளைவிக்கின்ற விவசாயிகள் இடைத்தரகர்களின் இடையூறின்றி விலை அறிந்து கொண்டு விற்பனை செய்ய, டிட்கோ அல்லது எல்காட் மூலமாகவோ, தகவல் தொழில்நுட்பவியல் துறை மூலமாகவோ, நவீன தகவல் தொடர்புக் கட்டமைப்பு ஒன்றினை கிருஷ்ணகிரியில் உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மெத்தப் பணிவோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று தேசிய பெருவழித் தடங்கள் எங்கள் ஊரின் வழியாகச் செல்கின்றன. தேசிய பெருவழித் தடம் எண் 47, எண் 7, அஃதன்னியில் பாண்டிச்சேரி - பெங்களூர் நெடுஞ்சாலை இணையும் ஊர் கிருஷ்ணகிரி.

மாற்றுத் தலைவர் அவர்களே, பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டமாய் நம் முதல்வரின் இதயப் பூவினுள் எத்தனை எத்தனையோ நல்ல திட்டங்கள். இந்தத் தமிழ்ச் சமுதாயம் முன்னேற, இந்தத் தமிழ்நாடு முன்னேற, பொருளாதாரம் மேம்பட மதுரையில் ரூ.17 கோடி செலவில் நெல் விற்பனை அங்காடி, திருச்சியில் ரூ.12.3 கோடியில் வெல்ல விற்பனை அங்காடி, பெருந்துறையில் ரூ.31 கோடியில் மஞ்சள் விற்பனை அங்காடி, இவற்றோடு கிருஷ்ணகிரியில் 10 கோடி ரூபாய் செலவில் ஒரு மாங்கனி விற்பனை அங்காடி, நவீன தகவல் தொடர்புக் கட்டமைப்போடு ஏற்பாடு செய்து கொடுத்தால், "ஏழ்பிறப்படியேம் வாழ்க நின் கொற்றம் என்று சிலப்பதிகாரப் பாணியில் வாழ்த்துவோம். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மனதில் முக்கனிகளில் ஒன்றான மாங்கனிச் சந்தை எங்கள் கிருஷ்ணகிரியில் அமைய ஆவன செய்யும் பெருவிருப்பு வர வேண்டும் என்று பணிவோடு எதிர்பார்க்கிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு."

என்றான் அய்யன் திருவள்ளுவன். வானம் கொடுக்கின்ற கொடை மூன்று மாதம்; பசு கொடுக்கின்ற கொடை நான்கு மாதம். ஆனால் ஆண்டில் 365 நாட்களிலும் தமிழ் மக்களுக்காக, இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக, ஓய்வறியாமல், தொடர்பு அற்றுப் போகாமல், நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குகிறது கழக அரசு டாக்டர் கலைஞர் அரசு.



முற்பகல் 11-30

பள்ளி செல்லும் மாணவச் செல்வங்களுக்கு இலவச Bus pass என்றும், சீருடை என்றும், புத்தகங்கள் என்றும், கல்வி பெறுவதில் பல்வேறு சலுகைகள் என்றும் வழங்கியதோடு நிறைவுகொள்ளவில்லை இந்த அரசாங்கம். பிள்ளைகளுடைய உடல்நலம் காக்க, வாழ்வொளித் திட்டத்தினை வழங்கியுள்ளார்கள்.

பள்ளிக்கூடங்கள்தோறும் மருத்துவர்கள் சென்று, மாணவச் செல்வங்களுடைய உடல்நிலையினைப் பரிசோதனை செய்து ஆலோசனைகளையும், மருந்துகளையும் வழங்குகிறார்கள்.

அதைப்போலவே, அருகில் மருத்துவமனையில்லாத கிராமப்புறங்களில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் சென்று உடல் நோய்களை ஆராய்ந்து அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் தருகிறார்கள். மிகச் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த அரசாங்கம் எவ்வளவு பொறுப்போடு செயல்படுகின்றது தெரியுமா? கிராமப்புறங்களிலே வருகின்ற டாக்டர்கள் நோயாளிகளைப் பார்க்கின்றபோது, அவர் ஓர் இருதய நோயாளியாக இருப்பார் என்று சொன்னால், ஒரு மஞ்சள் அட்டையை, அடையாள அட்டையாய் அவர்களிடத்திலே கொடுத்து எந்தெந்த நோய்களுக்கு அந்தக் கிராமப்புறங்களிலே மருத்துவம் செய்ய முடியவில்லையோ அந்தந்த நோய்களுக்கு அவர்கள் ஒரு Follow-up action என்ற முறையிலே ஒவ்வொரு வாரத்திலேயும் ஒவ்வொரு சனிக்கிழமையும் அருகிலேயிருக்கின்ற ஒரு பெரிய மருத்துவமனைக்கு அவர்கள் சென்று தேவையான பரிசோதனைகளைச் செய்து கொள்ளலாம்; தேவையான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்; தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்து இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

வருமுன் காப்போம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக 11 இலட்சம் நோயாளிகள் கிராமப்புறங்களில் பயனடைந்துள்ளனர் என்ற புள்ளிவிவரம் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருக்கிறது. சாதாரணமாக குறை சொல்லாமல் தூங்குவதில்லை என்ற முகாமிலே உள்ளவர்கள்கூட, மக்கள் இந்தத் திட்டத்திற்கு அளிக்கின்ற அபரிமிதமான வரவேற்பைப் பார்த்து

வாய்மூடிக்கொண்டுவிட்டார்கள் என்பதுதான் உண்மை. 1996-ஆம் ஆண்டு இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்ட முதல் கோப்பு - தரைக்குத் தனியாக வரி, கூரைக்கு தனியாக வரி என்ற நிலைமையை மாற்றி (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரமாகிவிட்டது, சிக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மூன்று நிமிடங்கள் நீங்கள் எனக்குத் தர வேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான ஒரு சில விஷயங்களைச் சொல்லிவிட்டு நான் முடித்துவிடுகிறேன்.

கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்கு அதற்காக நிதியை ஒதுக்கி, தான் கையெழுத்திட்ட முதல் கோப்பிலேயே கோடிக்கணக்கான மக்களுடைய வயிற்றிலே பாலை வார்த்தார்கள் தமிழக முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமையென்று கருதுகின்றேன். அதனைத் தொடர்ந்து இந்த 2-சி பட்டா. ஒவ்வொரு மரத்திற்கும் 50 ரூபாய் என்று முன்பு ஆட்சி செய்தவர்கள் காலத்திலே இருந்ததை மாற்றி, வேண்டுமென்றே 50 ரூபாய், 60 ரூபாய் என்று அறிவித்திருந்த நிலையையும் ரத்து செய்து கொடுத்தார்கள் என்பதை நம்முடைய நினைவினுடைய மேல் தளத்திற்கு நாம் கொண்டுவர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1989-லே ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்று ஆரம்பித்து, அதனுடைய தொடர்ச்சியாகப் பல சலுகைகள்; நேற்றைக்கு ஆடுகளுக்கான மேய்ச்சல் வரி ரத்து என்று அறிவித்தது வரை திட்டமிட்டுச் செயலாற்றுகின்ற அரசு கழக அரசு; திட்டமிட்டுச் செயலாற்றுகின்ற முதல்வர் டாக்டர் கலைஞர். இவை அவருடைய வினைத் திட்பத்தைக் காட்டுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை மேம்பாட்டிற்குத் தமிழக அரசு பாசனத் திட்டங்களில் கணிசமான முதலீடு செய்து வருகிறது என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குலோத்துங்கச் சோழனுக்குக் கிடைத்த கருணாகரத் தொண்டமான் என்றெல்லாம் உங்களைப் போற்றிப்



பாராட்டியிருக்கிறேன் இந்த மாமன்றத்திலே; நீங்களும் மிக அழகாக நதிகளைக் குறிப்பிட்டு அவை ஓடுகின்ற வழியிலே அவை நிரப்புகின்ற குளங்கள், ஏரிகளினுடைய பெயரை மறக்காமல் அடுக்கடுக்காகச் சொல்லி எங்களை சொக்க வைத்திருக்கின்றீர்கள். "குடமுருட்டி காவிரி பெண் ஆடுகின்ற காட்சி கண்டு கொள்ளிடம் இதுதான்" என்று எங்களுடைய தலைவருடைய வரிகளையே எங்களின் முன்னால் ஒப்புவித்துக் காட்டி எங்களையெல்லாம் குளிர வைத்திருக்கின்றீர்கள். ஆனால்..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சிக்கிரம் பேசி முடியுங்கள். நேரம் அதிகமாகிவிட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு நிறைய நேரம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை தொடக்கப் பேச்சாளர் என்பதாலே அதிக நேரம் கொடுத்தாகிவிட்டது. அடுத்து திரு. அழகிரி.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெண் இனத்திற்குத் தலைவர் கொடுத்திருக்கின்ற அந்த நல்ல திட்டங்களை மட்டும் ஓரிரு மணித்துளிகளில் சொல்லிவிட்டு நான் அமர்ந்து விடுகிறேன். அதற்கு, நீங்கள் தயவு செய்து மறுக்காமல் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தூர் வாருவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று கொடுத்திருந்தார்கள். அதை ஏனோ நிறுத்திவிட்டார்கள். இவ்வளவு உங்களைப் பாராட்டியும், உங்கள் பின்னால் வழி நடந்தும் எங்களுக்கு ஏன் அந்த உரிமை மறுக்கப்பட்டுவிட்டது. தடை எதுவாக இருந்தாலும், கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) :** உங்களது பேச்சு முடிந்துவிட்டது. திரு. ச. அழகிரி.

*முற்பகல் 11-35*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் எனது உரையை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒரு திருக்குறளைச் சொல்லி ஆரம்பிக்க விரும்புகிறேன்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு."

என்கின்ற திருக்குறளைச் சொல்லி நான் ஆரம்பிக்க விரும்புகிறேன். நட்புகொள்வது சிரித்து மகிழ்வதற்கு மட்டும் அல்ல. நம்முடைய அன்பிற்குரிய நண்பர் தவறு செய்யும்பொழுது இடித்துக் கூறுவதற்கும் நம்முடைய நட்பு பயன்படவேண்டும் என்பதுதான் அந்தத் திருக்குறள். பேரவைத் தலைவர் மூலமாக இந்த அவைக்கு இந்தத் திருக்குறளை நான் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது இந்தியத் துணைக் கண்டத்தின் மத்தியிலே அமர்ந்திருக்கின்ற பாரதிய ஜனதா அரசு ஒரு மதச் சார்போடு நடந்துகொள்கிற விஷயங்கள் குறித்து ஆளுநர் உரையிலே இடித்துக் கூறப்படாமல் இருக்கின்றன. குஜராத் மாநிலத்திலே ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்த அடிப்படைவாதிகள், மத தீவிரவாதிகள் அரசு ஊழியத்திலே பங்குபெறலாம் என்கின்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மத்திய உள்துறை அமைச்சரே தலையிட்டும்கூட அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுவதற்கு குஜராத் அரசு தயாராக இல்லை. இந்த நிலை நீடிக்குமேயானால், தடை செய்யப்பட்டிருக்கிற ஜமாத்திய இஸ்லாமி என்ற அமைப்புகூட நாங்களும் அரசாங்கத்திலே உரிமை கோருவோம் என்கின்ற கூக்குரலை எழுப்புவார்கள். இதனை எதற்காகக் கூறுகிறேன் என்று சொன்னால், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிற்கே உலை வைக்கின்ற ஒரு விஷயமாக இது இருக்கின்றது. இவ்வளவு கடுமையான நிகழ்வுகள் டெல்லியிலே நடைபெற்றும்கூட, மத்திய அரசாங்கத்தில் பங்கு பெற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் இதிலே மிகுந்த அக்கறை காட்டாமல் மெத்தனமாக இருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே இவற்றைப் பற்றிக் கடுமையான கருத்துகளைச் சொல்லியிருப்பார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அதுபோன்ற கருத்துகள் எதுவுமே வரவில்லை. நாங்கள் எதிர்பார்ப்பதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திராவிடர் கழகத்தினுடைய கொடியை அமைக்கின்றபோது, தன்னுடைய இரத்தத்தை எடுத்து திராவிடர் கழகத்தினுடைய கொடியினுடைய சிவப்புப் பகுதியை உதயமாக்கி வைத்தார்கள் என்கின்ற செய்தியை நாம் கேள்விபட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு முற்போக்குச் சிந்தனையுடைய



ஒரு முதலமைச்சர், இப்போது பாரதிய ஜனதா விஷயத்திலே நீர்த்துப் போனதற்கு என்ன காரணம் என்பதனை நாங்கள் அறிவதற்கு ஆசைப்படுகிறோம்.

அது மட்டுமல்ல. இராமசாமி பெரியாரைப் பின்பற்றி நீங்கள் வருவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் இராம கோபாலனைப் பின்பற்றிச் செல்கிறீர்களே, இது நியாயமா என்றும் நான் இந்த நேரத்திலே கேட்க ஆசைப்படுகிறேன். திராவிடர் கழகத்தையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பையும் ஒருமைப்படுத்திப் பார்ப்பது நியாயமாகாது என்பதை நான் அறிவேன். முதலமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு என்பது ஓர் அடிப்படை மதவாத அமைப்பு. ஆனால், தந்தை பெரியார் அவர்கள் ஆரம்பித்து வைத்த திராவிடர் கழகம் என்பது ஒரு சீர்திருத்த இயக்கம். ஓர் அடிப்படை மதவாத அமைப்பும், ஒரு சீர்திருத்த இயக்கமும் ஒரே இயக்கம் என்கின்ற எண்ணம் யாருக்கும், எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அடிப்படையையே தவறாகப் போட்டுவிடக்கூடாது. "திராவிடர் கழகமும், ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் இரண்டும் ஒன்றுதான், ஒரேவிதமான சமுதாய இயக்கம்தான்" என்று நான் எங்கும் சொல்லவேயில்லை. "சமுதாய இயக்கம் என்று சொல்கிற நேரத்தில் திராவிடர் கழகத்தினுடைய கொள்கை வேறு, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய கொள்கை வேறு" என்று சொல்லியிருக்கின்றேன். இரண்டுக்கும் வேறுபாடு கூட இல்லை, முரண்பாடே உண்டு. நான் திராவிடர் கழகத்திலேயிருந்து வந்தவன் என்று சொல்லியிருக்கிறேன். சில பத்திரிகைகளிலே தவறாகக் காலையிலே போட்டார்கள். மாலையிலே அதற்கு மறுப்புக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களிடமிருந்து அப்படி ஒரு மறுப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆவல். காரணம் என்னவென்றால், இந்தக் கருத்து எழுந்தபோது, திராவிட இயக்கங்களிலிருந்து வந்த எதிர்ப்பைவிட, ஆர்.எஸ்.எஸ். இயக்கங்களிடமிருந்து வந்த ஆதரவுதான் மிக அதிகம். முதல்வர் சொன்னதிலே தவறு இல்லை என்று அவர்கள் தான் திரும்பத் திரும்ப அதைப் பதிவு செய்தார்கள். எனவே, அவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் முதலமைச்சர் அவர்கள் இங்கே மறுப்புத் தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 26-2-1998 அன்று கோவையிலே நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். "பாரதிய ஜனதா கட்சி வர்ணாசிரம தர்மத்திலே நம்பிக்கை வைத்திருக்கின்ற ஒரு கட்சி. இது ஒன்று போதாதா? தந்தை பெரியாருக்கு விடுக்கும் சவால் இது. அறிஞர் அண்ணாவிற்கு விடுக்கும் சவால் இது. பெருந்தலைவர் காமராஜருக்கு விடுக்கின்ற சவால் இது. தோழர் ஜீவானந்தம் அவர்களுக்கு விடுக்கின்ற சவால் இது. இதைவிட வேறு ஏதாவது இருக்க முடியுமா" என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போதும் நாங்கள் இதைத்தான் சொல்ல விரும்புகிறோம். இவ்வளவு தீய சக்திகள் இந்தியாவிலே மீண்டும் ஒரு பிரிவினையைத் தூண்டுவதற்கான ஒரு சூழ்நிலையைப் பார்க்கிற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆர்.எஸ்.எஸ். விஷயத்திலே நாடாளுமன்றத்திலே மெத்தனமாக இருக்கிறார்களே, அது ஏன்?

நேற்று நீங்கள் ஒரு பத்திரிகைக்குப் பதில் சொல்கின்றபோது ஓரளவிற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால் அந்தக் கண்டனம் எப்படி இருக்கிறது என்றால், பூனை தன்னுடைய குட்டியைக் கவ்வுவதைப் போல இருக்கிறதே ஒழிய, பூனை எலியைப் பிடிப்பதைப் போல இல்லை. அதைப் போன்ற ஓர் அமைப்பைத்தான், அதைப் போன்ற ஒரு செயல்பாட்டைத்தான் நாங்கள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். ஆனால் அது கிடைக்கவில்லை என்பதனை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது வாட்டர் திரைப்படத்தை எடுப்பதற்கே இந்தியாவிலே உரிமை கிடையாது. ராஜாராம் மோகன்ராய் அவர்கள் உடன்கட்டை ஏறுவதற்கு எதிராக ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அது அந்தக் காலம். 40 ஆண்டுகளுக்கு முன்பு நீங்களே பராசக்தி படத்தை எடுத்தீர்கள். அதைவிட ஒரு சமுதாயச் சீர்திருத்தத் திரைப்படம் வேறு எதுவும் வந்திருக்க முடியாது. ஆனால் அதற்குச் சற்றும் குறைவில்லாத வாட்டர் திரைப்படத்தை இப்போது உத்தரப்பிரதேசத்திலே, மத்தியப் பிரதேசத்திலே படம் பிடிக்க முடியவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தரப்பிலிருந்து அதற்கு ஏதாவது பெரிய எதிர்ப்பு வந்திருக்கிறதா என்றால் வரவில்லை. அதற்குக் காரணம் என்ன? பாரதிய ஜனதா கட்சியோடு உங்களுக்கு இருக்கின்ற உறவின் காரணமாக உங்களுடைய அடிப்படைக் கொள்கைகளையே நீங்கள் அடகு வைத்திருக்கிறீர்கள் என்கின்ற ஒரு குற்றச்சாட்டை உங்கள்மீது சுமத்த நான் விரும்புகிறேன். இதன் காரணமாக மறைமுகமாக மீண்டும் 'மனு'-



வை இந்தியாவிலே புகுத்துவதற்கு நீங்களும் பாரதிய ஜனதாவிற்கு உடந்தையாகச் செயல்படுகிறீர்களே, இது நியாயமா என்கின்ற கேள்வியை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். தமிழ் வழிக்கல்வியைப் பொறுத்தவரையில்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உடன்கட்டை ஏறுவது குறித்த படத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்றும், அடிப்படைக் கொள்கையை அடகு வைத்துவிட்டோம் என்றும் அருமை நண்பர் அழகிரி சொல்கிறார். "நான் உடன்கட்டை ஏற இருந்தேன்" என்று சொன்ன ஒரு தலைவியோடு (மேசையைத் தட்டும் ஒலி) உடன்பாடு வைத்தால் அதற்குப் பெயர் அடமானமா, விற்பனையா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றி நானாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் முதலமைச்சர் வருவார் என்று தெரியும். அதற்காகத்தான் நான் காத்திருந்தேன். யாருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அது கலைஞராக இருந்தாலும் சரி, ஜெயலலிதா அவர்களாக இருந்தாலும் சரி, தமிழ் மாநில காங்கிரசைப் பொறுத்தவரையில், 1991-லிருந்து 1996 வரை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்ற அத்தனை முறைகேடுகளையும், நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்தாலும் சரி, சட்டமன்றத்திற்கு உள்ளும் சரி, வெளியேயும் சரி, உங்களைவிடக் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். அதன் பிறகு அவர்களுக்கு மக்கள் மன்றத்திலே ஒரு தண்டனை வழங்கப்பட்டது. ஒரு குற்றத்திற்கு ஒரு தண்டனைதான். ஒருவன் கொலை செய்திருக்கிறான் என்பதற்காக 10 ஆண்டு காலம் சிறைத் தண்டனை கொடுத்த பிறகு அவன் வெளியே வந்தால் அவன் கொலை செய்திருக்கிறான். எனவே மீண்டும் அவனைப் பிடித்து இன்னும் 10 ஆண்டு சிறைத் தண்டனை கொடு என்று சொல்கின்ற மனப்பக்குவம் எங்களுக்குக் கிடையாது. உங்களோடுகூட நாங்கள் உறவு வைத்திருந்தோம். உங்கள்மீது சர்க்காரியா கமிஷன் விசாரணை இல்லையா? சர்க்காரியா கமிஷன் விசாரணையிலே.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** சர்க்காரியா கமிஷன் விசாரணை பற்றி ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது. அதை மீண்டும் இந்தச் சபையிலே எழுப்புவது முறையல்ல. அதை விடுத்து, வேறு பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டும் என்றால், அந்தப் பதில் அங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை இல்லை. தேவையில்லாதது. அது முடிவு செய்யப்பட்ட ஒன்று.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சர்க்காரியா கமிஷன் என்று சொல்வதால், நான் ஒன்றும் பயந்துவிடவில்லை. ஆனால் நான் எழுப்பிய பிரச்சினை வழக்கைப் பற்றியது அல்ல. உடன்கட்டையைப் பற்றியது. உடன்கட்டைக் கொள்கையைப் பற்றிப் பேசினார்கள். அதிலே நாங்கள் ஏதோ அடமானம் போய்விட்டோம் என்று சொன்னார்கள். அதைப் பற்றித்தான் பேசினேன். வழக்கைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் தாராளமாகப் பேசலாம். எத்தனை வழக்குகளைப் பற்றி வேண்டுமானாலும் பேச நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சரைப் பயமுறுத்துகின்ற எண்ணம் எனக்குக் கிடையாது. அவர் பயப்படமாட்டார் என்பதும் எனக்குத் தெரியும். நான் அந்தப் பிரச்சினைக்குள் செல்லவில்லை. விஷயம் இல்லை என்று சொல்ல முடியாது. விஷயம் நிறைய இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "நீங்கள் அந்தக் கட்சியை ஆதரிக்கலாமா" என்று கேட்டதற்கு நான் சொல்ல விரும்புகின்ற விளக்கம் அது. நான் அந்த விளக்கத்தைச் சொல்லத்தான் வேண்டும்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சர்க்காரியா கமிஷனைப் பொறுத்தவரைக்கும் எந்தச் சூழ்நிலையிலே அதைப் போட்டார்கள் என்று எல்லோருக்கும் தெரியும்.

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் முதன் முறையாக சுதந்திரத் தமிழ்நாட்டிலே ஒரு ஊழல் குற்றச்சாட்டிற்காக ஆட்சியை இழந்த ஓர் அமைப்பு உங்களுடைய அமைப்பு. ஆனால் அந்தக் கட்சியுடன்கூட நாங்கள்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊழல் குற்றச்சாட்டிற்காக ஆட்சியை இழக்கவில்லை. Emergency-யை எதிர்த்த காரணத்திற்காகத்தான் நாங்கள் ஆட்சியை இழந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) Emergency-யை நீங்கள் தழுவிக் கொண்டிருந்தபோது நாங்கள் எதிர்த்தோம். அதற்காக ஆட்சியை இழந்தோம்.



**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்களுடைய ஆட்சியை இழந்ததற்குச் சொல்கின்ற காரணம் அது. ஆனால் அன்றைக்கு இந்தியா முழுவதும் முதன் முறையாக ஊழல் குற்றச்சாட்டு சாட்டப்பட்ட ஓர் அரசாங்கம் ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டது என்பதுதான் அன்றைக்கு இருந்த வரலாறு. எனவே அப்படி இருக்கிற ஒரு கட்சியோடுகூட நாங்கள் உறவு வைத்துக்கொண்டு இருந்தோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே முதல் ஊழல் குற்றச்சாட்டு பஞ்சாப் மாநிலத்திலே ஆரம்பம் ஆயிற்று. அது காங்கிரஸ் முதலமைச்சர் கெய்ரோன் மீது என்பதை சரித்திரம் படித்த அழகிரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மகாராஷ்டிரா.....

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உரையிலே தெளிவாகச் சொன்னேன். சுதந்திரத் தமிழ்நாடு என்றுதான் சொன்னேன். முதல் முறையாக நான் சொல்கிறபோது தமிழ்நாட்டைத்தான் சொன்னேன். சுதந்திரம் அடைந்த பிறகு—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதாக ஒரு தவறான தகவலை அழகிரி சொல்கிறார். சுதந்திரம் அடையவேண்டும் என்று விரும்புகிறாரா?

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, சுதந்திரத் தமிழ்நாடு என்று நான் சொன்னதனுடைய பொருள் என்னவென்றால் சுதந்திரத்திற்குப் பிறகு ஒரு மாநில அரசாங்கத்தின் மீது தமிழகத்திலே ஒரு ஊழல் குற்றச்சாட்டு சாட்டப்பட்ட ஒரு மாநில அரசாங்கம் என்பதற்காகத்தான் நான் அந்த உதாரணத்தைச் சொன்னேன் என்பதை.....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்குப் பிறகு பக்ஷி குலாம்மீது Enquiry Commission அமைக்கப்பட்டதே! அது சுதந்திரம் வருவதற்கு முன்பா? கலிங்கா டியூபிலே பட்நாயக்மீது ஊழல் சுமத்தப்பட்டதே! அது சுதந்திரம் வருவதற்கு முன்பா? வி.கே. கிருஷ்ணமேனன் மீது ஜீப் ஊழல் சுமத்தப்பட்டதே; நாடாளுமன்றத்திலே நேருவே வரிந்து கட்டிப் பேசினாரே! அது சுதந்திரத்திற்கு முன்பா? முந்ரா வழக்கு சுதந்திரத்திற்கு முன்பா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இவர்கள் யாருமே தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இல்லை என்பதற்காகத்தான் தமிழகத்திலே முதன் முறையாக உங்கள்மீது ஊழல் குற்றச்சாட்டு....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, யாருமே தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இல்லை என்றார். டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆந்திரக்காரரா? தமிழகத்தைச் சார்ந்தவரா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, டி.டி. கிருஷ்ணமாச்சாரி மீது கமிஷன் அமைக்கப்படவில்லை. தனி மனிதர்கள் சொன்ன குற்றச்சாட்டு அது. ஆனால் உங்களுடைய அரசாங்கத்தின் மீது கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த கமிஷனுக்குச் சென்று......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, சாக்ளா கமிஷன் அமைக்கப்பட்டது. மறந்துவிட வேண்டாம். சாக்ளா கமிஷன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, போதுமான அளவிற்கு இந்தப் பிரச்சினையிலே நாம் பேசியிருக்கிறோம். (சிரிப்பு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இந்த மாதிரி பிரச்சினைகள் வரும்போது Concrete evidence தருவதுடன் நீங்கள் உங்களுடைய வாதத்தை substantiate பண்ணுகிற மாதிரிப் பேச வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் வழிக் கல்வியைத் தமிழ் மாநில காங்கிரஸ் ஆதரிக்கிறது. தமிழ் வழிக் கல்வியை நாம் இதற்கு முன்பே கொண்டு வந்திருக்க வேண்டும். 1967-க்குப் பிறகுதான் அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே, அரசு ஆரம்பப் பள்ளிகளிலே ஆங்கில வழிக் கல்வி வந்தது என்பதை மெத்த வருத்தத்தோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருந்தலைவர் காமராஜரும், முதலமைச்சர் பக்தவத்சலமும் இருந்தவரை அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலே ஆங்கில வழிக் கல்வி இல்லாமல் இருந்தது. ஆனால் உங்களுடைய ஆட்சிக்குப் பிறகுதான் மெல்ல மெல்ல ஆங்கில வழிக் கல்வியை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏதோ இப்பொழுதாவது விழித்துக்கொண்டு தமிழ் வழிக் கல்வியைக் கொண்டு வந்ததற்காக எங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே நேரத்தில் ஒன்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆங்கிலம் வருகின்ற வாயிற் கதவுகளை ஒரு குறுகிய மன நோக்கத்தோடு நீங்கள் அடைத்துவிட வேண்டாம். ஆங்கிலமும் உள்ளே வர வேண்டும். வந்தால்தான் உலக அளவிலே நம்மால் பெருமை அடைய முடியும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே முதலமைச்சர் ஒரு கூட்டத்திலே கலந்துகொண்டார். ஏதோ தமிழினத்



துரோகிகள் என்று அதிலே எழுதப்பட்டு இருந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தமிழுக்கு யார் துரோகிகளாக இருக்க முடியும்? 30 ஆண்டுக் காலம் ஆங்கில வழிக் கல்வியை தமிழகத்திலே அனுமதித்தது யார்? தமிழ் படிக்காமலேயே மேல்நிலைப் பள்ளிக் கல்வியை தமிழகத்திலே படிக்க முடியும் என்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர்கள் யார்? எனவே தமிழுக்கு யாரும் விரோதமாக இருக்க முடியாது; மேற்கொண்டு இந்த அரசாங்கம் அப்படி இல்லாமல் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, ஆளுநர் உரையிலே ரேஷன் அரிசியினுடைய விலை உயர்த்தப்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். ரேஷன் அரிசியினுடைய விலையை அதற்கு முன்பே உயர்த்திவிட்டீர்கள். இரண்டு ரூபாய்க்குக் கிடைத்த அரிசி இன்றைக்கு 3.50 ரூபாய்க்குக் கிடைக்கிறது. (குறுக்கீடு) 3 கிலோ அரிசி கொடுத்தீர்கள். 3 கிலோ என்பது ஏழைகளுக்குப் பெரிய விஷயம். முதலமைச்சருக்கு வேண்டுமானால் அது சிறிய விஷயமாக இருக்கலாம். ஆனால், ஏழைகளைப் பொறுத்தவரை 3 கிலோ அரிசி என்பது ஒரு பெரிய விஷயம். 3 கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுத்த இந்த அரசாங்கம் இப்போது அதனை 3.50 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறது. ஆனால் உயர்த்திவிட்ட ரேஷன் அரிசியினுடைய விலையை மேலும் உயர்த்தமாட்டோம் என்று மாநில அரசாங்கம் சொன்னால் அது ஏற்புடையதுதானா என்பதனை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதைவிட ஒரு கொடுமை, ரேஷன் அரிசி கடத்தப்படுகிற விஷயம். இதற்கு முன்பெல்லாம் ரேஷன் அரிசியை பையிலே எடுத்துச் சென்று கடத்துவார்கள் அல்லது ஒரு சைக்கிளிலே எடுத்துச்செல்வார்கள் அல்லது 50 கிலோ, 100 கிலோ என்று பேருந்திலே எடுத்துச் செல்வார்கள். இப்போது டன் கணக்கிலே கண்டெய்னர்களிலே, இரயிலிலே கடத்துகிறார்கள் என்றால் அதற்கு N.O.C. கொடுத்தது யார்? தாசில்தார் N.O.C. கொடுத்திருக்கிறார்; அந்த அரிசி கடத்தப்படுவதற்கு N.O.C. கொடுத்திருக்கிறார். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அரிசி கடத்தப்படுவதற்கு தாசில்தார் எப்படி N.O.C. கொடுத்தார்? இதற்குப் பின்னணியிலே இருக்கிற சக்திகள் யாவை? அந்தச் சக்திகள்மீது அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.

இப்போது, பல பொருட்களினுடைய விலையைக் குறைக்கிறார்கள். ஒரு செயல்படுகிற அரசாங்கம், ஏழைகளை மனதிலே நினைத்துக்

கொண்டிருக்கிற அரசாங்கம் செல்ஃபோன் விலையைக் குறைக்கிறது; கம்ப்யூட்டர் விலையைக் குறைக்கிறது. ஆனால், அரிசியின் விலையைக் குறைக்கவில்லை. இந்த அரசாங்கம் சொல்கிறது. "பிற மாநிலங்களைவிட இங்கே அரிசியினுடைய விலை குறைவு". என்று ஒரு சோஷலிச அரசாங்கம் என்பது ஏழைகள் பயன்படுத்துகின்ற பொருட்களின் விலையை எந்த அளவிற்குக் குறைக்கிறதோ அந்த அளவிற்குத்தான் அதற்குப் பெயர் சோஷலிச அரசாங்கம்; செல் ஃபோன் விலையைக் குறைக்கிற அரசு ஏன் அரிசியின் விலையை மேலும் குறைத்திருக்கக் கூடாது? ஏன் 2 ரூபாய் அரிசியை இன்னும் 10 கிலோ அதிகமாகக் கொடுத்திருக்கக் கூடாது? அதற்காக இந்த அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதனை நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அடிக்கடி சொல்கிறார். "இந்தியாவிலேயே தொழில் துறையைப் பொறுத்தவரை முதல் நிலையிலே இருக்கிறோம் என்று. ஆனால் Economic Times பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள், இந்தியாவிலே அந்நிய முதலீடுகளைப் பெறுகிற முறையிலே 3-வது இடத்திலே தமிழகம் இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கத்தினுடைய பதில் என்ன என்பதனை நான் அறிய விரும்புகிறேன். மத்திய நிதியமைச்சர்கூட தன்னுடைய பட்ஜெட் உரையிலே பேசுகிறபோது Silicon valley என்று அவர் இந்தியாவிலே ஹைதராபாத்தையும், பெங்களூரையும்தான் குறிப்பிட்டிருக்கிறார். சென்னையைக் குறிப்பிடவில்லை, காரணம் என்ன? இந்த மாநிலம் தொழில் துறையிலே முன்னிலையிலே இருக்கிறது என்று நீங்களே சொல்லிக் கொள்கிறீர்களேயொழிய உங்களுடைய தோழமைக் கட்சியான மத்திய அரசாங்கம்கூட, அதன் நிதியமைச்சர்கூட Silicon Valley சென்னையிலே இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு இங்கே நிலைமைகள் மேம்பாடு அடையவில்லை என்பதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியாவிற்கு வருகிறார். ஹைதராபாத்திற்கு அவர் விஜயம் செய்கிறார். ஆனால் சென்னைக்கு அந்த முக்கியத்துவம் கிடைக்கவில்லை-என்ன காரணம்? ஒரு காலத்திலே இராஜாஜி அவர்கள் இருந்தபோது அன்றைக்கிருந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள் இராஜாஜியை அழைத்து ஆலோசனை கேட்டார்கள். அதைப்போன்ற சூழ்நிலை அப்போது தமிழகத்திலே இருந்தது. ஆனால் இப்போது அமெரிக்க அதிபர் கிளிண்டன் வருகிறபோது அந்தப் பயணத் திட்டத்திலே சென்னை இடம் பெறவில்லை. சென்னை மட்டும் இடம் பெற்றிருக்குமானால் பல்லாயிரம் கோடி ரூபாய்க்கான தொழில்கள்



நம்முடைய மாநிலத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கும். அந்தச் சூழ்நிலையை முதலமைச்சர் ஏன் ஏற்படுத்தவில்லை என்பதனை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது.

**திரு. ச. அழகிரி:** இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத் திட்டத்தைப் பற்றி நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது சொன்னார்கள். நான் அவருக்கு அறைகூவல் விடுக்கிறேன். என்னுடைய அறைகூவலை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாரா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி நம்முடைய முதலமைச்சரும், தெலுங்கு தேசத்தினுடைய முதலமைச்சரும் சென்னையிலே கூடி இன்றிலிருந்து ஒரு நபருக்கு 125 லிட்டர் தண்ணீர் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது நான் சொல்கிறேன், இன்றைக்கும் சோமசீலாவிலிருந்து ஸ்ரீசைலம்வரை இருக்கின்ற 180.89 கிலோமீட்டரிலே 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீங்கள் வாய்க்காலே வெட்டவில்லை. ஆந்திர அரசாங்கமும் வாய்க்கால் வெட்டவில்லை. நீங்கள் கொடுத்த பணம் வேறு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவைக்குத் தவறான தகவலை நீங்கள் தரலாமா? ஒரு பொதுப்பணித் துறை அமைச்சர் இந்த மாண்புமிகு பேரவையிலே, வெட்டப்படாத கால்வாயை 'வெட்டியிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறாரே அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருக்கிறாரா என்று நான் அவருக்கு அறைகூவல் விடுகிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, பெரிய அறைகூவல் என்று அவர் சொல்கிறார். எப்போதாவது சோமசீலாவிலிருந்து கண்டலேறு வரை இருக்கிற அந்தக் கால்வாய்கள் முழுவதும் வெட்டப்பட்டன என்று இந்த அவையிலே நான் சொன்னதாக அவர் நிரூபிக்கமுடியுமா என்று திருப்பி நான் அறைகூவல் விடுக்கிறேன். "பல பாகங்களாக இந்த வேலை நடைபெற்று வருகிறது. ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி வரை இருக்கிற கால்வாய் வெட்டுகிற பணியில் தமிழ்நாடு எல்லை வரை நடைபெறுகிற பணியை ஆந்திரா அரசு செய்யும். அதற்கு நாம் பணத்தைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் சென்னமுகப்பள்ளி வரையில் வெட்டுகிற அந்தக் கால்வாயில் பல இடங்களிலே வெட்டிய பிறகு,

மலைகளுக்கு நடுவிலே வெட்டுகிறபோது பல ஓடைகள் இருந்த காரணத்தாலே அந்தப் பணி நடந்துகொண்டிருக்கிறது" என்று சொன்னேனே தவிர "ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி வரையில் எல்லாக் கால்வாய்களும் வெட்டப்பட்டு தண்ணீர் அதிலே பெருக்கெடுக்கிறது" என்று நான் என்றைக்காவது சொன்னது உண்டா? ஆனால், "ஸ்ரீசைலத்திலிருந்து வருகிற தண்ணீர் நிப்புலவாகு ஓடை வழியாக சோமசீலாவிற்கு வருகிறது. சோமசீலாவிலிருந்து கண்டலேறு வந்து, கண்டலேறுவிலிருந்து நம்முடைய பூண்டிக்கு வருகிறது" என்று சொல்லி இருப்பேனே தவிர வேறல்ல. ஆனால், இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு, தன்னுடைய பேச்சுக்கு முத்திரை குத்த வேண்டும் என்பதற்காக, வழக்கத்திற்கு மாறாக அழகிரி சவால் விடுகிறார். எனவே, அவருடைய ஆதாரம் இல்லாத சவாலுக்காக நான் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ச. அழகிரி சீக்கிரம் பேச்சை முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்லவேளை. தெலுங்கு கங்கை திட்டத்தையே, நான் சபையிலே ஒத்துக்கொண்டிருக்கிறேனா என்று எங்கே பொதுப் பணித் துறை அமைச்சர் கேட்டுவிடுவாரோ என்று நான் பயந்திருந்தேன். சோமசீலா வரைக்கும் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இல்லையென்றால் அன்றைக்கு நீங்கள் 1996 ஆம் ஆண்டு குடம் மாற்றிக்கொண்டீர்களே, அப்போது ஏன் சொன்னீர்கள்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இப்போதும் சொல்கிறேன். ஸ்ரீசைலம் அணையிலேயிருந்து போத்திரெட்டிப்பட்டிக்கு தண்ணீர் எடுக்கிறார்கள். போத்திரெட்டிப்பட்டியிலிருந்து, பனகசாலா வரையில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் வருகிறது. பனகசாலாவிலிருந்து வெலுகோடு ரிசர்வாயருக்குக் கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் வருகிறது. வெலுகோடு ரிசர்வாயரிலிருந்து நிப்புலவாகு ஓடை வரையிலே கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. நிப்புலவாகுவிலேயிருந்து சென்னமுகப்பள்ளி வரை வெட்டப்பட்ட கால்வாயில் தண்ணீர் வரவில்லை. எனவே, நிப்புலவாகு ஓடையில் விடுகிறார்கள். அந்த ஓடையிலிருந்து வருகிற தண்ணீர், அது ஒரு ஓடையாக வந்து - ஓடை என்றால் சிறிய ஆறு - பெண்ணையாற்றிலே கலக்கிறது. பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கிற சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கும் தண்ணீர், கால்வாய் வெட்டப்பட்டதன் வழியாக வருகிறது. அங்கிருந்து



தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் வந்து சேருகிறது. இதிலே என்ன மறைவு? இதிலே என்ன பெரிய ஒளிவு மறைவு இருக்கிறது?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இவ்வளவு நீங்கள் வெட்டியிருந்தால் பிறகு ஏன் தண்ணீர் வரவில்லை? முதலமைச்சர் சொன்னார். மார்ச் ஒன்றாம் தேதி தண்ணீர் வரும் என்று சொன்னார். 800 T.M.C. தண்ணீர் கடலிலே கலக்கிறது. தெலுங்கு கங்கையிலே அவ்வளவு தண்ணீர் இருக்கிறது. இங்கே தண்ணீர் வருவதற்குத் தடையாக இருக்கிற பகுதி எது? ஆறு ஆண்டுகளாகத் தண்ணீர் ஏன் வரவில்லை? ஆறு ஆண்டு காலத்திலே நிலவிற்கேகூட சென்று வந்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு விஞ்ஞானம் மேம்பாடு அடைந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் நண்பர் அழகிரிக்கு ஒன்றைச் சொல்கிறேன். 1983 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வருகிற வரையிலேயும் அதைத் திரும்பிப் பார்த்தவர்கள் கிடையாது. அப்போது எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது 30 கோடி ரூபாய் கொடுத்தார். அத்தோடு நின்றுபோனது. ஆனால் இப்போது, மேலும் பணத்தைக் கொடுத்து, இதுவரையிலே கால்வாய்களை வெட்டி, தண்ணீரைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். புதுக் கால்வாய் வெட்டுகிற நேரத்திலே சில இடங்களிலே பிரச்சினை ஏற்படுகிறது. இப்போதுகூட இந்த மாதத்திலே - மார்ச் மாதத்திலே - தண்ணீர் வரும் என்று சொன்னோம். சபையிலேகூடச் சொன்னேன். ஆனால், கண்டலேறு பகுதியிலே பெரிய சரிவு ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் sledger வைத்து அவர்கள் மண்ணை எடுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இன்ஜினியர்களோடு நம்முடைய தலைமைப் பொறியாளர் இப்போது ஆந்திர மாநிலத்திலேதான் தன்னுடைய பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். அவரிடம் நான் சொன்னேன். சோமசீலா பகுதிக்குப் போக வேண்டாம். நேராக ஸ்ரீசைலம் வரையிலேயும் சென்று பார்த்துவிட்டு என்ன நிலைமை என்று தெரிவியுங்கள் என்று சொன்னேன். காலை என்னோடு கடப்பாவிலேயிருந்து பேசினார். எனவே, இந்த வேலைகள் மிக வேகமாக முடிகிற நிலைமைக்கு வந்திருக்கின்றன. இன்னும் கொஞ்சம் பணத்தை வாங்கி அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தெரிந்ததை நான் இந்த மாமன்றத்திற்குச் சொல்லியிருக்கிறேன், நாட்டுக்கும் சொல்லியிருக்கிறேனே தவிர இதிலே ஏமாற்றுவதற்கு ஒன்றும் கிடையாது.

**திரு. ச. அழகிரி:** நீங்கள் வந்தபிறகும்கூட 4 ஆண்டு காலமாக 12 T.M.C. தண்ணீரை உங்களாலே இங்கே கொண்டு வரமுடியவில்லை. அப்படிக் கொண்டு வரமுடியவில்லை என்றால் அதற்கு யார் காரணம்? தடை என்ன?

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அந்த வரலாற்றைச் சொல்கிறேன், கேளுங்கள். நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் கண்டலேறு கால்வாய் வெட்டப்பட்டது. நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் சோமசிலாவில் இருக்கும் கால்வாய் வெட்டப்பட்டது. இங்கே நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் தமிழ்நாட்டு எல்லையில் இருக்கிற பகுதிக்கு lining செய்யப்பட்டிருக்கிறது. நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் போத்திரெட்டிப்பட்டி வரையிலும் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்த்தோம். கொண்டு வந்த தண்ணீரை எங்கே தேக்கிவைப்பது என்று ஆந்திர அரசு விழித்த நேரத்திலே, வெலுகோடு Reservoir-ஐக் கட்டுவதற்கும் நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் ஏற்பாடு செய்திருக்கிறோம். எனவே இதனுடைய முழு விவரமும் தெரியாமல் வேண்டுமானால் திரு. அழகிரி பேசியிருக்கலாம். நிலைமை இதுதான். திராவிட முன்னேற்றக் கழக அரசு, கலைஞருடைய அரசு வந்த பிறகுதான் அந்த ஸ்ரீசைலத்தினுடைய தண்ணீர், அதாவது கிருஷ்ணா நதியினுடைய தண்ணீர் சென்னையை எட்டிப் பார்த்திருக்கிறதே தவிர, இந்த முதல்வர் இல்லாவிட்டால் இந்த நூற்றாண்டிலே கூட வேறு யாராலும் இதைக் கொண்டுவந்திருகக முடியாது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னிடமும் முழுமையான ஆதாரம் இருக்கிறது. நீங்கள் வந்தும்கூட தெலுங்கு கங்கை தண்ணீர் இங்கே வந்துசேரவில்லை என்பதுதான் உண்மையே தவிர, பெண்ணையாற்றின் தண்ணீரைத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்களேயொழிய, தெலுங்கு கங்கைத் தண்ணீர் இங்கே இதுவரையிலே வரவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, தூங்குகிறவனை எழுப்பலாம், தூங்குகிறவன் போல நடிப்பவனை எழுப்பமுடியாது என்று சொல்வார்கள். நான் இந்த மன்றத்திலே தெளிவாகத் தெரிவிக்கிறேன். கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்ற ஸ்ரீசைலம் அணையிலிருந்து தண்ணீர் எப்படி பூண்டிக்கு வருகிறது என்பதை ஒரு பூகோள ஆசிரியர் சொல்வதைப் போன்று சொல்கிறேன். ஸ்ரீசைலத்தில்



போத்திரெட்டிப்பட்டி என்ற இடத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு, பனகசாலா regulator-க்குக் கொண்டு வந்து, பனகசாலா regulator-லிருந்து வெலுகோடு reservoir-க்குக் கொண்டுவந்து, பிறகு வெலுகோடு reservoir-ல் இருந்து சென்னமுகப்பள்ளிக்குப் போகாமல், நிப்புலவாகு ஓடைக்குத் திருப்பி, பெண்ணையாற்றில் கலந்து பிறகு சோமசிலாவில் தேக்கி, பின்னர் சோமசிலாவிலிருந்து கண்டலேறுக்குக் கால்வாய் வெட்டி, கண்டலேறில் அணைகட்டி அதிலிருந்து பூண்டிக்குக் கால்வாய் வெட்டி தண்ணீரைக் கொண்டுவருகிறோம். அதையே நான் இப்போதும் திருப்பிச் சொல்கிறேன். கிருஷ்ணா நதி தண்ணீர் நேரடியாகச் சென்னைக்கு வராது. பெண்ணையாற்றிலே அது வந்து கலக்கும். ஆக பெண்ணையாற்றுத் தண்ணீரும், சோமசிலா தண்ணீரும் கலந்து, அப்படிக் கலந்த தண்ணீர்தான் இங்கே வந்து நிற்கும். தனியாக அதுமட்டும் வந்து பூண்டியிலே குதிக்காது. ஏனென்றால் வழிமுறை இதுதான்.

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேசி முடியுங்கள், நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** என்னிடமும் முழுமையான ஆதாரம் இருக்கிறது. தெலுங்கு கங்கை தண்ணீர் பூண்டியிலே வந்து குதித்துவிடாது என்பதை நானும் அறிவேன். நீங்கள் வாய்க்கால் வெட்டினால்தான் அதுவரும். கண்டலேறு முதல் சோமசிலா வரை 45.12 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால் அந்த தூரத்தை கால்வாய் வெட்ட எது வந்து உங்களைத் தடை செய்கிறது? ஏனென்றால் நான்காண்டு காலத்தில் ஏன் கொண்டு வரவில்லை? (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. குத்தாலம் பி. கல்யாணம். (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** நான் கேட்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நீங்கள் நியமித்து இந்தப் பணிகளைப் பார்வையிடுவதற்கும் அதில் நீங்களும் எங்களுடன் வருவதற்கும் தயாராக இருக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் 35 நிமிடம் பேசிவிட்டீர்கள். மற்றவர்கள் பேசவேண்டும். உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** அமைச்சர் குறுக்கீடு அதிகமாக இருந்தது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** தயவுசெய்து உட்காருங்கள், நேரம் ஆகிவிட்டது. மற்றவர்கள் பேச வேண்டும். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு குழந்தை தமிழரசன் அவர்கள் வழிமொழிந்துள்ள, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியமைக்கு முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னால், கல்விக்கும் சமுதாய மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் தந்துள்ள பல செய்திகளை உள்ளடக்கிய கலங்கரை விளக்கமாக விளங்குகின்ற இந்த ஆளுநர் உரை மீது என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்னால், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு ஒரு பதிலை நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சொல்கிறபோது, யாருடைய பின்னாலேயோ செல்கிறீர்களே என்று வேதனைப்பட்டார். ஆனால் எங்களுக்கு இருக்கிற வேதனையெல்லாம், காமராஜருடைய ஆட்சியை அமைப்போம், பின்பற்றுவோம் என்று சொல்லிவிட்டு embodiment of corruption எனப்படும் ஊழலின் மொத்த உருவம் என்கின்ற ஓர் அம்மையாரைப் பின்பற்றுகிறீர்களே என்கின்ற வேதனைதான் எங்களுக்கு இருக்கிறது. ஊழலை ஒழிக்கப் புறப்பட்டு, அந்த ஊழலோடு கை கோர்த்துக்கொண்டிருக்கின்ற நிலைமையையும் நாங்கள் பார்க்கின்றோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இதில் என்ன point of order?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்ன ஆதாரத்தோடு அவர் பேசுகிறார்? அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து அகற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் கல்யாணம் அவர்கள் இந்தக் கருத்தைப் பேசத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் நண்பர் சுந்தரம் கேட்கிறார், " என்ன ஆதாரத்தோடு சொல்கிறார்?" என்று. ஓராண்டு காலத் தண்டனை கிடைத்திருக்கிறது. இவை எல்லாமே ஆதாரங்கள்தான். ஆனால் கல்யாணம் அவர்கள் இதையெல்லாம் பேசத் தேவையில்லை. அவர் ஆளுநர் உரை மீது பேசலாம்.

பிற்பகல் 12-05

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** முதல்வர் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர்கள் appeal-க்குப் போய்விட்டார்கள். அதற்குள் முடிவு செய்தால் எப்படி?

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய மறுமலர்ச்சிக்காக அளிக்கப்பட்டிருக்கிற இந்த உரையில், வள்ளுவருக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் சிலை வைக்கப்பட்டுள்ளதைப் பெரிதும் பாராட்டி ஆளுநர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்த வாழ்த்துக்களால் நாங்கள் மனம் குளிர இன்றைக்கு இந்த அவையிலே வீற்றிருக்கிறோம்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.'

என்றும்

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.'

என்றும் பாரதி போற்றுகின்ற அளவுக்கு

'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்'

என்று சிறப்பிக்கப்படுகின்ற அளவுக்கு உலகப் பொது மறையை வழங்கிய வள்ளுவருக்குக் குறளோவியம் தந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிலையை அமைத்துத் திறந்து வைத்தது சாலச் சிறந்த ஒன்றாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வரைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சில வாசகங்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன். அவர் சொல்கிறார், 'கலைஞர் அவர்கள் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் பெற்றிருக்க வேண்டிய தமிழ் அறிவைவிட, ஆய்வறிவைவிட அவர் இன்றைக்கு மிகுதியாகப் பெற்றுத் திகழ்கின்றார். அவர் படித்தவை, பயின்றவை, ஓதி உணர்ந்தவை அனைத்தும் குறளோவியங்களாக, சங்கத் தமிழாக, பொன்னர்-சங்கராக, பாயும்புலி பண்டார வன்னியராக, இன்ன பிறவாக, இறவா இலக்கியங்களாகத் தமிழர்தம கரங்களிலே தவழ்ந்து கொண்டிருக்கின்றன' என்று. ஆகவே, பேராசிரியர் அவர்கள் வழங்கிய பாராட்டுதலை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவ தெங்கும் காணோம்'*

என்றும்

*'எம்மொழி செம்மொழி தொன்மொழி*
*தமிழனுக்கு ஈடுண்டோ'*

என்றும் பாரதி கேட்டார்.

*'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு'*

என்று பாரதிதாசன் முழங்கினார்.

அரசியல் நிர்ணய சபையில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் பேசும்போது, இலக்கிய வளம், இலக்கண வளம் வாய்ந்த தொன்மையான தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அப்போது சொன்னார். அந்த வார்த்தைகளுக்கு உயிரோட்டம் கொடுக்கக்கூடிய அளவுக்கு இந்திய நாட்டினுடைய ஆட்சி மொழியாகத் தமிழ் மொழியை ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.



இன்னும்கூடச் சொல்லப்போனால், தமிழைச் செம்மொழிப் பட்டியலில், Classical Language-ல் இணைக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் மத்திய அரசுக்கு வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தமிழ் கூறும் நல்லுலகம் என்றைக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி கூறக் கடமைப்பட்ட ஒன்றாகும். நான் இன்னும்கூடச் சொல்ல விரும்புவது, இந்தத் தமிழ் மொழியை பயிற்று மொழியாக ஆக்க வேண்டுமென்ற பிரச்சினையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலத்திற்காகப் பேசியதாக ஒருசிலர் குறிப்பிடுகிற அந்த நிலைக்கு ஒரு விளக்கத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையிலே பேசுகிறபோது, 'நான் ஏன் ஆங்கிலத்தை கொஞ்சம் ஆழமாகப் பேசுகிறேன்' என்று சொல்கிறபோது, அவர் சொல்கிறார்,

"I plead for English not because I am enamoured of it but it is a convenient tool which distributes merits and demerits evenly" என்று.

அதாவது 'நான் ஆங்கிலத்தினால் வசீகரிக்கப்பட்டு அதை ஆதரிக்கிறேன் என்பதல்ல, ஆனால் ஆங்கிலம்தான், இந்தி பேசுகிற மக்களுக்கும், இந்தி பேசாத மக்களுக்கும் சாதகத்தையும் பாதகத்தையும் சமமாகப் பகிர்ந்தளிக்கிற காரணத்தால் நான் ஆங்கிலத்தைக் கொள்கிற நிலைமை வருகிறது' என்று அன்றைக்கு நாடாளுமன்றத்திலே அவர் சொன்னார்.

இந்த ஆளுநர் உரையிலே, மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து 29 சதவிகிதம் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. வேளாண்மை, தொழில் துறை, நெடுஞ்சாலைத் துறை குறித்த வளர்ச்சிக்கான செயல்பாடுகள், உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலை குறித்து ஆய்வு செய்ய இரண்டாவது ஆணையம் ஏற்படுத்தியது, தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக உயர் மட்டக் குழு அமைத்தது, மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்கு தமிழக அரசு மேற்கொண்ட முயற்சி ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை பாராட்டத்தக்கவையாகும்.

மத்திய அரசை எதிர்பார்க்காமல் நிதிச் சுமையைத் தானே தாங்கிக் கொண்டு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற அரிசி தற்போது விற்கப்படுகிற விலைக்கே வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதை தமிழ்நாட்டு மக்கள் மனம் உவந்து பாராட்டுகிறார்கள்.

1971 ஆம் ஆண்டு வாக்கில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று இருந்த அந்த நேரத்தில், உருது பேசுகின்ற முஸ்லிம்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்கள். அதுபோல, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இப்போது 'உருது அகாடமி' உருவாக்கப்பட்டிருப்பதை அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நன்றியோடு பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல நமக்கு நாமே திட்டம், இயற்கைச் சீற்றத்தை முன்கூட்டியே அறிந்து செய்துள்ள சாதனைகள், இருபதாண்டு காலம் குடியிருந்தோர்க்கு மனைப் பட்டா, இன்னும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், இன்னும் scientific temper என்ற அறிவியல் மனப்பான்மை, மாணவர்களுக்கு வரக்கூடிய அளவுக்கு கணினிமயம் போன்ற பாராட்டத்தக்க அம்சங்கள் எல்லாம் இந்த ஆளுநர் உரையில் இருக்கின்றன.

அடுத்து, சமத்துவபுரத் திட்டம். இந்த நாட்டில் ஒரு நிலைமை இருந்தது. இந்த நாட்டில் ஆண்டான், அடிமை என்ற நிலை மாறி, தங்களை மேட்டுக் குடியினர், மனிதர்களாக ஏற்றுக்கொள்வார்களா என்ற ஏக்கத்திலிருந்த கோடானுகோடி தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களைப் பார்த்து "நீயும் மனிதன்தான், நிமிர்ந்து நில்" என்று சொல்லி அவர்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்து ஒரு மன மாற்றத்தை ஏற்படுத்தி, சமத்துவ உணர்வைத் தமிழகத்திலே உருவாக்கிய பகுத்தறிவுப் பகலவன், சமுதாய விஞ்ஞானி, தந்தை பெரியார் அவர்களின் பெயரில் உருவாக்கப்பட்டிருக்கிற சமத்துவபுரத் திட்டம் வரவேற்கத்தக்க ஒன்று. அதுகுறித்து மைய அரசினுடைய சமூக நீதி பாதுகாப்புத் துறைச் செயலாளர் வழங்கியிருக்கிற சான்றை நான் இந்த மாமன்றத்திலே பதியவைக்க விரும்புகிறேன். 'தமிழகத்தில் தொடங்கிச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், இந்தியாவிற்கே சிறந்த, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுதலான முன்னோடித் திட்டமாகும்' என்று அவரால் பாராட்டப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தளவிலே, இது ஒரு மக்கள் நல அரசு; மக்கள் விரோத அரசு அல்ல என்பதை நடந்து முடிந்த மூன்று சட்டமன்றத் தொகுதிகளுடைய தேர்தல் முடிவுகள் இப்போது நிரூபித்துக் காட்டியிருக்கின்றன என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும்கூட, டெல்லியில் இருக்கிற கருத்தாய்வு நிறுவனம்—D.R.S. என்கிற ஒரு நிறுவனம்—தன்னுடைய கருத்துக் கணிப்புகளைச் சொல்கிறபோது "தமிழகத்தில் மக்கள் நல அரசு நடக்கிறது. தமிழக அரசின் செயல்பாடுகள் முற்றிலும் திருப்திகரமாக உள்ளன என உறுதி செய்யப்பட்டுள்ளது" என்ற ஓர் ஆய்வு அறிக்கையை வழங்கியுள்ளது.

நான் இன்னும்கூடச் சொல்கிறேன். எந்த ஓர் அரசு ஆட்சியிலே இருந்தாலும், ஓர் எதிர்ப்புணர்ச்சியை மக்கள் மத்தியிலே பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற இந்தக் காலகட்டத்தில், எந்த எதிர்ப்புணர்ச்சியும் இந்த அரசுமீது இல்லாத ஒரு நிலைமையை நாங்கள் தமிழகத்திலே பார்க்கிறோம். Anti-incumbency என்பார்களே, அந்த நிலைமை இல்லாத ஒரே ஒரு மாநில அரசு, இந்திய நாட்டில் இப்போது தமிழ்நாடு அரசுதான் என்பதை நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிர்வாகத்தைக் குறை சொல்பவர்கள், சென்ற முறை அவர்களுடைய ஆட்சியில் அவர்கள் பெற்றிருக்கிற நற்சான்றுகள் யாவை? மக்கள் மத்தியிலும், பத்திரிகையாளர்கள் மத்தியிலும், ஏன் நீதிமன்றங்களிலும்கூட சொல்லப்படுகின்ற வாசகங்கள் 'reciprocal benefits, pecuniary advantage' என்றும், மேலும் அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது "unscrupulous and corrupt" என்றும், இன்னும் ஒன்று, ``unpredictable" என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வளவும் உள்ளவர்கள் என்ன செய்வார்கள் என்றால்—They will do anything to save their skin—தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, எதையும் செய்வார்கள் என்ற நிலையை, இப்போது நீதிமன்றத் தீர்ப்புகள் — God is great—என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும்கூடச் சொல்ல வேண்டுமானால், அரசமைப்புச் சட்ட மறு ஆய்வைப் பொறுத்தளவில், இந்த அரசமைப்புச் சட்டத்தை நமக்கு நாமே வழங்கிக் கொண்டோம் என்று இருந்தாலும்கூட, இந்த நாட்டினுடைய அரசமைப்புச் சட்டம்தான் ஒரு மூலச் சட்டம். நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் நிறைவேற்றப்படும் சட்டங்களின் உரைகல்லாக இந்த அரசமைப்புச் சட்டம் இருக்கிறது. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தைப

பொறுத்தஅளவில், அது நெகிழும் தன்மையுடையதா அல்லது நெகிழாத் தன்மையுடையதா என்பது இப்போது யூகத்திற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. கால ஓட்டத்திலே எல்லாம் மாறுகின்றன. மக்களுக்காகச் சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்கள் அல்ல. இன்னும் இந்த அரசமைப்புச் சட்டத்தில் பல தெளிவின்மைகள் (ambiguities) இருக்கின்றன என்ற சர்ச்சைகள் இருக்கின்றன. எனவேதான், இந்திய நாட்டினுடைய அரசமைப்புச் சட்டம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் மாறுதலுக்கு உட்பட வேண்டிய நிலையில் உள்ளது என்பதை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** ஒரே ஒரு நிமிடம். அரசமைப்புச் சட்டம் மாறுதலுக்கு உட்பட வேண்டியது என்பதை, நேரத்தின் அருமை கருதி, பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே நான் சொன்னதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

A Constitution, to be a living Constitution, must be changeable as a society changes.

ஓர் அரசமைப்பு வாழும் அரசமைப்பாக இருக்க வேண்டுமானால் சமூகம் எப்படி மாறுகின்றதோ அதற்கிணங்க தானும் மாறுதலுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும்.

என்று நேரு அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

நான் என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால், மாநில சுயாட்சி பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல அனுமதி வேண்டுகின்றேன். மாநில சுயாட்சியைப் பொறுத்த அளவில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு திருச்சியிலே நடைபெற்ற மாநாட்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் வைக்கப்பட்ட 5 பெரும் முழக்கங்கள்,

அண்ணா வழியில் அயராது உழைப்போம்,
ஆதிக்கம் அற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்,
இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,
வன்முறை தவிர்த்து வறுமை வெல்வோம்,
மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி



ஆகியவையாகும். காகிதத்திலே கூட்டாட்சியாகவும், நடைமுறையிலே ஒற்றையாட்சியாகவும் உள்ள நிலையை மாற்ற வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில் இராஜமன்னார் குழுவை அமைத்து இந்திய நாடு முழுக்க அந்தக் கொள்கை பரவ ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உங்கள் உரை முடிந்துவிட்டது. அடுத்து, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன். கவர்னர் உரையினுடைய வரலாற்றிலேயே கவர்னர் உரை என்ற உள்ளடக்கத்திற்கு உரிய விஷயங்கள் இல்லாமல் இருக்கின்ற ஓர் உரை இந்த கவர்னர் உரைதான். நான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவாற்றலையோ, அவர்களுடைய திறமையையோ, அவர்களுடைய பன்முகச் சிறப்புகளைப் பற்றியோ ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டதில்லை, குறைத்து மதிப்பிடுவதாக எண்ணமும் இல்லை. ஆனால், சில நேரங்களில் — நம்முடைய முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள், நம்முடைய பண்டைய மரபு சொல்கிறது — கூடா நட்பு நம்மை மிகக் கடுமையாகப் பாதித்துவிடும் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நானும் அதைத்தான் சொல்கிறேன். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** இப்போது நம்முடைய நாடாளுமன்றத்திலே நடைபெற்று வருகின்ற விஷயங்களைப்பற்றி நாம் நன்கு அறிவோம். ஊர் அறிய எந்த இடத்திலே முழங்க வேண்டுமோ அந்த இடத்திலே அந்த முழக்கங்களை முழங்காமல் மௌனமாக விடப்பட்டு விட்டதைத்தான் நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகின்றேன். ஆறு நாட்களாக நாடாளுமன்றத்தின் அலுவல்கள் நின்று போய்விட்டன. தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன. அப்படி ஒத்திவைக்கப்படுவதிலே இந்த மாநிலத்தை ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பங்கு இல்லை என்பது வேதனையான ஒரு விஷயமாகும். நாடாளுமன்றம் தொடர்ந்து ஒத்திவைக்கப்படுவதற்கான காரணமாக இருப்பதே ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கம், அதனுடைய உறுப்பினர்கள், குஜராத் மாநில அரசு ஊழியர்களாக civil service-இணைக்கப்படலாம், இணைக்கப்பட வேண்டும் என்ற மாநில அரசின் உத்தரவுக்கு எதிராக தேசபக்தி உணர்ச்சியோடு எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் போராடி வருகின்றன.

பிற்பகல் 12-20

இங்கே நான் குறிப்பிட விரும்புவது, ஆர்.எஸ்.எஸ். என்பது ஒரு சமுதாய இயக்கம் என்று நான் ஒருபோதும் ஒப்புக்கொண்டதில்லை, ஒப்புக்கொள்வதில்லை. ஆர்.எஸ்.எஸ்.-ஐ சமுதாய இயக்கம் என்று வாஜ்பாய் சொல்கிறார். நான் அறிந்தவரை, என்னுடைய பகுத்தறிவும் என்னுடைய சிற்றறிவும் எனக்குக் கற்றுக்கொடுத்த ஒன்று; பல நூற்றாண்டுகள் மறைந்தாலும், தமிழகத்தில் மறையாமல் வாழுகின்ற துருவ நட்சத்திரம் தந்தை பெரியார் கற்றுக் கொடுத்த அந்த மண்ணில், ஆர்.எஸ்.எஸ். என்பது ஒரு சமுதாய இயக்கமல்ல; சமுதாய விரோத இயக்கம் என்றே என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏன் சமுதாய விரோத இயக்கம் என்றால், நாடாளுமன்றத்தில் இந்த 6 நாட்களாக நடைபெறுவதிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். மகாத்மா காந்தியடிகளை நாம் மறந்துவிட முடியாது. மகாத்மா காந்தியடிகள் நோய் வந்து இறந்தவர் அல்ல; இயற்கையில் ஏற்பட்ட மரணம் அல்ல; வலிந்து கொல்லப்பட்டவர் மகாத்மா காந்தியடிகள். வலிந்து கொல்லப்பட்ட சதியில் தண்டனை பெற்ற ஒருவர் இன்னும் இந்தியாவில் உயிரோடு இருக்கிறார்; அவர்தான், மகாத்மா காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சேயினுடைய சொந்த, உடன் பிறந்த தம்பி கோபால் கோட்சே. அந்த கோபால் கோட்சே 1994-லே Frontline-க்கு ஒரு பேட்டி கொடுக்கிறார்; அந்தப் பேட்டியிலே என்ன சொல்லி இருக்கிறார் என்றால், காந்தியடிகளைப்பற்றி மிகக் கடுமையாகக் குறிப்பிட்டு விட்டு, "நானும் நாதுராமும் ஆர்.எஸ்.எஸ். என்ற குடும்பத்தில் வளர்ந்தவர்கள்; எங்களைச் செயலாலும், சிந்தனையாலும் வளர்த்த இயக்கம் ஆர்.எஸ்.எஸ்." என்று குறிப்பிட்டுவிட்டு, "நாதுராம் கோட்சே, ஆர்.எஸ்.எஸ். இல்லை என்று சொல்வது கோழைத்தனம்" என்றும் குறிப்பிட்டு இருக்கிறார் கோபால் கோட்சே. ஆனால், மகாத்மா காந்தியடிகளைச் சுட்டுகொன்ற கருத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அமைப்பை Indian Civil Service-ல் இணைக்க உத்தரவிட்டதை பெரியாரின் பரம்பரையில் வந்த திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்க இயலாதது வரலாற்றில் ஏற்பட்ட விபத்து என்பதா? எதிர்க்க இயலாமல் போனதற்குக் காரணம் என்ன? வேறு எந்த வழியில் அவற்றைச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

இதே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய உள்ளடக்கம் என்ன என்பதற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவினுடைய இந்த மாநிலத்தை ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, அதற்குத் தலைமை ஏற்று இருக்கிற கலைஞர் அவர்களும் சரி ஒப்புக்கொள்வார்கள்,



இந்தியா மதச் சார்பற்ற நாடு என்பதை. ஆனால், ஆர்.எஸ்.எஸ். மதச்சார்பற்ற இயக்கமல்ல. ஆர்.எஸ்.எஸ். மதச்சார்பற்ற இயக்கம் என்று ஒருபோதும் கலைஞர் சொல்லமாட்டார் என்று நான் உறுதிபட நம்புகிறேன். மதச்சார்பற்ற ஓர் ஆட்சியில், மதச்சார்பற்று இயங்கவேண்டிய civil service-ல், மதச்சார்புள்ள அந்த ஆர்.எஸ்.எஸ். என்ற ஓர் அமைப்பின் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ளலாம் என்றால், மதச்சார்பற்ற அரசமைப்பின் சாரத்தை தகர்க்கும் வஞ்சக யுக்தி தானே இது. பா.ஜ.க.வினுடைய வஞ்சக யுக்தியால் இந்தியாவில் அரசமைப்புச் சட்டத்தைத் தடம் புரள வைக்க முடியாது. எனவே, அரசமைப்புச் சட்டத்தைத் தடம் புரள வைக்க முடியாது என்பதால், என்ன செய்கிறார்கள் தெரியுமா? அரசமைப்புச் சட்டத்தை இயக்குகிற civil service-ஐ அதனுடைய உள்ளடக்கத்தை உருக்குலைத்துச் சிதைத்துவிட்டால், அவற்றைக் காவிமயமாக்கிவிட்டால், அவற்றை ஆர்.எஸ்.எஸ்.-ஐக் கொண்டு நிரப்பிவிட்டால், மதச்சார்பற்ற இந்தியா என்கிற அரசமைப்புச் சட்டம் தடம் புரட்டப்படும். இது ஒரு நவீன யுக்தி என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அப்படிக் குற்றம் சாட்டுவதற்காகத்தான் இங்கே இந்த விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயத்தை, இதே விஷயத்தில் சொல்ல விரும்புவது, ஆர்.எஸ்.எஸ். குறித்து இந்திய நாடு முழுவதும் பேசிக் கொண்டிருக்கிற இந்த நிலையில், தமிழ் மாநிலமும் உட்பட, காலப்போக்கில் மத்திய அரசு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், மறு ஆய்வு குறித்து நம்முடைய கவர்னர் உரை சொல்கிறது. அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வது குறித்துச் சொல்கிறது. எனக்கு முன்னர் பேசிய ஆளும் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் கல்யாணம் அவர்கள்கூட அதைச் சிலாகித்துச் சொன்னார்கள். நான் அதில் ஒன்றும் மாறுபாடு கொள்ளவில்லை. எந்த ஒன்றும் மாற்றத்திற்குரியதுதான்; எந்த ஒன்றையும் மாற்ற வேண்டும்தான். இதை எப்படி நாம் எதிர்க்க முடியும்? ஆனால், எந்தத் திசையில் மாற்றுவது? பிற்போக்குத் திசையிலா; முற்போக்குத் திசையிலா, எந்தத் திசையில் மாற்ற வேண்டும்? சமூக வளர்ச்சியின் தேவைக்குத் தக்கபடி மாற்றுவதா? சமூகச் சக்கரங்களைப் பின்னுக்கு இழுக்கிறபடி மாற்றுவதா' என்ற கேள்விகள் எல்லாம் உள்ளடங்கிக் கிடக்கின்றன. இதில் நான் குறிப்பிட விரும்புவது, இந்த அடிப்படைக் கட்டமைப்பை நாங்கள் மாற்ற மாட்டோம்; வேறு சில விஷயங்களைத்தான் மாற்றுவோம் என்று வாஜ்பாய் உறுதிமொழி கொடுத்து இருக்கிறார் என்று வாஜ்பாய் அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள் நான் 'தெளிவுபட, உறுதிபடச் சொல்கிறேன், பா.ஜ.க.

அல்லது வாஜ்பாயினுடைய உறுதிமொழி நம்புவதற்குரிய ஒன்றல்ல; அவர்களின் முழு நோக்கம் . . .

பிற்பகல் 12-25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவர், அப்படிப்பட்ட உறுதிமொழி தனக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த உறுதிமொழி கிடைத்த பிறகே, 'அடிப்படை மாற்றப்பட மாட்டாது' என்ற உறுதிமொழி கிடைத்த பிறகே, அந்த உத்தரவாதத்திலேதான், தான் தலைவராக ஆவதற்கு ஒப்புக்கொண்டு, அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல. ஒன்றை நண்பர் சுப்பராயனுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். யார் சட்டத்தைத் திருத்தி இயற்றினாலும், அதைக் கடைசியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது நாடாளுமன்றம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆகவே, அதற்குள்ளாக நாம் அவசரப்பட்டு கருத்துகளைச் சொல்ல வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன கருத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் சில வேதனைகளை நான் இங்கே பதியவைக்க விரும்புகிறேன். நல்லவர், வல்லவர் என்று சொல்லப்படுகிறார் அல்லவா வாஜ்பாய்! தனிப்பட்ட வாஜ்பாய் பற்றி எனக்கு அக்கறையும் இல்லை, கவலையும் இல்லை, குணதோஷ விமர்சனங்களும் இல்லை. ஆனால் நான் குறிப்பிட விரும்புவது, அந்த வாஜ்பாய் என்ற மனிதரின் சமூகக் கடமையில் அவருடைய நடைமுறைகள் எப்படிச் சமூகத்தைப் பாதிக்கின்றன என்கிற நிலையிலிருந்து என்னுடைய விமர்சனத்தை வைக்க விரும்புகிறேன். இந்த வாஜ்பாய் சொல்கிற உறுதிமொழியை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பாபர் மஸ்ஜித் இடிக்கப்படுவதற்கு முன்னால் இதே வாஜ்பாய்— இவருடைய Silver tongue என்ன சொல்லிற்று தெரியுமா நாடாளுமன்றத்தில்? "நாங்கள் ஒருபோதும் பாபர் மஸ்ஜித்தை இடிக்க மாட்டோம்" என்று நாடாளுமன்றத்தில் உறுதிமொழி கொடுத்தார். அது மட்டுமல்ல . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பிரச்சினை வாஜ்பாயினுடைய உறுதிமொழி பற்றியது அல்ல. அந்த ஆய்வுக் குழுவினுடைய தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்ற வெங்கடாசலையா



அவர்களுடைய உறுதிமொழிதான் இப்போது பிரச்சினை. அவர் அதற்கு மாறாக நடந்துகொள்வார் என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் மாறாக நடந்துகொள்ள மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் அந்த commission-ன் அறிக்கையையும் மீறிச் செயல்படுத்துகிற அளவிற்கு விஷத்தில் ஊறிய புழுக்கள் B.J.P., B.J.P. என்பது விஷத்தில் புழுத்த புழு. எனவே அதை எந்த வகையிலேயும் நம்பக் கூடாது என்கிற காரணத்தினால்தான் சொல்கிறேனே தவிர, நீதிபதி வெங்கடாசலையா அவர்களுடைய உறுதிமொழியில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவற்றையும் மாற்றுவார்கள் என்பதற்குத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அப்படி மாற்றும்போது அது சிறுபான்மைச் சமுதாயத்திற்கு விரோதமாக இருந்தாலோ அல்லது மாநில அதிகாரங்களை அதிகமாகத் தர வேண்டுமென்ற கருத்துக்கு மாறுதலாக இருந்தாலோ, திராவிட முன்னேற்றக் கழகம் அதை மூர்க்கமாக எதிர்க்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏராளமான வாய்ப்புகள் நம்முடைய அரசமைப்புச் சட்டத்திலேயே இருக்கின்றன. ஆனால் இப்போது பாரதிய ஜனதா, அடிப்படையை மாற்றுவதற்காக, இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்காக, வரலாற்றை மாற்றுவதற்காகச் செய்கின்ற ஒரு சூழ்ச்சி இது. எனவே இந்த சூழ்ச்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பலியாக வேண்டுமா? இதற்கு இவ்வளவு சப்பைக்கட்டுக் கட்ட வேண்டுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** 'சப்பைக்கட்டு' போன்ற வார்த்தைகளெல்லாம் அழகிரி போன்ற நல்ல பேச்சாளர்களுடைய வாயிலிருந்து வரக்கூடாத வார்த்தைகள். இருந்தாலும் பரவாயில்லை. அதை 'நொண்டிச் சமாதானம்' என்று வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம். 'சப்பைக்கட்டு' என்று சொல்லியிருக்கத் தேவையில்லை.

நான் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அழகிரி அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இந்த மறு ஆய்வு நடைபெறுவதற்குத் தலைவராக இருக்கின்ற வெங்கடாசலையா அவர்கள் திட்டவட்டமாக உத்தரவாதம் கேட்டுத் தெரிந்துகொண்டு, அது அளிக்கப்பட்ட பின்னர்தான், அதை ஏற்றுக்கொண்டு, அதை

நடத்திக்கொண்டிருக்கிறார். எந்த ஒரு முடிவு வந்தாலும், அந்த முடிவை நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்ட பிறகுதான் அதை ஏற்றுக்கொள்ள முடியும். அப்படி வரும்போது பெரும்பான்மையோடு, அதை எதிர்க்கிற பெரும்பான்மையோடு — சிறுபான்மைச் சமுதாயத்திற்கு எதிராக அல்லது நாட்டு நலனுக்கு எதிராக அல்லது மதச்சார்பற்ற தன்மைக்கு எதிராக எந்தக் கருத்து இருந்தாலும், அதை அடியோடு எதிர்க்க — திராவிட முன்னேற்றக் கழகம் அணி சேர்ந்து நிற்கும் என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மறு ஆய்வைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டார்கள். 1975 டிசம்பரில் இந்த அரசமைப்புச் சட்டம் முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தீர்மானத்தை வேண்டுமானால் படித்துக் காட்டுகிறேன்.

"The resolution adopted by the Congress in December simply urged that our Constitution be thoroughly re-examined in order to ascertain, if the time has not come to make adequate alteration to it so that it may continue as a living document effectively responding to the current needs of the people and demands of the present."

இப்படிச் சொல்வது மட்டுமல்ல. அப்போது சட்டத் துறை அமைச்சராக இருந்த திரு. கோகலே, நாடாளுமன்றத்தில் பேசும்போது "Nobody likes that it should go in amendment of the Fundamental Law, which is the Constitution, on an adhoc basis from time to time and he expressed a view that the time has now come when we have to have a fresh look at the whole fundamental structure of the Constitution itself" என்று. இது காங்கிரஸ் சட்ட அமைச்சருடைய கருத்து ஆகும்.

பிற்பகல் 12-30

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் குறிப்பிட்ட விஷயம், B.J.P. எடுத்திருக்கிற முடிவுக்கு உடன்பட்டது அல்ல. முதலில் நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி மதச்சார்பற்ற ஒரு கட்சி. மதச்சார்பற்ற கட்சி என்பது மட்டுமல்ல, அடிப்படைக் கட்டமைப்புக்கு . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியிலே இப்படிச்



சொல்கிறார். காங்கிரஸ் கட்சி முழுக்க முழுக்க மதச்சார்புள்ள கட்சி. 'ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்' என்று சொல்கிற கட்சி, மதத்தின் பெயராலே சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் ஆதரவைத் திரட்டிய கட்சி. அதனாலேயே நாட்டிலே பிரிவினை ஏற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களுடைய தீர்க்கமான முடிவு.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத நம்பிக்கை என்பது வேறு, மத வெறி என்பது வேறு. (சிரிப்பு) கண்டிப்பாக. நான் ஒரு இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுப்பராயன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, அந்தப் பிரச்சினை முடிந்தது. திரு. அழகிரி, தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாரே தவிர, நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. 'ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்' என்பது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைப் பிரகடனம் அல்ல; காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை அறிக்கை அல்ல. "ஈஸ்வர அல்லா தேரே நாம்" என்ற அடுத்த வரியை மறந்து விட்டாரா அமைச்சர்? அதிலிருந்து அவர் ஏன் இவ்வளவு அவசரப்பட்டு மேற்கோள் காட்டினார் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அக்கட்சி தன்னுடைய அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதற்குச் சில பாடல்களைச் சொல்லியிருக்கிறது. அந்தப் பாடல்களிலிருந்து அந்தக் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கை விளங்குகிறது. இந்தியாவை காங்கிரஸ் கட்சி 'இந்துஸ்தான்' என்றுதான் சொன்னது. இந்தியா என்றே சொல்லவில்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்த வரி என்னவென்று சட்ட அமைச்சர் சொல்லவில்லை. 'ஈஸ்வர அல்லா தேரே நாம்'. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளே என்ன என்று தெரியவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** எதிர்க்கட்சித் தலைவருக்குக் காங்கிரஸ் வரலாறே தெரிந்திருக்க முடியாத நிலை இருக்கிறதோ என்றுதான் எனக்குச் சந்தேகம் வருகிறது. காங்கிரஸ் வரலாற்றை உங்களைவிட அதிகமாகப் படித்து வைத்திருப்பவன் நான்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** காங்கிரஸ் மதவாதக் கொள்கையுடைய கட்சி என்று சொன்னீர்கள். அப்படியானால் உங்களுக்கு காங்கிரஸ் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்று அர்த்தம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** நீங்கள் காங்கிரஸ் பற்றி ஒழுங்காகப் படிக்கவில்லை என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) முழுக்க முழுக்க காங்கிரஸ் கட்சி மதவாதக் கட்சி. சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்து இந்து மதத்தைத் தூண்டி, இந்து மதத்தின் அடிப்படையில்தான் கட்சியை வளர்த்தது. அந்தக் கட்சியின் முன்னோடியாக இருந்தவர்கள் சாதி இந்துக்கள் என்பதுதான் ஆராய்ச்சியாளர்களுடைய முடிவு.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தயவுசெய்து தி.மு.க. தலைவர்கள், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அண்ணல் டாக்டர் அம்பேத்கர் ...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** திரு. சுப்பராயன், ஏற்கெனவே உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. ஒரு நிமிடம் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் முன்கூட்டியே பேசிவிட்டீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இவ்வளவு குறுக்கீடுகளில் ஒரு நிமிடம்தான் என்று சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. நான் சொல்வதற்கு நான்கைந்து விஷயங்கள் இருக்கின்றன. மிக விரைவில் முடித்துக்கொள்கிறேன். குறுக்கீடுகள் தொடர்ந்து அதிகரித்த காரணத்தால்தான் என்னுடைய நேரத்தில் என்னுடைய விஷயத்தை வெளிப்படுத்த முடியவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய வாஜ்பாய் அவர்களைப்பற்றி நான் குறிப்பிட்டேன். திரு. வாஜ்பாய்பற்றி நான் முன்னரும் சொன்னேன், தனிப்பட்ட முறையில் எனக்குப் பிரச்சினை இல்லை என்று. திரு. வெங்கடாசலையா கொடுத்திருக்கிற உறுதிமொழிபற்றி நான் இப்போது ஆட்சேபிக்கவில்லை, அதுபற்றி அவநம்பிக்கை உள்ளவனும் இல்லை. ஆனால் வாஜ்பாய் அரசு எப்படிப்பட்ட அரசு என்பதும், அதில் உறுதியாக தி.மு.க. எதிர்க்கும் என்றும் கலைஞர் சொன்னார். மெத்த மகிழ்ச்சி. நான் ஒரு விஷயத்தைக்



கேட்க விரும்புகிறேன். இப்போது நீங்கள் ஆதரிக்கின்ற மத்திய B.J.P. அரசு, வரலாற்று ஆய்வுக் கழகத்திற்கு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறது? சமூக ஆராய்ச்சிக் கழகத்திற்கு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறது? இந்தியக் குழந்தைகளுக்குப் பாடத்தைத் தயாரிக்கிற பாடநூல் ஆராய்ச்சிக் கழகத்திற்கு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறது? மிக முக்கியமான இந்த மூன்று கழகங்களுக்கும் இந்திய அரசியலில் உள்ள வகுப்புவாதிகளையெல்லாம் வலைவீசிப் பிடித்து, சல்லடையில் சலித்து, நாய்த்தோலில் வடித்தால் எவர் மிஞ்சுவாரோ அவரைத்தான் அந்தக் கழகங்களின் chairman-ஆக ஆக்கி இருக்கிறது B.J.P. இப்படி இவர்களை chairman-களாக ஆக்கியிருக்கின்ற இந்த B.J.P. எப்படி நம்புவதற்குரியதாக இருக்கும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிந்தனைக்கே நான் விட்டுவிட்டேன். அடுத்து நான் இங்கே குறிப்பிட விரும்புவது ...

பிற்பகல் 12-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய சுப்பராயன் என்னை எச்சரிப்பதும், நான் சுப்பராயன் அவர்களை எச்சரிப்பதும், அதாவது கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை எச்சரிப்பதும், திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியை எச்சரிப்பதும் இரண்டு பேருக்கும் உள்ள உரிமை. ஆனால் இறுதி முடிவு என்ன என்பதைப்பற்றி பிறகு பார்த்துக்கொள்ளலாம். இப்போதுள்ள சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ன முடிவை எடுக்கும் என்பதை நான் அறிவித்திருக்கிறேன். "தவறான முறையிலே அந்த அரசமைப்புச் சட்டம் திருத்தப்படுமேயானால், சிறுபான்மை மக்களுக்கு விரோதமாகவோ அல்லது மதச்சார்பின்மைக்கு விரோதமாகவோ இருந்தால், எதிர்ப்போம்" என்று சொல்லியிருக்கின்றேன். இந்தக் கருத்திலேதான் சுப்பராயன் அவர்கள் என்னோடு உடன்பாடு கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். உடன்பாடுகொண்டு உரைத்திருக்கிறார், அதற்காக நன்றி. அதேநேரத்தில், அவர் எனக்குள்ள ஆபத்தை எப்படி எச்சரித்திருக்கிறாரோ, அதேபோல அவருக்குள்ள ஆபத்தை நான் எச்சரிப்பது என்னுடைய உரிமை. அதையும் அவர் மறந்துவிடக் கூடாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உண்மைதான், ஒப்புக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட இயக்கமும், கம்யூனிஸ்ட் இயக்கமும் சிலபல விஷயங்களில் வேறுபட்டு இருந்தாலும், அடிப்படையில் ஒன்றுதான். அந்த

அடிப்படையிலிருந்து திசை தவறி விடக்கூடாது. யாராக இருந்தாலும் திசை தவறி விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் சொல்லப்படுகின்ற விமர்சனங்கள் என்றே இதை நான் எடுத்துக்கொள்கிறேன்.

நான் நிறைவாக ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தனிப்பட்ட இந்த ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை பற்றிச் சொல்வதற்கு என்னிடத்தில் நிறைய இருக்கின்றன. இந்தியாவினுடைய அடிப்படையைத் தகர்த்துக் கொண்டிருக்கிற இந்தத் தீய சக்தியைத் தோலுரித்துக் காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதால், அது குறித்து ஒரு தனிப்பட்ட விவாதமே நடத்த வேண்டிய அவசியம் இருந்தாலும், அதுபற்றி விவாதம் நடத்தக்கூடிய வழிவகை இல்லாததால் நான் இப்போது அதற்குள்ளே விரிவாகப் போக விரும்பவில்லை. இந்த விஷயத்தில் மட்டும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் சொல்ல வந்தது இடையிலே நின்று விட்டது. நாடாளுமன்றத்திலே "பாபர் மசூதியை இடிக்க மாட்டோம்" என்று வாக்குறுதி கொடுத்தார் வாஜ்பாய். தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குழுவிலே "இடிக்க மாட்டோம்" என்று வாக்குறுதி கொடுத்தார் வாஜ்பாய். உச்ச நீதிமன்றத்தில் Affidavit தாக்கல் செய்து, அதில் "இடிக்க மாட்டோம்" என்று வாக்குறுதி கொடுத்தார். ஆனால், நடைமுறையில் கடப்பாறையை வைத்து இடித்தார்கள். எனவே, அவர்கள் சொல்வது ஒன்று, செயல் ஒன்று. எனவே, நான் வேண்டிக்கொள்கிறேன். சிவாஜி கணேசன் செவாலியர் விருது பெற்றிருக்கிறார். செவாலியர் விருது இல்லாமலேயே சிவாஜி கணேசன் சிறந்த நடிகர்தான். அந்த விருதை வாங்கி வாஜ்பாய்க்குக் கொடுத்துவிடலாம் என்பது என்னுடைய கருத்து. மிகச் சிறந்த நடிகர் வாஜ்பாய். செவாலியர் விருதுக்கு முற்றிலும் பொருத்தமானவர் வாஜ்பாய். சொல்வது ஒன்று; செயல் ஒன்று.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நண்பர் சுப்பராயனுக்கு விருது கொடுக்கின்ற முறைகூடத் தெரியாமல் இருப்பதற்காக வருத்தப்படுகிறேன். யாரும் சிரிப்பதற்காக, கை தட்டுவதற்காக அல்ல. சிவாஜியினுடைய விருதை வாங்கித் தர வேண்டிய அவசியம் இல்லை. புதிதாக ஒரு செவாலியர் விருதை வாங்கிக் கொடுக்கலாம். சுப்பராயன் அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். இன்னொருவர் விருதைப் பிடுங்கிக் கொடுப்பது என்றால், சிவாஜி கணேசன்மீது சுப்பராயனுக்கு என்ன கோபமோ தெரியவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிவாஜி கணேசனால்தான் அந்த விருது பெருமை பெற்றது என்பதால் அந்த



விருதைப் பெற்றுத்தான் சிவாஜி கணேசன் பெருமை பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதால் நான் சொன்னேன்.

அடுத்து, பொதுத் துறை. பொதுத் துறையில் சேலம் உருக்காலைப் பிரச்சினை. அது பாதிக்கப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலைப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்முயற்சி எடுத்து இந்தப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மத்திய அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகள் சொல்லுகின்றன. மத்திய அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்டுத்தான் சேலம் உருக்காலை விற்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஹரியானாவிலே அவருக்கு உறவினர் கம்பெனிகள் இருக்கின்றன என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கின்றது. எனவே, இந்தப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அந்நிய கம்பெனிகள். இங்கே கிருஷ்ணாயில் விலை ஏறியிருக்கிறது அல்லவா? ரேஷன் அரிசியின் விலை ஏறியிருக்கிறது அல்லவா? இந்தியாவில் டீசல் விலை ஏறி பல பொருட்களின் விலை ஏறியிருக்கிறது அல்லவா? ஆனால் மத்திய அரசு என்ன செய்கிறது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. MNC-களின் உற்பத்திப் பண்டங்களுக்கெல்லாம் இந்தியாவில் இறக்குமதி வரியை முற்றிலும் விலக்கியிருக்கிறது. வெளிநாட்டு கம்பெனிகளுக்கு வரியிலே இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் வாக்களித்த உள்நாட்டுப் பிரஜைகளுக்கு வரியை ஏற்றி தண்டனை தரப்படுகிறது. இது எந்த வகைப்பட்ட நீதி என்று தெரியவில்லை. சோனியா காந்தி மட்டும் விதேசி, இவர்கள் சுதேசி என்று சொல்லுகின்ற கருத்து.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது. உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை என்பது விரிவான கொள்கை விவாதம் உள்ள ஒரு விஷயம் மற்ற Demands அல்லது general structure பற்றிப் பேசுகின்ற பட்ஜெட்டிலேகூட நாம் காலவரையறை நிர்ணயிக்கலாம். ஆனால் Policy matter என்பதாலும், இக்கட்டான, சிக்கலான, நெருக்கடியான, திருகல் முறுகலான சூழ்நிலை அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் ஏற்பட்டிருப்பதால் இது குறித்துப் பேசுவதற்கு நாம் அதிக நேரம் ஒதுக்கியிருக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் நான் சொல்லி முடித்துக் கொள்கிறேன். ஒன்று, பட்டா பிரச்சினை பற்றி இதிலே வந்திருக்கிறது. நான் controversial subject-க்கு உள்ளே போகவில்லை. பட்டா பிரச்சினை வந்திருக்கிறது. அதைக்கூட எளிமைப்படுத்த வேண்டும். 20 ஆண்டுகள் என்றுகூட, மொட்டையாகத் தெரிகிறது; எனக்குத் தெரியவில்லை அதிலே எப்படி இருக்கிறது என்று. இதில் மந்தைப் புறம்போக்கு என்று இருக்கிறது. இப்போது திருப்பூரிலே எடுத்துக் கொண்டீர்களேயானால், மந்தைப் புறம்போக்கு, அந்த classification-லே பட்டா தருவதில்லை. மந்தை என்பதற்கு இப்போது அவசியமே தேவையே இல்லை. 150 வருடங்களுக்கு முன்னால், பொது மந்தை, மேய்ச்சல் நிலம் என்று இருந்திருக்கிறது. இப்போது இந்த மேய்ச்சலுக்கு அவசியம் இல்லை. அந்த இடத்திற்குப் பட்டா கொடுக்க வழிவகை இல்லை என்று தடை போட்டு விடுகிறார்கள். அதேமாதிரி குட்டைப் புறம்போக்கு என்று இருக்கிறது. குட்டை இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எப்படியோ அதற்காக ஒரு சட்டமுன்வடிவு வரப்போகிறது. அதில் இந்தக் கருத்துகளையெல்லாம் விரிவாகச் சொன்னால், உரிய கருத்துகளாக, நல்ல கருத்துகளாக இருந்தால் நிச்சயமாக இந்த அரசு அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** கடைசியாக, மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டு, 500 ஏக்கரிலே ஒரு புதிய திருப்பூர் நகரம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த பட்ஜெட்டிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னரும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் என்ன நடைமுறைச் சிக்கல் என்பதைப் புரிய வைக்க விரும்புகிறேன். 500 ஏக்கர் நிலம் என்பதை அந்தச் சுற்றுப்புறங்களில் இருக்கிற பத்து ஊராட்சித் தலைவர்களும், ஆயிரக்கணக்கான பொதுமக்களும், 50 ஆண்டுகளாகப் பிற்பட்டுக் கிடந்த அந்த கிராமம், ஒரு புதிய திருப்பூர் நகரம் உருவாகிறபோது, அந்தப் பத்து ஊராட்சிகளில் பல்லாயிரக்கணக்கான மக்களுடைய சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு மலர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு எல்லோரும் வரவேற்றார்கள். ஆனால், இப்போது திடீரென்று, 15 தினங்களுக்கு முன்னால் அந்தப் புதிய திருப்பூர் நகரம் அமைப்பது கைவிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அந்தப் புதிய திருப்பூர் நகரத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற



கம்பெனியில் M.D.-யாக இருக்கிற ஒருவர்— குறிப்பிட்ட M.D. அவர்கள்— இதில் மிகுந்த அக்கறை எடுத்திருக்கிறார் என்று நான் குறிப்பாகக் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அவர் ஏன் அதைக் கைவிட அக்கறை எடுத்துக் கொண்டார் என்பது விசாரணைக்கு உரியதுதான். பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பிக்கையோடு இருந்ததை மாற்றும் அளவுக்கு அரசையே mislead செய்து, முதலமைச்சரும் 15 தினங்களுக்கு முன்னால், கையெழுத்துப் போடுகிற அளவிற்கு, அவர்கள் தவறான தகவல்களைத் தந்திருக்கக் கூடும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே எல்லோரும் பதட்டத்தில் இருக்கிறார்கள். அந்தப் பதட்டம் தணிய தயவுசெய்து மீண்டும் அந்தப் புதிய திருப்பூர் நகரம் 500 ஏக்கரில் அமைக்கப்படும்; அந்த 10 ஊராட்சிகளுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக,... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை. நேரம் அதிகமாகிவிட்டது. திரு. புகழேந்தி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நேரம் அதிகமாகிவிட்டது. (குறுக்கீடு) நீண்ட நேரம் ஆகிவிட்டது. திரு. புகழேந்தி (குறுக்கீடு) இல்லை, இல்லை நேரமாகிவிட்டது.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே வரியில் சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சரி, சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** தொழிலாளர்கள் பிரச்சினையில் பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறது மாநில அரசு.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை. பின்னர் சொல்லுங்கள். தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அந்த மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். அடுத்து, திரு. புகழேந்தி (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதிகமாக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. புகழேந்தி. (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் ஆறு பேர் பேச வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே வரியில் சொல்லிவிடுகிறேன்; சொல்லி முடித்து விடுகிறேன். குறுக்கீடுகள் எல்லாம் வந்தன. இருந்தாலும் நீங்கள் அனுமதிக்காமல் இருப்பது சரியாக இருக்காது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** அதையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு வரியில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** ஒரே வரியில் சொல்லுங்கள். நீங்கள் அதற்கு ஒரு background எல்லாம் சொல்கிறீர்கள். அதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** இவ்வளவு நேரம் நீங்கள் இழுத்திருக்க வேண்டியதில்லை. இவ்வளவு நேரம் இழுத்ததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** இல்லை, இல்லை. சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பிற மாநிலங்களை ஒப்பிடுகிறீர்கள். மேற்கு வங்கத்தில் 500 ரூபாய். ஏன் தமிழ்நாட்டில் 250 ரூபாய் ? அவற்றை 1000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி:)** அடுத்து, திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நன்றி தெரிவிக்கும் விவாதத்திலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு முன்பாக, எங்களுடைய அய்யன் திருவள்ளுர் அவர்களுடைய குறள் ஒன்றினைக் கூறி என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"*

என்ற அய்யன் திருவள்ளுவர் அவர்களுடைய குறள் வழிக்கேற்ப என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நடந்து வந்த பாதையைப் பெருமிதத்தோடு பார்க்கின்ற அரிமா நோக்கும், உலக மாந்தர்க்கெல்லாம் வளமான வருங்காலத்தை எடுத்துக் கூறுகின்ற குறளினைப் படைத்த அய்யன் திருவள்ளுவர் அவர்களுடைய வழி நெறிமுறைகளின் பேழையாக விளங்குகின்றது இந்த ஆளுநர் உரை என்பதை நான் முதலிலே இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அறம் தாங்கி



இருக்கின்றவர். அறந்தாங்கி இருக்கின்ற காரணத்தினால், நெல்லிக்குப்பம் சர்க்கரையைப் போல, இனிப்பான திட்டங்களை இந்த நாட்டிற்குத் தந்த காரணத்தால், எவர் எப்படித் திரித்துக் கூறினாலும்கூட, இந்தத் தமிழ்நாட்டிலே எடுபடாது என்பதை நிரூபிக்கின்ற விதமாக, மக்கள் மன்றம் அறந்தாங்கி, நெல்லிக்குப்பம், திருச்சி ஆகிய இடைத்தேர்தலிலே தெளிவான தீர்ப்பினை நமக்குத் தந்திருக்கிறது.

பிற்பகல் 12-45

திட்டிய திட்டங்கள் என்ன? அவை எப்படி நிறைவேற்றப் பட்டிருக்கின்றன? இனி எதிர்காலத்திலே மக்களுக்குச் சொல்லப்பட வேண்டியவை என்ன என்பதை எல்லாம் கொள்கை வடிவாக, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு முன்னோடியாக இந்த ஆளுநர் உரையில் மிகச் சிறப்பாக, திட்டங்கள் எல்லாம் செயல்படுவதற்கான ஆயத்த நிலைகளும், கூறுகளும் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

சில பேர் வெளியிலே குறிப்பிட்டார்கள், இது ஏதோ கல்லூரி ஆண்டறிக்கை போல இருக்கிறது என்று. அதை நான்கூடப் படித்தேன். ஆனால் நான் உணர்ந்து பார்த்தேன். இது கல்லூரி ஆண்டறிக்கை அல்ல. நான்கு ஆண்டுகளாக மிகச் சிறப்பாக தமிழகத்தை ஆளுகின்ற ஆண்டறிக்கை என்பதை நான் இங்கே தெளிவாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, வர்ண ஜாலங்கள் என்று எல்லாம்கூட வாய் ஜாலங்கள் போட்டார்கள். மாயாஜால வித்தைத் திட்டங்களை இந்த நாட்டிற்குத் தந்து இப்போது இருக்கின்ற இடம் தெரியாமல் போயிருக்கின்றவர்கள் எல்லாம் வெறும் வாய்ஜாலத்தின் மூலமாக வர்ணஜாலங்களாகச் சொன்னார்களே தவிர, இதைப் படித்துச் சொன்னார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

இன்னொன்றை நான் மிகுந்த வேதனையோடு இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் என்றால் ஆளுநர் உரையை வரவேற்பதோ அல்லது மாற்றுக் கருத்துக் கூறுவதோ அவரவர்களுடைய உரிமை, கடமை. நான் மிகவும் அதிகமாக ரசிக்கக்கூடிய உரை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய உரை. அதிலே ஆழமும் இருக்கும், அர்த்தமும் இருக்கும். அதை நான் மாற்றிக்கொள்ளப் போவதில்லை. உண்மையிலேயே நான் வரவேற்கக்கூடியவன். ஆனாலும்கூட இதுகாறும் ஆற்றிய உரையிலேயே முதன்முறையாக இந்த ஆளுநர் உரை விவாதத்திலே பேசுகிறபோது

ஆளுநர் உரையிலே இருப்பது குறித்து ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் சொல்லி ஆளுநர் உரைக்குச் சம்பந்தமில்லாமல் இவ்வளவு நேரம் பேசியதை நான் முதன்முதலாகக் கேட்டேன். உண்மையிலேயே ஆழமான கருத்தை எதிர்பார்த்து அது இல்லாததால் நான் வேதனைப்படுகிறேன். அதற்கான பதிலினைக் கூறுகிற வாய்ப்புகளும் இல்லாமல் போய் இருக்கின்றன.

இன்னொன்றும் இங்கே சொன்னார்கள். ஏதோ கிளிண்டன் வருகிறார்; அமெரிக்காவில் இருந்து வருகிறார் என்றெல்லாம் சொன்னார்கள். கிளிண்டன் வரலாம்; போகலாம்; அவர் ஒரு நாட்டின் அதிபர். ஆனால் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிங்கப்பூரிலேயிருந்து பிரதமர் சென்னைக்கு வந்தார்; மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்தார்; பேசினார்; திட்டங்கள் தீட்டப்பட்டன. நான் சொல்ல விரும்புவது, வருவதும், போவதும் அல்ல சிறப்பு. ஆனால் வந்து போனவர்கள் என்ன செய்தார்கள்? என்ன தருகிறார்கள் என்பதுதான் சிறப்பு. அந்தவகையிலே கடலூர் துறைமுகத்தை மேலும் விரிவாக்க சிங்கப்பூர் பிரதமரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசி அதற்கான திட்டக்கூறுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே வந்து போகிறவர்கள் மூலமாக ஒரு மாநிலம் பெருமைப்பட்டுவிடும் என்று சொல்ல முடியாது என்பதை இங்கே தெளிவாக நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய அழகிரி அவர்கள்கூடச் சொன்னார்கள். நாங்கள் அந்த ஆட்சியிலேயே எதிர்த்தோம்; உங்களைவிட எதிர்த்தோம்; முறைகேடுகளை எதிர்த்தோம்; மரபு மீறியதை எதிர்த்தோம். ஊழல் செய்ததை எதிர்த்தோம்; போராடினோம்; சட்டமன்றத்திலேயே போராடினோம் என்ற கருத்துப்பட இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்போதுதான் நான் எண்ணிப்பார்த்தேன். பிறகு தொடர்ந்து சொன்னார், ஏதோ திருந்திவிட்டார்கள், ஒரு தவறுக்கு ஒரு தண்டனைதானே என்று சொன்னார். ஒரு தவறுக்கு ஒரு தண்டனைதான். ஆனால் பல தவறுகளுக்கு எத்தனை தண்டனை? பதில் சொல்லியாக வேண்டும். பல தவறுகள் இருக்கிற காரணத்தால் அது அப்படியே தொங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலே அந்த வாதம் இருக்கிறதே தவிர, வசதிக்கேற்ப மாற்றிக்கொள்கிற நிலையிலே இல்லை என்பதையும், வசதிக்கேற்ப மறந்துவிடுகின்ற நிலையிலே எதுவும் இல்லை என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். திருத்தப்பட வேண்டியவராக இருந்தார், இன்றைக்கு திருந்திவிட்டார் என்று அவர் சொல்கிறபோது, திருத்தப்பட வேண்டியவராக முன்னாள் முதல்வர் இருந்தார் என்ற கருத்து அதிலே



பொதிந்திருப்பதனால் என்னுடைய அன்புக்குரிய அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி அமைதியாக அதை ஏற்றுக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆக, திருந்தியவரை தமாகா. ஏற்றுக்கொண்டதாம், திருத்தப்படாதவரை என்ன செய்வது என்ற நிலைகளை எல்லாம் நாம் அவர்களுடைய வாதங்களின் மூலமாக இந்த நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய நிலையிலே இருக்கிற சூழ்நிலையையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். புதியதாக சமூகச் சீர்திருத்தம்.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டது, நாங்கள் ஏற்கெனவே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி) :** இல்லை, இல்லை. திரு. அழகிரி தானே பதில் சொல்ல வேண்டும். அவர் சார்பாக நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் முடித்துவிடுகிறேன். நான் முடிப்பதற்குள் நீங்கள் பேசுகிறீர்கள். தயவுசெய்து என்னைப் பேச விடுங்கள். நான் பேசுவதற்கு முன்னால் நீங்கள் பேசுகிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி குறிப்பிட்டது மதவாத கட்சியான பாரதிய ஜனதா கட்சியோடு ஏற்கெனவே நாங்கள் கூட்டுச் சேர்ந்ததைத்தான் நாங்கள் தற்போது மாற்றிக் கொண்டு விட்டோம் என்ற கருத்தில்தான் அவர் பேசினாரே தவிர வேறு எந்தக் கருத்தும் இல்லை.

*பிற்பகல்12-50*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதற்கு திரு. அழகிரி அவர்களே விளக்கம் அளிப்பார் என்று நம்புகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்தைப் புரிந்து கொள்கிற அளவுக்கு ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. புகழேந்தி இல்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம். நான் தெளிவாகச் சொன்னதிலே அவருக்கு எந்தச் சந்தேகமும் தேவையில்லை. இருந்தாலும் முதலமைச்சர் நன்றாகப் புரிந்து கொண்டார். ஆகையினால்தான் அப்போது முதலமைச்சரும் குறுக்கிடவில்லை என்பதனை நான் இதனுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. சாதுரியம் என்பது சமாளிப்புக்கு உதவுமே தவிர, சாதிக்க உதவாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். மிகத் தெளிவாக, திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய கொள்கை வழி நிற்கின்ற இயக்கம் என்பதை இந்த நாடு அறிந்திருக்கிறது. சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள்; இப்போதுகூட அதற்கான ஒரு துறையை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சட்டமன்றத்திலே மட்டுமல்ல; மக்கள் மன்றத்திலேயும்கூட சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை எடுத்து வைத்து நாடு முழுவதும் எங்கள் தலைவர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த கொள்கைவழி முழங்கி, மக்களைச் சீர்திருத்தி, எழுதி, பேசி, நடித்து, நல்ல ஒரு நிலையை உருவாக்குகின்ற அந்தச் சூழலிலிருந்து அவர்கள் பின்வாங்கவில்லை. ஆனால் மக்கள் மன்றத்திலே, எத்தனை முறை நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சமுதாய சீர்திருத்தக் கருத்துகளைப் பேசியிருப்பார்கள்? சமுதாய சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியிருப்பார்கள்? நான் உண்மையைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகம், கொள்கையைத் தன்னுடைய உயிராகக் கருதுகிறது. நாங்கள் உயிராக எங்கள் தலைவர் கலைஞர் அவர்களைக் கருதுகிறோம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சமுதாய சீர்திருத்தக் கருத்துகளைச் சொன்ன ஒரே அரசியல் கட்சி, முதன்மையான அரசியல் கட்சி, மூத்த அரசியல் கட்சி, காங்கிரஸ் கட்சிதான். தந்தை பெரியார் கூட காங்கிரஸ் கட்சியிலே இருந்து வந்தவர்தான். சமுதாய சீர்திருத்தம் என்பது, இராஜாராம் மோகன்ராய் அவர்களிடத்திலிருந்து ஆரம்பித்து, திரு.வி.க. வரை, தந்தை பெரியார் வரை, பெருந்தலைவர் காமராஜர் வரை, ஏராளமான தலைவர்களை உள்ளடக்கிய அரசியல் இயக்கம் காங்கிரஸ் கட்சிதான். காங்கிரஸ் கட்சியினுடைய வரலாற்றை திரு. ஆலடி அருணா அவர்கள் எப்படிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ, அதேபோல அருமை நண்பர் திரு. புகழேந்தி அவர்களும் புரிந்துகொள்ளவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம். சமுதாய சீர்திருத்தத்திற்கு எந்தக் காலத்திலும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பாக இருந்தது இல்லை அல்லது எங்களைவிட திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாயச் சீர்திருத்திலே பெரிய அரசியல் கட்சியும் அல்ல என்பதையும் நான் நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1925 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள், காஞ்சிபுரம் மாநாட்டில், துண்டை



உதறித் தோளிலே போட்டுக் கொண்டு, 'காங்கிரசை ஒழித்தே தீருவேன்' என்று வெளியே வந்தார்கள். என்ன காரணம்? சமூக நீதிக்குக் காங்கிரஸ் ஆதரவாக இல்லை என்பதுதான் காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியலிலே கோபதாபங்கள் என்பது வேறு. தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கைக்கு எதிராக வெளியே வரவில்லை. காங்கிரஸ் கட்சியிலே இருந்த குழுச் சண்டையிலே, பெரியார் அவர்களால் ஈடுகொடுக்க முடியாமல் வெளியே....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்கள் இப்படித் திசை திருப்பக்கூடாது. இது புது விளக்கமாக இருக்கிறது. வரலாற்றையே மாற்றி எழுதுகிறார். திரு. அழகிரி இப்படி எழுதக்கூடாது. ஏனென்றால் உண்மைக்குப் புறம்பான சில விஷயங்களை வரலாறுகளாக ஆக்கிவிடக்கூடாது. Reservation — வகுப்புவாரி பிரதிநிதித்துவம் — என்பதை காங்கிரஸ் கட்சி அன்றைக்கே ஏற்றுக் கொள்ளவில்லை. திரு.வி.க. தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், தந்தை பெரியார் கொண்டுவந்த தீர்மானம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக; "சமூக நீதிக்காக. நீதிக் கட்சி அதைச் செய்கிறது; இதை நாமும் செய்ய வேண்டும்" என்ற தீர்மானத்தைக் கொண்டு போனார். அதை, திரு.வி.க. தலைமையில் நடைபெற்ற அந்த காங்கிரஸ் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாகத்தான் பெரியார் காங்கிரசை விட்டு விலகினார்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், தமிழ் மாநில காங்கிரசை, காங்கிரசோடு இணைத்துவிட்டாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு வெளியிட்டிருக்கிற அரசின் குரலாக அறிவித்திருக்கிற இந்த ஆளுநர் உரையிலுள்ள கருத்துகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்கிறபோது, நாடாளுமன்றத்திலே சொல்லப்பட வேண்டிய, நாடாளுமன்றத்திலே வாதிடப்பட வேண்டியதையெல்லாம் இங்கே எடுத்து வைத்து, அவ்வளவு அனுபவம் வாய்ந்தவர்கள் வாதிடுகிறார்களே, இப்படி இருக்கிறார்களே என்றுகூட எண்ணக்கூடிய நிலையில் நம்முடைய மாற்றுக் கருத்துக் கொண்ட உறுப்பினர்கள் சிலர் கூறியதை இங்கே நான் வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

அரசமைப்புச் சட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அரசமைப்புச் சட்டத்தின் மாற்றத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு முதலிடம் கொடுத்து, முதன்முதலாக உலகத்தில்—நான் காங்கிரஸ் கட்சி என்று சொல்லமாட்டேன்—அரசியலிலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு என்று சொல்லக்கூடிய அளவுக்கு பழுத்த பகுத்தறிவு வாதியாக வாழ்ந்து மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். ஆக, அதைத் தொடர்ந்து பல திருத்தங்கள் வந்தன. அவசரநிலை பிரகடன காலத்தில் — சுவரன்சிங் தலைமையிலே போடப்பட்ட ஆய்வுக்குழு என்னவாயிற்று? யார் போட்டது? சுவரன்சிங் தலைமையில் மத்திய அமைச்சராக இருந்தவர் தலைமையில் அரசமைப்புச் சட்டத் திருத்த ஆய்வுக்குழு போடப்பட்டதே ? அதுமட்டுமல்ல. அதற்குப் பிறகு, மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய்வதற்காக சர்க்காரியா தலைமையிலே ஒரு ஆய்வுக் குழு போடப்பட்டதே? இது அதைப்போன்ற ஒரு பரிசீலனைக் குழு தானே? இந்தப் பரிசீலனைக் குழு போடப்படுகின்ற சூழ்நிலையில் சொல்லப்படுகின்ற கருத்துகள் ஏதோ பயமுறுத்துவது போல இருக்கிறது அவர்கள் எப்படி மீற முடியும்?

பொதுவுடைமை இயக்கத்தின் மாபெரும் தலைவராக வாழ்ந்து மறைந்த, இந்த இயக்கங்கள் பிரியாதபோதிருந்த பி. டி. ரணதிவே தெளிவாகக் கட்டுரையிலே "அரசமைப்புச் சட்டம் என்பது அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. அதிலே இருக்கின்ற மாற்றங்கள் அவ்வப்போது தேவையான கருத்து" என்று சொல்லியிருக்கிறார். அண்ணல் டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர்— உருவாக்கியவரே அவர்தான்— சொன்னார். அவர் முதலிலே Draft வரைந்து கொடுத்தது, பிறகு சட்டமாகக் குழு அமைத்து உருவாக்கப்பட்டது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஏன் சோசலிஷ தலைவர் என்று சொல்லப்படுகின்ற டாக்டர் ராம் மனோகர் லோகியா, ஆக எத்தனையோ வடநாட்டுத் தலைவர்கள் உள்பட, பலர் அவை பரிசீலனைக்குரியவை என்றும் 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட ஒன்று என்றும் சொல்லியிருக்கிறார்கள். சட்டம் என்பது மக்களுக்காகத்தானே தவிர, மக்களுக்காகத்தான் சட்டம் அமைய வேண்டுமே தவிர, சட்டத்திற்காக மக்கள் என்றால் நாடு



என்னாவது? ஆக இந்த உயரிய கருத்தைப் பகுத்தறிவு நோக்கோடு ஆழ்ந்த சிந்தனைத் திறத்தோடு திடமான உள்ளத்தோடு பொதுவுடைமை இயக்கத்தவர்களும்— அதிலே அவர்களுடைய கருத்துப்படி சொல்ல வேண்டுமென்றால் அவர்களுடைய வீச்சோடு— இந்த நிலையை எண்ணிப்பார்க்க வேண்டாமா? அவர்களுடைய கருத்துகளின் உள்ளே நுழைந்து இன்னமும் நுண்மான் நுழைபுலம் போலப் பார்க்க வேண்டாமா?

செய்து கொண்டிருக்கிற செயல் இந்த நாட்டிற்காக என்ற காரணத்தால், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைவழி அரசு என்ற காரணத்தால் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கருத்து வரவேண்டுமென்பதற்காக போடப்பட்டிருக்கின்ற அடிப்படைப் பாதை என்ற காரணத்தால், இங்கே தெளிவாக நமது அரசு அதுபற்றி கருத்துக் கூறியிருக்கிறது. அதிலே ஆங்கிலம் என்பது இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துத் தடுத்து நிறுத்துவதற்கு பயன்பட்ட காலம். ஆக, ஆங்கிலத்தினுடைய பயன்பாடு குறையக் குறைய, தமிழின் பயன்பாடு உயர உயர— இதுதானே, அண்ணா தந்தது — தேவையான நேரத்தில் தேவையானவற்றை சொல்லியாகத்தான் வேண்டும். அந்த வகையிலேதான் இப்போது நம்முடைய அரசு, மிகத் தெளிவாக ஆளுநர் உரையில் மொழியைக் குறித்து, கணினி நிலைகளிலே இப்போது மாணவர்கள் பயன்பாடு அடைவதற்கு 666 பள்ளிகளில் மட்டுமல்ல; இன்னும் இந்த ஆண்டும், வருகின்ற அடுத்த ஆண்டிலேயும் முழுவதுமாக மாநிலக் கல்லூரிகள் உட்பட, பள்ளிகள் உட்பட அத்தனையிலும் கணினியைக் கொண்டு வரவேண்டும்.

நான் ஒன்றை மட்டும் சொல்லி விடைபெற விரும்புகிறேன். தமிழை வாழ வைக்க, தமிழை எவராலும் அழிக்க முடியாத நிலையில் வைக்க, எப்பேர்ப்பட்ட ஆதிக்கச் சக்தி இனி இந்தியாவையே பீடித்து வந்தாலும்கூட, நம் தமிழை தொடக்கூடாமல் இருக்க நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அறிவியல் தமிழை உருவாக்கினார். இந்தியாவிலே பல மொழிகள் இருந்தாலும், அயல்நாட்டவர் என்று சொல்லப்படுகிறவர், எழுதுகிறார் ஒரு பத்திரிகையில், "தமிழ் மொழியிலேதான் இந்தியாவிலே தளம் அமைக்கப்பட்டிருக்கிறது" என்றும் "தமிழ் மட்டும் தெரிகின்ற ஒருவன் இணையத்தின் மூலமாக உலகத்திலே தொடர்புகொள்ள முடியும் என்ற நிலை வகுக்கப்பட்டிருக்கிறது." என்றும் எழுதியிருக்கிறார். இந்திகூட இன்னும் அதில் வந்து சேராத நிலையில் எந்த அளவிற்கு இந்த அரசு, தமிழ்ப் பற்றுள்ள அரசு, எந்த அளவிற்கு அண்ணாவின் கொள்கையில் தீவிரமான நிலைப்பாட்டை வகுத்துக் கொண்டிருக்கின்ற, அண்ணாவின்

கொள்கையை உயிரோடு இணைத்துக் கொண்டிருக்கின்ற அரசு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆக, திராவிட பேரியக்க கொள்கைகள்தான் இந்த நாட்டை என்றைக்கும் ஆள முடியும். அந்தக் கொள்கைகளுக்கு தலைவர்தான், எங்கள் அன்புத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் என்று சொல்லிக் கொள்கிறேன்.

'வருமுன் காப்போம்' அதைப்போல 'நமக்கு நாமே' போன்ற திட்டங்களைப்பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். இந்தத் திட்டங்களின் மூலமாக கடலூர் தொகுதி பல்வேறு நன்மைகளைப் பெற்றிருக்கிறது. மேலும் பல துறைகள் மூலமாக கடலூர் சட்டமன்றத் தொகுதிக்காக நான் வைக்கின்ற வேண்டுகோளை அனைவரும் செய்து தரவேண்டுமென்று, அமைச்சர் பெருமக்களுக்கு என்னுடைய வேண்டுகோளை வைத்து, இவ்வளவு சிறப்புக்குக் காரணமாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஆளுநர் உரையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நல்ல எண்ணம் கொண்டவர்கள் நடிப்பிற்காகக்கூட எதிர்க்கக்கூடாது என்று சொல்லி, ஆளுநர் உரையை மீண்டும் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி): திரு. ஜி.கே. மணி, 10 நிமிடங்களில் உங்களது உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 1-00

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த நேரத்திலே, பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே ஒரு சில கருத்துகளை நான் இங்கே கருக்கமாக கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். புத்தாயிரம் ஆண்டினுடைய முதலாவது கூட்டத் தொடரிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த இந்த நேரத்திலே, முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையிலே வான்புகழ் வள்ளுவனுக்கு வானுயர சிலை அமைத்து, தமிழகம் மட்டுமல்ல, உலகத்திலே தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழர்களுக்கெல்லாம் காவலராக வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதைப்போல, வரக்கூடிய 24 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கக் கூடிய நிதிநிலை அறிக்கைக்கு முன்னோட்டமாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைக்கூறி வரவேற்று, இங்கே நம்முடைய



முதலமைச்சர் அவர்களைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே ஒரு வேந்தர் என்பவர் எப்படி இருப்பார் என்பதற்கு இலக்கணமாக அய்யன் வள்ளுவர் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

ஆகவே, கொடை, அருள், நேர்மையான ஆட்சி, தளர்ந்த குடிகளைப் பேணுதல் ஆகிய நான்கும் உடையவர்தான் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அரசர்களுக்கெல்லாம் ஒளிவிளக்கு என்று அய்யன் வள்ளுவர் அவர்கள் அழகாகச் சொல்லியதற்கேற்ப சில தினங்களுக்கு முன்பு நாட்டிலே நடைபெற்ற 3 சட்டப் பேரவை தொகுதிகளினுடைய இடைத் தேர்தல்களிலும் டாக்டர் கலைஞர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி நல்லாட்சிக்கு நாட்டு மக்கள் அளித்த நற்சான்று என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்படி நல்ல உள்ளம் படைத்தவர்கள் வாழ்த்தக்கூடிய அதே நேரத்திலே நாட்டு நலனைக் கருதி இந்த நாட்டிலே வாழக்கூடியவர்கள் எல்லோரும் பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டும் என்று அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.

இதுவரையிலே தமிழ்நாட்டிலே மாநில உரிமைகள் வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியது வரவேற்கக்கூடிய வகையிலே இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பதை மனமாரப் பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம். மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற தத்துவம் வளரக்கூடிய வகையிலே மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்று சொல்லி தமிழகத்திலே ஆரம்ப காலத்திலேயிருந்து ஓங்கி வந்த குரல் இப்போது நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு வந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரையிலே இதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நெய்வேலியிலே நிலக்கரியை வெட்டி எடுக்கிறார்கள். அங்கே வெட்டி எடுத்த நிலக்கரி நம்முடைய மண்ணிலே இருந்தாலும்கூட மத்திய அரசிடம் கூடுதலாக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலை இருக்கிறது. அதைப்போலவே, நாம் வளர்த்து ஆளாக்கிய அல்லது மிகப் பெரிய மரமாக வளர்ந்த சந்தன மரத்தை வெட்டி விற்க வேண்டும் என்று சொன்னாலும்கூட மத்திய அரசின் அனுமதி வாங்க வேண்டிய நிலையெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. நல்லாட்சி மத்தியிலேயும்,

நாட்டு மக்கள் கருதிய கலைஞர் ஆட்சி தமிழகத்திலேயும் இருக்கக்கூடிய இந்த நேரத்திலே மாநில அரசுக்குக் கூடுதலாக அதிகாரம் பெற வேண்டுமென்று வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை மனதார வரவேற்கிறோம்.

அதைப்போலவே இன்று தமிழ்மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்ற கலைஞர் அவர்களுடைய அறைகூவலுக்கு வெற்றி கிட்டிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் டெல்லி மாநகரத்திலே ஒரு மாநாட்டை நடத்தினார்கள். அதிலே, மத்திய அமைச்சர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்ட நேரத்திலே, தமிழ் மொழி ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மொழிகளும் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும் என்று சொல்லி இந்தியாவில் இருக்கக்கூடிய 18 மொழிக்காரர்களுக்கும் அழைப்பிதழை அனுப்பி மாநாட்டை நடத்தினார்கள். அடுத்த நாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களுடைய செய்தியாக "தமிழ் ஆட்சிமொழி ஆக்கப்படும், பிரதமர் வாக்குறுதி" என்று சொல்லி ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆகவே, அதற்கெல்லாம் வெற்றிச் சிகரமாக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நேரத்திலே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மனமார வரவேற்கிறேன்.

அடித்தட்டு மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக் கூடிய ரேஷன் அரிசிக்கு விலை உயர்த்தாததை நல்லுள்ளம் கொண்டவர்கள் எல்லோரும் பாராட்டுவார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லா நிலைகளிலும் நம்முடைய நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன்படக்கூடிய மின் உற்பத்திக்காக பல்வேறு திட்டங்களை வழங்கியிருப்பதை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

அதைப் போலவே, 'வருமுன் காப்போம்' என்ற திட்டம். இந்த நாட்டிலே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதைத் தொடரக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்தை வழங்கிய நம்முடைய தமிழக அரசுக்கும், கலைஞர் அவர்களுக்கும் பாராட்டுதலைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுவரையிலே தமிழகத்தின் வரலாறே கண்டிராத வகையிலே விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைக்க வேண்டும் என்ற



நோக்கத்தையும் நுகர்வோருக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்ற அரிய சிந்தனையையும் மனதிலே கொண்டு இப்போது உழவர் சந்தையை வழங்கியிருக்கிறார்கள். அதை மனதார வரவேற்கிறோம். இதை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மக்களும் பாராட்டுகிறார்கள். அதே நேரத்திலே முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இப்போது, காய்கறிகளுக்கு, மலர்களுக்கு, கனிகளுக்கெல்லாம் இந்த விலை கிடைத்திருக்கிறது. இன்னும் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல், சோளம், கம்பு, பருப்பு போன்ற எல்லாப் பொருட்களுக்கும் நியாயமான விலை கிடைக்கக்கூடிய வகையிலே அதே நேரத்திலே, நுகர்வோருக்கு கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய வகையிலே மற்றவர்கள் எல்லாம் இந்த விலை இருக்கிறது என்று சொல்லி, பாராட்டக்கூடிய வகையிலே விவசாயிகளுடைய மற்றைய அனைத்து உற்பத்திப் பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்யக்கூடிய வகையிலே ஒரு திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்வோம் என்று சொன்னால், இந்த ஆண்டிலே இன்ன மாதத்திலிருந்து இன்ன மாதம் வரையில், பொன்னி நெல் விலை இவ்வளவு, பொன்னி அரிசி ஒரு கிலோ இவ்வளவு விலை, துவரம் பருப்பு விலை இவ்வளவு என்று நிர்ணயிக்கக்கூடிய நிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்குவார்கள் என்று சொன்னால், நாட்டிலே விவசாயிகள் பயனடைவார்கள். கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கிறது என்று சொல்லி, அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைவார்கள். அதைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே இதை நான் மனதார வரவேற்கிறேன்.

பிற்பகல் 1-05

இந்த நாட்டிலே மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் எப்போது திரும்பி வருவார்கள் என்றெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, அவர்கள் பிடிக்கக்கூடிய மீன்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. இடைத் தரகர்கள் ஏமாற்றிவிடுகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** எல்லோருக்கும் 15,20 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். சீக்கிரம் முடித்துவிடுகிறேன். ஆகவே மீனவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கக்கூடிய வகையிலே மீனவர் சந்தையை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நாடு முழுவதும் இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர் சங்கங்களில் விவசாயிகளுக்கு பால் பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை என்ற ஒரு பெரிய குறை இருக்கிறது. அதேநேரத்திலே பாலிலே இருக்கக்கூடிய கொழுப்புச்சத்தை எல்லா நிலைகளிலும் குறைத்து மாதக் கடைசியில் பணம் பட்டுவாடா செய்கின்ற நேரத்திலே எதிர்பார்த்த அளவு இல்லை என்ற ஏக்கம் இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கடந்த கால ஆட்சியிலே இடைநிலை ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் எவ்வளவு அவலப்பட்டார்கள் என்பதையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் ஒரு குழுவை அமைத்தார்கள். நல்ல நோக்கத்தோடு அந்தக் குழுவினுடைய நடைமுறை நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினால் அந்த ஏழை எளிய மாணவர்கள் மீண்டும் வேலைவாய்ப்புப் பெற ஆக்கபூர்வமான காரியங்களை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இப்போது வேலையில்லா பட்டதாரி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கல்வியின் தரம் மேலோங்க வேண்டுமென்று எல்லோரும் எதிர்பார்க்கிறோம். அந்த வகையிலே ஆரம்பப் பள்ளிகளிலே இடைநிலை ஆசிரியர்களைக் கூடுதலாக நியமனம் செய்து, 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு வரையிலே அங்கே பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, மிக முக்கியமான பிரச்சினை. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய இஸ்லாமியர் முதலாக சிறுபான்மை மக்களுடைய பாதுகாவலர் என்று சொல்லக் கூடியவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்களும் என்பதை நாட்டு மக்கள் எல்லாம் அறிந்திருக்கிறார்கள். ஆகவே சிறுபான்மை மக்களுடைய காவலர் என்று சொல்லக்கூடிய நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் கேரள மாநிலத்திலே இருப்பதைப்போல எப்படியாவது கருணை உள்ளத்தோடு அந்த இஸ்லாமியப் பெருமக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு, கல்வியிலும்,



வேலைவாய்ப்பிலும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொல்கின்ற நேரத்திலே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவீதம் வழங்கி பெருமை சேர்த்திருக்கிறீர்கள். அதிலே நூற்றுக்கு 20 இடம் என்று சொன்னால், 10-க்கு 2 இடம் வர வேண்டும். ஆனால் இப்போது 10-க்கு 2 அல்ல, ஒன்று தான் இருக்கிறது. அதையும் நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இதுவரையிலும் மக்கட்தொகைக் கணக்கெடுப்பிலே ஜாதிவாரி கணக்கெடுப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டிலேகூட மண்டல் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதற்குண்டான அறிக்கைகூட இங்கே இருக்கிறது. படித்துக் காட்டுவதற்கு காலதாமதம் ஆகும். சட்டநாதன் கமிஷனிலேயிருந்து, மண்டல் கமிஷனிலேயிருந்து, அம்பாசங்கர் கமிஷனிலேயிருந்து எல்லா கமிஷன்களும் ஜாதிவாரிக் கணக்கெடுக்க வேண்டும் என்று சொல்கிறது. நம்முடைய தமிழகத்தினுடைய கவர்னராக அலெக்சாண்டர் அவர்கள் இருந்த நேரத்திலே, வெங்கடகிருஷ்ணன் கமிஷன் அமைத்தார்கள். அவர்கள் கூட ஜாதிவாரி கணக்கெடுக்க வேண்டுமென்றுசொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்படி காலம் காலமாக ஜாதிவாரிக் கணக்கெடுக்க வேண்டுமென்ற நிலை பற்றி கமிஷன்களாலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா ஜாதிச் சங்கங்களும், எல்லாச் சமுதாய மக்களுடைய கணக்கெடுப்பையும் எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கக்கூடிய இந்த நேரத்திலே மத்திய அரசு ஜாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்க வேண்டுமென்று சொல்லி, கூட்டணியிலே இருக்கின்ற காரணத்தினாலே நாமும் வலியுறுத்துவோம். தமிழக அரசு சார்பிலே இந்த மாமன்றமும் வலியுறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரமாகிவிட்டது. சுருக்கமாக உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 1-10

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து, எங்களுடைய தருமபுரி மாவட்டம் என்பது மிகப் பெரிய மிகவும் பின்தங்கிய மாவட்டம், வறட்சியான மாவட்டம். மாவட்டம் முழுவதுமுள்ள தண்ணீரில் Flouride என்னும் நச்சுத் தன்மை இருக்கிறது. இது நீண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பலமுறை காலக் கோரிக்கை. அந்த மாவட்டத்தின் அவலநிலையைப் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

போக்கிட நடப்பாண்டிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக அமலாக்க வேண்டும். மாவட்டம் முழுமைக்கும் நிரந்தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதியாதாரம் குறைவாக இருந்தாலும்கூட முதல் கட்டமாக பாதி அளவாவது இந்த ஆண்டிலே செய்து, தொடர்ந்து அடுத்த ஆண்டிலேயாவது நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. இங்கே பாப்பாரப்பட்டி என்ற நகரத்தைச் சுற்றி 16 ஏரிகள் இருக்கின்றன. அந்த வரத்து வாய்க்கால் எல்லாம் வேறு திசையிலே மாற்றிவிடப்பட்ட காரணத்தினாலே அந்த ஏரிகளுக்குக் கடுமையான மழைக் காலத்திலேகூட நீர் வரத்து இல்லை. இங்கே Estimate எல்லாம் போடப்பட்டு நிலுவையிலே இருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சப்பள்ளி கால்வாய் திட்டத்தை நீட்டித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வறட்சி தொகுதியாக இருக்கின்றது. இங்கே மத்தளப்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் என்ற அணைக்கட்டுத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலேயிருந்து நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் தமிழ்நாட்டினுடைய விவசாயிகளுடைய நீண்ட நாளைய கோரிக்கையான கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்ற கோரிக்கையை நடப்பு ஆண்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சி செய்யக்கூடிய இந்த நேரத்திலே ஆளுநர் உரை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படக்கூடிய நல்ல உரை, நாட்டு மக்கள் ஆதரிக்க வேண்டிய உரை என்று சொல்லி நாங்களும் ஆதரித்து அமர்கிறோம். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** சட்டப் பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரை பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக என்னுடைய கருத்துகளை இந்த நேரத்திலே இந்த அவையிலே முன் வைக்க விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையிலே வார்த்தை அலங்காரம் இருக்கிறதே தவிர, அந்த வார்த்தை அலங்காரங்கள்கூட இந்த அரசினுடைய சுயவிளம்பரமாக இருக்கிறதே தவிர, மக்களுக்கான கொள்கைத் திட்டங்களும் மக்களுடைய நலனுக்கான கொள்கை அறிவிப்புகளும், திட்டங்களும் இந்த ஆளுநர் உரையில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆளுநர் உரையில் சில உண்மைக்கு மாறான தகவல்கள் கூடச் சொல்லப்பட்டிருக்கின்றன. நமது வள்ளுவர் சிலை நிறுவியதை இந்த ஆட்சியினுடைய சாதனையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த வள்ளுவர் சிலை உருவாவதற்கு கருத்துரு உருவாக்கி அதற்கு அடிக்கல் நாட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை— நன்றியைப் பற்றிச் சொன்ன வள்ளுவர் சிலையைத் திறந்த நேரத்திலே நன்றியை— மறந்து அவருடைய பெருமைகளை அந்தச் சிலை உருவாவதற்கு அவர் எடுத்த முயற்சிகளை இந்த அரசு இந்த உரையிலே சொல்லவில்லை. அதேபோல அந்தக் கல்வெட்டைக்கூட அகற்றி இருக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் நாங்கள் பார்த்திருக்கின்றோம். உள்ளபடியே எம்.ஜி.ஆருடைய இந்தப் பெருமை எம்.ஜி.ஆருக்கு சிறிதளவும் சென்றுவிடக்கூடாது என்ற குறுகிய நோக்கத்தோடு இது மறைக்கப்பட்டு இருக்கிறது.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இல்லாத கல்வெட்டை அகற்றுவது முன்பிருந்த ஆட்சிகளின் வழக்கம், இல்லாத கல்வெட்டைக் கூட வைப்பது இந்த ஆட்சியினுடைய பழக்கம். வள்ளுவர் சிலையில் எம்.ஜி.ஆருடைய பெயர் உள்ள கல்வெட்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதுகூட பொதுமக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பு வந்ததற்குப் பின்புதான் இந்த பெருந்தன்மை அவர்களிடம் வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "19 மொழிகளையும் இந்திய தேசிய மொழிகளாக ஆக்க வேண்டும் என்று இந்த அரசு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது" என்று. இந்த மாநில அரசு மக்கள் விரோதக் கொள்கைகளை மத்திய அரசு கொண்டு வரும்போது மிக மென்மையாக நடந்து கொள்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் நம்முடைய நீண்ட நாள் திராவிட இயக்கத்தினுடைய அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று தமிழ் உட்பட 19 தேசிய

மொழிகளையும் மத்திய அரசினுடைய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்பது. ஆனால், அந்த அடிப்படைக் கொள்கையிலே இன்னும் நம்பிக்கை தெரிவித்துக்கொண்டுதான் இருக்கிறார்களே தவிர அதை வன்மையாக, கடுமையாகச் சொல்லவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே மத்திய அரசோடு நாங்கள் பங்கெடுத்திருந்தபோது National Agenda என்று சொல்லக்கூடிய அந்த தேசிய செயல்திட்டத்திலே தமிழை உள்ளடக்கிய 19 தேசிய மொழிகளையும் நமது இந்திய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்திச் சேர்த்தோம். அப்படிச் சேர்த்தால்தான் நாங்கள் ஆதரவு தரமுடியும் என்றுகூட ஒரு Condition போட்டு அந்த அளவிற்கு தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதிலே நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் இப்போது இந்த ஆட்சிக் காலத்தில் வெறும் நம்பிக்கையை மட்டும் தெரிவித்திருக்கிறார்கள். தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவார்கள் என்று நம்புகிறோம் என்று சொல்லிவிட்டு அதைப்பற்றிய எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

பிற்பகல் 1-15

அடுத்தபடியாக இங்கே ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிற பல்வேறு திட்டங்களை, சுய விளம்பரத்திற்காகச் செய்திருக்கின்ற திட்டங்களைப் பற்றியும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, இங்கே உழவர் சந்தையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த உழவர் சந்தை என்பது உள்ளபடியே இவர்களுடைய சொந்தத் திட்டம் என்று நான் கருதவில்லை. இது ஆந்திராவிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. 'ரயத்து பஜார்' என்று ஆந்திராவிலே சந்திரபாபு நாயுடு அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் இது. அதைப்போல நமக்கு நாமே திட்டமும் 'ஜென்மபூமி' என்று ஆந்திராவிலே அவர் நடத்தி வருகின்ற அந்தத் திட்டம்தான். அந்த இரண்டு திட்டங்களையும் அப்படியே அப்பட்டமாகக் காப்பியடித்து இவர்களுடைய சொந்தத் திட்டங்கள்போல் இங்கு மாயாஜால வித்தைகளுடன் அவற்றை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலேகூட மக்களுக்குப் பயன்படுத்துகின்ற விஷயங்கள் இருக்கின்றனவா என்று சொன்னால் உள்ளபடியே இல்லை என்றுதான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உழவர் சந்தையைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். உழவர்கள், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளுக்கும், பழங்களுக்கும் நியாய விலை கிடைக்க வேண்டும், உரிய



விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சந்தையை ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அதே விவசாயிகள்தான் பால் உற்பத்தியாளர்கள். பால் உற்பத்தி செய்வதும் விவசாயிகள்தான். விவசாயிகள் தங்களுடைய துணைத் தொழிலாகக் கொண்டிருப்பது பால் உற்பத்திதான். அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பாலுக்கு உரிய விலையும் கிடைக்கவில்லை. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை முழுமையாகக் கொள்முதலும் செய்வதில்லை. 50 இலட்சம் லிட்டர்களுக்கு மேற்பட்ட பாலுக்கான பணம் இன்னும் பால் உற்பத்தியாளர்களுக்கு பட்டுவாடா செய்யப்படவில்லை. அவர்கள் உற்பத்தி செய்த பொருளைக் கொள்முதல் செய்வதற்கு மறுப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்குப் பணமும் வழங்காமல், ஏற்கெனவே உற்பத்தி செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளை நசுக்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசு ஏதோ புதியதாக விவசாயிகளுக்கு உதவி செய்வதைப்போல இப்போது உழவர் சந்தையைக் கொண்டு வந்திருக்கின்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** 5 நிமிடங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லோருக்கும் கொடுப்பதுபோல 10 நிமிடங்கள்...

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இன்னும் ஒரேயொரு நிமிடம்தான்.

**திரு. இரா. விசுவநாதன்:** எல்லோருக்கும் கொடுக்கும் 10 நிமிடத்தை எனக்கும் கொடுங்கள். அதேபோல, ஏற்கெனவே விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிக்காத இந்த அரசு, இப்போது புதியதாக அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிப்பதாக ஒரு போலித் திட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளை ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்கு வழங்கப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பே அறிவித்ததை ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியும் அதை இன்னும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆகவே ஏற்கெனவே இருக்கின்ற விவசாயிகளுடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்க்காமல் புதியதாக இப்போது விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதைப்போல

ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த உழவர் சந்தைத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதேபோல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு பட்ஜெட்டிலே நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நமக்கு நாமே திட்டத்திற்குக்கூட 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு பட்ஜெட்டிலே எந்த நிதியொதுக்கீடும் செய்யவில்லை. மாறாக மற்ற துறைகளிலே இருக்கின்ற பணம் இங்கே ஒருங்கிணைக்கப்படுகிறது. அதற்கென்று தனி நிதியொதுக்கீடு செய்யப்படவில்லை. பல ஊராட்சிகளுக்குச் செல்ல வேண்டிய தொகைகளைக் குறைத்து, மற்ற கிராமங்களினுடைய தேவைகளையெல்லாம் குறைத்து மற்ற கிராமங்கள் பாதிக்கக்கூடிய வண்ணம் அந்த நிதிகளையெல்லாம் ஒரே கிராமத்திற்குக் கொண்டு வந்து அந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தனியாக நிதியொதுக்கீடு செய்தால் ஆட்சேபணை இல்லை. ஆனால், ஏற்கெனவே பல ஊராட்சிகள், பல கிராமங்கள் அனுபவித்து வருகின்ற அந்த நிதியினை அந்த கிராமங்களுக்கு என்றிருந்த—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்று மறுபடியும் இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக ஒதுக்கப்பட்டு — அதிகமான தொகை தேவைப்படுமானால், — ஏற்கெனவே அந்தக் கிராமத்திற்குச் செய்ய வேண்டி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்குரிய தொகையோடு இணைத்துச் செய்யப்படுகிறதே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அதற்கு நிதி ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். நான் கூட உள்ளாட்சி அமைப்பிலே மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் பொறுப்பு வகிப்பதால் நடைமுறையிலே நான் பார்க்கின்ற அளவிலே, எங்களுக்கு வருகின்ற — மாவட்ட ஊராட்சிகளுக்கு வருகின்ற நிதி மற்றும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருகின்ற — நிதி, உள்ளாட்சி அமைப்பிலே வருகின்ற நிதியையெல்லாம் ஒருங்கிணைத்து ஒவ்வொரு துறைக்கும் வருகின்ற நிதியைக் குறைத்து அந்தப் பணத்தை இங்கு பல்வேறு திட்டங்களுக்காக



அமல்படுத்துகிறார்கள் என்பதை நடைமுறையிலே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் சொல்கிறேன்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** முடியுங்கள் 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. விசுவநாதன்:** இறுதியாக ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு ஆளுநர் உரையிலே பல்வேறு சாதனைகளைச் சொல்லியிருக்கிறது. ஒரேயொரு சாதனையை மட்டும் இந்த அரசு, தான் செய்த சாதனையாகச் சொல்ல மறந்து விட்டது என்று நான் கருதுகிறேன். அவையடக்கத்தின் காரணமாக அதை விட்டுவிட்டார்களோ என்று நினைத்து அதை நான் இந்த நேரத்திலே சொல்கிறேன். அதையும் சேர்த்திருக்கலாம். ஏன் என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனை**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள். இது அவைக்குறிப்பிலே ஏறாது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இது தவறான செய்தி. அவைக்குறிப்பிலே ஏறாது.

**திரு. இரா. விசுவநாதன்:** இது தவறான செய்தி அல்ல; உண்மையான செய்தி. சாதனைகளிலே இதுவும் ஒன்று.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு சி.டி. தண்டபாணி):** 10 நிமிடங்கள் முடிந்து விட்டன. நீங்கள் அடுத்தவாய்ப்பிலே பேசலாம். அடுத்து, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையிலே, கம்ப்யூட்டர் மயமாகியிருக்கின்றது என்றும் செல்லுலார் போன் விலை குறைக்கப்பட்டிருக்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சாதாரண விவசாயிகளுக்கு எந்தச் சலுகையும் இதிலே அளிக்கப்படவில்லை. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக 4 இலட்சம் விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும் என்பதை இந்த அரசு தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அத்தோடு என்னுடைய ராதாபுரம் தொகுதியிலே டானிடா திட்டத்தின் மூலம் ஓர் அலுவலகம் இயங்கி 4,800 ஹெக்டேர் பகுதிக்கு அது பயன்பட்டுவந்தது. இந்த ஆண்டோடு அதை நிறுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை மேலும் ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 4 ஆயிரம் ஹெக்டேர் நிலம் இருக்கின்றது. அதற்கு தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுமார் 1 கோடி ரூபாய்க்குள்தான் செலவு ஆண்டுதோறும் ஆகிறது. அதை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடலிலே மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்கு ரேஷன் முறையிலே நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும். கேரளாவிலே ஒவ்வொரு மாதத்திற்கும் 400 லிட்டர் மண்ணெண்ணெய் மீன் பிடிக்கச் செல்கின்றவர்களுக்கு ரேஷனிலே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே தமிழகத்திலேயும் மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பாலை 7 ரூபாய் 50 காசுக்குக் கொள்முதல் செய்து, 15 ரூபாய்க்கு விற்கின்ற ஆவின் நிறுவனம் 13 ரூபாய் விலைக்காவது அவர்களுடைய பாலைக் கொள்முதல் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு தினங்களுக்கு முன்னால் 29 ஆம் தேதி நம்முடைய திருநெல்வேலி மாநகராட்சிக் கூட்டம் நடைபெற்றபோது காந்தி சிலை அருகில் சிறுநீர்க் கழிப்பிடம் ஒன்று கட்டுவதற்காக விவாதம் நடைபெற்ற போது நெல்லை மாநகராட்சியினுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் சுடலைக்கண்ணு அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது அவருக்கும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மரியாதைக்குரிய அருணாசல மூப்பனார் அவர்களுக்கும் ஒருமையில் பேசியபோது வாக்குவாதம் ஏற்பட்டபோது துணை மேயர் அவர்கள் எங்களுடைய கட்சி உறுப்பினர் சுடலைக்கண்ணுவை ஓட ஓட, விரட்டி விரட்டியடித்திருக்கிறார்கள். அதற்குப் புகார் மனு கமிஷனரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சன் டி.வி.-யிலே மிகத் தெளிவாக, துணை மேயர் அவர்கள் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்



சுடலைக்கண்ணுவை விரட்டி, விரட்டி அடித்ததைக் காட்டிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரை சுடலைக்கண்ணு அடித்துக்கொண்டிருக்கிறார் என்று தவறான செய்தியையும் அதிலே கூறியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய சன் டி.வி. கூறியிருப்பதைப் போன்று யார் அடித்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மறுநாள் 1-3-2000 அன்று எங்களுடைய மர்மன்ற உறுப்பினர் வைகுண்டராஜ் அவர்களுடைய கடைக்கு இரவு சுமார் 11-00 மணியளவிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேர் பயங்கரமான ஆயுதங்களோடு சென்று, வைகுண்டராஜ் எங்கே என்று மிரட்டி, கொலை செய்துவிடுவதாக வெருட்டிச் சென்றிருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நீங்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

நெல்லை மாநகராட்சியில், கடந்த ஆண்டு Copper Choke 78 ரூபாய் ரேட்டில் வாங்குவதாக ஒப்பந்தம் செய்துவிட்டு, அலுமினிய Choke 28 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். அதில் பல லட்சம் ரூபாய் ஊழல் நடைபெற்று இருக்கிறது. அந்த Choke வாங்கியிருப்பது நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய உறவினரிடமிருந்து என்று சொல்கிறார்கள். அதை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** ஏனோ தானோ என்று எந்தக் குற்றச்சாட்டையும் இந்த அவையில் குறிப்பிடக்கூடாது. இந்தக் குற்றச்சாட்டு பற்றி, அவைத் தலைவரிடத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு, ஆதாரத்தோடு, என்னுடைய உறவினர் யார், எங்கே கடை வைத்திருக்கிறார், எப்போது இதை வாங்கினார்கள் என்ற விவரத்தை அறிவித்தால், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** எந்தக் குற்றச்சாட்டைச் சொல்வதானாலும், ஒன்று, சபைத் தலைவருக்கு நீங்கள் முன்கூட்டியே கொடுத்துவிட்டுத்தான் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும். இரண்டாவது .....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இன்னொரு விளக்கத்தையும் தெரிவிக்கக் [2000 மார்ச் 3
கடமைப்பட்டிருக்கிறேன். எந்தச் சொந்தக்காரர் கடையும் இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை. அவருக்குத் தெரிந்து இருந்தால் அதை எனக்குச்
சொன்னால், எந்தச் சொந்தக்காரர் என்று பிறகு தெரிந்துகொள்ளலாம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சரியான
விளக்கங்கள் இருக்கின்றன. உங்களிடம் நான் காண்பிக்கிறேன் என்று
கூறிக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு
சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்ட
குழுவினுடைய அறிக்கை அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. ஆசிரியர்
பயிற்சி முடித்து, பாதிக்கப்பட்ட அந்த மாணவ, மாணவிகளுடைய
நலனுக்காக, அந்த அறிக்கையை ஏற்று அரசு உடனடியாக வெளியிட
வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதுபோன்று, பட்டதாரி ஆசிரியர்களுக்கு—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** விரைவிலே இந்த அவையிலேயே
அந்த அறிக்கை வைக்கப்பட இருக்கிறது. அதிலே முக்கியமாக அவர்கள்
சொல்லியிருப்பதை (குறுக்கீடு) இப்போதே சொல்லிவிடுகிறேன். Supreme
Court-க்குப் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த
Stand-ல் நாம் Correct ஆக இருக்க வேண்டுமென்றால், நாம் Supreme
Court-க்குப் போகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு அதை
ஏற்றுக்கொள்கிறது.

**திரு. மு. அப்பாவு:** முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.
உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் 29 சதவீதத்தை
அறிவிக்காத நிலையில்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** ஒன்றுக்கொன்று
சம்பந்தமில்லாமல், தொடர்பில்லாமல் பேசக்கூடாது. எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் கொடுத்த அறிக்கை; ஏற்கெனவே கடந்த கால
ஆட்சியிலே முறைகேடாக அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகளில் படித்த
மாணவர்கள், படித்ததாகச் சொல்லப்பட்ட மாணவர்கள், அவர்களிலே
மறுபடியும் சிலபேர் தேர்வு எழுதியவர்கள், ஆகியவர்களுக்கு என்ன
செய்வது என்பது பற்றியதுதான் அந்தக் குழுவின் அறிக்கை. அந்தக் குழு
சொன்ன அடிப்படையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தடையாகின்ற
காரணத்தால் மறுபடியும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற
வேண்டுமென்ற ஒரு நோக்கத்தில், அந்த ஆலோசனையில், உச்ச



நீதிமன்றத்தில் மறு ஆய்வுக்கு விண்ணப்பிப்பதற்கு நம்முடைய அரசு
சார்பாக முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
அதற்கும் 29 விழுக்காட்டுக்கும் தொடர்பு இல்லை. ஒன்றோடொன்றை
இணைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அறிக்கையைப்
பேரவையில் வைப்பதற்கு முன்பே, முதலமைச்சர் அவர்கள் 'leak'
செய்திருக்கிறாரே, அப்படிச் செய்யலாமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. அழகிரி சொன்ன
வார்த்தையை நான் மீண்டும் பயன்படுத்த விரும்பவில்லை. அந்தப் பழக்கம்
எனக்குக் கிடையாது.

**திரு. மு. அப்பாவு:** அதோடு பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலைப்
பணியிடத்தில் பணியாற்றி வந்ததைப் போன்று, தொடர்ந்து
பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கவேண்டும். 1991 ஆம் ஆண்டுக்கு
முன்னால் ஆரம்பிக்கப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்
பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 8 பணியிடங்கள் என்று
இருப்பதைத் தொடர்ந்து—8 பணியிடங்களை இந்த அரசு
சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு வழங்கியதைப் போன்று—தனியார்
பள்ளிகளுக்கும் உடனடியாக வழங்க வேண்டும். பெருந்தலைவர்
காமராஜருடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போன்று, இருபது
மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை மாற்றாமல்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, திரு. அப்பாவு அவர்கள் கல்வித் துறையைப் பற்றித்
தெரிந்தவர்கள். எந்தக் காலத்திலும் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்
என்று இந்த நாட்டிலே எங்கேயும் இல்லை. 20 மாணவர்கள்கூட இல்லை,
10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றுகூட சில இடத்தில் இருந்தார்கள்.
ஆனால், விகிதாச்சாரக் கணக்கில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்
என்பது எந்தக் காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
கல்வியமைச்சராக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இருந்த காலத்தில்கூட
அது செயல்படவில்லை.

**திரு. மு. அப்பாவு:** ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் 20 மாணவர்களுக்கு
மேல் 35 மாணவர்கள் இருந்தால், அங்கே இரண்டு பிரிவுகள்
ஏற்படுத்துவதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்......

பிற்பகல் 1-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** 20 மாணவர்களுக்கு மேல் முப்பத்தைந்தோ, நாற்பதோ, நாற்பத்தைந்தோ மாணவர்கள் இருந்து 5 வகுப்புகள் நடத்த வேண்டியிருந்தால் இரண்டாவது ஆசிரியர் தந்தார்கள். அதே 25, 24 மாணவர்கள் இருக்கிறபோது ஓர் ஆசிரியர்தான் இருந்தார். மொத்தம் 100 மாணவர்கள் படிக்கிற இடத்திலே 5 வகுப்புகளுக்கு மூன்று ஆசிரியர்கள், இரண்டு ஆசிரியர்கள்தான் இருந்தார்கள். ஓராசிரியர் பள்ளி மட்டும் ஏறத்தாழ 1000 பள்ளிகள் இருந்தன. அவை இரண்டாசிரியர் பள்ளியாக்கப்பட்டு, இப்போது மூன்றாசிரியர் பள்ளியாக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து. ஆகவே, எந்த இடத்திலேயும் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரக் கணக்கில் செயல்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிந்திருந்தும், அதற்கு மாறாகப் பேசுவது நல்லதல்ல.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழையெளிய மக்களுக்கு 20 கிலோ அரிசி வழங்குவதில் நிறையப் பேர்களுக்கு.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** நேரமாகிவிட்டது. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** முடித்து விடுகிறேன். 20 கிலோ அரிசி வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், தமிழகத்திலே கிட்டத்தட்ட 20 இலட்சம் குடும்பங்களுக்கு இதுவரை குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை. என்னுடைய சட்டமன்றத் தொகுதியில்கூட, 10,000 குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் இங்கே பொது விநியோகத்தில் ஏழைகளுக்கு வழங்கப்படுகின்ற அரிசியானது கண்டெய்னர்கள் மூலம் ஆயிரக்கணக்கான டன்கள் அனுப்பப்படுகின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சிடி. தண்டபாணி):** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (6-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும்.

(பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. திரு. டி. நித்தியானந்தம், இணை ஆணையர் (சீராய்வு மனு), சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை-5 அவர்களை சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு (முதன்மை அமர்வு) தீர்ப்பாயத்தில் துறைப் பிரதிநிதியாக நியமிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 31-5-1999-ஆம் நாளிட்ட 533-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் தலைவரை இடைக் கேள்விகள் கேட்பது) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-3-1999-ஆம் நாளிட்ட 60 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட திட்டமிடல் குழுக் கூட்டம் நடத்துதல், குறைவெண் வரம்பு மற்றும் அலுவல் நடைமுறைகள் நடத்துவதற்கான விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 8-6-1999-ஆம் நாளிட்ட 100-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமங்கள், அனுமதிகள் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் மீது ஆணைகள் அனுப்புவதற்கான காலவரையறை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 138-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்குப் பொதுவான அலுவலர்

[2000 மார்ச் 3

அல்லது பணியாளர் நியமித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக
வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 139-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியக்
குழுத் தலைவர் அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவர் அலுவல்கள்
மாற்றுதல் அல்லது ஒப்படைப்பு செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து
ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 140-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மேல்முறையீடுகளுக்கான
கால வரையறை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின்
21-7-1999-ஆம் நாளிட்ட 141-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது.]

8. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கட்டடங்களுக்கு
இலக்கமிடுவதற்கான அதிகாரம்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக
வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 143-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994--ஆம் ஆண்டு
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (செயலில்
இருக்கிற ஒப்பந்தங்களில் அக்கறையுடைய ஊராட்சியின் தலைவர் மற்றும்
உறுப்பினர்களின் தகுதியின்மையை அகற்றுவது) விதிகள் வகுப்பது குறித்து
ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 144-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



**2000 மார்ச் 3]**

10. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில்
திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம்
நாளிட்ட 146-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒரு கிராமத்திலிருந்து
யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குதல் அல்லது யாதொரு உள்ளூர்
பகுதியைச் சேர்த்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித்
துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 147-ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது.]

12. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நுழைவு மற்றும் ஆய்வு
செய்வதற்கான அதிகாரங்கள் பற்றிய வரையறைகள் மற்றும் கட்டுப்பாடு)
விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம்
நாளிட்ட 148-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மக்கள் தொகை
நிர்ணயம் செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின்
21-7-1999-ஆம் நாளிட்ட 149-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது.]

14. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிப்
பகுதிகளில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறையின்கீழ் வரும்
சாலை ஓரங்களில் போடும் பந்தல்கள் மற்றும் தற்காலிக
கட்டுமானங்களுக்கு உரிமம் வழங்குதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக
வளர்ச்சித் துறையின் 21-7-1999-ஆம் நாளிட்ட 150-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994-ஆம் ஆண்டு
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3)
பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

15. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (ஊராட்சிகள் [2000 மார்ச் 3
துணைச் சட்டங்கள் வகுத்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-8-1999ஆம் நாளிட்ட 177ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

16. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (ஊராட்சித் தலைவருடைய அலுவல்கள் மற்றொருவருக்கு மாற்றுதல் மற்றும் ஒப்படைத்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-8-1999ஆம் நாளிட்ட 178ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

17. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-8-1999ஆம் நாளிட்ட 179ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களது சொத்து மற்றும் கடன் பொறுப்புகள் பற்றிய விவரங்களை வெளியிடுதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-8-1999ஆம் நாளிட்ட 181ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களது சொத்து மற்றும் கடன் பொறுப்புகள் பற்றிய விவரங்களை வெளியிடுதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-8-1999ஆம் நாளிட்ட 183ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2000 மார்ச் 3]

20. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 11-8-1999ஆம் நாளிட்ட 181ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 27-7-1999ஆம் நாளிட்ட 177ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. கோயம்புத்தூர், திருவாளர்கள் வசந்தா மில்ஸ் லிமிடெட் 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியை 1-4-1997 முதல் மூன்றாண்டு காலத்திற்குத் தள்ளிவைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 5-10-1999ஆம் நாளிட்ட 212-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (தணிக்கையாளர்கள், ஆய்வு அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்களின் அதிகாரங்கள்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999ஆம் நாளிட்ட 142ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (கண்காட்சிகளையும், விழாக்களையும் வகைப்படுத்துதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 21-7-1999ஆம் நாளிட்ட 145ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (குறை வெண் மற்றும் கிராம ஊராட்சிகள் கூட்டம் நடத்துவதற்கான வழிமுறைகள்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 9-8-1999 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகளுக்கான குழுக்கள் அமைத்தல் மற்றும் குழுக்களுக்கான செயல்பாடுகள் குறித்து அதிகாரம் வழங்குதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 10-8-1999 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியக் குழு கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வருதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 28-9-1999 ஆம் நாளிட்ட 201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நாய்களுக்கு உரிமம் வழங்குதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 28-9-1999 ஆம் நாளிட்ட 202 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகளை உருவாக்குவது குறித்த அரசினுடைய அறிவிக்கையை எதிர்த்து அரசுக்கு மேல்முறையீடு செய்வதற்கான காலவரையறை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 28-9-1999 ஆம் நாளிட்ட 203 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



30. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (குத்தகைதாரர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையைத் தள்ளுபடி செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 28-9-1999 ஆம் நாளிட்ட 204 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சியின் நியமனக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-9-1999 ஆம் நாளிட்ட 207 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (கால்நடைகளை வெட்டுவதற்கான சில இடங்களைப் பயன்படுத்தக்கூடாதென தடுத்தல் அல்லது முறைப்படுத்துதல் மற்றும் கால்நடைகளை வெட்டுகிறவர்களுக்கு உரிமம் வழங்குதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 5-10-1999 ஆம் நாளிட்ட 212 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (இடுகாடுகள், சுடுகாடுகள் முதலியவற்றிற்காக ஏற்பாடு செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 5-10-1999 ஆம் நாளிட்ட 213 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (ஊராட்சிகள் குடிமராமத்து ஏற்பாட்டினை செயற்படுத்துவது பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும் ஊராட்சி கட்டணங்கள் விதித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 5-10-1999 ஆம் நாளிட்ட 214 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2000 மார்ச் 3

35. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (விளம்பரப் பலகைகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-10-1999 ஆம் நாளிட்ட 218 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1999) 15-10-1999 ஆம் தேதியிலிருந்து அமுலுக்கு வருவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14-10-1999 ஆம் நாளிட்ட 219 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம நிர்வாக அலுவலர்களிடம் கேட்கப்படக்கூடிய தகவல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-10-1999 ஆம் நாளிட்ட 220 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (உரிமம், அனுமதிகள் ஆகியவற்றின் படிவம் மற்றும் உள்ளடக்கம்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-10-1999 ஆம் நாளிட்ட 221 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

39. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (பாசன அலுவல்களை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிய ஒன்றிய மன்றங்களுக்கு மாற்றுவது) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-10-1999 ஆம் நாளிட்ட 222 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2000 மார்ச் 3]

40. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் வரவு-செலவு திட்டம் தயாரித்தல் மற்றும் ஒப்பளித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-10-1999 ஆம் நாளிட்ட 223 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (ஊராட்சியின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிலுவை பாக்கிகளை கொடுப்பது) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-10-1999 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 21-10-1999 ஆம் நாளிட்ட 219 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

43. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 10-11-1999 ஆம் நாளிட்ட 231 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

44. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை-II-ல் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 2-8-1999 ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம்

செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 28-7-1999 ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராயவகைகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 29-9-1999 ஆம் நாளிட்ட 203 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. யாதொரு வணிகர் negative திரைப்படச் சுருள்களை (முழு நீளத் திரைப்படங்கள்) பயன்படுத்துவதற்கான உரிமை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1986 ஆம் வருடம், ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1999 ஆம் வருடம், நவம்பர் மாதம் 11 ஆம் நாள் வரையிலான காலத்திற்குச் செலுத்த வேண்டிய வரித் தொகையைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 12-11-1999 ஆம் நாளிட்ட 235 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. Negative திரைப்படச் சுருள் (முழு நீளத் திரைப்படங்கள்) படங்களைப் பயன்படுத்தும் உரிமை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் எந்த ஒரு வணிகர் செலுத்தத்தக்க வரி வீதத்தை 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 12-11-1999 ஆம் நாளிட்ட 236 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

49. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 16-6-1999 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-ஏ(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



50. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 1-12-1999 ஆம் நாளிட்ட 249 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

51. சென்னை-90, பெசன்ட் நகரிலுள்ள திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நினைவு பொறுப்புக் கழகத்தின் ஆதரவுடன் நடத்தப்படுகிற திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை, சுவாமி சிவானந்தா நூற்றாண்டு அறக்கட்டளை மருத்துவமனைக்கு மருந்துகள், மருந்துப் பொருட்களை விற்பனை செய்வதன் பேரில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியில் 50 சதவீத வரியை குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 30-11-1999 ஆம் நாளிட்ட 245 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. காஞ்சிபுரம் மாவட்டம், மேல்மருவத்தூர் திருவாளர்கள் ஆதிபராசக்தி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சில மருத்துவச் சாதனங்கள், மருந்துப் பொருட்கள் விற்பனை செய்வதன் மூலம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வணிகர் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் ஐம்பது சதவீதம் குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 7-12-1999 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

54. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

55. 1998-99 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

56. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கையும் கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

57. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கையும் கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2000.)

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம் (தமிழ், ஆங்கிலம்.)

3. 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்.)

4. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

5. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

6. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

7. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)



## இணைப்பு-1

(337 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

Honourable Members of the Legislative Assembly,

I have great pleasure in addressing you at the commencement of the first session of the Tamil Nadu Legislative Assembly in the first year of the new millennium. I extend my warm greetings to all of you.

2. The unveiling of the gigantic, 133 feet high statue of Ayyan Thiruvalluvar at the Cape of Kanyakumari by our Chief Minister Kalaignar Karunanidhi, at the dawn of the new millennium, has enhanced the worldwide fame of the great philosopher and the author of the Tamil scripture Thirukkural. The teachings of Thiruvalluvar guide us like a beacon in striving further for safeguarding the people's well-being.

3. When the Constitution of India is reviewed, this Government will urge that it should provide greater autonomy with more powers for the States and a federal set-up at the Centre, in order to ensure that the unity, integrity and secularism of India are strengthened and firmly established and the rights of the minorities continue to be protected.

4. The language policy advocated by this Government is that all the official languages of the States must be made the official languages of the Central Government. I hope that the Constitution Review Commission will accept this view.

5. This Government will continue to urge the Central Government that, as a first step, Tamil, the most ancient in the family of Dravidian languages, and a distinguished language with a rich literary tradition and grammar be made one of the official languages of the Centre.

6. This is the right occasion for all of us to remember and acclaim the brave patriotism displayed by the Indian soldiers in the Kargil war. I feel proud to inform this august House that Tamil Nadu could contribute Rs. 50 crores to the National Defence Fund, thanks to the large heartedness of the people of Tamil Nadu who voluntarily came forward in large numbers to donate liberally to the Kargil Defence Personnel Relief

Fund. This Government has provided generous relief to the families of the soldiers who made the supreme sacrifice of their lives for the defence of the nation. These include an ex-gratia grant of Rs.5 lakhs, HIG Flats/ Houses worth Rs. 7 to 11 lakhs, employment in Government to a family member, reservation of seats in professional colleges and free education upto graduate level for their children.

7. Having displayed our patriotism by generously helping the brave soldiers of the Kargil War, we have also taken the lead in showing our goodwill in extending our helping hand to the people affected by natural calamities regardless of the State to which they belong. The people of Tamil Nadu showed their deep sympathy by donating Rs. 2.77 crores to the "Orissa Cyclone Relief Fund" set up for helping the people affected by the unprecedented cyclone that hit Orissa last year. This Government despatched milk powder worth rupees one crore, dhoties and sarees worth rupees three crores and other relief materials for providing immediate relief to the people affected by the cyclone. A team of doctors with the required medicines was sent to Orissa to participate directly in the relief activities undertaken by the Government of Orissa.

8. This Government is totally committed to the cherished goal of "Tamil everywhere and in every sphere", without prejudice to the welfare of the linguistic minorities. The Government has accepted the recommendations of the Justice Mohan Committee and has made it compulsory to have Tamil or the mother tongue as first language in all schools and as the medium of instruction for classes 1 to 5.

9. A "Tamil Sanga Palagai" (Tamil Academy) has been established on the 16th of January this year for promoting development of Tamil literature, for encouraging translation of Tamil literature into other languages and literature of other languages into Tamil and for giving "Kural Peedam Award" to accomplished eminent Tamil writers.

10. This Government has decided to establish an Urdu Academy in Tamil Nadu. A sum of rupees one crore has been recommended for this purpose. In the first phase, a sum of Rs.15 lakhs will be allocated.



11. The Eleventh Finance Commission constituted in 1998 has submitted its interim report to the Government of India recently and is expected to submit its final report before the end of June this year. When the Eleventh Finance Commission visited Chennai, this Government had urged the Commission to recommend devolution of additional funds from the Centre to progressive States like Tamil Nadu. We are hopeful that the Commission would have accepted our request and recommended increased devolution of funds to Tamil Nadu.

12. This Government continues to emphasise the devolution of 29% of gross tax receipts of the Central Government to the States. We expect the Central Government to remove the confusion that had arisen in the matter and pass the Constitutional amendment for this purpose during the current session of the Parliament.

13. This Government has continued to maintain its record of achieving the State Plan outlay. During 1998-99, the approved outlay of Rs.4,500 crores was fully achieved. This year again, despite resource constraints, we will achieve the approved Plan outlay of Rs.5250 crores. The Plan schemes will be implemented equally well with a larger outlay next year.

14. The Government gives the highest priority to the maintenance of law and order. With the sustained efforts made by this Government to maintain caste and communal harmony and the effective and firm steps taken against miscreants and with the unstinted support extended by the people, the Government has ensured peace and tranquillity throughout the State. The peaceful conduct of the General Elections to the Lok Sabha last year is a testimony to the tranquillity in the State. The Government is aware of the need to remove socio-economic disparities to maintain Tamil Nadu as a land of peace and harmony. This Government has created a new department called Social Reforms department in October last year for formulating suitable policies for bringing about social renaissance and ushering in a rational society.

15. Though the North-East Monsoon this year has been less than normal in many parts of the State, the districts of Thiruchirappalli, Pudukkottai, Thanjavur, Thiruvarur, Nagapattinam, Karur and Perambalur suffered flood damages due to heavy rains. However, due to advance

preparatory measures like desilting, heavy loss of human life and cattle and damages to properties were averted. The Government has sanctioned Rs.32.25 crores to these districts for undertaking flood relief measures and repairing the demaged roads.

16. This Government is closely monitoring the prices of essential commodities. The prices of essential commodities in the State were generally stable during the last year. In the Public Distribution System, rice was earlier issued at Rs.2 per kg for 3 kgs and at Rs.3.75 per kg for 17 kgs. This has now been changed and the entire quantity of 20 kgs of rice is being issued at Rs 3.50 per kg, without any distinction between those below the poverty line and those above the poverty line. This price is much lower than what is charged in other States. By implementing monopoly procurement system this year, Government has ensured that the stock of rice is raised to adequate levels. The farmers coming under the monopoly procurement system are paid Rs. 50 per quintal as incentive over and above the minimum support price fixed by the Central Government.

17. As we had a bountiful harvest last year, the production of rice touched an all time record of 82.15 lakh MTs. We expect an equally good harvest this year. A new comprehensive crop insurance scheme has been launched in the State to cover not only farmers who have obtained loans but also others. The scheme will cover food crops as well as horticultural crops and will provide 50% subsidy in premium to the small and marginal farmers.

18. The Government of Tamil Nadu has been investing substantially in irrigation schemes for the development of agriculture. Action has been taken this year to access the Rural Infrastructure Development Fund of NABARD for investments in the upgradation of minor irrigation tanks. Desilting of canals in the Cauvery delta has been undertaken at a cost of Rs.50 crores. In addition to developing irrigated areas in the State, the Government has also been according high priority to wasteland development in the rainfed areas. A Wasteland Development Authority has been constituted under the Chairmanship of the Chief Minister for giving impetus to wasteland development. A perspective plan is being



prepared to develop nearly 10 lakh hectares of wastelands over a period of ten years. In the current year, wasteland development works have been taken up in the districts of Pudukkottai, Tirunelveli, Erode, Villupuram, Sivagangai, Madurai, Virudhunagar, Thiruvannamalai, Dharmapuri and Perambalur over an extent of 10,000 hectares.

19. Realising the importance of upgrading the quality of the livestock wealth in the State, this Government has launched a farsighted Livestock Protection Scheme for the welfare of about 2 crore livestock population in the State. Under this programme, remote villages not having easy access to a veterinary health centre are selected and special livestock protection camps are conducted there for providing free diagnostic and treatment facilities to the livestock from these villages. Upto 26-2-2000, 297 camps have been conducted and 9,99,582 livestock treated. Further, at the instance of the Chief Minister, the State Planning Commission is formulating a new Livestock Policy for the development and protection of the livestock in the State.

20. The Government has been taking various steps for developing facilities for marketing agricultural produce. This Government has introduced 'Uzhavar Sandais', as an innovative scheme for bringing farmers and consumers together at one location, eliminating the intermediaries. This will enable the farmers to get a better price for the fruits and vegetables produced by them and the consumers to buy them at a price lower than in the private markets. Encouraged by the overwhelming response and appreciation from the farmers and the general public for this programme, the Government has decided to establish such 'Uzhavar Sandais' in 100 urban centres in phases all over the State. As announced already, steps have been taken for the establishment of a Paddy Market Complex at Madurai at a cost of Rs.17 crores, a Jaggery Market Complex at Thiruchi at a cost of Rs.12.30 crores and a Turmeric Market Complex at Perundurai at a cost of Rs.30.89 crores.

21. I am happy to inform the Hon'ble Members that Tamil Nadu continues to be successful in attracting investments in new industries in the State. Information Technology is an area that attracts large investments. With the Government providing proactive support to the

Information Technology Industry, leading software development companies like the Tata Consultancy Services, HCL, Infosys, Wipro, Polaris, etc. have set up software development centres in Tamil Nadu. The TIDEL Park, a state-of-the-art software technology park being set up jointly by the Tamil Nadu Industrial Development Corporation and the Electronics Corporation of Tamil Nadu at a cost of Rs. 338 crores is nearing completion and will be operational in the next few months. The joint venture project promoted by the Electronics Corporation of Tamil Nadu and the World Tel Company for setting up modern communication infrastructure in the State will start functioning in the next financial year, providing a substantial boost to Community Internet Services. The recent visit of the Prime Minister of Singapore to Chennai and the subsequent visit of a delegation of IT companies from Tamil Nadu to Singapore have created the right atmosphere for attracting greater investment in IT industry in Tamil Nadu.

22. This Government has made concerted efforts for computerisation of the district administration with a view to providing transparent, speedy and efficient public services utilising the fast developing information technology. I am very happy to inform the House that the scheme of computerisation introduced in Thiruvarur and Thanjavur districts will be extended to all other districts and all Government departments in a phased manner.

23. This Government will substantially increase investments for the development of highways, transport systems, satellite towns and industrial estates for facilitating the economic development of the State. New industrial parks are being developed by the State Industries Promotion Corporation in Cheyyar, Sriperumpudur, Irungattukottai, Vadamangalam and Siruseri. Complementary housing infrastructure is also being developed in Nemili to meet the requirement of the industrial parks coming up in the surrounding area.

24. On the power front, a private sector power project at Basin Bridge with a capacity of 196 MW, inaugurated by the Chief Minister last year, is in operation. Work is in progress for setting up private sector power projects at Pillaiperumanallur, Neyveli and Samalpatti. The 30 MW Parson Valley Hydro Electric Project of Tamil Nadu Electricity Board will be



commissioned in the coming financial year. The 107 MW Kovilkalappal gas based power project is expected to start generating power in the coming financial year. Further, the State Government has requested the Central Government to provide substantial allocations for the power projects in the Central sector so that the overall availability of power in the State keeps pace with the State's demand. Investments in transmission and distribution projects are also being made by the Tamil Nadu Electricity Board in order to provide uninterrupted quality power to consumers and to reduce line losses below 16%.

25. Considering the fact that more than 40% of the State's population lives in urban areas, this Government fully recognises the need for larger investments in urban areas and the role of the urban local bodies in mobilising necessary resources for these investments. Honourable Members are aware that this House had earlier enacted a comprehensive legislation for urban local bodies. This act will enable the urban local bodies to raise resources both from financial institutions as well as from open market and will enable private sector participation in delivery of urban services. The levy of profession tax has been streamlined to make it more transparent and augment the revenues of the urban local bodies. In addition to transferring substantial resources from the State's revenues to the urban local bodies, the State Government facilitates accessing funds from financial insititutions for their infrastructure schemes. The World Bank has approved the Second Tamil Nadu Urban Development Project to be implemented at a total cost of 205 million U.S. dollars and has come forward to provide 105 million U.S. dollars as assistance. This project, which provides grants and loans to urban local bodies for capacity building and upgradation of infrastructure facilities needed by the urban population, has commenced in the current financial year.

26. This Government has taken up a massive programme for improving the streets and roads in the urban areas of the State at a cost of Rs.215 crores. The programme for conversion of all public dry latrines into wet latrines taken up in urban areas of the State at a cost of Rs.10 crores will be completed this year. The housing scheme taken up in the slum areas of municipal corporations for providing fireproof asbestos roof houses without thatches, will benefit 12,082 families this year. Fireproof houses with asbestos roofing will be constructed for all the remaining families

living in the slums in municipal corporation areas in the coming year. 3,000 tenements constructed in Okkiyam Thuraipakkam under the scheme for resettling the slum dwellers along the Chennai waterways and those displaced by the Chennai Mass Rapid Transport System have been inaugurated by the Chief Minister on February 3rd, Anna's memorial day. Construction of 3,500 more tenements in the same area is in progress.

27. As decided by the Cabinet and announced recently, guidelines will be formulated for grant of house-site pattas to persons occupying Government poromboke lands for the past 20 years if these lands are not needed for Government use.

28. It is a matter of pride and satisfaction that work on two of the flyovers taken up for construction in Chennai under the scheme to transform the State capital into a beautiful city has been completed well within the scheduled time and dedicated to the people. The construction of the remaining flyovers will also be completed early. These flyovers will help ease the city's traffic congestion. The project for the upgradation of important radial roads around Chennai at a cost of Rs.213 crores is in progress. The construction work of the 19 km. long Chennai byepass road will be completed by October 2000 and will be open for vehicular traffic. A mofussil bus terminus at Koyambedu costing Rs.103 crores is being developed with a view to decongesting the City's roads. Hon'ble Members are aware that the work on the Phase II of Mass Rapid Transport System from Thirumailai to Velachery is progressing rapidly. This will be extended to St. Thomas Mount and the work on this second phase is expected to be completed by the year 2002. The HUDCO assisted Rs.300 crore scheme for desilting of the important waterways in Chennai is being implemented in the Buckingham canal and the Adyar river.

29. Government attaches high priority to rural development schemes. I am happy to inform that the "Namakku Naame Thittam" has evoked an overwhelming response from the people. As against the provision of Rs.10 crores provided initially in the Budget, the Government has provided additional funds of Rs.26 crores in the course of this financial year for this scheme to match the public response. Hence, this scheme has emerged as a scheme "of the people, by the people and for the people." The "Anna Marumalarchi Thittam", which brings about village level convergence of



services provided by various departments of the Government, has helped the development of 634 village panchayats.

30. The Government has constituted the Second State Finance Commission to examine the financial position of the local bodies. This Commission is due to submit its report before 31st October, 2001.

31. While we take pride in our success in reducing poverty in the State, it is regrettable that as a consequence the allocation of funds for rural poverty alleviation schemes for Tamil Nadu has been reduced. This year, the Government of India has reduced the allocation for Tamil Nadu for these schemes from 7.062% to 4.987% of the total allocation, as a result of which our State has lost Rs.277 crores of Central assistance. This Government has taken this up with the Government of India and requested that a part of the allocation for poverty alleviation schemes should be granted to States implementing these schemes effectively. We expect that the Government of India will give due importance to this point of view of the State Government.

32. This Government has constituted a Committee with Justice Thiru Rathinavel Pandian as its Chairman, retired I.A.S., Officers Thiru R.A. Seetharamadas and Thiru A. Venkataraman as its members and Thiru N. Murugan, I.A.S. as its Secretary to formulate schemes for the development and generation of employment opportunities in southern districts. This committee is touring the southern districts and ascertaining the views of the people by meeting them. The committee has submitted its interim report to the Government on 28th February, 2000. Suitable action will be taken after examining the report. The committee will submit its final report in the month of April.

33. Our State has achieved great success in population control. In this context, I wish to compliment the Central Government for having decided to accept and act on the resolution passed by the Tamil Nadu Legislative Assembly that necessary constitutional amendment be made to continue the determination of the Statewise number of Members of Parliament only on the basis of 1971 census and not on the basis of 2001 census.

[2000 மார்ச் 3

34. The Government has successfully conducted elementary education movement campaigns in the months of May and June last year in all districts for increasing enrolment and reducing dropouts. The Government has provided, in the first phase, facilities for computer education in 666 Government higher secondary schools under the scheme for computer education in schools. It has been decided to provide these facilities to all the remaining Government higher secondary schools and Government colleges in the next academic year.

35. Rs.5.35 crores have been disbursed to 55,956 urban poor women under a new programme called "Savings-linked micro-credit scheme for women" to make credit easily available to poor urban women at an affordable rate of interest. During 1999-2000, the Government has implemented the Mahalir Thittam in all the districts, except Chennai. Till January 2000, 4.2 lakhs women enrolled in 22,000 Self Help Groups have benefited under the scheme.

36. The implementation of the World Bank assisted Third Integrated Child Development Services Project has commenced in the current financial year in the 318 blocks in which the Second Tamil Nadu Integrated Nutrition Project had been implemented eariler. An assistance of Rs.86.95 crores will be received from the World Bank for this project over a period of 5 years. This project will facilitate the convergence of various schemes for improving the status of maternal and child nutrition and the health and nutrition of adolescent girls.

37. With a view to providing comprehensive health care for all, the "Varumun Kappom Thittam" inaugurated by the Chief Minister in Thiruvallur district, has been extended throughout the State. Under this scheme, medical camps are being conducted in select remote villages, which do not have Government medical facilities. In these camps, in addition to providing health check up by specialists, the patients are also given free medicines. This scheme helps in diagnosis and treatment of diseases and in extending the coverage of health services to the people. Large number of people below the poverty line are being benefited by this scheme. The public response to this scheme has been overwhelming and so far 11,32,855 persons have benefited from 1,016 camps.



2000 மார்ச் 3]

38. With a view to creating a casteless society, this Government is setting up "Periyar Ninaivu Samathuvapurams" in 50 places each year at a cost of Rs.17.50 crores. So far, 64 Samathuvapurams have been established and 86 others are at various stages of construction.

39. By and large, industrial peace prevails in Tamil Nadu. This Government gives importance to labour welfare and is implementing various welfare schemes. A scheme has been implemented from May 1999 for extending financial assistance of Rs.250 per month to workers who have lost their jobs due to the closure of industrial units. A Board has been formed for the welfare of thousands of unorganised workers and schemes for accident relief, maternity welfare and terminal benefits have been formulated and implementation commenced.

40. Proper maintenance of the public assets created through schemes already implemented is as essential as formulation of new schemes for public benefit. Considering this, it is proposed to pay more attention to maintenance works during the financial year and to give priority for completing the ongoing schemes.

41. This Government has been showing due care and concern for the welfare of its employees, who play a major role in the successful implementation of various schemes evolved for the welfare of the people. The Government has kept its commitment by giving enhanced dearness allowance and Pongal bonus to its employees, inspite of financial constraints.

42. I conclude my address with the belief that this millennium year will provide increasing opportunities for the growth and prosperity of the people of Tamil Nadu.

Jai Hind.

[2000 மார்ச் 3

## இணைப்பு-II

**(337 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,

புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் இந்த முதல் கூட்டத்தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இந்தப் புத்தாயிரமாண்டு மலர்ந்த நல்வேளையில், கடல்சூழ்ந்த கன்னியாகுமரி முனையில், 133 அடி உயர வானளாவிய அய்யன் திருவள்ளுர் சிலையை நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தது, தமிழ்மறையாம் திருக்குறள் தந்த அந்த மாபெரும் தத்துவஞானிக்கு, உலகளாவிய புகழைக் கூட்டுவதாக அமைந்துள்ளது. மக்கள் நலன் காப்பதில் மேலும் செம்மையாகச் செயல்படுவதற்கு திருவள்ளுவரின் கருத்துரைகள் நமக்கு கலங்கரை விளக்கமாகும்.

3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மறு ஆய்வு செய்யும்போது, இந்திய நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும், மதச்சார்பின்மையும் 'உறுதியும், வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கேற்பவும், சிறுபான்மை சமுதாய மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்டதாக அரசியலமைப்புச் சட்டம் அமைய வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தும்.

4. மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசு வலியுறுத்தி வரும் மொழிக் கொள்கையாகும். அரசியலமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழு இந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன்.

5. திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும், சிறப்புப் பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதற்கட்டமாக மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்.

6. கார்கில் போரில் இந்திய வீரர்களின் தீரம் மிகுந்த தேசப்பற்றினை நாம் அனைவரும் நினைந்து, மனம் கனிந்து பாராட்டுவதற்கு இதுவே



2000 மார்ச் 3]

தக்க தருணமாகும். தமிழக மக்கள் கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதிக்கு பெருமளவில் வரிசை, வரிசையாகத் தாமே முன்வந்து தாராளமாக நன்கொடை வழங்கியதால், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 50 கோடி ரூபாயை தமிழ்நாடு அளிக்க இயன்றது என்பதை இங்கே தெரிவிப்பதில் நான் பெருமையடைகிறேன். இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அந்த வீரர்தம் குடும்பத்தினர் துயர் துடைக்க இந்த அரசு அந்தக் குடும்பங்களுக்குச் சிறந்த பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. இவற்றுள் கருணை உதவித் தொகை ரூ.5 இலட்சம்; மற்றும் ரூ.7 இலட்சம் முதல் ரூ.11 இலட்சம் வரை மதிப்புள்ள அடுக்குமாடி வீடு அல்லது தனி வீடு, இன்னுயிர் ஈந்த வீரரின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, தொழில் நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு, அவர்தம் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு தமிழ்நாடு அரசில் வேலை வாய்ப்பு ஆகியவை அடங்கும்.

7. கார்கில் வீரர்களுக்குப் பெருமளவில் உதவி புரிந்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்திய நாம், இயற்கைச் சீற்றத்தால் இன்னலுறும் மக்கள், எந்த மாநிலத்தவராக இருப்பினும், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி நம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதிலும் முன்னணி வகிக்கிறோம். கடந்த ஆண்டு ஒரிசாவைத் தாக்கிய வரலாறு காணாத கடும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட "ஒரிசா புயல் நிவாரண நிதிக்கு" ரூ.2 கோடியே 77 இலட்சம் நிதியுதவியை அளித்து, தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஆழ்ந்த பரிவுணர்வை வெளிப்படுத்தினர். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் பொருட்டு, இந்த அரசு ஒரு கோடி ரூபாய்க்கான பால் பவுடரையும், மூன்று கோடி ரூபாய்க்கான வேட்டி, சேலைகளையும், ஏனைய நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைத்தது. ஒரிசா அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொண்டு உதவிட வேண்டி, தேவையான மருந்துப் பொருட்களுடன் மருத்துவர்கள் குழு ஒன்றும் அங்கு அனுப்பப்பட்டது.

8. மொழிவழிச் சிறுபான்மையினரின் நலனுக்குப் பாதகம் ஏதுமின்றி, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற உன்னத குறிக்கோளை எய்துவதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. நீதிபதி மோகன் குழுவின் பரிந்துரைகளை இவ்வரசு ஏற்றுக் கொண்டு, அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய் மொழியைக் கட்டாயமாக முதல் மொழியாகவும், ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளுக்கு பயிற்று மொழியாகவும் ஆக்கியுள்ளது.

[2000 மார்ச் 3

9. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரியவும், தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளிலும், மற்ற மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்ப்பதை ஊக்குவிக்கவும், சாதனை படைக்கும் சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு "குறள் பீடம்" விருது வழங்கிடவும், "தமிழ்ச் சங்கப் பலகை" (தமிழ் அகாடமி) இந்த ஆண்டு சனவரி 16 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

10. தமிழ்நாட்டில் "உருது அகாடமி" என்ற அமைப்பினை ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் தேவையென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

11. 1998 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பதினோராவது நிதி ஆணையம், தனது இடைக்கால அறிக்கையை அண்மையில் மத்திய அரசிடம் அளித்துள்ளது. இறுதி அறிக்கையை இந்த ஆண்டு ஜூன் திங்கள் முடிவுக்குள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைக்கு இந்த ஆணையம் வந்திருந்தபோது, தமிழ்நாடு போன்ற முற்போக்கு மாநிலங்களுக்கு, மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதிப் பகிர்வினை அளிக்கப் பரிந்துரை செய்திடவேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. அதனை ஏற்று இந்த ஆணையம் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதிப் பகிர்வைப் பரிந்துரை செய்திருக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.

12. மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவிகிதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்திட வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தப் பிரச்சினையில் இடையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்கி, மத்திய அரசு இதற்கான அரசியல் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

13. மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1998-99ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4,500 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. நிதி ஆதார இடர்பாடு இருந்த போதிலும், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான, ரூ.5,250 கோடியை நாம் இந்த ஆண்டிலும் எய்திடுவோம். அடுத்த ஆண்டிலும் இந்த ஆண்டைவிட அதிக ஒதுக்கீட்டுடன் திட்டப்பணிகள் செம்மையாகச் செயல்படுத்தப்படும்.



2000 மார்ச் 3]

14. சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு சாதி, மத நல்லிணக்கத்தைப் பேணிக்காக்க எடுத்து வரும் தொடர் முயற்சியாலும், விஷமிகள் மீது திறம்பட எடுத்த உறுதியான நடவடிக்கைகளினாலும், அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் அளித்துவரும் இதயபூர்வமான ஆதரவின் காரணமாகவும், எங்கணும் பொதுவாக அமைதி நிலவுவதை உறுதி செய்ய முடிந்துள்ளது. கடந்த ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலை மிக அமைதியாக நடத்தியுள்ளது இந்த அமைதி நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு. தமிழகத்தை அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழச் செய்வதற்கு சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதன் அவசியத்தை உணர்ந்து செயல்படும் இந்த அரசு, அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும், சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் உகந்த கொள்கைகளை வகுப்பதற்காக சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் சமூகச் சீர்திருத்தத் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தியுள்ளது.

15. பொதுவாக இந்த ஆண்டு மாநிலத்தின் பல பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையின் அளவு இயல்பான அளவுக்கும் குறைவாக இருந்த போதிலும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் கடும் மழையின் காரணமாக வெள்ளச் சேதம் ஏற்பட்டது. தூர் வாருதல் போன்ற தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் பெருமளவு உயிரிழப்போ, கால்நடைகளுக்குச் சேதமோ மற்றும் உடைமைகள் இழப்போ இல்லாமல் பாதுகாக்கப்பட்டது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், சேதமடைந்த சாலைகள் போன்றவற்றைச் சீர்செய்யவும் இம்மாவட்டங்களுக்கு அரசு ரூ.32.25 கோடி வழங்கியுள்ளது.

16. இன்றியமையாப் பொருள்களின் விலைவாசியை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. பொதுவாக இம்மாநிலத்தில் கடந்த ஆண்டில் இன்றியமையாப் பொருட்களின் விலைகள் நிலையாக இருந்தன. பொது விநியோக முறையில் மூன்று கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், 17 கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 75 பைசா என்றும் இருந்ததை மாற்றி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் 20 கிலோ அரிசியும் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா என்று வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் உள்ள விலையுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவான விலையாகும். ஏகபோக கொள்முதல் முறையை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தியன் மூலம்

அரிசி இருப்பைப் போதுமான அளவுக்கு உயர்த்துவதை அரசு உறுதி செய்துள்ளது. ஏகபோகக் கொள்முதல் முறையின் கீழ் வரும் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கும் மேலாக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

17. கடந்த ஆண்டு நமது மாநிலத்தில் விளைச்சல் வளமாக இருந்தமையால், முன் எப்போதுமில்லாத அளவுக்கு அரிசி உற்பத்தி 82.15 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்தது. இந்த ஆண்டும் இதே அளவு நல்ல விளைச்சல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத்திற்காகக் கடன்பெற்றோர், கடன்பெறாதோர் என்ற இரு சாராருக்கும் பொருந்தும் வகையில், ஒரு புதிய விரிவான பயிர் காப்புறுதித் திட்டம் இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உணவுப் பயிர்களும், தோட்டக்கலைப் பயிர்களும் அடங்குவதோடு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அளிக்கப்படும்.

18. வேளாண்மையை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு பாசனத் திட்டங்களில் தொடர்ந்து கணிசமாக முதலீடு செய்து வருகிறது. இந்த ஆண்டு சிறு பாசன ஏரிகளை மேம்படுத்தும் பணிக்கு முதலீடு செய்வதற்காக நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காவிரி நதி நீர்க் கால்வாய்களில் ரூ.50 கோடி செலவில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாசனப் பகுதிகள் மேம்பாடு மட்டுமின்றி, மானாவாரிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்கும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டுப் பணிகளை ஊக்குவித்து, துரிதப்படுத்த வேண்டி, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 10 இலட்சம் எக்டேர் தரிசு நிலப்பரப்பை பத்தாண்டு காலத்தில் மேம்படுத்துவதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஈரோடு, விழுப்புரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19. கால்நடைச் செல்வத்தின் தரத்தையும், வளத்தையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தில் உள்ள



சுமார் 2 கோடி கால்நடைகளின் நலத்தைப் பாதுகாக்க, தொலைநோக்குப் பார்வையுடன், கால்நடை பாதுகாப்புத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. கால்நடை மருந்தகத்தை எளிதில் சென்றடைய வசதியில்லாத தொலைதூரத்திலுள்ள கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, அந்தக் கிராமப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனையும், சிகிச்சையும் அளிக்கும் வகையில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 26-2-2000 தேதி வரை 297 முகாம்கள் நடத்தப்பட்டு 9,99,582 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் ஒரு புதிய கொள்கையை முதலமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து மாநிலத் திட்டக் குழு வகுத்துக் கொண்டிருக்கின்றது.

20. உழவர்களின் விளை பொருள்களுக்குத் தேவையான விற்பனைச் சந்தை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உழவர்கள் தாம் உற்பத்தி செய்த பழங்கள், காய்கறிகள் போன்றவற்றுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், தனியார் அங்காடிகளைவிட குறைந்த விலையில் நுகர்வோர் அத்தகைய பொருட்களைப் பெற்றிடவும் இந்த அரசு உழவர்களையும், நுகர்வோரையும், இடைத்தரகர்களின்றி, ஓரிடத்தில் சேர்த்திடும் புதியதோர் அமைப்பான உழவர் சந்தைகளைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு உழவர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் மிகப்பெரும் வரவேற்பும் பாராட்டும் கிடைத்ததனால், மாநிலம் முழுவதும் படிப்படியாக 100 நகர்ப்புற மையங்களில் இத்தகைய உழவர் சந்தைகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே அறிவித்தவாறு, மதுரையில் ரூ.17 கோடி செலவில் நெல் விற்பனை அங்காடி ஒன்றும், திருச்சியில் ரூ.12.30 கோடி செலவில் வெல்ல விற்பனை அங்காடி ஒன்றும், பெருந்துறையில் ரூ.30.89 கோடி செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி ஒன்றும் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

21. மாநிலத்தில் புதிய தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து வெற்றியடைந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தகவல் தொழில்நுட்பவியல் துறை அதிக அளவில் முதலீட்டினை ஈர்க்கும் துறையாகும். டாடா ஆலோசனை நிறுவனம், HCL, Infosys, Wipro, Polaris போன்ற மென்பொருள் மேம்பாட்டில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு அரசு அளிக்கும் ஆதரவுடன்,

தமிழ்நாட்டில் மென்பொருள் மேம்பாட்டு மையங்களை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகமும் (TIDCO), தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனமும் (ELCOT) சேர்ந்து ரூ.338 கோடி முதலீட்டில் சென்னை தரமணியில் அமைத்து வரும் நவீன தொழில் நுட்ப வசதியுடன் கூடிய TIDEL பூங்கா இன்னும் சில மாதங்களில் முடிவுபெற்று செயல்படத் துவங்கும். சமுதாய இணையப் பணிகள் கணிசமான அளவிற்கு அதிகரிப்பதற்கு உதவும் வகையில் இம்மாநிலத்தில் நவீன தகவல் தொடர்பு கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்காக, "World Tel" நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் உருவாக்கிய திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கும். சிங்கப்பூர் பிரதமர் அண்மையில் இங்கு வருகை தந்ததும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்றதும் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

22. வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தை அரசு நிர்வாகத்தில் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கான சேவைகளை வெளிப்படையாகவும், விரைவாகவும், துல்லியமாகவும் வழங்கிடும் நோக்கத்துடன், மாவட்ட நிர்வாகத்தைக் கணினிமயமாக்கும் முயற்சியை இந்த அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள கணினிமயமாக்கும் இந்தத் திட்டம் ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும், படிப்படியாக அரசின் அனைத்துத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

23. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோல, இந்த அரசு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், துணை நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் உருவாக்குவதற்கும் தேவையான முதலீடுகளைக் கணிசமாக அதிகரிக்கும். செய்யாறு, திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, வடமங்கலம், சிறுசேரி ஆகிய இடங்களில் மாநிலத் தொழில் முன்னேற்றக் கழகம் புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. நெமிலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்து வரும் தொழிற் பூங்காக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், அடிப்படை வீட்டுவசதி கட்டமைப்புப் பணிகளும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



24. மின்சக்தித் துறையைப் பொறுத்தவரை, தனியார் துறையில், பேசின் பிரிட்ஜ் அருகே 196 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் ஒரு மின்சக்தித் திட்டம் சென்ற ஆண்டு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பிள்ளைபெருமாநல்லூர். நெய்வேலி, சாமல்பட்டி ஆகிய இடங்களில் தனியார் மின்சக்தித் திட்டங்கள் உருவாக்கும் வேலை நடந்து வருகிறது. தமிழ்நாடு மின் வாரியத்தின் 30 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் வரும் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். கோவில்களப்பாலில் எரிவாயுவை ஆதாரமாகக் கொண்ட 107 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள மின்திட்டம், வரும் நிதியாண்டில் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநிலத்தில் கிடைக்கும் ஒட்டுமொத்த மின் உற்பத்தி, மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களுக்குக் கணிசமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியமும் தடையின்றி, தரமாக மின்சாரத்தை நுகர்வோர்களுக்கு அளிக்கவும், மின் இழப்பை 16 சதவீதத்திற்குக்கீழ் குறைப்பதற்கும், மின் அனுப்புகை மற்றும் மின் பங்கீட்டுத் திட்டங்களில் அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது.

25. மாநிலத்தின் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்வதைக் கருத்தில்கொண்டு, நகர்ப்புறப் பகுதிகளில் அதிக முதலீடு செய்வதன் அவசியத்தையும், இந்த முதலீட்டிற்குத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டுவதில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பங்கையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கான விரிவான சட்டமொன்றை இம்மாமன்றம் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிதி நிறுவனங்களிடமிருந்தும், சந்தையிலிருந்தும் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும், நகர்ப்புறவசதிப் பணிகளை நிறைவேற்றுவதில் தனியாரை ஈடுபடுத்துவதற்கும் இந்தச் சட்டம் உதவும். தொழில் வரி விதிக்கும் நடைமுறை, அது மிகவும் வெளிப்படையாக இருக்கும் வகையிலும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் சீரமைக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநிலத்தின் வருவாயிலிருந்து கணிசமான நிதியை மாற்றித் தருவதோடு, அவற்றின் அடிப்படை வசதித் திட்டங்களுக்காக நிதி அமைப்புகளிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கும் மாநில அரசு வழிவகை செய்து தருகிறது. மொத்தம் 205 மில்லியன் அமெரிக்க டாலர் செலவில் செயல்படுத்தப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது

மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதலளித்து 105 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை அதிகரிக்கவும், அப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கும் தேவைப்படும் மானியம் மற்றும் கடன் வசதிகளை அளிக்க வழிவகை செய்யும் இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது.

26. மாநிலத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் ரூ.215 கோடி செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள அனைத்து பொது உலர் கழிப்பிடங்களையும் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றியமைப்பதற்கு ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் இவ்வாண்டில் முழுமை பெறும். மாநகராட்சிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கு ஓலைகளற்ற தீப்பிடிக்காத கல்நார்க் கூரை வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு 12082 குடும்பங்கள் பயனடையும். மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் எஞ்சியுள்ள அனைத்து குடுபங்களுக்கும் வரும் ஆண்டில் கல்நார்க் கூரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். சென்னை மாநகரில் நீர்க்கால்வாய்ப் பகுதிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கும், சென்னை மாநகர் துரித ரயில் திட்டத்தினால் இடம் பெயர்ந்தோருக்கும் மாற்றிடம் வழங்கும் திட்டத்தின் கீழ் 3000 குடியிருப்புகள் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்பட்டு, பிப்ரவரி மூன்றாம் நாள் அண்ணா நினைவு நாளன்று முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதே பகுதியில் மேலும் 3,500 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

27. அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவித்ததற்கிணங்க, இருபது ஆண்டு காலமாக அனுபவித்து வரும் அரசு புறம்போக்கு நிலங்களை, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாத பட்சத்தில், அனுபவித்து வருபவர்களுக்கே அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கப்படும்.

28. தமிழகத்தின் தலைநகரத்தை எழிலார்ந்த நகரமாக மாற்றும் திட்டத்தின்கீழ் சென்னை நகருக்குள் தொடங்கப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளுள் இரண்டு மேம்பாலங்கள் திட்டமிட்ட காலத்திற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பெருமையும் மன நிறைவும் அளிக்கின்றது. எஞ்சியுள்ள மேம்பாலங்களும் விரைவில்



கட்டி முடிக்கப்படும். மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இவை பெரிதும் உதவும். ரூ.213 கோடி செலவில் சென்னையைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச் சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. 19 கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச் சாலை அமைக்கும் பணி வரும் அக்டோபர் மாதத்துக்குள் முடிவுற்று, அச்சாலை வாகனப் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும். மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் நோக்கத்துடன், கோயம்பேட்டில் ரூ.103 கோடி செலவில் வெளியூர்ப் பேருந்து முனையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணி விரைவாக நிறைவேறி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த இரண்டாம் நிலைப் பணி புனித தோமையர் மலை வரை நீட்டிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலுள்ள முக்கிய நீர் வழிகளில் தூர் வாரும் பணி ரூ.300 கோடி செலவில் ஹட்கோவின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் பங்கிங்காம் கால்வாயிலும், அடையாறிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

29. ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக முதலில் ரூ.10 கோடி நிதியொதுக்கப்பட்டிருந்தபோதிலும், பொதுமக்களின் தேவைக்கேற்ப, இந்த நிதியாண்டில் இதற்காக இந்த அரசு மேலும் ரூ.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே இத்திட்டம் "மக்களின் திட்டமாக மக்களாலேயே அவர்களின் உதவியோடு, மக்களுக்காக நிறைவேற்றப்படும் திட்டமாக," செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாக மலர்ந்துள்ளது. அரசின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை எல்லாம் கிராம அளவில் ஒருமுனைப்படுத்துவதற்கென்றே உருவாக்கப்பட்ட "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" இதுவரை 634 கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

30. உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை ஆய்வு செய்வதற்காக அரசு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளுக்கு முன்னர் அளிக்கும்.

[2000 மார்ச் 3

31. மாநிலத்தில் வறுமையை ஒழிப்பதில் நாம் அடைந்துள்ள வெற்றி குறித்து பெருமிதம் கொள்ளும் வேளையில், இதன் காரணமாக ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கான நிதியொதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கான இத்திட்டங்களின் ஒதுக்கீட்டை, மொத்த ஒதுக்கீட்டின் 7.062 சதவீதத்திலிருந்து 4.987 சதவீதமாகக் குறைத்துள்ளதால், நமது மாநிலம் ரூ.277 கோடி அளவுக்கு மத்திய நிதியுதவியை இழந்துள்ளது. இந்த அரசு இப்பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஊரக வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டின் ஒரு பகுதியை வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தும் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு, மாநில அரசின் இந்தக் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் என்று நம்பி, எதிர்பார்க்கிறோம்.

32. தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட இந்த அரசு, நீதியரசர் திரு. இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திரு. ஆர்.ஏ. சீத்தாராமதாஸ், திரு. ஏ. வெங்கட்ராமன் ஆகியோரை உறுப்பினர்களாகவும், திரு. என். முருகன், ஐ.ஏ.எஸ். அவர்களைச் செயலாளராகவும் கொண்டு குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவினர் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து மக்களை நேரடியாகச் சந்தித்து கருத்தறிந்து வருகின்றனர். இக்குழு தனது இடைக்கால அறிக்கையை பிப்ரவரி மாதம் 28-ம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் ஏப்ரல் மாதத்தில் இக்குழு இறுதி அறிக்கையை அரசுக்கு அளிக்கும்.

33. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் நமது மாநிலம் மிகப் பெரும் வெற்றியை அடைந்துள்ளது. இச்சூழ்நிலையில், மாநிலவாரியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களைப் பின்பற்றாமல், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே தொடர்ந்து பின்பற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்துக்கு தேவையான திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்ற தமிழக சட்டப் பேரவையின் தீர்மானத்தை ஏற்று நடவடிக்கை எடுக்க முடிவெடுத்துள்ள மத்திய அரசுக்கு நமது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



2000 மார்ச் 3]

அனைத்து
34. கடந்த ஆண்டு மே, ஜுன் மாதங்களில் அனைத்து
மாவட்டங்களிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அரசு தொடக்கக் கல்வி இயக்க முனைப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பள்ளிகளில் கணினிக் கல்வியை அளிக்கும் திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினிக் கல்விக்கான வசதிகளை அரசு அளித்துள்ளது. எஞ்சிய அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் அடுத்த கல்வியாண்டில் இத்தகைய வசதிகளை செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

35. நகர்ப்புற ஏழை மகளிருக்கு சிறு வியாபாரம் செய்ய குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் கடன் கிடைக்கும் வகையில், "மகளிர் சிறு வணிக சேமிப்புடன் இணைந்த கடன் திட்டம்" என்றழைக்கப்படும் திட்டத்தின்கீழ் 55,956 மகளிருக்கு ரூ.5.35 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில், சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. 2000 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிலவரப்படி, 22,000 சுய உதவிக் குழுக்களில் சேர்ந்து 4.2 இலட்சம் மகளிர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

36. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பயனடைந்த 318 வளர்ச்சி வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மூன்றாவது திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. உலக வங்கியிடமிருந்து இதற்காக 5 ஆண்டு காலத்தில் ரூ.86.95 கோடி நிதியுதவி பெறப்படும். கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவதற்கும், இளம் பெண்களின் உடல் நலம் மற்றும் அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்குமான பல்வேறு திட்டப் பணிகளை ஒருமுனைப்படுத்திட இத்திட்டம் உதவிடும்.

37. அனைவருக்கும் முழுமையான சுகாதார நலத்தை அளிக்கும் நோக்கத்துடன், திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட "வருமுன் காப்போம் திட்டம்" மாநிலம் முழுதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தொலைதூரத்தில் உள்ள, அரசு மருத்துவ அமைப்புகள் இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்மருத்துவ முகாம்களில், நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் அனைவருக்கும் உடல் நலப் பரிசோதனை செய்யப்படுவதோடு, நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்படுகின்றன. நோயைக் கண்டறிந்து போக்குவதற்கும், தேவையான சுகாதார நலப் பணிகளை மக்களுக்குப் பெருமளவில் அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏராளமானோர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு மக்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்து வருகிறது. இதுவரை 1016 முகாமகளில் 11,32,855 பேர் பயனடைந்துள்ளனர்.

38. சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.17.50 கோடி செலவில், 50 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரங்களை" ஏற்படுத்தி வருகிறது. இதுவரையில், 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; மேலும் 86 சமத்துவபுரங்கள் அமைக்கும்பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

39. தமிழகத்தில் பொதுவாக தொழில் அமைதி நிலவி வருகின்றது. தொழிலாளர் நலனுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தொழிற்சாலைகள் மூடப்படுவதன் காரணமாக வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.250/- நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று 1999 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரம் தொழிலாளர்களின் நலனைப் பேண ஒரு வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத் திட்டம், பணி முடிவு நலத் திட்டம் முதலிய திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது.

40. மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய புதுத் திட்டங்களை உருவாக்குவது எவ்வளவு அவசியமானதோ, அந்த அளவுக்கு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களினால் உருவான பொதுச் சொத்துக்களை முறையாகப் பராமரித்து வருவதும் முக்கியமானது. இதனை கருத்திற்கொண்டு, வரும் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி முனைப்பான நடவடிக்கை எடுத்திடவும், முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு, இன்னும் முடிக்கப்படாத பணிகளை விரைவுபடுத்தி முடித்திட முன்னுரிமை அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



41. மக்களின் நலனுக்காகத் தீட்டப்படும் பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முழுப்பங்கேற்றுள்ள அரசுப் பணியாளர்களின் நலனை இந்த அரசு பேணிக் காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. நிதி இடர்ப்பாடு இருந்த போதிலும், அரசுப் பணியாளர்களுக்கு, அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் பொங்கல் ஊதியக் கொடை வழங்கியதின் மூலம் அரசு தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.

42. தமிழ்நாடு மக்களின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் இப்புத்தாயிரம் ஆண்டு மேலும் அதிக வாய்ப்புகளை உருவாக்கி வழங்கிடுமென்ற நம்பிக்கையுடன் நான் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

ஜெய்ஹிந்த்.

228767

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.